# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 30/= பக்கங்கள்: 56 | சுடர் 31 | கதிர் 311 | வள்ளுவர் ஆண்டு 2047 | புரட்டாதி 16, ஞாயிற்றுக்கிழமை 02.10.2016







# தமிழ் மக்களை பிழையாக எவரும் வழிநடத்தக்கூடாது

## கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் வேண்டுகோள்



யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 2

இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். நிரந்தர அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்பதில் நாம் உறுதியாக உள்ளோம். இந்த நிலையில், தமிழ் மக்களை எவரும் பிழையாக வழிநடத்தக்கூடாது. இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊர்வலம், அதன் பின்னர் தென்பகுதியில் எழுந்துள்ள எதிர்ப்பலை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு

>> 52ஆம் பக்கம்

## சில காட்சிகள் கத்தரிக்கப்பட்டு 'அம்மா நலமா'

யாழ்ப்பாணம், ஒக். 2

மூலப்படத்தில் இருந்த சில காட்சிகள் கத்தரிக்கப்பட்டு 'அம்மா நலமா' திரைப் படம் இலங்கைவேந்தன் கலைக்கல்லூரியில் நேற்று காட்சிப்படுத்தப்பட்டது. சம உரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் 'எனினும் நாம் பறப்போம்' என்னும் கலாசார விழா நேற்று முன்தினம் ஆரம்பமாகித்

>> 53ஆம் பக்கம்

## முதியோர் உரிமை மீறப்பட்டால் சட்ட நடவடிக்கைகள் எடுக்கலாம்

விரிவு: பக். 08

## வடக்கு ராணுவ ஆக்கிரமிப்பை தெற்கு மக்களிடம் விளக்குங்கள்

### அமைச்சர்களிடம் கோருகிறார் மாவை

யாழ்ப்பாணம் ஒக். 2

வடக்குக்கு வருகை தரும் அமைச் சர்கள் இங்கு தொடரும் இராணுவ ஆக்கிரமிப்புக் குறித்து தெற்கு மக்களிடம் தெளிவாக எடுத்துக் கூறவேண்டும். எமது மக்களின் விவசாய நிலங்கள் பல இன்னும் இராணுவத்தினர் வசமே உள்ளன. இதனால் வாழ்வாதாரத்தை இழந்து

>> 53ஆம் பக்கம்

## ரயிலில் நசியுண்டு குடும்பஸ்தர் சாவு

கிளிநொச்சி, ஒக். 2

தண்டவாளத்தில் படுத்துறங்கிய 6 பிள்ளைகளின் தந்தை ரயிலில் நசியுண்டு பரிதாபமாகச் சாவடைந்தார் எனக் கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம்

>> 53ஆம் பக்கம்

## இரு தேசம் ஒரு நாடு என்றோர் கூட்டாட்சிக்கு இறங்கி வந்துள்ளனர்

### அரசியல் விவாதத்தில் கூறினார் சுமந்திரன் எம்.பி.

யாழ்ப்பாணம், ஒக். 2

இரு தேசம் ஒரு நாடு என்று கூறியவர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கையில் கூறப்பட்ட கூட்டாட்சி முறைமைக்கே தற்போது வந்திருக்கின்றார்கள். கூட்டமைப்பு 2010ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கையில் முன்வைத்ததையே தொடர்ந்தும் முன்வைத்து வந்தது. அதற்கு மக்கள் ஆதரவு வழங்கியிருக்கின்றார்கள்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், அந்தக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். (விரிவு: பக். 02)

## விடுதலைப் புலிகளைச் சாட்டி விக்கியைக் கொல்லச் சதியாம்

யாழ்ப்பாணம், ஒக். 2

நாம் எமது பிரச்சினைகளைக் கூறக் கூடாது. அவர்கள் தருவதை ஏற்க வேண்டும் என்ற ஒரு எண்ணப்பாடே இன்று பெரும்பான்மை மக்கள் பலரிடம் இருந்து வருகின்றது. இதற்குள் அரசியலும் சேர்ந்து எனது உயிருக்கும் உலை வைக்க நடவடிக்கைகள் எடுத்திருப்பதாகச் செய்திகள் வந்த வண்ணம் இருக்கின்றன. அது மட்டுமல்ல, அவற்றைச் செய்தவர்கள் விடுதலைப் புலிகளே என்று கதையைக் கட்டுவதற்கும் தெற்கில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இலங்கை அரசியல் யாப்பு நூல் வெளியீடும் ஆய்வரங்கமும் சரஸ்வதி மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் வடக்கு மாகாண

>> 53ஆம் பக்கம்

## நாமல் எம்.பி வைத்தியசாலையில்



கொழும்பு, ஒக். 2

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச வின் மூத்த புதல்வனும்

>> 53ஆம் பக்கம்

## ஆதரவாளர்களால் நேற்றுக் குழப்பம்

யாழ்ப்பாணம், ஒக். 2

அனைத்துத் தமிழ்க் கட்சிப் பிரதிநிதிகளும் கலந்து கொண்ட நூல் வெளியீடும் ஆய்வரங்கும் நிகழ்வில்,

>> 53ஆம் பக்கம்

## வடக்கு பிரதி அவைத் தலைவர் நேற்று மாரடைப்பால் உயிரிழப்பு



முல்லைத்தீவு, ஒக். 2

காலபோக உரமானியத்துக்கான பதிவை மேற்கொள்வதற்காகச் சென்ற வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத் தலைவர் மா. அன்ரனி ஜெகநாதன் மாரடைப்பால்

>> 53ஆம் பக்கம்

## 19ஆவது சார்க் மாநாட்டை பிற்போட்டது பாகிஸ்தான்

இஸ்லாமாபாத், ஒக். 2

இந்தியா உட்பட 5 நாடுகள் புறக்கணித்திருப்பதால் 19ஆவது சார்க் உச்சி மாநாட்டை ஒத்தி வைத்திருப்பதாகப் பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

எதிர்வரும் நவம்பர் 9, 10ஆம் திகதிகளில் பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் 19ஆவது சார்க் உச்சி மாநாடு நடைபெற இருந்தது. இதில்

>> 52ஆம் பக்கம்




# இரு தேசம் ஒரு நாடு என்றோர் கூட்டாட்சிக்கு இறங்கி வந்துள்ளனர்

## ஆயினும் தேர்தல் அறிக்கையில் முன்வைத்ததையே கூட்டமைப்பு தொடருகின்றது என்கிறார் சுமந்திரன்

யாழ்ப்பாணம், ஒக். 2

இரு தேசம் ஒரு நாடு என்று கூறியவர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கையில் கூறப்பட்ட கூட்டாட்சி முறைமைக்கே தற்போது வந்திருக்கின்றார்கள். கூட்டமைப்பு 2010ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கையில் முன்வைத்ததையே தொடர்ந்தும் முன் வைத்து வந்தது. அதற்கு மக்கள் ஆதரவு வழங்கியிருக்கின்றார்கள்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், அந்தக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இலங்கை அரசியல் யாப்பு நூல் வெளியீடும் ஆய்வரங்கமும், நேற்றுக் காலை நாச்சிமார் கோயிலடியில் உள்ள சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் கருத்துரை வழங்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

2010ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல், 2012 ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத் தேர்தல், 2013ஆம் ஆண்டு வடக்கு மாகாண சபைத் தேர்தல், 2015 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலின்போது எமது தேர்தல் அறிக்கையில் தீர்வு விடயம் தொடர்பில் ஒரே விடயத்தை வலியுறுத்தி வந்திருக்கின்றோம்.

இந்தத் தீவிலே தேசமாக இருக்கின்ற தமிழ் மக்களுடைய சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படவேண்டும். கூட்டாட்சி அடிப்படையிலான தீர்வு வடக்கு-கிழக்குக்கு வழங்கப்படவேண்டும். இது எங்களுடைய சகல தேர்தல் அறிக்கைகளிலும் உள்ளது. அதை எப்படி அடையப் போகின்றோம் என்பதையும் அதில் குறிப்பிட்டுள்ளோம்.

பன்னாட்டுச் சமூகத்தை ஒருங்கிணைத்து இலங்கை அரசுடன் பேச்சு நடத்தி இதனை அடைவோம் என்று சொல்லியிருக்கின்றோம். 70 ஆண்டுகளாகப் பேச்சு நடத்தி அடைய முடியாத விடயத்தை இப்போது பேச்சு நடத்தி அடைய முடியுமா என்று மக்கள் கேட்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதுதான். ஆனால் மாற்று வழி என்ன என்று கேள்வி முன்வைக்கப்படும்போது, மாற்று வழி முன்வைக்கப்படவில்லை. ஒரேயொரு மாற்று வழி முன்வைக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி 2010ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில், தமிழ் மக்கள் தாயகம் - தேசியம் - சுயநிர்ணய உரிமை, தனித்துவமான இறைமை கொண்ட தேசம் அடிப்படையில் ஒரு நாட்டுக்குள் இரண்டு தேசம் என்று முன்வைத்தனர். அதையும் விட்டுக் கொடுப்புக்கான அழுத்தம் ஏற்பட்டால் நாங்கள் இந்த நிலைப்பாட்டை எடுக்கின்றோம் என்றும் சொல்லியிருந்தார்கள்.

2010ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் எந்த நிலைப்பாட்டை ஆதரித்தார்கள் - ஏற்றுக் கொண்டார்கள் என்பதை நான் இங்கே சொல்ல விரும்பவில்லை. 2010ஆம் ஆண்டு அவர்களுக்கு தமது கொள்கையை மக்களிடம் கொண்டு செல்வதற்குக் குறுகிய காலம்தான் இருந்தது. ஆனால் 2015ஆம் ஆண்டும் அந்தக் கொள்கையை மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. 2013ஆம் ஆண்டு தமிழ் சிவில் சமூக அமையம் பொது வாக்கெடுப்பின் ஊடாக இரு தேசம் ஒரு நாடு அடைவோம் என்று பேர்ளினில் எழுத்துமூலமான ஆவணத்தை சமர்ப்பித்திருந்தனர்.

இந்த இடைப்பட்ட காலத்தில் பரிணாம வளர்சி நடந்திருக்கின்றது. 2010 இலிருந்து இரு தேசம் ஒரு நாடு, பொது வாக்கெடுப்பு என்று சொல்லிக் கொண்டிருந்தவர்கள் ஒரு வாரத்துக்கு முன்னர் அவற்றைக் கைவிட்டு விட்டார்கள்.

யாழ்ப்பாணத்தில் கடந்த வாரம் நடந்த ஊர்வலத்தின் இறுதியில் வெளியிடப்பட்ட பிரகடனம் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையையும் அதன் வழி தமிழ்த் தேசத்தின் இறைமையையும் நிறுவன ரீதியாக கூட்டாட்சி முறைமையின் ஊடாக அடைந்து கொள்ளலாம் என கூறுகின்றது. நாங்கள் 2010ஆம் ஆண்டிலிருந்து சொல்லி வந்ததை இவர்கள் இப்போது ஏற்றுக் கொண்டுள்ளார்கள். பொதுவாக்கெடுப்பு, இனப் படுகொலை பற்றி எதையுமே இதில் இவர்கள் பேசவில்லை.

நாங்கள் 2010 இலிருந்து ஒரு நிலைப்பாட்டை எடுத்து வைத்திருக்கின்றோம். அது நடுநிலையான மிதவாதமான நிலைப்பாடாக இருக்கலாம். அது கவர்ச்சிகரமில்லாத நிலைப்பாடாக இருக்கலாம். ஆனால் அதற்குத்தான் மக்களுடைய பேராதரவு இருக்கின்றது. அதை எதிர்த்து மாற்றுத் தீர்வு முன்வைத்தவர்களும் அதே நிலைப்பாட்டுக்கு வந்திருக்கின்றார்கள். நாங்கள் செல்லும் வழி, செல்லும் இலக்கு சரியானதாகத்தான் இருக்க வேண்டும்.

2016ஆம் ஆண்டுக்குள் அரசியல் தீர்வு என்று கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் சொன்னபோது அதனை ஏளனம் செய்தவர்கள், இன்று 2016 ஆம் ஆண்டுக்குள் தீர்வுத் திட்டம் வந்து விடுமோ என்று, ஓடோடிச் சென்று மாற்றுத் தீர்வுத் திட்டங்களை முன்வைக்கின்றார்கள். தீர்வுத் திட்டம் வந்துவிட்டால் என்னவாகி விடுமோ என்ற பயத்திலே தற்போது அரசமைப்புத் தீர்வுத் திட்டம் வரக்கூடாது, அது பன்னாட்டு விசாரணை எல்லாம் முடிந்த பின்னர்தான் வரவேண்டும் என்று சொல்லுகின்ற அளவுக்கு நெருக்கப்பட்டிருக்கின்றார்கள். தமிழர்கள் எழுக என்று சொன்னோம் இன்று யார் எழுந்து நிற்கின்றார்கள் என்பது தெரிகின்றது என்றார்.

இதன் பின்னர் கருத்துரை வழங்கிய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்,

"இரு தேசம் ஒரு நாடு கோட்பாட்டை நாம் ஒருபோதும் கைவிடவில்லை. தமிழர் தேசம் அங்கீகரிக்கப்பட்டுச் சிங்கள தேசத்துடன் இணைந்து கூட்டாட்சி அடிப்படையில் எங்களின் இறைமை ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். இதனையே பேரவை முன்வைத்துள்ளது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி 2010 ஆம் ஆண்டிலிருந்து இதனைத் தான் சொல்லி வருகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் கூடப் பேச்சுக்களின்போது, தமிழ்த்தேசம் அங்கீகரிக்கப்பட்ட, தமிழரின் இறைமை ஏற்றுக் கொள்ளப்பட்ட கூட்டாட்சி முறையை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருந்தார்கள்.

உலகின் வல்லரசு யார் என்பதைத் தீர்மானிக்கும் போட்டிக்களமாக இலங்கை இருக்கின்றது. பூகோள அரசியலில் இலங்கை முக்கிய இடத்தை வகிக்கின்றது. தமிழீழ விடு தலைப் புலிகள் உச்சத்திலிருந்த போது இருந்த வாய்ப்பை விட அதிகமான வாய்ப்பு பூகோள அரசியலினால் ஏற்பட்டிருக்கின்றது.

ஐ.நா. தீர்மானத்துக்கு நிபந்தனை அற்ற ஆதரவை வழங்கியதன் மூலம் மகிந்த ராஜபக்ச காப்பாற்றப்பட்டிருக்கின்றார். இதனைச் செய்தது யார்? பூகோள அரசியலை விளங்கிக் கொண்டும், எவரதோ எடுபிடிகளாகச் செயற்பட்டதன் ஊடாக இன்று பொறுப்புக்கூறல் கைநழுவிச் செல்லும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. தமிழ் மக்களை ஏமாற்றியவர்களும் தமிழ் மக்களுக்குப் பொறுப்புக்கூற வைக்கப்பட வேண்டும்.

பூகோள அரசியல் போட்டி ஆட்சி மாற்றத்துடன் முடிந்து போகவில்லை. அது இன்னமும் தொடர்கின்றது" - என்றார்.

அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் உரையாற்றுகையில்,

"சிங்களத் தலைவர்கள் கடந்த வரலாறுகளிலிருந்து பாடம் படித்திருக்கின்றார்களா என்பது அவர்களின் அரசமைப்பு வெளிவரும்போதே தெரியும். சிங்களத் தலைவர்கள் கடந்த காலங்களில் ஏதோ ஒரு வல்லரசுகளின் பக்கம் சாய்ந்தார்கள். அப்போது அந்த வல்லரசுகள் சிங்களத் தலைவர்களை தங்களது பிடிக்குள் கொண்டு வருவதற்குத் தமிழர் விடயங்களை முன்னிறுத்தினர்.

தற்போது வல்லரசுகளுக்கு இடையில் சுழிந்து ஓடுவதற்குச் சிங்களத் தலைவர்கள் முயற்சிக்கின்றனர். தமிழர் தரப்பு ஏற்றுக் கொள்ளும் தீர்வுத் திட்டம் கிடைக்கும் வரையில், வல்லரசுகள் தமிழர்களைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புக் கிடைக்கும்" - என்றார்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் கருத்துத் தெரிவிக்கையில், "நாடாளுமன்ற அரசியலுக்கு அப்பாலான அரசியலே இலங்கை அரசை அடிபணிய வைக்கும்" என்று குறிப்பிட்டார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமசந்திரன் உரையாற்றுகையில், "வடக்கு முதலமைச்சருடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு முரண்பாடு இருக்கலாம். முதலமைச்சர் நடத்திய ஊர்வலத்துக்கு தெற்கில் எழும்புகின்ற இனவாதக் குரல்களுக்கு எதிராக, அதனைக் கண்டித்து ஏன் எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினரும் குரல் கொடுக்கவில்லை" - என்று கேள்வி எழுப்பினார். (த-5)

## 257 விவசாயிகளுக்கு ஐ.சி.ஆர்.சி. உதவியளிப்பு

முல்லைத்தீவு, ஒக்.2

துணுக்காய் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட தேறாங்கண்டல் பகுதி விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக ஐ.சி.ஆர்.சி. நிறுவனத்தால் 257 விவசாயிகளுக்கு, விவசாயப் பொருள்கள் நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டன.

போர் காரணமாக வாழ்வாதாரத்தை இழந்து நிற்கும் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை ஊக்குவிக்கும் வகையில் தேறாங்கண்டல் கிராம சேவையாளர் பிரிவில் விவசாயத்தை மேற்கொண்டு வரும் 257 குடும்பங்களுக்கு ஒரு ஏக்கர் விதைக்க கூடிய வகையில் விதை நெல் வழங்கப்பட் டது.

அத்துடன் கமக்கார அமைப்புக்கு மின்சாரம் மூலம் மருந்து விசிறும் கருவியும் வழங்கப்பட்டுள்ளது.

வயல் நிலங்களைப் பண்படுத்துவதற்காக ஒரு குடும்பத்துக்கு 5ஆயிரத்து500ரூபா பணமாக வழங்கிவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5-ரி7)

## தோட்டத் தொழிலாளர்கள் 6ஆம் நாளாகப் போராட்டம்

கொழும்பு, ஒக். 2

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வை வலியுறுத்தியும், உடனடித் தீர்வை ஏற்படுத்தவேண்டும் எனக் கோரிக்கை விடுத்தும் ஆறாவது நாளாகவும் தொழிலாளர்கள் நேற்று வீதிகளில் இறங்கிப் போராடினர்.

நேற்று ஹற்றன்-நுவரெலியா வீதி மற்றும் தலவாக்கலை-நாவலப்பிட்டி வீதி ஆகியவற்றை இடைமறித்து பத்தனைச் சந்தியில் பத்தனை மவுண்ட்வேர்ணன், திம்புள்ள ஆகிய தோட்டப் பகுதிகளின் சுமார் 500 தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இவ்வாறு வீதியை மறித்துப் போராட்டங்களை நடத்தியவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப் போவதாக திம்புள்ள பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.



தொழிலாளர்களால் பத்தனைச் சந்தியில் ரயர் ஒன்று எரிக்கப்பட்டது. இதன் போது அங்கு பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த திம்புள்ள பத்தனை பொலிஸ் நிலையத்தின் உதவிப் பொறுப்பதிகாரி ஒருவர் எரிந்து கொண்டிருந்த ரயரைத் தூக்கி எறிய முற்பட்ட வேளை தீக்காயங்களுக்குள்ளானார். (இ)

# இரு இனத்தவரும் இரு மொழிகளையும் தெரிந்திருப்பதே நாட்டுக்குச் சிறப்பானது

## மின்சக்தி அமைச்சர் யாழ்ப்பாணத்தில் தெரிவிப்பு

இந்த நாட்டில் சிங்களவர்களுக்குத் தமிழ் தெரிந்திருக்க வேண்டும். தமிழர்களுக்குச் சிங்களம் தெரிந்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் எமது நாடு சுதந்திரம் பெற்றதிலிருந்து நாம் தேடிக்கொண்டிருக்கும், அனைத்து உணர்வுகளையும் வெல்ல முடியும்.

இவ்வாறு தெரிவித்தார் மின்சக்தி அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார.

விளை நிலத்திற்கான மின்சாரம் என்னும் தொனிப் பொருளில் விவசாயிகளுக்கான சலுகை மின் கட்டணத் தேசிய தொடக்க விழா நீர்வேலியில் நேற்று முற்பகல் நடைபெற்றது. இதில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

வடமாகாண ஆளுநர் தமிழில் உரையாற்றியபோது நான் மிகவும் பூரிப்படைந்தேன். தற்போது நாம் பல வேற்றுமைகளிருந்து இன்று ஒன்று சேர்ந்திருக்கின்றோம்.

நாம் இந்த நல்லாட்சி அரசில் பொதுமக்களுக்குத் தேவையான விடயங்களை எவ்வாறு செய்யவேண்டும், எப்படிச் செய்ய வேண்டும், அவர்களுக்கு என்ன தேவைகள் உள்ளன என்பன பற்றி ஆய்வுசெய்து கொண்டு எமது பணிகளைச் செயற்படுத்தி வருகின்றோம்.

நாம் மின்சாரத் துறையிலே முன்னேற்றம் அடைந்து செல்வதால் தேசிய உற்பத்தி வருவாயை அதிகரிக்க வேண்டும் என்ற குறிக்கோளைச் செயற்பாடாகக் கொண்டு இயங்கிக்கொண்டிருக்கிறோம்.

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை வருடமொன்றில் அதிக மாதம் சூரிய வெப்பம் காணப்படுகின்றது. இதனைப் பயன்படுத்தி நாம் சூரிய சக்திப் புரட்சி ஒன்றை மேற்கொள்ள வாய்ப்புள்ளது-என்றார்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட மின்சக்தி பிரதியமைச்சர் அஜித் பெரேரா உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

உங்களது நிலம் அதிகளவு விளைச்சலைத் தரக்கூடிய பிரதேசமாக காணப்படுகிறது. இந்த மண்வளத்தையும் உங்களுடைய நீர் வளத்தையும் கொண்டு நீங்கள் எமது நாட்டை உயர்த்துவீர்கள் என்று நம்பிக்கையுள்ளது. ஒரு காலத்தில் இந்த நாட்டில் அதிகளவான விவசாய உற்பத்திகளைச் செய்தவர்கள் யாழ்ப்பாண விவசாயி கள்தான்.

விவசாயிகளுக்கு மின்சாரப் பாவனையின்போது சலுகை ஒன்றை வழங்கும் முகமாக இந்தத் திட்டத்தை ஆரம்பித்திருக்கிறோம்.



முதலில் பகல் இரவு என்று வேறுபாடு ஏதுமின்றி எல்லா நேரமும் ஒரே கட்டணம் என்றவாறு அறவிட்டோம். முன்னர் மின்சாரப் பாவனையில் ஒரு அலகுக்கு 12 ரூபா அறவிடப்பட்டது. இன்றிலிருந்து 6.5 ரூபாவாக அது குறைக்கப்பட்டிருக்கின்றது. இதற்கெனப் பிரத்தியேகமாக இருக்கின்ற மின்மானியொன்றைப் பொருத்தி உங்கள் விவசாய நடவடிக்கைகளைக் குறைந்த மின்சாரச் செலவில் மேற்கொள்ளமுடியும். அந்த மின்மானியை இரவு நேரங்களில் பயன்படுத்துவதன் மூலமாக உங்கள் தேவையை பூர்த்தி செய்து கொள்ளமுடியும்.

உங்களுடைய பழைய மின்மானியை மாற்றி புதிய பிரத்தியேக மின்மானியை இலவசமாகப் பொருத்துவதன் மூலம் இந்தச் சேவையைப் பெறமுடியும். நீங்கள் செலுத்துகின்ற 600 ரூபா என்ற நிலையான கட்டணத்தைக் குறைத்து 300 ரூபாவைச் செலுத்த ஏற்பாடுகள் செய்துள்ளோம். அனைத்து விவசாயிகளும் இந்தப் புதிய திட்டங்களைப் பெறுவதன் மூலம் உங்கள் செலவீனம் குறைவடைய வாய்ப்புள்ளது-என்றார்.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்டச் செயலர் நா.வேதநாயகன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராசா, ஈ.சரவணபவன், இ.அங்கஜன் மற்றும் வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சீ.வி.கே.சிவஞானம், வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், மின்சார சபை அதிகாரிகள், ஊழியர்கள். விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (து-4-ரி1)

SUPER BALL
සුපර් බෝල්
சுப்பர் போல்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 557
சீட்டிழுப்பு திகதி 2016.10.01
சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
43 47 63 70 T
சுப்பர் ஜக்பொட்
ரூ. 53,287,340/=
வெல்லப்படவில்லை
Web: www.dlb.lk
2016.10.03 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்

SINGER FINANCE
மோட்டார் சைக்கிளுக்கான
குத்தகை வசந்தகாலம்




தொடர்புகளுக்கு:
சுஜந்தன் 077 7 391 449
தனு 077 9 357 124
இல.86, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்

## முல்லைத்தீவு மாவட்ட தொண்டராசிரியர்கள் கலந்துரையாடல் நாளை

யாழ்ப்பாணம், ஒக். 2

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை திங்கட்கிழமை இடம்பெறவுள்ளதாக மாவட்டத்தின் தொண்டராசிரியர் சங்கத் தலைவர் சதீஸ்குமார் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடல் நாளை மு.ப. 10.00 மணிக்கு முல்லைத்தீவு மாவட்டக் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்துக் குட்பட்ட பாடசாலைகளில் நீண்ட காலமாகத் தொண்டராசிரியர்களாகக் கடமையாற்றி அதனடிப்படையில் ஆசிரியர் நியமனத்துக்குத் தகுதியானவர்கள் என்று வடக்கு மாகாணக் கல்வி அமைச்சால் வெளியிடப்பட்ட பெயர் விவரங்களுக்கு உரித்துடைய தொண்டராசிரியர்கள் அனைவரும் தவறாது இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (து-ரி7)

## தமிழரசுக் கட்சி பணிமனைத் திறப்பு விழா ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 2

சாவகச்சேரியில் நாளை திங்கட்கிழமை இடம்பெறவிருந்த இலங்கை தமிழரசுக் கட்சியின் பணிமனைத் திறப்பு விழா தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத் தலைவரும் இலங்கை தமிழரசுக் கட்சியின் இணைப்பாளருமான ம. அன்ரனி ஜெகநாதன் நேற்று மாரடைப்பால் உயிரிழந்ததை அடுத்தே குறித்த திறப்பு விழா நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (து-21)

காணி விற்பனைக்கு
சாவகச்சேரி, நுணாவில், ஆறுமுகம் வீதியில் A9 வீதியிலிருந்து சுமார் 100 மீற்றர் தூரத்தில் 18½ பரப்புக் காணி பழைய வீடு, கிணறு மற்றும் சில பயன்தரு மரங்களுடன் விற்பனைக்கு உண்டு. தரகர் வேண்டாம். விலை பேசித் தீர்மானிக்கலாம்.
077 861 7740, 021 568 9000

C B B S
இலங்கையில் முதல் தடவையாக
பெண்களுக்கான அழகுக்கலைக் கல்லூரி
ஒளி அழகன் ஸ்ருடியோவும்
British College of Beauty Studies
உம் இணைந்து நடத்தும்
பெண்களுக்குப் பொருத்தமான துறை சார்ந்த பாடநெறிகள்
* அழகுக்கலை - Makeup
* தையற்கலை - Tailoring
* சமையற்கலை -Cooking, கேக்ஐசிங் -Icing
* கணினி
* ஆங்கிலம்
* Ladies Skills Development
ஒவ்வொரு பாடநெறியிலும் பல பிரிவு பயிற்சி வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
* வெளிநாடு செல்ல இருப்பவர்களுக்கு பெரும் வரப்பிரசாதமாக அமையும் எங்களுடைய சான்றிதழ்.
* எங்களிடம் எந்தப் பாடநெறியினைப் பூர்த்தி செய்தாலும் உலகின் எப்பகுதியிலும் சுயமாக சொந்தத் தொழிலினைப் பெற்றுக் கொள்ள முடியும்.
Our Special Diplomas
DIBC ADIBTH DIM DIAM
DIHC DIHB DIHC DIM
DIAMF DIT DICFM DILS
எங்களிடம் எந்த பாடநெறியை தொடங்க விரும்பினாலும் வருடத்திற்கான இறுதி வகுப்பில் இணைந்து கொள்ளுங்கள்.
குறிப்பு: இறுதி வகுப்பு ஆரம்பமாகும் திகதி - 10.10.2016
பெண்களே இது உங்களுக்கான கல்லூரி.
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 076 701 1645
பலாலி வீதி, திருநெல்வேலி,

# காலாவதியான பொருள்களை விற்றோருக்குத் தண்டம்

யாழ்ப்பாணம், ஒக்.2
திகதி காலாவதியான உணவுப் பொருள்கள், பூச்சி நாசினிகள், அழகு சாதனப் பொருள்களை விற்பனை செய்த மற்றும் அதிக விலைக்கு பொருள்களை விற்பனை செய்த 30 வர்த்தகர்களுக்கு எதிராக கடந்த வாரம் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை அலுவலர்களால் யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் வழக்கு கள் தொடரப்பட்டன.
யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸ் பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகளில் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போதே இவர்கள் இனம் காணப்பட்டனர்.
அவர்களுக்கு எதிரான வழக்குகள் கடந்த வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட் டன. பழுதடைந்த உணவுப் பொருள்களை விற்பனை செய்த 15 வர்த்தகர்களுக்கு தலா 6 ஆயிரம் ரூபா தண்டமும், திகதி காலாவதி யான பூச்சிநாசினிகள் மற்றும் அழகு சாதனப் பொருள்களை விற்பனை செய்த 8 வர்த்தகர்களுக்கு தலா 3 ஆயிரம் ரூபா தண்டமும், அதிக விலைக்கு பொருள்களை விற்பனை செய்த ஐவருக்கு தலா 9 ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டது.
நீதிமன்றில் சமுகமாகாத இருவருக்கு அழைப்புக் கட்டளை அனுப்புமாறும் நீதிவான் சி.சதீஸ்தரன் உத்தரவிட்டார்.
(ந-103)

## வாள்வெட்டில் இளைஞர் படுகாயம்

யாழ்ப்பாணம் ஒக்.2
நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட வாள்வெட்டில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம், பொம்மைவெளிப் பகுதியில் நடந்துள்ளது.
இரு முஸ்லிம் குழுக்களுக்கிடையே மாலை மோதல் ஏற்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக வாள்வெட்டு நடத்தப் பட்டுள்ளது என்று தெரிவிக்கப் பட்டது.
சம்பவத்தில் காயமடைந்த அப்பாஸ் மொகமட் நிவ்ராஸ் மொகமட் என்பவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.
இது தொடர்பில் இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டு யாழ். நீதிவான் மன்றில் முற்படுத்தப் பட்டனர்.
அவர்களை எதிர்வரும் 10ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் சி. சதீஸ்தரன் உத்தரவிட்டார்.
(ந-103)

## டெங்கு பரவும் சூழல்: 14 பேருக்கு தண்டம்

யாழ்ப்பாணம், ஒக்.2
டெங்கு நோய் பரவும் விதமாக சூழலை பேணிய 15 பேருக்கு எதிராக யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் வழக்குத் தொடரப்பட்டது.
யாழ்ப்பாண பொலிஸ் நிலையத் தின் சுற்றுச் சூழல் பிரிவால் யாழ்பொலிஸ்பிரிவுக்கு உட் பட்ட பகுதிகளில்பொது சுகாதார பரிசோதகர்களுடன் இணைந்து நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கைகளிலேயே இவர்கள் இனங்காணப் பட்டனர்.
யாழ். நீதிமன்றில் வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது 14 பேர் சமுகமாகியிருந்ததுடன் குற்றத்தையும் ஏற்றுக் கொண்டனர். அவர்களுக்குத் தலா ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.
நீதிமன்றில் சமுகமாகாத ஒருவருக்கு பிடியாணை பிறப்பிக்கப் பட்டது. (ந-103)

**வேலைவாய்ப்பு**

பிரசித்தி பெற்ற எமது நிறுவனம் ஒன்றிற்கு ஆண், பெண், பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் தேவை. வயது 18 - 50 வரை. சம்பளம் OT யுடன் 35000/= சாப்பாடு ஒழுங்கு செய்து தரப்படும். தேவைப்படும் பிரதேசங்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, திருகோணமலை

தொடர்பு: 077 506 1208
145/161, Kirulapanai,
Colombo -06
(C 25537) (14,17,18)



**மதுரா அழகுக்கலைப்பயிற்சி நிலையம்**
(கோப்பாய் நாவலர் பாடசாலை அருகில்)

புதிய பிரிவுகள் - முற்றிலும் புதிதாக வடிவமைக்கப்பட்ட பயிற்சிகள் - குறைந்த கட்டணம் நிறைந்த பயிற்சி காலம் - 3 மாதம், ஒரு மாதம் பயிற்சியின் நிறைவில் பதிவு செய்யப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும்.

டிப்ளோமா கோர்ஸ் - (பயிற்சி சுருக்கம்) எயாபிரஷனர் மேக்கப் ( 3Dஐ, லிப், பேஸ், மேக்கப்) ஈவினிங், ஓயிலி சன்லைற், நைற், லைற் கிறியேற்றிவ் ஸ்ரூடியோ ஆகிய மேக்கப் பிறைடல் டிரெஸ்ஸிங் (6) பேசியல் - 25, கல்வனிக், அல்ரா சொனிக், கிளாவனிக், பிம்பிள்றிமூவிங், பிளக்ஸ்பொட்றி மூவிங், அன்ரினஜிங், பில்லிங் பேசியல், ஹெயார்கெயா, ஹெயார் செற்றிங், ஹெயர் ஸ்ரைலிங், பெடிக்கியூர், மெனிக்கியூர், திரெட்டிங் வக்ஸ்ஸிங், நெயில்ஆட், மெகந்தி டிசைனிங், சாறிரொப்பிங் - 25 ஆகியன மேலும் தையல், கேக், ஐசிங் டிப்ளோமா பயிற்சிகள் உடன் தொடர்புகொள்ளவும்.

மகளிர் மட்டும்
ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்
**பழைய வீதி, கோப்பாய்.**
T.P: 076 648 0749
(ஜே 5036)(13,18,17)

**Floence Nighhtingaate (F.N.R)**
**தாதியர் பாடசாலை**



இப்பொழுது புத்தம் புதிதாக அனைத்து வசதிகளுடனும் மருதனார் மடத்தில் குறுகிய காலத்தில் மிகக் குறைந்த கட்டணத்தில் தாதியர் ஆகி தொழில் புரிய முடியும்.

**படித்துவிட்டு வேலை இன்றி இருக்கின்றீர்களா?**

நிச்சயமாகத் தொழிலை இலக்காகக் கொண்ட பாடநெறி ஒரு வருட பாடநெறி

- 3 மாதங்கள் தனியார் வைத்தியசாலையில் பயிற்சிகள். பின் தனியார் வைத்தியசாலையில் நிரந்தர வேலை வாய்ப்பு
- இப்பாடநெறி ஊடாக வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களை பெற்றுக் கொள்ள முடியும் என்பதை அறியத் தருகின்றோம்.
- தகைமைகள்
  O/L ஆறு பாடம் சித்தி
  16 - 35 வயதுவரை

நேரம் :- திங்கள் முதல் வெள்ளி வரை
முற்பகல் 9.00 - பிற்பகல் 2.30 வரை
கிழமையில் இரண்டு நாள்கள் மட்டுமே வகுப்புகள் நடைபெறும்.

- MLT வகுப்புக்களும் நடைபெறும்.
- தகைமைகள்
  A/L விஞ்ஞானம் (Bio Science)

மேலும்

- அரசாங்க வைத்தியசாலை ஓய்வுபெற்ற தாதியர் மூலம் சிறந்த ஆலோசனை வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:- 077 718 6438
(ஜே/5032) (11,18)
web:- fnighingale.com
கே.கே.எஸ்.றோட், மருதனார் மடம், யாழ்ப்பாணம்.

**காணிவிற்பனைக்கு**
பருத்தித்துறையில் 3 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.
மேலதிக விவரங்களுக்கு:-
077 402 5775

**ஆசிரியர் தேவை**
6 ஆம் ஆண்டு கல்வி கற்கும் மாணவனுக்கு வீட்டுக்கு வந்து கணிதம், விஞ்ஞானம், புவியியல், குடியியற்கல்வி ஆகியன ஆங்கில மொழி மூலமும் மற்றும் தமிழ், வரலாறு ஆகிய பாடங்களைக் கற்பிப்பதற்கும் ஆசிரியர் தேவை. இருபாலாரும் உடன் தொடர்பு கொள்ளலாம்.
077 284 9686

**MAJESTIC CINEPLEX Jaffna**
**கார்கிள்ஸ் ஸ்குவெயர்**
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்










விசாரணை ☏ 021-2227712
CeylonTheatres
www.ceylontheatres.lk

**கட்டடம் தேவை**
யாழ். நகரில் விடுதி நடத்தக் கூடிய கட்டடம் தேவை.
077 741 2713, 077 724 2427

**வேலையாள்கள் தேவை**
கட்டட வேலைக்கு மேசன், உதவியாளர் ஆகியோர் தேவை.
தொடர்பு: 077 374 0773

**IPS கல்வி நிறுவனம்**
இலவச கணினி வகுப்புக்கள்
பிரிவு IV
ஆரம்பம்:-15.10.2016
சனிக்கிழமை (10 a.m)
- பதிவுகளை 01.10.2016 இலிருந்து மேற்கொள்ள முடியும்
- பெறுமதி மிக்க சான்றிதழ்
- காலம் : 3 மாதங்கள்

IPS கல்வி நிறுவனம் : திருநெல்வேலி விஞ்ஞான பீடத்துக்கு அண்மையில்
Hotline - 076 685 2529

**USA GREEN CARD - 2018**
அமெரிக்க Green Card Visa விண்ணப்பிப்பதில் 14 வருட அனுபவமிக்க எமது நிறுவனத்தில் 2018ஆம் ஆண்டுக்கான விண்ணப்பப்படிவம் மற்றும் விபரங்களை ரூபா 15/- முத்திரையொட்டப்பட்டு சுய முகவரியிட்ட தபாலுறையை Bristolvisa, No. 8/3/4, Bristol Street, Colombo 01 என்னும் முகவரிக்கு அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். (எங்கள் நிறுவனத்துக்கு கிளை அலுவலகமோ அல்லது பிரதிநிதிகளோ இலங்கையின் எந்த ஒரு பாகத்திலும் இல்லை என்பதை அறியத்தருகிறோம்.
Bristol Cyber Cafe என்ற பெயரில் இயங்கிவந்த எமது நிறுவனம் 2016 செப்டெம்பர் 7ஆம் திகதி முதல் Bristolvisa எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு அதே முகவரியில் இயங்கிவருகின்றது.
**Bristolvisa CONSULTATIONS**
No. 8/3/4, Bristol Street, Colombo 01. Tel. 011 2393919
Mobile: 077 4276579 E-mail: bristolvisa@gmail.com

**தேவை**
களுத்துறை, அநுராதபுரம், கொழும்பு ஆகிய இடங்களில் உள்ள வேலைத் தளங்களுக்கு மேசன்மார், கார்பென்ரெர்ஸ், பார்பென்ரர்ஸ், தொழிலாளிகள் தேவை.
071 164 2180/ 071 309 0708/ 077 232 7227/ 071 313 5663/ 071 164 2944/ 071 164 3190

**இதயத்தைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்**
**இதயநாடிகளில் நோய் அன்ஜைனா - மார்பு அடைப்பு**
கொழுப்பு படிவதால் நாளங்கள் சுருங்கி சீரான இரத்த ஓட்டத்தைக் குறைக்கிறது. மேலும் இவை மார்புவலி மற்றும் இதயபாதிப்பு ஏற்படுத்தக் கூடியது.

நெஞ்சடைப்புக்கான காரணிகள்
புகைத்தல். உயர்இரத்தஅழுத்தம்.
அதிக கொழுப்புச்சத்து. நீரிழிவு

நெஞ்சுவலி, மார்படைப்பையும் பூரணமாகக் குணப்படுத்தும் எமது ஆயுர் வேதமருத்துவம் உன்னதமானது. நிரூபணமானது




எங்களால் குணப்படுத்தப்படுகிறது
- இருதயநோய்
- நோய் எதிர்ப்பு சக்தி
- புற்றுநோய் தணிப்பு
- ஈரல் பாதிப்புக்கள்
- மூட்டு வாதம்
- மூட்டுவலி / முதுகு வலி
- புரோஸ்டேற் பிரச்சினைகள்
- ஒற்றைத் தலைவலி
- புழையழற்சி
- மனஅழுத்தம்
- இருமல் / சளி
- படுக்கைப்புண்கள்
- நாட்பட்ட காயங்கள்
- நீரிழிவு நோய்கள்
- வைரஸ் தொற்றுக்கள்
- பாலியல் குறைபாடு
- மன்குஷ்டம்

FAIR PHARMA (PVT) LTD
செலிங்கோ ஹவுஸ், 10ஆம் மாடி, கிழக்கு,
இல.69 ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு - 01
Website : www.ayurveda.lk
E-mail : fairpharmasrilanka@yahoo.com
Hotline: 077 755 5600 / 077770 8310/ 077 770 8330
Office: 011 438 8200 / 4 388 100/ 4 388 101 / 4 388 102
APPROVED BY DEPARTMENT OF AYURVEDA,
ஆயுர்வேத மருத்துவசபை. BIO & ISO 9001:2008
அத்தாட்சிப்படுத்தப்பட்ட நிறுவனம்.

# மல்லாவி வைத்தியசாலை பிரேத அறைக்கு குளிரூட்டி

## அடுத்த ஆண்டு பொருத்தப்படும் என சிவமோகன் எம்.பி. தகவல்

முல்லைத்தீவு, ஒக். 2

மல்லாவி ஆதார வைத்தியசாலையின் பிரேத அறைக்கு அடுத்த ஆண்டு குளிரூட்டி பொருத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. துணுக்காய், ஐயன்கன்குளம் வைத்தியசாலைகளுக்கு நிரந்தர வைத்தியர்களை நியமிப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினரும் முல்லைத்தீவு மாவட்ட இணைத்தலைவர்களில் ஒருவருமான மருத்துவர் சி. சிவமோகன் தெரிவித்தார்.

துணுக்காய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் துணுக்காய் பிரதேச செயலகத்தில் கடந்த திங்கட்கிழமை நடத்தப்பட்டது. அதில் கருத்துத் தெரி வித்த போதே நாடாளுமன்ற உறுப்பினர் இவ்வாறு தெரி வித்தார்.

துணுக்காய், ஐயன்கன்குளம் கிராமங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் தற்காலிகமாக வைத்தியர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். ஒப்பந்த காலம் முடிவடைந்ததும் வைத்தியர் இல்லாத வைத்தியசாலைகளாகவே இந்த வைத்திய சாலைகள் உள்ளன. மக்கள் வைத்திய உதவிகளைப் பெறுவதில் பெரும் சிரமங்களை சந்திக்கின்றனர். அவற்றுக்கு உடனடியாக நிரந்தர வைத்தியர்களை நியமிக்க வேண்டும். மல்லாவி ஆதார வைத்தியசாலையிலும், கட்டடங்கள் அபிவிருத்தியடைந்து கொண்டு வருகின்றன. வைத்திய நிபுணர்கள் இதுவரை நியமிக்கப்படவில்லை. எமது பிரதேசத்தில் அதிகம் காணப்படுகின்ற நோய்களான சிறுநீரக நோய், முள்ளந்தண்டு பாதிப்பு போன்ற நோய்களை குணப்படுத்துவதற்காக வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழ்கின்ற மக்கள் செலவின் மத்தியில் வெளி மாவட்டங்களுக்குச் சென்றே நோய்க்கான மருந்துகள் பெறுகின்றனர். மல்லாவி ஆதார வைத்தியசாலையில் பிரேத அறையில் குளிரூட்டி வசதி இல்லை. விபத்துக்களால் ஏற்படும் உயிரிழப்புக்களின் போது சடலங்களை வைத்தியதிகாரிகள், மரண விசாரணை அதிகாரிகள் வரும் வரை பாதுகாப்பாக வைப்பதற்கு சிரமப்பட வேண்டியுள்ளது. குளிரூட்டி இன்மையால் சடலங்கள் பழுதடையும் நிலை காணப்படுகின்றது. அவற்றைக் கருத்திற் கொண்டு வைத்தியசாலையின் பிரேத அறைக்கு குளிரூட்டி பொருத்த ஆவன செய்ய வேண்டும்.- என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

மக்களுடைய கோரிக்கைகள் தொடர்பாக சுகாதார அதிகாரியுடன் கலந்துரையாடிய பின் நிரந்தர மருத்துவர்களை பெற் றுத்தருவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும். 2017ஆம் ஆண்டு மல்லாவி ஆதார வைத் திய சாலையில் அமைந்துள்ள பிரேத அறைக்கு குளிரூட்டி பொருத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.- என்று நாடாளு மன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

(ந-21,ரி7)

## கைதடி பொது நூலகத்துக்கு தேசிய விருது

தென்மராட்சி, ஒக்.2

தேசிய நூலக ஆவணவாக்கல் சபையால் கடந்த வருடம் பொது நூலகங்களிடையே நடத்தப்பட்ட தேசிய நிலை செயற்பாட்டுப் போட்டியில் சாவகச்சேரி பிரதேச சபையின் கைதடி பொது நூலகம் தேசிய விருதுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் பொது நூலகங்களிடையே நடத்தப்பட்ட தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகளின் அடிப்படையில் வாசகர்கள், மாணவர்கள், முன்பள்ளிச் சிறார்கள் போன்றோருக்குச் சிறப்பான செயற்பாடுகளை வழங்கியமைக்காக தேசிய விருதுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது என கைதடி பொது நூலக நூலகர் தெரிவித்தார்.

(ந-9)

## சிறுவர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக். 2

நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில் பொதுநூலகத்தின் சிறுவர் தின நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளன.

நிகழ்வுகள் கொக்குவில் பொது நூலக மண்டபத்தில் நல்லூர் பிரதேச செயலர் தி.அன்னலிங்கம் தலைமையில் நடைபெறும்.

(ந-ரி)

## கிளி. மாவட்ட தொண்டர் ஆசிரியருக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக்.2

கல்வி அமைச்சரைச் சந்திப்பது தொடர்பான கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. அதில் கிளிநொச்சி மாவட்ட தொண்டர் ஆசிரியர்கள் அனைவரும் கலந்துகொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தொண்டர் ஆசிரியர் சங்கத் தலைவர் ஜெயராஜ் தெரிவித்ததாவது:

அவசர கலந்துரையாடல் மு.ப. 9 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு முன்பாக உள்ள தனியார் கல்வி நிலையத்தில் நடைபெறும்.

தொண்டராசிரியர்களுக்கு வழங்கப்படவுள்ள நியமனம் தொடர்பாக கலந்துரையாட கல்வி அமைச்சின் அலுவலகம் செல்லவிருப்பதால் அதற்குரிய வாகன ஒழுங்குக்காக தொண்டர் ஆசிரியர்கள் ஆயிரம் ரூபா எடுத்து வர வேண்டும்.- என்றார்.

(ந-4,ரி7)

## க.பொ.த. சாதாரண தர மாணவருக்கு கருத்தமர்வு

மன்னார், ஒக். 2

இந்த ஆண்டு க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மடு கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான இலவச சிறப்பு கருத்தமர்வு நேற்றுச் சனிக்கிழமை காலை பண்டிவிரிச்சான் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகரின் வழிகாட்டுதலில் அருட்பணி பாக்கிய ரஞ்சித் நம்பிக்கை நிதியத்தின் அனுசரணையுடன் அமல உற்பவ கன்னி மரியாளின் சமூக மற்றும் கல்விப்பணிகளுக்கான அமைப்பின் ஏற்பாட்டில் கருத்தமர்வு நடத்தப்பட்டது.

குறித்த கருத்தமர்வில் கணிதம் மற்றும் விஞ்ஞான பாடங்களுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டன. மடு கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மாணவர்கள் அதில் கலந்துகொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(ந-56)

வாழ்க்கையைக் கட்டியெழுப்பும் இடம்

British Way®
English Academy

எந்த மாற்று வழியுமில்லை British Way

இலங்கையின் முதலாவது ஆங்கிலத்துக்கான பயிற்சிப்பட்டறை

நிட்டம்புவ 033 302 19 19
யாழ்ப்பாணம் 033 33 40 600
காலி 033 302 11 11
மாத்தறை 033 302 12 12
அநுராதபுரம் 033 302 13 13
நுகேகொட 033 302 14 14
கம்பஹா 033 302 15 15
நீர்கொழும்பு 033 302 16 16
கண்டி 033 302 17 17
குருநாகல் 033 302 18 18
கிரிபத்கொட 077 325 77 67
இரத்தினபுரி 0333 555 315

DAkkS Deutsche Akkreditierungsstelle D-ZM-18590-01-00
IAF International Accreditation Forum
ISO 9001:2008 CERTIFIED

இவ் இரண்டு மாத காலப் பயிற்சியின் பின்னர் 180 நாடுகளில் அங்கீகரிக்கப்பட்ட ETS TOEFL Junior மற்றும் ETS TOEIC USA தரத்திலான சர்வதேச சான்றிதழ்கள் வழங்கப்படும்

TOEIC Test Center
UNIVERSITY of CAMBRIDGE ESOL Examinations
ICDL
bcs
abe Accredited College
SQA

இரண்டு மாத காலப் பயிற்சி
02 Months
காலை 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரை திங்கள் முதல் வெள்ளி வரை இரண்டு மாத காலப் பயிற்சி வழங்கப்படும்.
இப்பயிற்சியானது பிரித்தானியா மற்றும் அனேக நாடுகளில் கையாளும் விதத்தில் இரண்டு மாதத்திற்குள் ஆங்கில அறிவே இல்லாத ஒருவருக்கு கற்பிக்கும் முறைமைக்கேற்ப இலங்கையிலும் விசேடமாக யாழ் மண்ணிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியின் மூலம் 100% ஆங்கிலத்தை சரளமாக பேச வைக்க முடியுமென இக்கல்வியகம் உத்தரவாதம் அளிக்கின்றது.
04, October, 2016 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

வார இறுதி வகுப்புகள்
04 Months
காலை 8.30 முதல் 4.00 மணி வரை பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில்
வார இறுதி வகுப்புகள் ஞாயிறு காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை நான்கு மாத காலம் நடைபெறும். தொழில் செய்பவர்களுக்கு இப்பயிற்சிநெறி மிகவும் உகந்ததாகும்.
16, October, 2016 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

IELTS
சனிக்கிழமைகளில் மாலை 1.30 முதல் 5.30 வரை
08, October, 2016 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

KIDS' Class
Grade 1-10
சனிக்கிழமைகளில் காலை 8.30 முதல் 12.30 வரையும் மாலை 1.00 முதல் 4.00 வரையும்
சிறுவர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ள இந்த பாடநெறியானது மாணவர்களின் ஆங்கிலம் தொடர்பாக காணப்படும் பயத்தை நீக்கி அவர்களின் சிறந்த எதிர்காலத்திற்கான சரியான வழியை காண்பிப்பதற்காக விசேடமாக தயாரிக்கப்பட்டுள்ளது
08, October, 2016 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

British Way® English Academy
Contact (Jaffna Branch) : 033 33 40 600
நிட்டம்புவ | Tel: 033 302 19 19 | Fax: 033 2297912 | E-mail: info.britishway@gmail.com | Web: www.britishway.lk
No.15, Kannathiddy, Jaffna. (In front of the Shivan Kovil)



நிரந்தர நியமனம் வழங்கக் கோரி வடக்கு, கிழக்கு ரயில் கடவைக் காப்பாளர் ஒன்றியம் பணிப் புறக்கணிப்பு நடத்துகின்றது. அதனால் நேற்று வவுனியா ரயில் கடவைகளில் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர். ரயில் கடவைகளில் தற்காலிக ஊழியர்களாகக் கடமையாற்றிய கடவை காப்பாளர்கள், தமக்கு 7ஆயிரத்து 500 ரூபா மாதாந்தக் கொடுப்பனவாக தற்போது வழங்கப்படுகின்றது. அது அதிகரிக்கப்பட்டு 15ஆயிரம் ரூபா சம்பளம் வழங்கவேண்டும் என்று தெரிவித்து நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுகின்றனர். (ற-21)

# முஸ்லிம்கள் காணித் தேவையை பூர்த்தி செய்ய காணி பரிந்துரை

## முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஒக். 2

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணிகள் அற்ற முஸ்லிம்களுக்கான காணித் தேவையை பூர்த்தி செய்வதற்கு கூழாமுறிப்பில் உள்ள 177 ஹெக்ரெயர் காட்டுப் பகுதி நிலத்தை முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் பரிந்துரைந்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணி அற்றவர்களாக சுமார் 2 ஆயிரத்து 400 தமிழ்க் குடும்பங்களும், சுமார் 920 முஸ்லிம் குடும்பங்களும் இனங் காணப்பட்டுள்ளன.

இது குறித்து மாவட்டச் செயலாளர் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணி அற்று வாழும் மக்கள் இன வேறுபாடு இன்றி மாவட்டத்தில் பரம்பரையாக வாழ்ந்தவர்கள் என்பதை அடிப்படையாக கொண்டு இனங் காணப்பட்டனர்.

முஸ்லிம்களுக்கான காணித் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கில் கூழாமுறிப்பு பகுதியில் உள்ள 177 ஹெக்ரெயர் காட்டுப்பகுதி நிலம் இனங்காணப்பட்டது. இனங்காணப்பட்ட நிலம் தொடர்பில் காணி பயன்பாட்டுக் குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

கூட்டத்தில் குறித்த நிலத்தை விடுவிக்கலாம் என எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் அதன் பரிந்துரையை அடிப்படையாக கொண்டே மாவட்டச் செயலாளர் என்ற வகையில் எனது பரிந்துரை வழங்கப்பட்டது.

மாவட்டத்தில் உள்ள காணித் தேவையுடைய அனைவரின் காணித் தேவைகளையும் கவனத்தில் எடுத்து செயற்படுகின்றோம். இன ரீதியாக செயற்பாடு எதுவும் இல்லை - என்றார். (ற-101)

# வவுனியா வடக்கு வலயத்தில் 127 ஆசிரியர் வெற்றிடங்கள்

யாழ்ப்பாணம், ஒக். 2

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் தற்போது 127 ஆசிரியர்கள் வெற்றிடங்கள் உள்ளன என்று வலயக் கல்வி அதிகாரிகள் தெரிவித்தனர்.

வவுனியா வடக்கின் கல்வி பின்னடைவுக்கான காரணம் தொடர்பில் வலயக் கல்விப் பணிமனையில் நேற்று மக்கள் பிரதிநிதிகள், கல்வித் திணைக்கள அதிகாரிகள், பெற்றோர்களுக்கு இடையிலான் விசேட சந்திப்பு நடைபெற்றது. அதில் மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், கல்வித் திணைக்கள அதிகாரிகள், அதிபர்கள், பெற்றோர், கல்விச் சமூகத்தினர் கலந்து கொண்ட சந்திப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் இடம்பெற்றது.

கல்வியின் பின்னடைவுக்கான காரணமாக பின்வரும் காரணங்கள் சுட்டிக்காட்டப்பட்டன. பாடசாலை ரீதியாகவும், பாடரீதியாகவும் நிலவும் ஆசிரிய வெற்றிடம் வலய அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது.

எமது பிரதேசத்திலும், அதனை அண்டிய பகுதிகளிலும் உள்ள பாடசாலைகளில் எண்ணிக்கையின் பிரகாரம் ஆசிரியர்கள் நியமிக்கப்படுகின்றனர். பாட ரீதியாக நியமிக்கப்படுவதில்லை. குறிப்பாக கணிதம் , விஞ்ஞானம் , ஆங்கில பாட ஆசிரியர்கள் மிகவும் அரிதாகவே உள்ளனர். ஆசிரியர்கள் பற்றாக்குறை என்று சுட்டிக்காட்டினால் நடனம், சங்கீதம் , சமயம் போன்ற பாட ஆசிரியர்களை மேலதிகமாக அனுப்பி வைக்கின்றனர். மாணவர்கள் துறைசார் கல்வியை இழக்கின்றனர்.

அதிகமான பாடசாலைகளில் ஆசிரியர் விடுதி கிடையாது. வெளி மாவட்டங்களில் இருந்து வரும் ஆசிரியர்களுக்கான இருப்பிட வசதி இன்மையால் இங்கு தங்கி நிற்பதற்கு பல ஆசிரியர்கள் பின்னடித்து வெளியே செல்லவே முயற்சிக்கின்றனர். எமது வலயத்திற்கு வரும் ஆசிரியர்களில் பலரும் பிரதான வீதிகளை அண்டிய பாடசாலைகளிலேயே கற்பிக்கின்றனர். புற நகர்ப் பாடசாலைக்குச் செல்ல மறுக்கின்றனர். அதற்கு முக்கிய காரணமாக வீதிப் போக்குவரத்தே முக்கிய காரணமாகவுள்ளது.

இவை அனைத்தையும் மீறி நியமிக்கப்படும் ஆசிரியர்கள் சில காலங்களில் அரசியல் செல்வாக்கின் அடிப்படையில் இடமாற்றத்தைப் பெற்றுச் செல்கின்றனர். இவற்றின் காரணமாக ஓரளவு வசதி வாய்ப்புக் கிட்டும் மாணவர்கள் நகர்ப்புற பாடசாலைகளுக்குச் செல்வதனால் கல்வியின் நிலை பின்னடைவு மட்டத்திலேயே காணப்படுகின்றது- என்றனர். (ற-101)



# கிளி. சந்தையில் சேதமுற்ற கடைகளுக்கு புதிய கட்டடம்

## அடிக்கல் நட்டார் வடக்கு முதலமைச்சர்

யாழ்ப்பாணம், ஒக்.2

கிளிநொச்சி பொதுச் சந்தையில் அண்மையில் ஏற்பட்ட தீ விபத்தால் சேதமடைந்த கடைகளின் நடத்துநர்கள், வர்த்தகர்களுக்குப் புதிய கடைகள் அமைக்கப்படவுள்ளன. அதற்கான அடிக்கல்லை வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் நேற்று நட்டார்.

கடந்த மாதம் 16 ஆம் திகதி கிளிநொச்சி பொதுச் சந்தையில் ஏற்பட்ட தீ விபத்து காரணமாக 124 கடைகள் முழுமையாகவும் பகுதியளவிலும் எரிந்து நாசமாகின. விபத்தால் 220 மில்லியன் ரூபா வரையான இழப்பை வர்த்தகர்கள் எதிர்கொண்டனர். பாதிக்கப்பட்ட வர்த்தகர்களின் வியாபார நடவடிக்கையை மீள ஆரம்பிப்பதற்காக வடமாகாண முதலமைச்சரால் வழங்கப்பட்ட 9 மில்லியன் ரூபா நிதியில் 42 கடைகள் அமைக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் காலம் பண்டிகைக் காலம். அதுமட்டுமல்லாது பருவபெயர்ச்சிக் காலம். அதைக் கருத்திற் கொண்டு இந்தக் கட்டடம் மிக விரைவாக நிர்மாணிக்கப்பட்டு வர்த்தகர்களிடம் கையளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

நிகழ்வில் வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், வடமாகாண கல்வி அமைச்சர், வடமாகாண பிரதம செயலாளர், கிளிநொச்சி மாவட்டச் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-4,ரி3,34)

# மலச் சுத்திகரிப்பு நிலையத்துக்கு பலாலி தெற்கு மக்கள் எதிர்ப்பு

## கைவிடப்பட்டது திட்டம்



யாழ்ப்பாணம், ஒக். 2

வலி. வடக்கு, பலாலி தெற்கு வயாவிளானில் உள்ள புனித இந்து மயானத்தை இல்லாது செய்து மலச் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதைக் கண்டித்து அந்தப் பகுதி பூர்வீக மக்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் நேற்று ஈடுபட்டனர். அதையடுத்து மலச் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் நடவடிக்கை கைவிடப்பட்டது என்று கூறப்பட்டது.

அண்மையில் விடுவிக்கப்பட்ட வலி.வடக்குப் பகுதியில் நான்கு கிராம சேவையாளர் பிரிவுக்கு உரித்தான பூணையன் காடு இந்து மாயனத்தை இல்லாது ஆக்கி வலி.வடக்கு பிரதேச சபை மலச் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றை அமைக்கின்றது. முன்னர் சடலங்களை எரிக்கப்பட்ட இடத்தில் கல் அரிந்து அதன் புனிதத் தன்மையினை கெடுக்கும் நடவடிக்கையும் நடைபெற்றது. எமது முன்னோர்களின் சடலங்கள் இந்தப் பகுதியிலேயே எரியூட்டப்பட்டன. இந்து சமயத்துடன் தொடர்புடைய மயானத்தில் புனித தன்மையைக் கெடுக்கும் நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு ஒரு போதும் அனுமதிக்க முடியாது. இந்தப் பகுதியில் காணி இல்லாத 120 குடும்பங்களுக்கு தலா 2 பரப்பு என்ற வீதம் காணி கள் பகிர்ந்து கொடுக்கப்பட்டுள்ளன. மக்கள் மீள் குடியமர்வதற்கு தயாராகி வரும் இந்த வேளையில் இவ்வாறான திட்டம் இந்தப் பகுதிக்கு பொருந்தாத ஒன்றாக் கருதப்படுகிறது. இதனால் சுவாசம் சார்ந்த நோய்கள் வருவதுடன் மழைகாலங்களில் நிலத்தடி நீர் பாதிக்கப்படும் தன்மையும் உள்ளது.- என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

மக்களின் எதிர்ப்பு நடவடிக்கையில் மலச் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிகள் இந்த இடத்தில் நிறுத்தப்பட்டுள்ளது. வலி.வடக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட காணிகளில் ஏதாவது இந்தத் திட்டத்துக்கு ஏற்ற வகையான ஒரு இடம் தெரிவு செய்யப்பட்டதும் மலச்சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படும் - என்று வலி.வடக்கு பிரதேசசபைச் செயலர் தெரிவித்தார். (ற-4,ரி,107)

# பற்றுச்சீட்டு முடிந்ததால் மணல் வழங்கல் நிறுத்தம்

## வீட்டுத் திட்டப் பயனாளிகள் திண்டாட்டம்

முல்லைத்தீவு, ஒக். 2
கட்டுமானப் பணிகளுக்கான மணலுக்காக கனியவள திணைக்கள அனுமதியுடன் பிரதேச செயலகங்களில் வழங்கப்படும் பற்றுச்சீட்டின் புத்தகம் முடிவடைந்ததால் ஒட்டுசுட்டான் பிரதேச வாழ் மக்கள் மணலைப் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பிரதேச செயலக ரீதியாக மாதாந்தம் நூறு கியூப் ஆற்று மணல் ஏற்றுவதற்கான அனுமதி மட்டுமே வழங்கக்கூடிய அதிகாரமளிக்கபட்டுள்ளது. ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் இந்த மாதம் முற்பகுதியிலேயே 60 கியூப் மணல் ஏற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கனியவள திணைக்களத்தால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டுப் புத்தகம் முடிவடைந்துவிட்டது எனக் கூறி வீட்டுத்திட்டப் பயனாளிகள் திருப்பி அனுப்பப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மாதம் முடியும்வரை பற்றுச்சீட்டுப் புத்தகம் பிரதேச செயலகத்திற்கு கிடைக்காததால் வீட்டுத் திட்டப் பயனாளிகள் தமக்கு மாதாந்தம் கிடைக்கக் கூடிய பெருமளவிலான மணலை பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

பிரதேச செயலகத்துக்கு எந்தக் காலப்பகுதியில் மணல் அனுமதிப் பற்றுச்சீட்டு புத்தகம் கிடைக்கும் என முல்லைத்தீவு மாவட்ட கனியவள திணைக்கள அதிகாரியிடம் கேட்டபோது, அரச திணைக்களங்களில் வேலை செய்யும் நாங்கள் ஊடகங்களுக்குக் கருத்து சொல்ல முடியாது என்று அவர் பதிலளித்தார்.

(ற-ரி7,102)



கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது நிலவும் அதிகரித்த வெப்பம் காரணமாக கனகாம்பிகைக் குளத்தில் மீன்கள் கடந்த இரு நாள்களாக இறந்து மிதக்கின்றன. கனகாம்பிகைக் குளத்தின் நீர் வற்றி சிறிதளவே காணப்படும் நிலையில் நீர் வெப்பமாவதால் குளத்து மீன்கள் இறக்கின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. கரையொதுங்கும் மீன்களை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்தனர். (ற-101)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் 18 பேருக்கு காற்றுத் துப்பாக்கி



முல்லைத்தீவு, ஒக்.2
காட்டு விலங்குகளிடம் இருந்து பயிர்களைப் பாதுகாப்பதற்காக முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட 18 பயனாளிகளுக்கு காற்றுத் துப்பாக்கிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு சிலநாள்களுக்கு முன்னர் முள்ளியவளை கமநல சேவை நிலையத்தில் முள்ளி யவளை கமநல சேவை உத்தி யோகத்தர் தலைமையில் நடை பெற்றது.

பயிர்ச் செய்கையின் பின்னர் தோட்டங்களுக்குள் நுழையும் குரங்குகள், காட்டு மிருகங்கள் பயிர்களை நாசம் செய்கின்றன. இதற்குத்தீர்வு பெற்றுத்தர வேண்டும் என்று கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

வாதப்பிரதிவாதங்களுக்குப்பின்னர் விவசாயிகள் தங்களுடைய பயிர்களைப் பாதுகாக்கும் வகையில் காற்றுத் துப்பாக்கிகளை அவர்களுக்கு வழங்குவது என்றும், அவை பொலிஸாருடைய அனுமதியுடன் கமநல சேவை நிலையத்துக்கு வழங்கப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்படும் என்றும் இணைத்தலைவர்களால் தெரிவிக்கப்பட்டது. கமநல சேவை நிலையங்களால் மேற்கொள்ளப்பட்ட பதிவுகளின் அடிப்படையில் காற்றுத் துப்பாக்கிகள் தற்போது வழங்கப்பட்டன.

குறித்த துப்பாக்கிகள் வடக்கு மாகாண சபை உறுபபினர் க. சிவநேசனின் குறித்தொதுக்கப்பட்ட நிதியில் இருந்து வழங்கப்பட்டன.

முள்ளியவளை கமநல சேவை நிலையத்துக்கு உட்பட்ட 8 பயனாளிகளுக்கும், ஒட்டு சுட்டான் கமநல சேவை நிலை யத்துக்கு உட்பட்ட 6 பய்னாளி களுக்கும், துணுக்காய் கமநல சேவை நிலையத்துக்கு உட்பட்ட 3 பயனாளிகளுக்கும், குமுழ முனை கமநல சேவை நிலையத்துக்கு உட்பட்ட ஒருபயனாளிக்கும் அவை வழங்கப்பட் டன. (ற-ரி7,102)

# கிளி. மாவட்ட மாற்றுத் திறனாளிகள் 517 பேருக்கு மாதாந்த கொடுப்பனவு

கிளிநொச்சி, ஒக். 2
கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மாற்றுத் திறனாளிகள் 517 பேருக்கும், முள்ளந்தண்டு பாதிக்கப்பட்ட 100 பேருக்கும் மாதாந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு மாதமும் 10 ஆம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் பயனாளிகளின் வங்கிக் கணக்குகளுக்கு அவை வைப்பிலிடப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

பிரதேச செயலக ரீதியாக மாற்றுத் திறனாளிகள், முள்ளந்தண்டு பாதிக்கப்பட்டவர்கள் போன்றோரின் விவரங்கள் பிரதேச சமூக சேவைகள் அலுவலர் மற்றும் பிரிவு கிராம அலுவலரின் பங்களிப்புடன் வழங்கப்பட்டுள்ளன. அவற்றின் அடிப்படையில் மாதாந்தம் கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

கரைச்சி பிரதேச செயலக பிரிவில் 164 மாற்றுத் திறனாளிகளுக்கும், பூநகரிப் பிரதேசத்தில் 122 பேருக்கும், கண்டாவளைப் பிரதேசத்தில் 116 பேருக்கும் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் 115 பேருக்கும் கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன.

மாற்றுத் திறனாளிகளுக்குரிய மாதாந்தக் கொடுப்பனவாக தலா ரூபா 3 ஆயிரம் வீதமும் முள்ளந்தண்டு பாதிக்கப்பட்டவர்களில் கழுத்துக்குக் கீழ் பாதிக்கப்பட்டவர்களுக்கு தலா 3 ஆயிரம் ரூபா வீதமும், இடுப்புக்குக் கீழ் பாதிக்கப்பட்டவர்களுக்கு தலா ஆயிரத்து 500 ரூபா வீதமும் கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன.

பிரதேச செயலக ரீதியாக கழுத்துக்குக் கீழ் பாதிக்கப்பட்டவர்கள் கரைச்சி பிரதேச செயலக பிரிவில் 18 பேரும், கண்டாவளைப் பிரதேசத்தில் 2 பேரும், பூநகரி பிரதேசத்தில் 7 பேரும், பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் ஒருவரும் உள்ளனர். இடுப்புக்குக் கீழ் பாதிக்கப்பட்டவர்களில் கரைச்சி பிரதேசத்தில் 42 பேரும், பூநகரி பிரதேசத்தில் 14 பேரும், கண்டாவளை, பச்சிலைப்பள்ளி பிரதேசங்களில் தலா 8 பேரும் உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(ற-9)

# கைதிகளை விடுவிப்பதாக பொய் கூறிப் பணம் பறிப்பு

யாழ்ப்பாணம், செப். 2
சிறையில் உள்ளவர்களை விடுவிக்கலாம் என்று கைதிகளின் பெற்றோருடன் தொடர்புகொண்ட நபர் உங்களின் (பெற்றோரின்) உதவிகளுக்கான பதிவு என்னும் பெயரில் பணத்தை அறவிட்டுமோசடியில்ஈடுபட்டார் என்று பூநகரியைச்சேர்ந்த ஒருவருக்கு எதிராகக் குற்றஞ்சாட்டப்பட்டது.

அவருக்கு எதிராக முறையிடச் சென்றபோதும் பொலிஸார் முறைப்பாடு பதிவு செய்யவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பூநகரிப் பிரதேசத்தில் வசிக்கும் அவர் வட மாகாண ஆளுநர் அலுவலகத்தில் பணி புரிகின்றேன் என்று தெரிவித்து சிறையில் உள்ளவர்களின் பெற்றோர்களிடம் அணுகி பதிவுக் கட்டணம் என்று தெரிவித்து ஒரு குடும்பத்திடம் 6 ஆயிரத்து 250 ரூபா பணம் அறவிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

குறித்த சம்பவங்கள் கடந்த மாதமே இடம்பெற்றபோதும் கடந்த வாரம் குறித்த நபர் ஒரு ஏமாற்றுப் பேர்வழி என இனம் கண்டுகொண்டோம் என்று பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர்.

குறித்த நபருக்கு எதிராக தாய் ஒருவர் நேற்று முன்தினம் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் இது தொடர்பில் முறைப்பாடு பதிவு செய்யச் சென்றுள்ளார்.

குறித்த பணம் ஈசிக்காஸ் முறையில் அனுப்பப்பட்டமையால் அனுப்பிய ஆவணம் சட்ட வலுவற்றது என்று தெரிவித்து பொலிஸார் முறைப்பாட்டை ஏற்க மறுத்தனர் என்றும், இது தொடர்பில் இனிவரும் காலங்களில் விழிப்பாக இருப்பதோடு ஏனையவர்களுக்கும் அறிவுறுத்துங்கள் என்று கூறி திருப்பியனுப்பினர் என்றும் பாதிக்கப்பட்டோர் தெரிவித்தனர். இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

(ற-101)

# தேவையை வெளிப்படுத்த மக்களுக்கு சந்தர்ப்பங்கள் வழங்கப்படவில்லை

## வடக்கு முதலமைச்சர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஒக்.2
மக்கள் பல்வேறு தேவை களுடன் வாழ்கின்றனர். குறித்த தேவைகளை வெளிப்படுத்துவதற்கு முன்னர் அவர்களுக்கு சந்தர்ப்பங்கள் வழங்கப்பட வில்லை.

இவ்வாறு வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ் வரன் தெரிவித்தார்.

வடக்கு மகாண சபையும், கிளிநொச்சி மாவட்ட செயலகமும் இணைந்து நேற்று குறைநிவர்த்தி நடமாடும் சேவை ஒன்றை கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் நடத்தின. மு.ப. 9 மணியளவில் ஆரம்பமான இந்தச் சேவையில் ஆயிரத்துக்கும் மேற் பட்ட மக்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அதில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அவர் தெரிவித்ததாவது–

அண்மைக்காலமாக தமது குறைகளை அல்லது தேவைகளை மக்கள் வெளிப்படுத்தி வருகின்றனர். உதாரணமாக அண்மையில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் மக்கள் தமது விருப் பங்கள் அல்லது தேவைகள் பற்றி வெளிப்படுத்தக் கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. தற்போது குறித்த நிகழ்வு தொடர்பில் பல்வேறு-சர்ச்சைகள் ஏற்படுத்தப்படுகின்றன. சர்ச்சைகளை ஏற்படுத்துபவர்கள் கடந்த காலங்களில் மக்கள் தமது விருப்பங்களை வெளிப்படுத்துவற்கான சந்தர்ப்பத்தை வழங்கவில்லை. இதனால் பல்வேறு சந்தர்ப்பங்களில் மக்கள் தமது தேவைகள் தொடர்பில் வெளிக்கொண்டுவர முடியாத நிலைமை ஏற்பட்டது.

இது போன்ற நிலையை மாற்றுவதற்காகவே இன்று நாம் மாவட்ட செயலககத்துடன் இணைந்து இவ்வாறான நடமாடும் சேவைகளை முன்னெடுத்து வருகின்றோம். மக்களின் எதிர்பார்ப் புக்களைப் பூர்த்தி செய்வதே எமது நிலைப்பாடு – என்றார்.

நிகழ்வில் வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சாந்தி சிறீஸ்கந்தராசா, சி.சிறீதரன், மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, வடமாகாண சபைஉறுப்பினர்கள், வடமாகாண பிரதம செயலாளர், அமைச்சின் செயலாளர்கள்,மாவட்டச் செயலர், பிரதேச செயலாளர் என பலரும் கலந்து கொண்டனர். (ற-ரி3,34)

# முதியோர் உரிமை மீறப்பட்டால் சட்ட நடவழிக்கைகள் எடுக்கலாம்

## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஒக்.2

அரச திணைக்களங்கள் சிலவற்றில் முதியோருக்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதில்லை. அவ்வாறான சந்தர்ப்பங்களில் முதியோர்மனிதஉரிமைகள்ஆணையத்தில் முறையிட முடியும். இவ்வாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்தார்.



பன்னாட்டு முதியோர் தின நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் உள்ள சென். ஜோன் அம்புலன்ஸ் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராக இலங்கை மனிதஉரிமைகள்ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் கலந்து கொண்டார்.

அவர் தெரிவித்ததாவது–

தலைமுறை பாகுபாட்டுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும்என்றதொனிப்பொருளில் முதியோர் தினம் முன்னெடுக்கப்படுகின்றது. ஐ.நாவின் தீர்மானத்தின் படி இனம், மதம், மொழி, பால், சாதி, அந்தஸ்து, பிறப்பிடப்பாகுபாடு, வேறெந்த அடிப்படையிலும்பாகுபாடு காட்டப்படலாகாது. அதை இலங்கையும் ஆதரித் ததுடன், சட்ட நடைமுறையில் நடைமுறைப்படுத்தியுள்ளது. இளைய தலைமுறையினர் முதியோரின் உரிமை மீறும் படியாக நடக்கும் சந்தர்ப்பங்களில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ள முடியும்.

இலங்கையில் முதியோர் உரிமைகள் தொடர்பான சட்டம் 2000 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. முதியவர் என்ற அடிப்படையில் பாரபட்சம் காட்டும் சந்தர்ப்பத்தில் சட்டரீதியில் நடவடிக்கை எடுக்க முடியும்.

முதியோருக்கு ஏற்பட்டுள்ள பிரதான சவால்பிள்ளைகளிடம் இருந்து பாதுகாப்புப் பெறுவது. பெற்றோரைப் பராமரிக்கும் பிரதான பொறுப்பு பிள்ளைகளுக்கு உண்டு. எமது நாட்டில் அமைக்கப்பட்ட தேசியப் பேரவைக்குஅடுத்தகட்டத்தில்உள்ள முதியோர் நியாய சபை, முதியோருக்கான உரிமை மீறல்களை விசாரிக்கும் அதிகாரமுடையதாகும். முதியோர் நியாய சபைக்கு கட்டுப்படாத பிள்ளைகள் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடரலாம்.

அதிகரித்துவரும் தொழில்நுட்ப வளர்ச்சி சமூகத்தில் முதியோரின் தேவையைக் குறைத்துள்ளது.- என்றார்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக தாதியர் போதனாசிரியர் கே.நந்தகுமார், ஸ்ரீ ராம் சந்த்ர மிசன் இணைப்பாளர் சீ. சுந்தரமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர். முதியவர்களின் உடல், உள, சமூக நலன்களைப் பேணும் விடயங்கள் பற்றி சுட்டிக் காட்டப்பட்டது.

நிகழ்வில் பல முதியவர்கள் கலந்து கொண்டனர். வடமாகாண முதியோர் சங்கம் அமைத்து ஒரு வருட பூர்த்தியை நிறைவு செய்யும் விதமாக, முதியோர் எனும் புத்தகம் வெளியிடப்பட்டது. அதன் முதல் பிரதியை முதன்மை விருந்தினர் பெற்றுக் கொண்டார்.

(ற-4,ரி4)

# உலகோடு நாமும் ஒத்தோட கல்வித் தெரிவில் மாற்றம் அவசியம்

## மாவை. சேனாதிராசா எம்.பி. அறிவுரை

யாழ்ப்பாணம், ஒக்.2

நாம் உலகத்தோடு சேர்ந்து வளர வேண்டும் என்றால் உலக நாடுகளில் காணப்படும் கற்கைத் துறைகளுக்கு மாற வேண்டும். கலைத் துறையிலிருந்து விஞ்ஞானத் துறைக்கு மாணவர்கள் மாறவேண்டும். பொருளியல், விஞ்ஞானம், தொழில்நுட்பம், வர்த்தகம், கணினி, தகவல்தொழில் நுட்பம் முதலான துறைகளுக்கு எமது மாணவர்கள் மாறவேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா.

தாவடி இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலையின் பரிசளிப்பு விழா கடந்தவாரம் நடைபெற்றது. அதில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் கலந்து கொண்டார்.

அவர் தெரிவித்ததாவது–

எமது பிள்ளைகளில் 55 வீதத்துக்கும் மேலான மாணவர்கள் கலைத் துறைக்கு கற்கச் செல்கின்றனர். அதில் தமிழ், இந்து நாகரிகம், நாடகமும் அரங்கியலும், அரசியல், நடனம், சங்கீதம் முதலான பாடங்களைக் கற்கின்றனர். 2 ஆண்டுகள் கல்லூரிகளிலும் 3, 4 ஆண்டுகள் பல்கலைக் கழகங்களிலும் கற்றுவிட்டுப் பட்டங்களைப் பெற்ற பின்னர் தொழில் வாய்ப்பின்றி நீண்டகாலம் காத்திருக்கின்றனர்.

ஐரோப்பிய நாடுகளில் மருத்துவர்களை விட தாதியர்களுக்குத் தான் மதிப்பு அதிகம். காரணம் அவர்களது சேவை அதிகம். ஆனால் எங்களுடைய நாட்டில் தாதிகளைக் குறை கூறி வருகிறார்கள். தாதியர் வெற்றிடங்கள் அதிகமாகவுண்டு. அமைச்சரிடம் கேட்டால் தகுதியானவர்கள் இல்லை எனத் தெரிவிக்கிறார். அதற்குக் காரணம். எமது மாணவர்கள் விஞ்ஞானத் துறைக்கு கற்கச் செல்வது குறைவாகவுள்ளது. சென்று கற்பவர்களும் சித்தியடைவது குறைவு.

இந்த நிலையை நாம் எல்லோரும் சேர்ந்து மாற்ற வேண்டும். எமது மாகாண சபை அடுத்தாண்டு என்னென்ன துறைக்கு எவ்வளவு ஆளணியினர் தேவையென்பதைத் திட்டமிட வேண்டும். விஞ்ஞானத் துறையை வளர்த்தெடுப்பது கல்வித்துறையினரின் பணியாகும். வெளிநாடுகளில் 17 வயதில் பல்கலைக்கழகக் கல்வியைக் கற்று வெளியேறுகின்றனர். நவீன தொழில்நுட்ப கருவிகளுடன் ஒவ்வொரு நாட்டுக் கல்வியையும் வெவ்வேறு நாட்டு மாணவர்கள் தங்கள் நாடுகளிலிருந்து கொண்டே கற்று வருகின்றனர். எமது பிள்ளைகளையும் இவ்வாறு கற்பிக்கின்ற மனநிலைக்கு எமது பெற்றோர்கள் மாற வேண்டும். வெளிநாடுகளில், முடிதிருத்துபவர்கள், ஆடை வடிவமைப்பவர்கள் பயிற்றுவிக்கப்படுகின்றனர். எமது நாட்டில் இத்தகைய பாடநெறிகள் காணப்படுவதில்லை. இந்தக் கற்கை நெறிகளை முடித்து வெளியேறும் மாணவர்கள் கோடி கோடியாக உழைக்கின்றனர். ஆடை வடிவமைப்பில் புதிய வடிவமைப்புகளைக் கண்டுபிடித்து ஆடைகளைத் தைத்து ஏற்றுமதி செய்கின்றனர்.

மருத்துவத்துறையில் மருத்துவருக்குப் படிப்பதைத்தவிர பல தொழில் நுட்பக்கற்கை நெறிகள் காணப்படுகின்றன. அவற்றைக் கற்க எமது பெற்றோர் பிள்ளைகளைத் தயார்ப்படுத்த வேண்டும்.

தற்பொழுது எமது பிரதேசத்தில் போதைப் பாவனை அதிகரித்துள்ளது. சமூகச் சீர்கேடுகள் அதிகம். ஆசிரியர்கள் ஒழுக்கத்தை அர்த்தப்படுத்த வேண்டியவர்களாகவுள்ளனர். ஒழுக்கம் உயிரினும் ஓம் பப்படும் என்றான் வள்ளுவன், ஒழுக்கம் இல்லையெனில் அந்த இனமும் அதன் கலை கலாசாரம் எல்லாம் அழிந்துபோய்விடும். -என்றார்.

(ற-4)

# திரைப்பட வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக்.2

ஈழத்து கலைஞர்களுடைய நடிப்பில் உருவாகியுள்ள 'மனசுக்குள் ஒரு மழைச்சாரல்' எனும் முழு நீளத்திரைப்படம் யாழ்ப்பாணம் ராஜா திரையரங்கில் இன்று வெளியிடப்பட்டுள்ளது என்று படக்குழுவினர் தெரிவித்தனர்.

ராஜ் மூவிஸ் தயாரிப்பில் வெளியாகும் முதலாவது முழு நீளத் திரைப்படமான 'மனசுக்குள் ஒரு மழைச் சாரல்' ராஜா - 2 திரையரங்கில் மு.ப. 10.30 மற்றும் பி.ப. 2.30 மணிக்கு இரு நேரக்காட்சிகளாகக் காட்சிப்படுத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

ஈழத்து கலைஞன் வினோதனின் திரைக்கதை, வசனம், படத்தொகுப்பு, இயக்கத்திலும், ஜெராட், மிதுனா மற்றும் பலருடைய நடிப்பிலும், கு. உதயகுமாரின் தயாரிப்பு, கதை பாடல்களிலும் சுதர்சனின் இசையிலும் இந்த முழு நீள திரைப்படம் உருவாகியுள்ளது.

(ற-21)



# காட்டு மரங்களைத் தறித்த குற்றச்சாட்டில் 9 பேர் கைது

முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயப் பிரிவின், ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலைய பிரிவுக்குட்பட்ட முல்லைத்தீவு முத்துஐயன்கட்டு காட்டில் சட்டவிரோதமாக காட்டு மரங்களைத் தறித்துக் கடத்திய குற்றச்சாட்டில் 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயம் தெரிவித்தது.

முல்லைத்தீவு மாவட்ட போதைப்பொருள் தடுப்புப் பிரிவு பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவல்களை அடுத்து முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் வழிநடத்தலின் கீழ் முல்லைத்தீவு மாவட்ட போதைப் பொருள் தடுப்புப்பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் கருணாரத்தினம் ஜெசிந்தன் தலைமையில் பி.எஸ். இராஜபக்ஸ (3133), பி.சி. இறாகீஸ் (83690), குமார (84817), ஜனனன் (88582), பி.சி.டி. பண்டாரா (15843) ஆகியோரைக் கொண்ட பொலிஸ் அணி நடவடிக்கையில் இறங்கியது.

நேற்று அதிகாலை 3 மணியளவில் மரங்கள் கடத்திய குற்றச்சாட்டில் இரண்டு வாகனங்களும், இரண்டு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டனர். அனுமதியின்றி அசர காட்டுக்குள் உட்சென்று மரம் ஏற்றிய குற்றச்சாட்டில் ஏழு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள், சான்றுப் பொருள்களுடன் ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தில் மேலதிக விசாரணைக்காகவும் அதன் பின்னரான நீதிமன்ற நடவடிக்கைகளுக்காகவும் பாரப்படுத்தப்பட்டனர் என்று முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயம் தெரிவித்தது.

(ற-ரி7)

# மின் தடை அறிவித்தல்

யாழ்ப்பாணம், ஒக்.2

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என, வடமாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் ஐயனார் கோயிலடி, தச்சன்தோப்பு, கோயிலாக்கண்டி, மறவன் புலவு, தனங்களப்பு, அறுகுவெளி, வில்லூன்றி கேணியடி, நாவாந்துறை ஒருபகுதி, முத்தமிழ் வீதி, மீனாட்சி அம்மன் கோயிலடி, சுன்னாகம் பெரியமதவடி, மருதனார் மடம், உடுவில், வட்டுக்கோட்டை, அராலி, யாழ். சிறைச்சாலை, யாழ்.பொலிஸ் நிலையம், யாழ்.துரையப்பா விளையாட்டரங்கு, மருதனார் மடம் யாழ்.நுண்கலைப்பீடம் ஆகிய இடங்களில் மின் தடைப்படும்.

கிளிநொச்சியில் ஆனந்தபுரம், உதயநகர், தொண்டமான்நகர், விவேகானந்தநகர், கிருஷ்ணபுரம், கனகாம்பிகைக் குளம், இரணைமடு, முறிகண்டி, அறிவியல்நகர், கொக்காவில், விக்கிரமரட்ண பிறைவேற் லிமிட்டெட், மத்தியவங்கி, இரணைமடு விசேட அதிரடிப்படை இராணுவ முகாம், MAS Active யுனிச்செலா, பொறியியல் பீடம், விவசாயபீடம், North Cargill's Argo Foods இராணுவபாசறை I மற்றும் II, இராணுவ பாசறை, 7வது படையணி இராணுவ முகாம், கிளிநொச்சி இலங்கைத் தொலைத்தொடர்பு நிலையம், கிளிநொச்சி வைத்தியசாலை ஆகிய இடங்களில் மின் தடைப்படும்.

வவுனியாவில் பெரியார்குளத்திலும் (பூந்தோட்டம்) மன்னார் பிரதேசத்தில் நானாட்டான், எருவிட்டான், அறுகுக்குன்று, அச்சங்குளம் ஆகிய இடங்களிலும் மின் தடைப்படும்.

(ற-ரி)

## உயர்தர மாணவன் தாக்கினானென 13 வயதுச் சிறுவன் மருத்துவமனையில்

### தென்மராட்சிப் பிரதேசத்தில் சம்பவம்

சாவகச்சேரி, ஒக்.2

உயர்தர மாணவனால் தாக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்படும் 13 வயதுடைய - இடைநிலைப் பிரிவு மாணவர் ஒருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். தாக்கினார் என்று கூறப்படும் மாணவனை விசாரணைக்கு அழைத்துள்ளோம் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் இந்தச் சம்பவம் நடந்தது என்று கூறப்பட்டது.

பாடசாலை இடைவேளையின் போது வகுப்பறையில் இருந்த என்னை உயர்தர மாணவன் அழைத்தார். காரணமின்றித் தாக்கினார். வகுப்பறைக் கட்டடத்துடன் மோதி மயங்கினேன். கண்விழித்துப் பார்த்தபோது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தேன் என்று பாதிக்கப்பட்ட மாணவன் தெரிவித்தார்.

வைத்தியசாலைப் பொலிஸார் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்கு இது குறித்து அறிவித்தனர். விசாரணை மேற்கொண்ட பொலிஸார் குற்றஞ்சாட்டப்பட்ட உயர்தர வகுப்பு மாணவனை அழைத்துச் சென்றனர் என்று மாணவர்களால் தெரிவிக்கப்பட்டது. (ற-4)

### புதிதாக வடக்குக்கு நியமிக்கப்பட்டோரில்

## இதுவரை விவரங்கள் சமர்ப்பிக்காத ஆசிரியர்களுக்கு மாற்று ஏற்பாடுகள்

யாழ்ப்பாணம், ஒக்.2

தேசியக் கல்வியியல் கல்லூரியில் இருந்து வெளியேறும் ஆசிரியர்களில் வடக்குக்கு என நியமிக்கப்பட்ட 241பேரில் 212 பேர் மட்டுமே விவரங்களைச் சமர்ப்பித்துள்ளனர். சமர்ப்பிக்கத் தவறியவர்கள் இன்றும், நாளையும் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அலுவலகத்தில் சமர்ப்பிக்கலாம்.

இவ்வாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது–

இன்றும் நாளையும் சமர்ப்பிக்கத் தவறுபவர்களுக்கு மாற்று ஏற்பாடாக நியமனம் வழங்கும் இடத்தில் சமர்ப்பிக்க முடியும். எமது அமைச்சின் அதிகாரிகள் இருவர் அங்கு சமுகமளிப்பாளர்கள். அவர்களை அணுகலாம்.

வடக்குக்கு நியமிக்கப்பட்டவர்களில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 23 பேரும் அடங்குகின்றனர். அவர்கள் சான்றிதழ்களை உறுதிப்படுத்திச் செல்வதில் பிரயாண தாமதம் இருக்கலாம் என்ற அடிப்படையில் இந்த மாற்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை, வடக்குக்கு நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்களில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் இருப்பது போன்று கிழக்கு மாகாணப் பட்டியலில் உள்ள வடக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்களை எண்ணிக்கை அடிப்படையில் மாற்றிக் கொள்வது தொடர்பில் நேற்றுக் கலந்துரையாடினோம்.

கலந்துரையாடலின் பிரகாரம் ஆசிரியர்களின் விருப்பத்துக்கு அமைய நியமனத்தின் பின்னர் அவர்கள் சொந்த மாகாணத்தில் பணியாற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும். - என்றார். (ற-101)

## டெங்கு பரவும் ஏது நிலையுடன் 226 இடங்கள் வவுனியா வடக்கில்

வவுனியா, ஒக். 2

வவுனியா வடக்கில் 226 இடங்கள் டெங்கு பரவக்கூடிய இடங்களாக அடையாளப் படுத்தப்பட்டுள்ளன. அவற்றின் உரிமையாளர்கள் அல்லது பொறுப்பாளர்களுக்குச் சிவப்பு நிற அறிவித்தல் மூலம் 3 நாள்களுக்குள் சுத்தப்படுத்தப்பட வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது என்று சுகாதாரத் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

கடந்த 27ஆம் திகதி முதல் எதிர்வரும் 4 ஆம் திகதி வரை தேசிய டெங்கு ஒழிப்பு வாரம் சுகாதார அமைச்சால் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையால் நேற்றுமுன்தினமும் நேற்றும் புளியங்குளம் மற்றும் நெடுங்கேணி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

டெங்கு ஒழிப்பு வார செயற்பாடுகளில் வவுனியா வடக்கு பிரதேச சபை உத்தியோகத்தர்கள், வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தைச்சேர்ந்த கிராம சேவை உத்தியோகத்தர்கள், புளியங்குளம் மற்றும் நெடுங்கேணி பொலிஸ் நிலைய அதிகாரிகள், பாதுகாப்புப் படையினர், கிராம அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோருடன் இணைந்து சுகாதார உத்தியோகத்தர்களும் பங்குபற்றினர்.

வீடுகள், பொது இடங்கள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், பாடசாலைகள், வணக்கஸ் தலங்கள், தனியார் நிறுவனங்கள், கட்டுமானம் நடைபெறும் இடங்கள் மற்றும் கைவிடப்பட்ட காணிகள் உள்ளடங்கலாக 683 இடங்கள் தரிசிக்கப்பட்டு நுளம்பு பெருகக்கூடிய வகையில் இருந்த 226 இடங்கள் அடையாளம் காணப்பட்டன. அவற்றின் உரிமையாளர்களுக்கு சிவப்பு நிற அறிவித்தலும் வழங்கப்பட்டது.

சிவப்பு நிற அறிவித்தல் வழங்கப்பட்டவர்களுக்கு 3 தினங்களினுள் தமது இடங்களை சுத்தப்படுத்த வேண்டும் என்று அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. சுத்தப்படுத்தத் தவறுபவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார். (ற-4,422)

# ஆசிரியர்கள் பாடசாலையில் கைபேசி உபயோகிக்கத் தடை

### பாடசாலை நிகழ்வுகளைப் படம் பிடித்து சமூக வலைத்தளங்களில் பதிவிட்டாலும் சிக்கல்

யாழ்ப்பாணம், ஒக்.2

ஆசிரியர்கள் பாடசாலையில் கைபேசி பயன்படுத்துவதற்கும், நிகழ்வுகளைப் படம் பிடிப்பதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சகல கல்வி வலயங்களூடாகப் பாடசாலைகளுக்கு சுற்றறிக்கை அனுப்பியுள்ளார்.

பல பாடசாலைகளில் கைபேசிகள் மூலம் ஒளிப்படங்கள் எடுக்கப்பட்டு அவை சமூக வலைத்தளங்களில் பதிவேற்றம் செய்யப்பட்டன. அவற்றால் பெரும் சிக்கல்கள் எழுந்துள்ளன. அவற்றால் பல பெண் ஆசிரியர்கள் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். இது எமது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. ஏற்கனவே சட்டத்தில் உள்ளதன் பிரகாரம் குறித்த அறிவித்தல் விடுக்கப்பட்டு நினைவூட்டப்பட்டுள்ளது - என்று மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழ் உள்ள அனைத்துப் பாடசாலைகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் கடமை நேரத்தில் கைபேசி உபயோகிப்பது, அல்லது ஒளிப்படம் எடுப்பது, முகப்புத்தகப் பாவனை, பாடசாலைகளில் எடுக்கப்பட்ட ஒளிப்படங்களை முகப்புத்தங்களில் பதிவேற்றுவது தடைசெய்யப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகள் இனங்காணப்படும் சந்தர்ப்பத்தில் குறித்த ஆசிரியருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று குறித்த சுற்றறிக்கையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. சுற்றறிக்கையின்படி பாடசாலை அதிபர்களுக்கு கைபேசி உபயோகப்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. இதன் பின்னர் எழுகின்றன பிரச்சினைகளுக்குக் குறித்த ஆசிரியரே முழுப் பொறுப்பாளியாவார். அவற்றால் ஏற்படும் சட்ட விடயங்களை அவரே எதிர்கொள்ள வேண்டும். பாடசாலைகளில் இடம்பெறும் எந்த நிகழ்வுகளையும் ஆசிரியர்கள் முகப்புத்தகம் உட்பட எந்த சமூக வலைத்தளத்திலும் பதிவேற்ற முடியாது. அவ்வாறு செய்வது கல்வி அமைச்சின்பால் சட்ட முரணாகின்றது.- என்றும் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அறிவுறுத்தினார். (ற-101)

## வறட்சி ஏற்படின் எதிர்கொள்ள அனைத்தும் தயார் நிலையில்

### முல்லை. மாவட்ட செயலாளர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஒக்.2

முல்லைத்தீவு மாவட்டத்தில் வறட்சி இடர் ஏற்பட்டால் அதனை எதிர்கொள்வதற்கான நிதி அனுமதி இடர் முகாமைத்துவ அமைச்சால் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது–

நாட்டின் பல பாகங்களிலும் வறட்சி நிலமை காணப்படுகின்றது. முல்லைத்தீவு மாவட்டத்தில் வறட்சி நிலை ஏற்பட்டால் அதை எதிர்கொள்வது தொடர்பில் இடர் முகாமைத்துவ அமைச்சுடன் தொடர்புகொண்டோம்.

வறட்சி நிலை ஏற்பட்டு குடி தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டால், குறித்த பிரதேசங்களுக்கு நீர் விநியோகம் செய்யவும், அதன் பின்னரான செயற்பாடுகளுக்கும் நிதி விடுவிக் கப்படும் என்றும், அது தொடர்பில் உரிய நடவடிக்கைகளை உடன்மேற்கொள்ள முடியும் என்றும் அமைச்சு முன் அனுமதி வழங் கியது.

இதுவரை முல்லைத்தீவு மாவட்டத்தின் எந்தப் பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் வறட்சிப் பாதிப்புக் குறித்த முறைப்பாடுகள் கிடைக்கவில்லை. முறைப்பாடுகள் கிடைக்கும் இடத்து உடன் ஆய்வு மேற்கொள்ள்ப்பட்டு மாற்று ஏற்பாடுகள் மேற்கொள்ளத் தயார் நிலையில் உள்ளோம்.- என்றார். (ற-101)



வண்ணை
ஸ்ரீ வேங்கடேச
வரதராஜப் பெருமாள்
தேவஸ்தானம்
இன்று (02.10.2016)
ஞாயிற்றுக்கிழமை
கொடியேற்றத் திருவிழா

சங்கு சக்கர நாமத்துடன்
சஞ்சலங்கள் போக்கி அருள்சுரந்திடும்
சங்கர மாயவனே வெற்றிப் பெருமாளே - உன்
சார் அடியார்கள் குறைகளைய கொடியேறு

திருவிழா சிறப்புற வாழ்த்துவோர் :
டோனிகா
நகைத் தொழிலகம்
இல.82, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம்.
T.P.077 888 6191

### தமிழ்ச் சங்க முகாமைக் கூட்டம்

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கத்தின் விசேட முகாமைக் கூட்டம் இன்று பி.ப. 1.30 மணிக்கு கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெறும்.

சங்கத் தலைவர் நா.சோதிநாதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முகாமை நிகழ்வுகளும், பி.ப. 3 மணிக்கு சமஸ்கிருதத்தின் பிடியில் இருந்து தமிழை மீட்ட மறைமலை அடிகளின் தனித் தமிழ் இயக்க நூற்றாண்டு விழா மாநாடு தொடர்பான கலந்துரையாடலும், பி.ப. 4.30 மணிக்கு அறிவோர் ஒன்று கூடலும் நடைபெறும்.

சங்க வாழ்நாள் உறுப்பினர்கள், செயலாண்மைக் குழு உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சங்கத் தலைவர் கேட்டுள்ளார். (ற-9)



வல்லிபுர ஆழ்வார்
இன்று (02.10.2016) ஞாயிற்றுக்கிழமை
மூன்றாம் திருவிழா

நிச்சயமாக தொழிலை இலக்காகக்கொண்ட பாடநெறி
My Hope Group School of Nursing IVA
✓ தாதியர் பயிற்சி நெறி (தகுதி O/L)
✓ மருந்தாளர் பாடநெறி (தகுதி A/L)
✓ ஆய்வுகூட உதவியாளர் (தகுதி A/L)
பாடநெறிகளை சிறந்தமுறையில் பூர்த்தி செய்பவர்களுக்கு நிறுவனத்தினால் தொழில் வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்படும்
தொடர்புகளுக்கு : HOT Line 071 077 0770
இல.323, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 071 872 2350
இல.36/1, 88/1, 2 ஆம் குறுக்குத் தெரு, வவுனியா 071 872 2351
பிரதான காரியாலயம்
அய்வா சர்வதேச தாதியர் பாடசாலை
இல.28, பார் வீதி, மட்டக்களப்பு

# ஒற்றையாட்சி தொடரவேண்டும்

## மக்கள் கருத்தறியும் குழுவிடம் மல்வத்தை மகாநாயக்கர் வலியுறுத்தல்

கொழும்பு, ஒக்.2

ஒற்றையாட்சி முறைமையைத் தொடருமாறும் பௌத்தத்தின் முதன்மைத் தன்மையை பேணுமாறும்– மல்வத்தை பீட மகாநாயக்க தேரர் திப்பொட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரர் கோரியுள்ளார். இது தொடர்பில் ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இரகசியக் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அரசமைப்புச் சீர்திருத்தக் குழுவின் தலைவர் லால் விஜய நாயக்க ஊடாகவே இந்தக் கடிதத்தை அவர் அனுப்பி வைத்துள்ளார்.

குறிப்பிட்ட இரகசியக் கடிதத்தை வழங்கியவேளை தற்போதைய அரசமைப்பில் காணப்படும் சிறந்த அம்சங்களைத் தொடர்ந்து பேணுவது அவசியம் எனத் தேரர் தெரிவித்துள்ளார்.

மக்களால் பெரிதும் ஏற்கப்பட்ட ஒற்றையாட்சி முறைமை மற்றும் பௌத்தத்துக்கு முதன்மை அளிப்பதற்கான ஏற்பாடுகள் போன்றவற்றை தொடர்ந்தும் தக்கவைக்கவேண்டும். புதிய அரசமைப்பில் இவற்றை உள்வாங்க வேண்டும். புதிய அரசமைப்பே தற்போதைய தேவை என்று தமது இரகசியக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (த-5)

### அதிதிறன் வகுப்பறைகளை நிறுவவுள்ளது கல்வியமைச்சு

கொழும்பு, ஒக்.2

நாட்டில் நவீன மயப்படுத்தப்பட்ட 25 அதிதிறன் வகுப்பறைகள் நிறுவப்படவுள்ளதாகக் கல்வியமைச்சு தெரிவித்துள்ளது. இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகக் கல்வியமைச்சு குறிப்பிட்டுள்ளது. நவீன முறையிலான கணினி மயப்படுத்தப்பட்ட அதிதிறன் வகுப்பறைகள் இதன்போது அமைக்கப்படவுள்ளதாகவும், உலகளாவிய ரீதியில் இலங்கையின் கல்விச் சேவையைத் தரம் உயர்த்தும் எண்ணக்கருவைக் கருத்திற்கொண்டே இவை அமைக்கப்படவுள்ளதாகவும் கல்வியமைச்சு தெரிவித்துள்ளது. (தி)

### 83 ஆயிரம் பொலிஸாருக்கு 17 வீதச் சம்பள அதிகரிப்பு

கொழும்பு, ஒக்.2

பொலிஸ் துறையிலுள்ள 83 ஆயிரம் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் 17 சதவிகிதச் சம்பள உயர்வை வழங்க அரசு தீர்மானித்திருப்பதாகப் பொலிஸ் தலைமையகத்தின் உயரதிகாரியொருவர் தெரிவித்திருக்கிறார்.

கடந்த வருட வரவு–செலவுத் திட்டத்தில் இதற்காக ஒதுக்கப்பட்ட நிதியை வழங்கத் திறைசேரி இணக்கம் தெரிவித்திருப்பதாகவும், இந்தச் சம்பள உயர்வு எதிர்வரும் ஒக்ரோபர் முதல்நடைமுறைக்கு வருமெனவும் அவர் தெரிவித்தார். (தி)

# குருநாகல் கல்லூரியொன்றில் மது விருந்து நடத்திய மாணவர்

## பத்து பேருக்கு வகுப்புத் தடை

கொழும்பு, ஒக்.2

குருநாகல் நகரிலுள்ள பிரபல கல்லூரியொன்றில் பயின்றுவரும் மாணவர் ஒருவரின் பிறந்த தினத்தைக் கொண்டாடுவதற்கு கல்லூரிக்குள்ளேயே மது விருந்து நடத்திய உயர்தர வகுப்பு மாணவர்கள் பத்துப் பேருக்கு கல்லூரி நிர்வாகம் தற்காலிக வகுப்புத் தடையை விதித்துள்ளது.

இந்த விருந்துக்கான மதுப் போத்தல்களை வாங்கி வருவதற்காக இரண்டு மாணவர்கள் பாடசாலைச் சீருடையிலேயே குருநாகல் நகரிலுள்ள மதுபான விற்பனை நிலையமொன்றுக்குச் சென்றிருந்தபோது, சிவில் உடையில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரிடம் சிக்கியுள்ளனர். அதனைத் தொடர்ந்து அவர்களைப் பாடசாலைக்கு அழைத்து வந்த பொலிஸார் இருவரையும் கல்லூரி அதிபரிடம் ஒப்படைத்திருக்கிறார்கள்.

இவர்கள் இருவரும் திரும்பி வராததால் வேறு மாணவர்கள் இருவர் நகருக்குச் சென்று போத்தல்களைக் கொண்டுவந்ததும் விருந்து ஆரம்பமாகியுள்ளது.

போதை தலைக்கேறிய நிலையில் இரண்டு மாணவர்கள் பாடசாலை வளவிலேயே மயங்கி விழுந்துள்ளனர். மேலும், இருவர் பாடசாலையிலிருந்து வெளியேறி நாரம்மல பிரதேசத்தில் விழுந்து கிடந்த நிலையில், பிரதேசவாசிகளால் மீட்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மறுநாள் விசாரணை நடத்திய கல்லூரி அதிபர் பத்து மாணவர்களுக்குத் தற்காலிகமாக வகுப்புத் தடை விதித்திருந்தார். (தி)

### தகவல் உரிமை ஆணைக்குழு தலைவராக மகிந்த கம்மன்பில

கொழும்பு, ஒக். 2

தகவல் அறியும் உரிமை ஆணைக் குழுவின் தலைவராக மகிந்த கம்மன்பில நியமிக்கப்பட்டார்.

குழுவின் இதர உறுப்பினர்களாகச் சட்டத்தரணி கிசாலி பின்டோ ஜயவர்தன, தியாகநாதன் செல்வகுமாரன், எஸ்.பியுஞ்சி ஹேவா மற்றும் முன்னாள் நீதியரசர் சலீம் மர்சூப் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுமுன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து இவர்களுக்கான நியமனக் கடிதங்களை வழங்கிவைத்தார். (த-5)

ஐரவர்ட் மீடியா மற்றும் ஐங்கரன் மீடியா சொலூசன்
பெருமையுடன் இணைந்து வழங்கும்

கங்கை அமரன் இசைக்குழுவோடு
எஸ். பி. பாலசுப்பிரமணியம்
யாழ் மண்ணில் நேரடி இசை நிகழ்ச்சி



SLT நண்பேன்டா

டிக்கெட்டுகளின் விலை
ரூ. 10,000.00 ரூ. 5,000.00 ரூ. 2,000.00
Sri Lanka Telecom

டிக்கெட்டுகளுக்கு
✓ யாழ்ப்பாணம் - கார்கில்ஸ் சதுக்கம்
✓ யாழ்ப்பாணம் - பி.பி.டி. டுவர்ஸ்
✓ யாழ்ப்பாணம் - அபி பெஷன்
✓ யாழ்ப்பாணம் - வானவில் வீடியோ
✓ சாவகச்சேரி - New V.M.K. Jewellery
✓ வவுனியா - பிருந்தா ஜுவல்லரி
✓ வவுனியா - சரவணாஸ் டெக்ஸ்
✓ மானிப்பாய் - சுந்தர்சன் இலக்ரிகல்
✓ முல்லைத்தீவு - சுகுமாரி ஜுவல்லரி
✓ திருநெல்வேலி - பிரைட்டன் இன்
✓ மட்டக்களப்பு - மிரிச்சி ஹோட்டல்
✓ வெள்ளவத்தை - CD WORLD
✓ வெள்ளவத்தை - பி.பி.டி. டுவர்ஸ்
✓ வெள்ளவத்தை பாமசி
✓ பம்பலப்பிட்டி - 7 Stories Ranjanas
✓ செட்டித்தெரு - சரவணா ஜுவல்லரி
✓ ஆமர் வீதி - பிரைட்டன் ஹோட்டல்
✓ நுவரெலியா - அஜந்தா ஜுவல்லரி
✓ ஹட்டன் - அம்பிகா ஜுவல்லரி
✓ அம்பாறை - கருணா 077 968 3770

Oct. 09 6.00PM
யாழ் நகரசபை மைதானம்
டிக்கெட்டுகளுக்கு அழையுங்கள்
070 27 97 17 4
ஆன்லைன் டிக்கெட்டுகளுக்கு
mydeal.lk க்கு
செல்க

Official Pay TV Partner PEO TV The best way to watch TV
COMMERCIAL BANK
Official Mobile Phone Partner HUAWEI
ARPICO
TAIAN
City Sun Holdings
Hero
ABI Fashion World
Jetwing JAFFNA
வீரகேசரி News
P.P.T
mydeal.lk

# சிறுவிளம்பரங்கள்



## விற்பனைக்கு





## தேவை



### நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

டாசோன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

தொடர்பு: 077 075 9454

### விற்பனைக்கு

Hamada Of Set Machine Model No.CD x700 உடன் விற்பனைக்கு உண்டு.

071 095 9184

### காணி விற்பனைக்குண்டு

ஒரு ஏக்கர் தென்னந் தோட்டக் காணி விற்பனைக்கு உண்டு.

இடம்: அன்புச் சகோதரர் இல்லம் றோட், தாழ்வுபாடு, மன்னார்.

077 586 9600

### கார்விற்பனைக்கு

Toyota (Aqua hybrid Full Options), WP -CAG-XXXX, SKY blue, 2015 பதிவுக்குட்பட்ட தனிப்பாவனையிலுள்ள கார் விற்பனைக்குண்டு. விலை 43.5 மில்லியன். (பேசித் தீர்மானிக்கலாம்)

077 796 8805

### காணி விற்பனைக்கு

மானிப்பாய் வடக்கு, உடுவில். (றோட்டில்) வீதியில் Green ஆஸ்பத்திரிக்குப் பின்புறமாக சந்திக்கு அண்மையாகவுள்ள ஐந்து (05) பரப்புக் காணி விற்பனைக்கு.

இல. 17, உடுவில் வீதி, மானிப்பாய்.
சாம்பசிவன் -075 565 5053
Sambasivan- uk-London
+447 818 557 193

### காணி விற்பனைக்கு

கச்சாய், சாவகச்சேரியில் 5 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 075 858 3437

### காணி விற்பனைக்கு

கொடிகாமம், கச்சாய்வீதி, மருதடி லேனில் 12 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. 6 பரப்பாக பிரித்துக்கொடுக்கப்படும்.

தொடர்பு: 076 704 9048

### வீடு விற்பனைக்கு

தெஹிவளையில் 3 அறை Duplex எப்பாட்மண்ட் மூன்றாம் மட்டும் நான்காம் மாடியில் விற்பனைக்கு காலி வீதியிலிருந்து 100 மீற்றர். 16 மில்லியன்.

077 442 3680

### காணி விற்பனைக்கு

தொட்டிலடி சந்திக்கு அண்மையில் கீரிமலை வீதியில் வீடு கட்டுவதற்குரிய 8பரப்புக் காணி விற்பனைக்குண்டு. பகுதியாகவும் கொடுக்கப்படும்.

தொடர்பு: 077 978 8635

### விற்பனைக்கு

சொந்தப் பாவனையிலிருந்த (டாட்டா 909NPLJXXX) 25000Km ஓடியது விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 076 7049048

### காணி விற்பனைக்கு

யாழ். மானிப்பாய். வீதி ஐந்து சந்தி பள்ளிக்குப் பின் உள்ள காணி (3 பரப்பு) கொல் ஒழுங்கை (BLACK Smith Lane) நன்னீர் கிணறு உள்ளது விலை பேசித் தீர்மானிக்கலாம்

தொ.பே. 077 349 0642

### வீணைகள் தேவை

பழுதடைந்த, உடைந்த வீணைகள் கொள்வனவு செய்யப்படும்.

தொடர்பு: 077 923 8376

### உதவியாளர் தேவை

தாவடியில் வயதான தாயொருவருடன் இருந்து அவரைப் பராமரிக்க உதவியாளர் ஒருவர் தேவைப்படுகிறார். சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்பு: மகன் - 077 912 3199

### மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவகுடும்பம் 1976 இல் பிறந்த B.Sc அரச உத்தியோக, தீயபழக்கங்கள் எதுவுமற்ற மணமகனுக்கு 1980 - 1988 ஆம் ஆண்டிற்கு இடையில் பிறந்த நற்குணமுள்ள தகுந்த மணமகள் தேவை.

தொடர்பு: 077 923 5758

### இடம் தேவை

கணினி கற்பிக்கும் நிறுவனம் ஒன்றிற்கு தனது கிளை ஒன்றை ஆரம்பிப்பதற்கு தகுந்த இடம் ஒன்றைத் தேடுகின்றோம். Partner ship முறையில் இடத்துடன் விரும்புபவர்களும் அழையுங்கள்.

தொடர்பு: Prasanna 077 254 6511

### மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவகுடும்பம் 1979 ஆம் ஆண்டு மூலம், பாவம் 11½ B.Sc (Hons) I.T Software Engineer and Visiting Lecturer ஆக (University Accredited College) கடமையாற்றும் மணமகளுக்கு Professional Qualified மணமகனை வெளிநாட்டில் பெற்றோர்கள் எதிர்பார்க்கிறார்கள். ஆஸ்திரேலியா, லண்டன் விரும்பத்தக்கது.

077 593 0237/ 077 646 5331

### உதவியாள் தேவை

பூநகரியில் (கிளிநொச்சி மாவட்டம்) வயோதிபத் தம்பதியினர் வசிக்கும் வீடொன்றில், தங்கியிருந்து வேலை செய்வதற்கு பெண் உதவியாளர் தேவை. நல்ல சம்பளம் வழங்கப்படும்.

077 990 2068, 071 850 5736

### தேவை

பம்பலப்பிட்டியில் இயங்கிவரும் ஹோட்டலுக்கு வெயிட்டர், Cook,Room Boy, Kitchen Helper, Front Officer (ஆண்,பெண்) தேவை. உணவு, தங்குமிடம் இலவசம்.

011 250 7161, 077 749 0307

### தையல் ஆள் தேவை

யாழ். நகரில் அமைந்துள்ள தையலகத்திற்கு தையல் தெரிந்த பெண்கள் தேவை. மேலதிக விவரங்கள் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

071 431 7633

### பணிப்பெண் தேவை

வவுனியா நகரை அண்டிய பகுதியில் ஒரு வயதுக் குழந்தையை தங்கி நின்று பராமரிக்கக் கூடிய 40-50 வயதுள்ள ஒருவர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

077 245 0564

### வேலையாள் தேவை

இளவாலையில் உள்ள விவசாயப் பண்ணை ஒன்றுக்கு மேற்பார்வை யாளர்கள் தேவை.

077 203 7839
Mail ID : Go-ram@hotmail.com.
0016479615248

## ஏனையவை

### மாடி வீடு வாடகைக்குண்டு

யாழ். பல்கலைக்கழகத்துக்கு அருகில் புதிய மேல் மாடி வீட்டில் தனி வழியுடனான மேல்மாடி மட்டும் வாடகைக்குண்டு.

தொடர்பு: 077 990 6867

### வீடு வாடகைக்கு

யாழ். கோயில் வீதியில் IOM நிறுவனத்திற்கு அருகில் சகல வசதிகளையும் கொண்ட விசாலமான மேல்மாடி வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

077 248 7841 , 077 507 1817

### வீடு காணி விற்பனைக்கு

தெல்லிப்பழை கொல்லங்கலட்டியில் 6½ பரப்புக் காணியில் அமைந்துள்ள 6அறை வீடு விற்பனைக்கு உண்டு. கீரிமலை மற்றும் காங்கேசன்துறை வீதியிலிருந்து 600m தூரத்தில் (திங்கள், செவ்வாய், புதன் கிழமைகளில் பார்வையிடலாம்)

077 100 1390

### வாடகைக்கு

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வரும் யாழ்தேவி A/C ரயில் தரித்து நிற்கும் வெள்ளவத்தை ரயில் நிலையத்திற்கு முன்பாக இல.8 புகையிரதவீதி, வெள்ளவத்தையில் அமைந்துள்ள லொட்ஜில் தனிஅறைகள். இணைந்த குளியலறையுடன் கூடிய அறைகள் நாள், கிழமை, மாத வாடகைக்கு உண்டு.

011 250 4281/ 071 299 1256

### வீடு வாடகைக்கு

சித்தங்கேணியில் இருந்து பண்டத்தரிப்புக்குச் செல்லும் பிரதான வீதிக்கு இடையில் சகல வசதிகளுடன் கூடிய அருகருகில் உள்ள இரண்டு வீடுகள் வாடகைக்குக் கொடுக்கப்படும்.

அலுவலக தேவையுடையோர்களும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு: 077 287 3312

### அறைகள் வாடகைக்குண்டு

யாழ். பல்கலைக்கழகத்துக்கு அருகில் மாணவர்களுக்கு, அரச உத்தியோகத்தர்களுக்கு அறைகள் வாடகைக்குண்டு.

தொடர்பு: 077 990 6867

### அறைகள் வாடகைக்கு

யாழ் பல்கலைக்கழகத்திற்கு மிக அருகில் இரண்டு அறைகள் வாடகைக்குண்டு. மாணவர்கள், உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது (ஆண்களுக்கு மட்டும்)

தொடர்பு: 071 856 5662

### Bank Balance & Sponsor For Visa Purpose

வெளிநாடு செல்வதற்கான விசாக்களுக்கு விண்ணப்பிக்க அரச அங்கீகாரமான வங்கிகளில் பணம் போட்டுக்காட்டப்படும். (100% Genuine) தொடர்புகளுக்கு : 076 94 59591

### வேலையாள்கள் தேவை

ஆவரங்காலிலுள்ள ஒயில் விற்பனை நிலையத்துக்கு பெண் விற்பனையாளர் தேவை. அருகில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

077 844 8775, 077 339 8775

### Online Job's

வீட்டில் இருந்தவாறே இணையத்தினூடாக மாதாந்தம் 30 000/= இற்கு மேல் பணம் சம்பாதிப்பதற்கான ஓர் அரிய வாய்ப்பு. முதல் 20 பேர் மாத்திரம் சேர்த்துக்கொள்ளப்படுவர் தவற விட்டவர்களுக்கு முன்னுரிமை.

தகைமை:
- கணினி அறிவு
- இணைய வசதி
- ஆங்கில அறிவு (ஓரளவு)

மேலதிக விவரங்களுக்கு: ஜெரி பெஷன் ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு.
076 600 0056

### O/L, A/L வகுப்புக்கள்

O/L, A/L மாணவர்களுக்கான கணக்கீடு, வர்த்தகம் தனி, குழு வகுப்புக்கள் உங்கள் வீடுகளுக்கு வந்து கற்பித்துக் கொடுக்கப்படும்.

076 663 0090

### வேலைவாய்ப்புக்கள்

பிரசித்தி பெற்ற தொழிற்சாலைகளில் உடனடி வேலைவாய்ப்பு சொஜேசஸ், சோயா, தேங்காய்பால்மா ஆகிய பிரிவுகளில் ஆண், பெண் வயது (18 - 45) உணவு குறைந்த விலையில் தங்குமிடம் இலவசம் சம்பளம் (25000 -35000) தொழிலுக்கேற்ற சம்பளம் வழங்கப்படும்.

076 915 5233/ 076 860 5072

ஜாம், பிஸ்கட், சொக்லட், தண்ணீர்ப்போத்தல், ஆடை உற்பத்தி ஆகிய தொழிற்சாலைகளில் ஆண், பெண் இருபாலாருக்கும் வேலைவாய்ப்புக்கள் உண்டு. வயதெல்லை (18 - 55) உணவு, தங்குமிடம் இலவசம் சம்பளம் 30000 - 45000 இற்குமேல். இன்றே தொடர்புகளுக்கு

075 538 3381/ 077 165 7473

தொழில்தேடி அலையும் இளைஞர் யுவதிகளுக்கு தகைமை அடிப்படையில் நாடு முழுவதும் ஜாம், கோடியல், தேயிலை, கார்ட் போர்ட்பேப்பர், பொலித்தீன் ஆகிய நிறுவனங்களில் லேபல், பொதியிடல், பிரிவுகளுக்கு, ஆண், பெண் வயது (18-50) சம்பளம் (20000 - 45000) கிழமை, மாதசம்பளம் பெற்றுக்கொள்ளலாம்.

077 568 7986/ 072 448 9031

கட்டுநாயக்க விமானநிலையத்தில் அதி கூடிய சம்பளத்துடன் கேட்டரிங் Roomboys, Londery Service, Cleaning ஆகிய பிரிவுகளில் ஆண், பெண் இருபாலாருக்கும் வயது (18-40) உணவு, தங்குமிடம் இலவசம். இருப்பு 20 வேலைவாய்ப்புகள் மட்டும் உள்ளன. முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

076 921 0901/ 078 742 5003
071 549 7747

### வீடு வாடகைக்குண்டு

மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டையில் இரண்டுபேர் கொண்ட ஒரு சிறிய குடும்பத்துக்கு சகல வசதியும் கொண்ட தனி வீடு வாடகைக்குண்டு.
ஓய்வுபெற்ற தம்பதிகள் விரும்பத்தக்கது

077 765 6918, 021 221 3021

### விஷேட பல் வைத்திய சேவை

- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

# First Year Remembrance of Late

## Mr. ROHAN SANJAY RAJOO

**(Chief Inspector of Excise - Kilinochchi)**



08 . 10 . 1966 — 02 . 10 . 2015

A Silent thought a Secret fear,
Keeps Your memory ever dear,
God took you home, It was his will,
But in our hearts you live still.

51, Kachchai Road,
Chavakachcheri.

ever loving
Wife & Children

(c 26432) (13.18)


## பொலிஸ் சமிக்ஞையை மீறியவருக்குத் தண்டம்

பொலிஸாரின் சமிக்ஞையை மீறியவருக்கு 3 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது சாவகச்சேரி நீதிமன்று. வீதிச் சோதனையில் ஈடுபட்ட பொலிஸார் வீதியில் வந்த வாகனத்தை நிறுத்துமாறு சமிக்ஞை செய்தபோது அதனை நிறுத்தாமல் சென்றதால் பொலிஸார் துரத்திப் பிடித்து சோதனையிட்டனர். வாகனத்தில் அனுமதிப் பத்திரமின்றி மணல்ஏற்றிச்சென்றமை கண்டுபிடிக்கப்பட்டது.

வாகனச் சாரதிக்கு எதிராக கொடிகாமம் பொலிஸார் தாக்கல் செய்த வழக்கு நேற்று சாவகச்சேரி நீதிமன்றில்விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கை விசாரித்தநீதிவான்அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிச் சென்றமைக்கு 35 ஆயிரம் ரூபாவும், பொலிஸாரின் சமிக்ஞையை மீறி வாகனம் செலுத்திமைக்கு 3 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதித்தார்.

அதேவேளை, சாரத்திய அனுமதிப் பத்திரமின்றி மது போதையில் வாகனம் செலுத்திய இரு வாகனச் சாரதிகளுக்கு தலா 12 ஆயிரம் ரூபா வீதமும், வேறொருவருக்கு 10 ஆயிரத்து 500 ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது. (ற-9)


# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**சிதம்பரப்பிள்ளை**
**கலாநிதி**
(ஆங்கில ஆசிரியர்)
திதி: துதியை(02.10.2016)

மலர்வு 02 . 01 . 1954 — உதிர்வு 06 . 10 . 2013

அன்பாய் பண்பாய் அனைவரையும் அரவணைத்து
அறிவால் குடும்பத்தை உயர்வுறவே வழிகாட்டி
அவனியில் என்றும் புகழுடன் வாழ வைத்த அன்புத்
தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்

செம்பன் தோட்ட வீதி,
கிராம்புவில், சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



எமது பாடசாலை அதிபர்
**நா.மெய்யழகன்** அவர்களின்
அன்புத் துணைவி
திருமதி **சபிதா மெய்யழகன்**
அவர்களின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்

**பாடசாலைச் சமூகம்**
**யா/மாதனை**
**மெ.மி.த.க. பாடசாலை**
**பருத்தித்துறை.**

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி
**பேரின்பராணி ஏகாம்பரநாதன்**
(B.Sc.ஓய்வுநிலை ஆசிரியை)

தோற்றம் 30.10.1940
மறைவு 01.09.2016

"காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"
- திருக்குறள்

எங்கள் பேரன்புக்கும் பாசத்துக்குமுரிய அன்புத் தெய்வம் அமரர் பேரின்பராணி ஏகாம்பரநாதன் அவர்கள் நோயுற்று இருந்த பொழுது மகரகம வைத்தியசாலையிலும், யாழ். போதனா வைத்தியாசலை தீவிர சிகிச்சைப் பிரிவிலும், தெல்லிப்பழை வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவிலும் விடுதியிலும் சிகிச்சை வழங்கிய வைத்திய நிபுணர்கள்,மருத்துவர்கள் , தாதியர்கள், ஊழியர்கள் மற்றும் இயன் வழி சிகிச்சைப் பிரிவினர்களுக்கும் அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு உடனடியாக வந்துதவிய தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினருக்கும் (யாழ். பிராந்தியம்),சுகாதாரத் திணைக்களத்தினருக்கும் (யாழ்ப்பாணம்), நேரடியாகக் கலந்து கொண்டவர்களுக்கும், ஆறுதல் கூறியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி,பதாகைகள், துண்டுப் பிரசுரங்கள்,மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும்,பத்திரிகைகளில் பிரசுரித்தவர்களுக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும்,இறுதிக் கிரியைகளின்போது பல வழிகளிலும் உதவிய அன்புள்ளங்களுக்கும் உள்ளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (02.10.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளும்படி அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்

2 ஆம் ஒழுங்கை, உடுவில் வீதி,
மருதனார்மடம், சுன்னாகம்.

குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி



கிங்ஸ் எலெக்ரோனிக்ஸ் முகாமையாளராகக் கடமையாற்றும்.
சோமசுந்தரம் அவர்களின் பாசமிகு மனைவி

## திருமதி ராஜினி சோமசுந்தரம்

அவர்கள் 01.10.2016 அன்று இறைவனடி சேர்ந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைவதுடன் அவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**கிங்ஸ் எலெக்ரோனிக்ஸ் உரிமையாளரும், ஊழியர்களும்**

இல.11A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்,
021 222 3857

இல.12, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

## ஆசிரியர்களை நியமித்து விட்டு இடமாற்றங்களை வழங்குங்கள்

### அமைச்சர் ரிஷாத் பணிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.2 ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படும்போது குறித்த பாடசாலைக்கு ஆசிரியர்களை நியமித்த பின்னரே இடமாற்றம் வழங்க வேண்டும் என்று அமைச்சர் ரிஷாத் பதியுதீன் பணித்துள்ளார்.

கடந்த 26ஆம் திகதி துணுக்காய் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கல்வி தொடர்பாக ஆராயப்பட்ட போது ஐயங்கன்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆறு ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது என்றும், அவர்கள் இடமாற்றலாகிச் செல்லும் போது மாணவர்களுக்கு பாடங்களை கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் பற்றாக்குறை ஏற்படும் என பெற்றோரால் சுட்டிக்காட்டப்பட்டது. அது குறித்து இணைத் தலைவர்கள் ஆராய்ந்தனர். குறித்த பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர் களுக்கு இடமாற்றம் வழங்கப்படும்போது அதற்குரிய ஆசிரியர்களை நியமித்த பின்னரே இடமாற்றம் வழங்க வேண்டும் என இணைத் தலைவர்களில் ஒருவரான அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார். (ற-ரி7)

## அரச சாராயம் விற்றவருக்கு தண்டம்

தென்மராட்சி, ஒக். 2 அனுமதிப் பத்திரமின்றி அரச சாராயம் விற்பனை செய்த நபருக்கு சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் 25 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தார். கொடிகாமம் பொலிஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள வீதியில் உள்ளவீடொன்றில் அரச சாராயம் விற்பனை செய்த நபரை, பொலிஸார் கைது செய்து, நீதிமன்றில் நேற்று முன்தினம் முற்படுத்தியபோது தண்டம் விதிக்கப்பட்டது. (ற-9)


# WHITE LOTUS CAMPUS
White Lotus Campus
No.154, A1,Navalar Road Jaffna
021 722 3773 / 077 622 3963

Charted Accountants, AAT,Banking
CA, AAT, Banking ஆகிய தொழில்சார் கல்விகளுக்கான விரிவுரைகள் Oct 8 ஆம் திகதி முதல் ஆரம்பமாக உள்ளன.

எமது சிறப்பம்சங்கள்
- ✓ தரம் மற்றும் அனுபவம் மிக்க விரிவுரையாளர் குழு.
- ✓ இலகு படுத்தப்பட்ட கொடுப்பனவு முறை
- ✓ சிறந்த வகுப்பறை சூழல்

October Intakes

- AAT யினைத் தொடர விரும்பும் பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகைக் கட்டணம் வழங்கப்படும்.
- தகுதி அடிப்படையில் ஏனைய கல்விகளுக்கும் 100% வரையிலான புலமைப்பரிசில் வழங்கப்படும்.

(J/50261) (11.18)

P.Rajaram
BSc Accounting, Cima Passed Finalist
(University of Sri jeyawardenepura)

INTAKES
077 622 3963,
077 932 4255



## STUDY IN MALAYSIA WITH 30% SCHOLARSHIP
manipal international university



JANUARY 2017 INTAKE
Manipal University
தெரிவு செய்வது ஏன் ?

TOTALLY FREE SERVICE

MINIMUM QUALIFICATION
A/L 2 S Passes

- புலமைப் பரிசில் மூலம் ஒருவருட பாடநெறிகளுக்கான கட்டணத்தை சேமிக்கும் வாய்ப்புடன் மீதியை Installment மூலம் செலுத்த முடியும்
- முதல் வருடத்தின் பெறுபேறுகளுக்கு அமைய இரண்டாவது வருடம் 3 இலட்சம் வரை மேலதிக கழிவு
- AAT, HND முடித்த மாணவர்களுக்கு 1வருட Exemption கிடைக்கும்
- எல்லா பாடநெறிகளுக்கும் 4-6 மாதங்கள் வரை கொடுப்பனவுடன் பயிற்சி
- Actuarial Finance
Banking, Insurance, Share market
சம்பந்த கல்விக்கான பாடநெறி போதனை
- இரண்டு வருடங்களின் பின்
Australia, German, UK, France, Canada, USA
போன்ற நாடுகளுக்கு Manipal University மூலமாக செல்லும் வாய்ப்பு

| | | |
|---|---|---|
| ENGINEERING | • Mechanical<br>• Civil | • Computer Engineering<br>• Electrical & Electronics |
| BUSINESS | • Accounting<br>• Actuarial Finance | • Business Administration<br>• International Business |
| SCIENCE | • Biotechnology | • Computer Science |

EDUCATION MALAYSIA (PVT) LTD
14/1/3E, 37th Lane, Wellawatte, Colombo 06.
Hot Line: 077 5 545 000, 071 2 545 000
E-mail: educationmalaysiacentre@gmail.com



# IMMEDIATE VACANCY

Northern Farm (PVT.) Ltd. is an agro based business establishment in Vavuniya and distributing processed agro products throughout the country.

Northern Farm (PVT.) Ltd. is looking for professionally qualified with proven track record and energetic and self motivated young personal for the post of **Accountant.** She/he directly reports to Chief Executive Officer (CEO). The candidate should be well fluent in English, analytic, an excellent team player and able to work independently under minimum supervision.

**Accountant**

Accountant will be responsible for managing all accounting matters related to Northern Farm (Pvt.). Ltd. and to work according to Sri Lanka Accounting System and produce company annual reports and ensure the audit financial report. Also, ensure the efficient financial management of the company as per the financial manual. Liaise with all business partners to ensure the smooth accomplishment of the business transactions. Responsible to operate and maintain the "Quick Book" accounting system.

**Professional Qualification:**
- University Degree in Management Accounting or HNDA (Accounting) or MAAT and CA, CIMA part qualified candidates will be consider

**Technical skills:**
- Solid working knowledge in Accounting packages as such "Quick Book"
- Advanced MS Excel skills and MS Word

**Work Experience:** Minimum 2 years experience in same field preferably in medium level manufacturing industry

**Salary:** Negotiable

Please forward your complete CV with contact details of two non-related referees to northernfarmpvtltd@yahoo.com with the specific post or by post to **CEO, Northern Farm (Pvt.) Ltd., Pillaiyar Kovil Road, Murukarampallai, Vavuniya** within 7 days of this advertisement.



## விற்பனைப் பிரதிநிதிகள் தேவை
சுவி என்ரபிறைசஸ்

நுணாவில் மேற்கு, சாவகச்சேரியில் உள்ள எமது நிறுவனத்திற்கு விற்பனைப் பிரதிநிதியாளர்கள், பட்டா வாகனத்துடன் தேவை. அனுபவம் வாய்ந்தவர்கள் விரும்பத்தக்கது.

076 652 0074, 076 803 4937



## Vacancy for Web Application Developer and Data Processing Analyst

A USA-based company with offices in Colombo and Jaffna is looking for a Web Application Developer and a Data Processing Analyst to work in the Jaffna office. Both candidates should have a degree or diploma in the field of Computer Science/IT and should posses strong technical and analytical skills. Candidates for Web Application Developer should have good programming knowledge; familiarity with PHP, HTML/CSS and Javascript is a plus. Excellent opportunity for motivated candidates to work with a strong team on challenging projects and establish long-term careers. Fluency in English is a must.

Send your CV to
siva@monthlywarranty.com
or siva.monthlywarranty@gmail.com



## சித்த ஆயுர்வேத
## ACU தொடுகை சிகிச்சை

**Quick healing for**
Asthma அலர்ஜி, வாதம், Rheumatism, Arthritis. முள்ளந்தண்டு நோய்கள், முகப்பரு, முடி உதிர்தல், பீனிசம், கருமுட்டை வளர்ச்சிக்குறைவு, உயிர் அணு குறைபாடு, குழந்தை நோய்கள் கரு தோன்றாமை) நாட்பட்ட சளி, பல விதமான சிகிச்சைகளாலும் குணமாகாத நோய்கள் Diabetics விறைப்பு, High Cholesterol, Law Thyroid, High B.P Kidney Failure, உளவள சிகிச்சை (Counseling)

Dr. R. Sivagurunathan
No.54, 33rd Lane,Wellawatta, யாழ்ப்பாணத்திலும்

0777301669



## ஆசிரியர் பதவி வெற்றிடம்
## மூலைக்கல் சமுதாய அமைப்பு

மூலைக்கல் சமுதாய அமைப்பானது கிளிநொச்சி மாவட்டத்தில் "செழுமையான உதயத்திற்கான கல்விசார் உதவித்திட்டம்" ஒன்றினை செயற்படுத்தி வருகின்றது. மேலும் இக் கல்வி நடவடிக்கையானது மாலை நேர வகுப்பாக திங்கள் முதல் வெள்ளிவரையான கிழமை நாள்களில் பி.ப 3.30 மணி தொடக்கம் பி.ப 5.30 மணி வரை நடைபெறுகின்றது. கீழ்வரும் பாடங்களுக்கான ஆசிரியர்கள் வெற்றிடம் காணப்படுகின்றது. சிறந்த கொடுப்பனவு வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி :- 12-10-2016 (புதன்கிழமை )
தேவைப்படும் பாட ஆசிரியர்கள் :-
தரம் 06 - 11 (தமிழ், கணிதம், வரலாறு, ஆங்கிலம், விஞ்ஞானம் )

மேலதிக விபரங்களுக்கு :
அலுவலகம் : 021 2285533 - இயக்குநர் : 0772458658
E.Mail : trkanthan14@gmail.com
பதிவு இல : GA -3127
முகவரி : இல6A, ஆனந்தபுரம், கிளிநொச்சி ( A9வீதி, பொது வைத்தியசாலை முன்பாக. )

குறிப்பு :
உங்களது விபரத்தொகுப்புக்களை முடிவுத் திகதிக்கு முன்னராக Email இற்கு அல்லது அலுவலக முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

(K/177) (11.18)



## பதவி வெற்றிடங்கள்

இலங்கையில் 20 வருடங்களுக்கு மேலாக இயங்கிவரும் Education நிறுவனத்தின் யாழ். கிளைக்கு கீழ்க்காணும் பதவி வெற்றிடங்கள் கோரப்படுகின்றன.

Marketing Executive (School Leavers)
Senior Marketing Executive (within 1year Experience)

**Qualification**
- 30 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும்
- GCE (O/L, A/L)
- சிறந்த தொடர்பாடல் திறன் (தமிழ்/ஆங்கிலம்)

**Benefits**
- Basic Salary
  - *Marketing Executive - 15,000/= +++
  - *Senior Marketing Executive - 23,000/= +++
- Commision Payment
- Traveling Allowance
- Telephone Facilities
- Bike Allowance
- Incentives and over seas Trip
- Career Development (Managment Position within 6 months, After promotion salary package 42,500/=)

Contact : Branch Manager
Mr.G.Anthany
077 356 6835, 021 567 1130
www.pioneerhouselearning.com

Address:-
Pioneer house,
No.100,2nd Floor,
Manipay Road,Jaffna.

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## மரண அறிவித்தல்கள்

### செல்லப்பா சண்முகராசா



வவுனியாவை பிறப்பிடமாகவும் அத்தியடியை புகுந்த இடமாகவும் தற்போது பாரிஸில் வசித்தவருமாகிய செல்லப்பா சண்முகராசா நேற்று (01.10.2016) சனிக்கிழமை பாரிஸில் காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பாரிஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

104/5, குறுக்குவீதி, அத்தியடி,
யாழ்ப்பாணம்.

தகவல்: சகலன்
சு.ஞானசேகரம்

**021 222 5926/ 0033 160 179 345**

## தண்டப் பணத்தைச் செலுத்தும் முறையை விளக்கும் பிரசுரம்

### சாவகச்சேரி அஞ்சல் அலுவலகத்தினரால் விநியோகம்

சாவகச்சேரி, ஒக்.2

வாகனச் சாரதிகளுக்கு பொலிஸாரால் விதிக்கப்படும் தண்டப் பணத்தைச் செலுத்தும் முறைகள் தொடர்பாக விளக்கமளிக்கும் துண்டுப்பிரசுரங்கள் நேற்று சாவகச்சேரி அஞ்சல் அலுவலகத்தினரால் சாவகச்சேரி நகரப் பகுதியில் விநியோகிக்கப்பட்டன.

சாவகச்சேரி அஞ்சலக அஞ்சல் அதிபர் அ.இன்பராஜ் லம்பேர்ட் தலைமையில் அஞ்சலக அதிபர்கள் பணியாளர்கள் அவற்றை விநியோகித்தனர்.

பொலிஸாரால் தங்களுக்குத் தண்டப்பணத்துக்காக தரப்படும் தற்காலிக சாரதி அனுமதிப் பத்திரத்தை (வெள்ளை நிறத்துண்டு) தங்களுக்கு அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்று கொடுத்து கட்டுவதற்கான நீல நிறத்திலான துண்டினை பெற்று தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரம் (வெள்ளை நிறத் துண்டு தந்த திகதி உட்பட 14 நாள்களில் ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்கள் உட்பட) அருகில் உள்ள அஞ்சல் அலுவலகத்தில் செலுத்துதல் வேண்டும். தாங்கள் தங்கள் தண்டப்பணத்தை சாவகச்சேரி அஞ்சல் அலுவலகத்தில் அதிகாலை 4.30 மணி தொடக்கம் இரவு 7.30 மணிவரையும், யாழ்ப்பாணம் அஞ்சல் அலுவலகத்தில் காலை 7.30 மணி தொடக்கம் இரவு 9 மணிவரையும் சகல உப அஞ்சல் அலுவலகங்களிலும் காலை 8 மணி தொடக்கம் மதியம் 12 மணி வரையும் பிற்பகல் 1 மணி தொடக்கம் மாலை 5 மணி வரையும் செலுத்தலாம். தண்டப் பணம் செலுத்தும்போது தண்டப் பணத்தின் 10 வீதமும் சேர்த்தே அறவிடப்படும்.

அஞ்சல் அலுவலகத்தில் தரப்படும் பணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டுடன் பொலிஸாரால் தரப்பட்ட தற்காலிக அனுமதிப் பத்திரத்தையும் (வெள்ளை நிறத் துண்டு) சேர்த்து தண்டப் பணம் அறவிடப்பட்ட பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்து தங்களது சாரதி அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. (ற-9)

### இராஜசிங்கம் சிவராஜா (சச்சி)



மண்ணில்
12 . 09 . 1957

விண்ணில்
29 . 09 . 2016

மாகியப்பிட்டி, சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி Pletten Berg ஐ வசிப்பிடமாகவும் கொண்ட இராஜசிங்கம் சிவராஜா (சச்சி) 29.09.2016 வியாழக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராஜசிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) மற்றும் பொற்கொடி தம்பதிகளின் அன்பு மகனும், அனுஜாவின் (ஜேர்மனி) பாசமிகு கணவரும், லோஜினி, தவராஜா (மெக்கானிக் அப்பன்), நந்தினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாகியப்பிட்டி,
சண்டிலிப்பாய்.

தகவல்: ஸ்ரீஜனன் (ஜனா).
(இலங்கை வங்கி - பாதுகாப்பு உத்தியோகத்தர்- காங்கேசன்துறை)

(J/5033) (11,18)

## பாலியல் துர்நடத்தை: சிறுவனுக்கு எதிராக வழக்கு


யாழ்ப்பாணம், ஒக். 2

பாடசாலை மாணவியை பாலியல் துர்நடத்தைக்கு உள்ளாக்கினார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட சிறுவனுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யுமாறு சட்ட மா அதிபர் திணைக்களம் பணித்துள்ளது.

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 2013 ஆம் ஆண்டு இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது.

சிறுவன் கைது செய்யப்பட்டு சிறுவர் நீதிமன்றில் வழக்கு இடம்பெற்று வந்தது. பின்னர் சிறுவன் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தான்.

வழக்கு சட்டமாக அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அதனைப் பரிசீலித்த சட்டமா அதிபர் திணைக்களம் இளைஞனுக்கு எதிராகப் பாலியல் துர்நடத்தைக் குற்றச்சாட்டின் கீழ் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யுமாறு பணித்தது. சந்தேகநபர் அச்சுவேலி இரகசியப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவரை நேற்று மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தியபோது நீதிவான் 14 நாள்கள் விளக்க மறியல் வைக்குமாறு உத்தரவிட்டார். (ற-4,107)



## விபத்தில் இளைஞன் காயம்

கிளிநொச்சி, ஒக்.2

கிளிநொச்சி-பரந்தன் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் படுகாயமடைந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பி.ப. 2 மணியளவில் விபத்து நடந்துள்ளது.

பரந்தனில் இருந்து கிளிநொச்சி நோக்கித் துவிச்சக்கர வண்டியில் சென்ற இளைஞனும் வவுனியாவில் இருந்து வந்த கப் வாகனமும் விபத்துக்குள்ளாகியதில். தூக்கி வீசப்பட்ட இளைஞன் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-ரி3,34)

### திருமதி நாகபூரணம் துரைராசா



தோற்றம்
02.03.1958

மறைவு
30.09.2016

வாதரவத்தை புத்தூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகபூரணம் துரைராசா 30.09.2016 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் ஆழ்வார்பிள்ளை நாகேந்திரம்-காலஞ்சென்ற அழகம்மா தம்பதிகளின் அன்பு மகளும் துரைராசாவின் அன்பு மனைவியும் ஜெகநாதன் (ஆசிரியர் - தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி), சுதாகர் (பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்- கோப்பாய் பிரதேச செயலகம்), பிரசாந்தன்(பொலிஸ் உத்தியோகத்தர் - யாழ்ப்பாணம்), கமலேஸ்வரன் (மாணவன் காமராஜர் பல்கலைக்கழகம்), மயூரி ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(02.10.2016) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் ஒரு மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக வாதரவத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வாதரவத்தை,
புத்தூர்.

தகவல்:
குடும்பத்தினர்.

(J/5023 (12,18)

**077 166 9103**

## மரண அறிவித்தல்



### திருமதி ராஜினி (பபி)சோமசுந்தரம்

விதானையார் வீதி, சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும், வண்ணார்பண்ணை, சுண்டுக்குளி ஆகிய இடங்களை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய திருமதி ராஜினி (பபி) சோமசுந்தரம் நேற்று (01.10.2016) சனிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜா (சின்னமணி)- கமலாம்பிகை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சின்னம்மா தம்பதிகளின் மருமகளும், சோமசுந்தரத்தின் (Manager Kings Electronics) ஆருயிர் மனைவியும், ராஜசுலோஜனாவின் (டெலா) அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சஞ்ஜீவன் (A/L 2001 Maths - J/Hindu College ), ரஜீவன் மற்றும் நிலானி (ஆஸ்திரேலியா), டிலானி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சசிகரன் (ஆஸ்திரேலியா), துஷ்யந்தன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், கனிஷா, திவானி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.10.2016) ஞாயிற்றுக்கிழமை இல.22,நாவலடி லேன், வண்ணார்பண்ணை (பேச்சியம்மன் கோயிலடி)யிலுள்ள இல்லத்தில் முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று முற்பகல் 11 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.22, நாவலடி லேன்,
வண்ணார்பண்ணை.
(பேச்சியம்மன் கோயிலடி)

தகவல்:
க.சோமசுந்தரம் (கணவர்),
பிள்ளைகள், மருமக்கள்.

(1/5041) (11,17,18)

**077 324 6663, 077 659 0322**

## மகோற்சவ பெருவிழா

யாழ்ப்பாணம், ஒக். 2

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ வல்லிபுரநாதர் தேவஸ்தானத்தின் மகோற்சவப் பெருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 10ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப 10 மணிக்குத் தேர்த்திருவிழாவும், மறுநாள் செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

மகோற்சவ காலங்களில் வசந்தமண்டபப் பூசை மு.ப. 10 மணிக்கும் இரவு 7 மணிக்கும் நடைபெறும் என ஆலய பரிபாலன சபையும், உபயகாரர்களும் தெரிவித்துள்ளனர். (ற-ரி)

## முன்பள்ளி விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஒக். 2

சுன்னாகம் கண்ணகி தேவகிராம முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நாளை திங்கட்கிழமை பி.ப 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

முன்பள்ளியின் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக கொக்குவில் இந்துக்கல்லூரி ஓய்வு நிலை அதிபர் அ.பஞ்சலிங்கம் கலந்து கொள்வார். (ற-ரி)

சகல அபான்ஸ் எலைட் காட்சியறைகள் தினமும் இரவு 9 மணி வரை திறந்திருக்கும்.

# VAT அதிகரிக்கும் முன் சிறந்த சேமிப்பு

# 50% வரை தள்ளுபடி

## முந்துங்கள், இன்றைய தினம் மட்டுமே!!!

குறைந்த அளவு கையிருப்பே உள்ளது




50D39
அபான்ஸ் 50" LED TV
~~ரூ.199,999~~
ரூ.99,999
50% தள்ளுபடி




32L2550
டொஷிபா 32" LED TV
~~ரூ.49,999~~
ரூ.34,999
30% தள்ளுபடி




43LF510
LG 43" LED TV
~~ரூ.109,999~~
ரூ.84,999
23% தள்ளுபடி




BH7540
LG PREMIUM ஹோம் தியேட்டர் சிஸ்டம்
~~ரூ.119,999~~
ரூ.59,999
50% தள்ளுபடி



DH4130
LG ஹோம் தியேட்டர் சிஸ்டம்
~~ரூ.22,999~~
ரூ.16,499
28% தள்ளுபடி



HTD3540
பிலிப்ஸ் ஹோம் தியேட்டர் சிஸ்டம்
~~ரூ.27,999~~
ரூ.22,999
18% தள்ளுபடி



LG K7
LG
~~ரூ.19,990~~
ரூ.16,990
15% தள்ளுபடி



HPACi3
HP நோட் புக்
~~ரூ.79,999~~
ரூ.62,900
34% தள்ளுபடி



IP 300 i3
LENOVO நோட் புக்
~~ரூ.79,990~~
ரூ.62,900
30% தள்ளுபடி



IP 300 i5
LENOVO நோட் புக்
~~ரூ.99,990~~
ரூ.72,900
27% தள்ளுபடி



LSS-1862QC
LG
~~ரூ.117,900~~
ரூ.99,900
15% தள்ளுபடி



US-Q186C4A4
LG
~~ரூ.204,900~~
ரூ.186,900
09% தள்ளுபடி



GHFMGAGC060
HAVELLS
~~ரூ.9,999~~
ரூ.7,899
21% தள்ளுபடி



MWM800
MISTRAL
~~ரூ.2,999~~
ரூ.2,549
15% தள்ளுபடி



6GX0FHDXXY
WHIRLPOOL SIDE BY SIDE
~~ரூ.299,899~~
ரூ.249,899
16% தள்ளுபடி



GLB282SLHGE
LG
~~ரூ.81,999~~
ரூ.75,299
08% தள்ளுபடி



HOOVER
~~ரூ.89,999~~
ரூ.79,999
11% தள்ளுபடி



STS15WS1
அபான்ஸ் ரைஸ் குக்கர்
~~ரூ.2,899~~
ரூ.2,329
20% தள்ளுபடி

011 5 999 000 | HOTLINE
நாடளாவிய ரீதியிலான அபான்ஸ் மற்றும் அபான்ஸ் எலைட் காட்சியறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

Abans

# 4 மாணவிகள் மீது தவறான நடத்தை

## கைதாகினார் அதிபர்

கொழும்பு, ஒக்.2

பாடசாலை மாணவிகள் 4 பேரைப் பாலியல் தவறு செய்தமை தொடர்பில் பண்டாரவளை எல்ல கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலையொன்றின் அதிபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

10 மற்றும் 11 வயது மாணவிகளே குறித்த அதிபரால் பாதிக்கப்பட்டுள்ளனர். பாடசாலையில் உள்ள புத்தர் சிலைக்கு அருகில் மற்றும் ஆசிரியர்கள் ஓய்வறையில் வைத்துத் தனித் தனியாக இந்த மாணவிகள் தவறாக நடத்தப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் பெற்றோர் மற்றும் ஆசிரியர்களிடம் குறித்த மாணவிகள் தெரியப்படுத்தியுள்ளனர்.

அதன் பின்னர், பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டுக்கமைய குறித்த அதிபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரான குறித்த அதிபர் இதற்கு முன்னர், தமது உறவினரின் மகளுடனும் இவ்வாறு தவறாக நடந்து கொண்டார் என்ற குற்றச்சாட்டுக்கு உள்ளாகியிருந்தமை பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது. (தி)






## முசலியில் டெங்கு ஒழிப்பு

மன்னார், ஒக். 2

தேசிய டெங்குக் கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு முசலி சுகாதார வைத்திய அதிகாரி எம்.ஒஸ்மன் சாள்ஸ் தலைமையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை டெங்குப் பரிசோதனைகள் இடம்பெற்றன.

முசலி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வேப்பங்குளம், பொற்கேணி ஆகிய பிரதேசங்களில் டெங்கு நிகழ்வு நடைபெற்றபோது பொதுச் சுகாதாரப் பரிசேதகர்கள், முப்படையினர் சுகாதார உத்தியோகத்தர்கள் என்று பலர் கலந்துகொண்டனர். (த-5-56)

# ஆய்வுகூட அலுவலர்களாக தெற்கைச் சேர்ந்த எட்டுப் பேர்

### யாழ். வைத்தியசாலைகளுக்கு நியமனம்

யாழ்ப்பாணம் ஒக்.2

யாழ். மாவட்ட வைத்தியசாலைகளில் பற்றாக்குறையாகக் காணப்பட்ட ஆய்வு கூட மத்தியதர தொழில்நுட்ப வியலாளர்கள் வெற்றிடத்திற்கென தென்பகுதியைச் சேர்ந்த எட்டு ஆய்வுகூட அலுவலர்கள் நியமிக்கப்பட்டுக் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர். இவர்களில் நான்கு பேர் மீள் நியமனம் பெற்றவர்கள் எனத் தெரிவிக் கப்பட்டது.

யாழ்மாவட்ட வைத்தியசாலைகளில் ஆய்வுகூட அலுவலர்கள் இல்லாததால் நோயாளர்கள் தனியார் ஆய்வுகூடங்களில் பெரும் நிதிச் செலவில் பரிசோதனைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பித்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த நிலையில் மாகாண சுகாதார அமைச்சு விடுத்த வேண்டுகோளையடுத்து நடுவண் சுகாதார அமைச்சினால் எட்டு ஆய்வுகூட அலுவலர்கள் நியமிக்கப்பட்டு கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர். (த-9)

## வாகனச் சாரதி மீது இரவில் தாக்குதல்

வாகனங்கள் மூலம் காணி துப்புரவு செய்யச் சென்ற வாகனச் சாரதி இரவுவேளை வாகனத் தில் வந்தவர்களால் தாக்கப்பட்டார்.

தாக்குதலுக்கு இலக்கான சாரதி மறுநாள் காலை சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இந்தச் சம்பவம் கடந்த 25 ஆம் திகதி இரவு இயக்கச்சியில் இடம்பெற்றது.

இயக்கச்சிப் பகுதியில் உள்ள காணி, இயந்திரங்கள் மூலம் துப்புரவு செய்யும் பணிகள் இடம் பெற்று வருகின்றன. அங்கு வாகனம் செலுத்துவதற்கெனச் சென்றவர் இரவு அங்கு படுத்திருந்தபோது வாகனத்தில் வந்த ஐந்து பேர் அவர் மீது பொல்லுகள் மற்றும் இரும்புக் கம்பிகளால் தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பியோடியுள்ளனர். காயமடைந்த சாரதி இரவு வைத்தியசாலைக்கு வருவதற்கு வாகன வசதி கிடைக்காததால் இரவு முழு வதும் அங்கேயே தங்கிவிட்டு காலையில் பளை வைத்தியசா லைக்குச் சென்றார். பின்னர் அங்கிருந்து சாவகச்சேரி வைத்தியசாலைக்கு அனுப்பி வைக் கப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

தாக்குதல் தொடர்பாக சாவகச்சேரி வைத்தியசாலைப் பொலி ஸார் விசாரணைகளை மேற் கொண்டு பளைப் பொலிஸ் நிலையத்துக்கு அறிவித்துள்ளனர் எனத் தெரிவிக் கப்பட்டது. (த-9)




Cargills food city 33rd ANNIVERSARY
மகிழ்ச்சியை பகிர்ந்திட
4 வாரங்களுக்கு
மேலதிக சிறப்பு சலுகைகள்!
இலவச பில் வாரம்
மொத்த பில்லின் பெறுமதியை
இலவசமாகப் பெறும் வாய்ப்பு
செப்டெம்பர் 30 – ஒக்டோபர் 06
மிக விரைவில்
வவுச்சர் வாரம்
இலவச காகில்ஸ் புட்சிட்டி வவுச்சர்களை
வெல்லும் வாய்ப்பை பெறுங்கள்
மிக விரைவில்
விலைக்கழிவு கூப்பன் வாரம்
வியத்தகு விலைக்கழிவு மற்றும்
பரிசுகளை வெல்லும் வாய்ப்பு
மிக விரைவில்
இலவச பரிசுகள் வாரம்
இலவச பொருட்களை வெல்லும் வாய்ப்பு.
அதிர்ஷ்டமிக்க வாடிக்கையாளர்களுக்கு
மொத்த ஷொப்பிங் பொதி இலவசம்!
இவற்றுடன் காகில்ஸ் புட்சிட்டியில் மாதம் முழுதும் அத்தியாவசியப்
பொருட்களுக்கு குறைந்த விலைகள்
5X மேலதிக லோயல்டி புள்ளிகள்
Cargills
ஆண்டு நிறைவு மாதத்தை
முன்னிட்ட விசேட
கொண்டாட்டம் உங்களுக்கு
5 மடங்கு அதிக லோயல்டி
புள்ளிகளை வழங்குகிறது.
ரூ. 1000 க்கு அதிகமான கொள்வனவுகளுக்கு உரியது.
நிபந்தனைகளுக்கு உட்பட்டது
Cargills food city
வீடு செல்லும் போது

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## படிப்பது சிவபுராணம் இடிப்பது சிவன் கோயில்

ஒற்றுமை குறித்து வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் பேசலாமா? அதுவும் இன்றைய அரசியல் சூழலில் தமிழர்கள் மத்தியில் இருந்த மிகக் குறைந்தபட்ச ஒற்றுமைக்கும் வேட்டு வைக்கும் கைங்கரியத்தில் அவர் இறங்கியிருக்கும் நிலையில், ஒற்றுமை குறித்து அவர் பேசுவது, அதிலும் வடக்கு கிழக்கு என்று மட்டுமல்லா மல் கொழும்பு மலையகத் தமிழர்களையும் ஒற்று மைப்பட அழைப்பது வேடிக்கையாகவும் வேத னையாகவும் இருக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற நூல் அறிமுக விழாவுக்கு முதலமைச்சர் அனுப்பி வைத்த உரையில் இந்தத் தமிழர் ஒற்றுமை குறித்துக் கருத்துரைத்துள்ளார். அரசியல் விமர்சகர் மு.திருநாவுக்கரசு எழுதிய “இலங்கை அரசமைப்பு - டொனமூர் முதல் உத்தேச சிறிசேன வரை” என்ற நூலின் அறிமுக விழா அது.

இன்று ஒன்றுக்கொன்று முறுக்கிக் கொண்டுள்ள அரசியல் கட்சிகள் பலவற்றின் முக்கிய நபர்கள் கலந்துகொண்டிருந்தனர். முதலமைச்சரின் உரையும் அதில் கலந்துகொண்டிருந்தது.

“ஐரோப்பியர்களின் தொடர் தாக்குதல்களுக்கு உள்ளான யூதர்கள் ஒற்றுமைப்பட்டு ஓர் அரசை நிறுவியதைப் போன்றே, இலங்கையில் வாழும் தமிழர்களும் ஓரணியின் கீழ் ஐக்கியப்பட்டு தமது உரிமைக்காக வடக்கு, கிழக்கு, மலையகம், கொழும்பு என்ற பேதங்கள் இன்றி மொழியால் ஒன்றுபட்டு உரிமைக்காகக் குரல் கொடுக்க வேண்டிய காலம் கனிந்துள்ளது” என்று முதலமைச்சர் தனது எழுதப்பட்ட உரையில் கூறியுள்ளார்.

அவரே சிதைத்து விட்டிருக்கும் தமிழ் அரசியல் ஒற்றுமைச் சூழலில், மீண்டும் ஒட்டுமொத்தத் தமிழர்களுக்கும் அவர் ஒற்றுமைக்கான அழைப்பை விடுப்பது கேலிக்கிடமானது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்கிற குடைக்குள் இருந்த எல்லாக் கட்சிகளும் ஒற்றுமைப்பட்டே, கொழும்புவாசியான ஓய்வுபெற்ற நீதியரசர் க.வி.விக்னேஸ்வரனை முதலமைச்சர் வேட்பாளராக்கின. எல்லோரும் சேர்ந்து கேட்டால் வருகின்றேன் என்று அன்று அறிக்கைவிட்ட விக்னேஸ்வரன், இன்று கூட்டமைப்பிலிருந்த சில கட்சிகளைச் சேர்த்துக்கொண்டு வெளியே இருந்த சிலருடன் கூட்டுச் சேர்ந்துகொண்டார்.

இதனால் ஏற்பட்ட குழப்பம் இப்போது தெற்கின் பேரினவாதிகளுக்கும் தூபம்போட்டு, குறைந்தபட்ச அரசியல் ஒற்றுமையையாவது கொண்டிருந்த- பெரும் பான்மை ஒற்றுமை என்று இதைச் சொல்வதே சரியானது, ஏனெனில் எப்போதுமே சிறு எண்ணிக்கையிலான தமிழர்கள் எதிரணிகளில் இருக்கத்தான் செய்தனர் - தமிழர்களிடமும் குழப்பத்தை ஏற்படுத்திவிட்டுள்ளது.

இத்தகையதொரு நிலையில் முதலமைச்சர் மீண்டும் ஒற்றுமை குறித்துப் பேச விழைவது காலப் பொருத்தமானதும் இல்லை; அறிவுடைமையானதும் இல்லை. குலைத்துக் குலைத்து விளையாடுவதற்குத் தமிழர்களின் ஒற்றுமை ஒன்றும் பல்லாங்குழி கிடையாது என்பதை முதலமைச்சர் உணரவேண்டும்.

படிப்பதோ சிவபுராணம் இடிப்பது சிவன் கோயில் என்பதைப் போன்று முதலமைச்சர் நடந்துகொள்வது அழகல்ல. இன்றைய அரசியல் சூழலில் வடக்கு - கிழக்குத் தமிழர்களின் ஒற்றுமைக்கே தடை, தான்தான் என்பதை முதலமைச்சர் உணர்ந்துகொண்டு விலகினாரானால், அதுவே தமிழர்களுக்கு நன்மை பயக்கும்.

# காவிரிப் பிரச்சினை, வெறும் கடித அரசியல்!

வந்தியத்தேவர்

நெருப்பை நீர் அணைக்கும் என்பது நியதி என்றபோதிலும், காவிரி நதி நீர்ப் பிரச்சினையால் மூண்ட தீ தமிழர்களைப் பெரும் பாதிப்புக்கு உள்ளாக்கி, அவர்களை அகதிகளாக அலைய விட்டுள்ளது. கர்நாடகா, ஆந்திரா மாநிலங்களூடாக தமிழகத்தில் ஓடிக் கொண்டிருக்கும் காவிரி நதி தமிழக விவசாயத்துக்கு மட்டுமன்றி, அதன் குடிதண்ணீர்த் தேவைக்கும் இன்றியமையாதது. இதனால் நதிநீர்ப் பங்கீடுகள் இந்த மாநிலங்களுக்கிடையில் பகிர்ந்தளிக்கப்படும் முறை காலம் காலமாகக் கடைப்பிடிக்கப்பட்டுவருகிறது. எனினும் இந்த நீர்ப்பங்கீடு அரசியலாக்கப்பட்டு, கர்நாடகா, ஆந்திரா மாநிலங்கள் தமிழகத்துக்கு வழங்க வேண்டிய நீரை உரிய முறையில் வழங்க மறுத்து வருகின்றன. ஒருவகையில் தண்ணீருக்கான போர் முதலில் இந்தியாவில்தான் ஆரம்பிக்கும் போலிருக்கிறது. தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா மாநிலங்களுக்கிடையில் அவ்வப்போது தண்ணீர்ப் பிரச்சினை தலைகாட்டுவதும், அதனால் மாநிலங்களது அமைதி குலைவதும் வழமையேயெனினும், இந்த முறை தமிழகத்துக்கும் கர்நாடகாவுக்குமிடையிலான காவிரி நீர்ப்பிரச்சினை பெரிய அளவில் மோதல்களை உண்டு பண்ணியுள்ளது. கர்நாடகா மாநிலத்தின் விவசாயத்துக்கும் குடி தண்ணீர்த் தேவைகளுக்கும் காவிரி நீர் பற்றாக்குறையாக உள்ளதால், தமிழகத்துக்குத் தண்ணீர் வழங்க இயலாது என்பதில், கர்நாடகா முதல்வர் சித்தராமையா உறுதியாக நிற்கிறார். தமிழகத்துக்குரிய 15 ஆயிரம் கன அடி நீரைத் திறந்து விட வேண்டும் என உச்ச நீதிமன்றம் அறிவித்த போதும், முடியாது 10 ஆயிரம் கன அடி நீரை மட்டுமே வழங்க முடியுமென அவர் கூறியுள்ளார். நீதிமன்றத்தின் உத்தரவையும் ரத்துச் செய்ய வேண்டும் எனவும் கோரியிருந்தார்.

### தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட தாக்குதல்கள்

தமிழ்நாடு, கர்நாடகா ஆகிய இரண்டு மாநிலங்களுக்குமே காவிரி நீர் மிகவும் முக்கியம். அதனால் இதில் அரசியல் கலக்காத நடு நிலைத் தீர்வொன்று தேவை. மத்திய அரசு நதி நீர்ப் பங்கீடு தொடர்பாக நடுவர் மன்றங்களை அமைத்திருந்தபோதும், கர்நாடகா ஆந்திரா போன்ற மாநிலங்கள் அவற்றுக்குக் கட்டுப்படுவதாக இல்லை. காவிரி நீரைத் திறந்துவிட உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டதை எதிர்த்து, கர்நாடகா அமைப்புக்கள் தமிழகத்துக்கும் தமிழர்களுக்கும் எதிராகத் தூக்கிய போர்க் கொடி, தமிழ் மக்களை ஏதிலிகளாக்கி யுள்ளது. கர்நாடகாவில் வதியும் தமிழர்களின் தொழிற்சாலைகள், வர்த்தக மையங்கள், வீடுகள் அனைத்துமே அடித்து நொறுக்கப்பட்டும், எரியூட்டப்பட்டும் சேதப்படுத்தப்பட்டுள்ளன. தமிழ் மக்கள் அனைத்தையும் இழந்து அகதிகளாக அலைந்தபோதும், கர்நாடக முதல்வர் சித்தராமையா கலகத்தை அடக்க முனையவில்லை. இது கர்நாடகத்தில் உள்ள தமிழ் மக்களுக்கு எதிரான திட்டமிட்ட செயற்பாடாகவே இடம்பெற்றுள்ளது. தமிழர்களையும் அவர்களது உடைமைகளையும் பாதுகாக்க எந்த நடவடிக்கையும் எடுக்காத முதல்வர் சித்தராமையா, தமிழகத்தில் உள்ள கர்நாடக மக்களின் பாதுகாப்பில் மிகவும் அக்கறை காண்பித்தார். தமிழகத்தில் உள்ள கர்நாடகா மக்களைப் பாதுகாக்க உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு தமிழக முதல்வர் ஜெயலலிதாவைக் கேட்டிருந்தார். தமிழ் மக்கள் மீதான கன்னட அமைப்புக்களின் தாக்குதல்கள் பெரியளவில் இடம்பெற்றன. பஸ்கள், லொறிகள், என நூறுக்கும் அதிகமான வாகனங்கள் சேதமாக்கப்பட்டுள்ளன. சுமார் 25 ஆயிரம் கோடி ரூபா வரையிலான தமிழர்களின் சொத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளன. கர்நாடகா அமைப்புக்களால் தமிழ் மக்கள் விரட்டியடிக்கப்பட்ட நிலையில், தமிழகத்துக்குத் தண்ணீர் திறந்துவிடக் கூடாது எனக் கூறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களில் கர்நாடகத்தில் வாழும் தமிழர்களும் அடங்கியிருந்தனர்.

> தமிழ் மக்கள் மீதான கர்நாடகா அமைப்புக்களின் தாக்குதல்கள் பெரியளவில் இடம்பெற்றன. பஸ்கள், லொறிகள், என நூறுக்கும் அதிகமான வாகனங்கள் சேதமாக்கப்பட்டுள்ளன. சுமார் 25 ஆயிரம் கோடி ரூபா வரையிலான தமிழர்களின் சொத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளன.

### மௌனம் காக்கும் பிரதமரும் கடிதம் எழுதும் தமிழக முதலமைச்சரும்

தமிழகத்திலும் பெருமளவு கர்நாடக மக்கள் உள்ளனர். கர்நாடகத்தைச் சேர்ந்த பலர் தமிழ்ச் சினிமா நடிகர்களாக சென்னையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அதனால் நடிகர் சங்கம் இந்த விடயத்தில் மௌனம் காத்து நிற்கிறது போலும். நடிகை ராகினி திருவதி தமிழகத்தில் சினிமா மூலம் பிழைப்பு நடத்திக்கொண்டு, காவிரி நீர் தமிழகத்துக்கு வழங்கப்படக்கூடாது போராட வரும்படி அழைப்பு விடுத்திருக்கிறார். பல முதியவர்கள் தாக்குதலுக்கு உள்ளாக்கியுள்ளனர்.

மேகதாதுவில், கர்நாடகா தடுப்பு அணைகட்டுவது மத்திய அரசு அறியாததல்ல. அவர்களின் அனுசரணையுடனேயே அது இடம் பெறுகிறது. தமிழக விவசாயம் பாதிக்கப்படுவதை பிரதமர் நரேந்திரமோடி அறியாமலில்லை. இருந்தும் அமைதி காக்குமாறு அறிக்கைவிட்டு விட்டு, அடக்கமாகி விட்டார். நதிநீர் ஒருங்கிணைப்பை ஏற்படுத்த மத்திய அரசு தவறி விட்டமையே மாநிலங்களிடையே பிரச்சினை எழக் காரணம் என்று–பொதுவான கருத்தொன்று நிலவுகின்றது. எனினும் மத்திய அரசு, நதி நீர் பங்கீடு விடயத்தில் தமிழகத்துக்கு நீதி கிடைக்க எந்த முயற்சியையும் முன்னெடுப்பதாக இல்லை. தமிழக அரசியல்வாதிகளும் இவ்வாறான கொந்தளிப்புக்கள் எழும்போது, ஆவேசமாகப் பேசிவிட்டு அடங்கி விடுகின்றனர். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டுமாறும், காவிரி மேலாண்மை வாரியத்தை மத்திய அரசு அமைக்க வேண்டும் எனவும், கருணாநிதி வலியுறுத்துகிறார். முதல்வர் ஜெயலலிதாவுக்கு காவிரி நீரை விட கருணாநிதி தான் முக்கிய பிரச்சினைபோலும். அதனால் காவிரியை கடிதத் தலைப்புக்கு மட்டுமே பயன்படுத்துகிறார். கடந்த ஆறு வருடங்களாக மத்திய அரசுக்கு இது குறித்து ஜெயலலிதா பல கடிதங்கள் வரைந்துள்ளதாகத் தெரிகின்றது. கருணாநிதியும் முதல்வராக இருந்த சமயத்தில், இதே வேலையைத்தான் மேற்கொண்டிருந்தார். அரசியல்வாதிகள் ஆவேசமாகப் பேசிவிட்டு–அப்பாவி மக்களை உசுப்பி விட, விவசாயிகளும், கட்சித் தொண்டர்களும் நீர் கிடைக்கட்டும் என்று கோசமிட்டு–ஆர்ப்பாட்டம் செய்ய, மாநிலங்களுக்கிடையிலான நீர்ப் பங்கீடும், ஏன் தமிழக மீனவர் பிரச்சினையும்கூட வெறும் கடித அரசியலாகவே தொடர்ந்து கொண்டிருக்கப்போகிறது.

## வாசகர் திருமுகம்



# உலக அழிவுக்கு வழிகோலப்போகும் அணு ஆயுதங்கள்

சேரலாதன்

முதலாவது மற்றும் இரண்டாவது உலகப் போர்களைப்போன்று இன்னுமொரு உலகப்போர் ஆரம்பிக்குமாயின் அது அணு ஆயுதப் போரொன்றாகத்தான் இருக்குமென்பதில் ஐயத்துக்கு இடமில்லை. இதன் விளைவாக முழு உலகமுமே சுடுகாடாக மாறி விடுகின்ற அபாயமும் ஏற்பட்டு விடும். அணுகுண்டு தொடர்பான தொழில்நுட்பத்தை அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ், சீனா, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் அறிந்து வைத்திருப்பதாக முன்னர் கூறப்பட்டது. தற்போது வடகொரியா, ஈரான் ஆகிய நாடுகளும் இதைக் கொண்டிருப்பதாக நம்பப்படுகின்றது. இதைவிட இஸ்ரேல் உள்ளிட்ட வேறு சில நாடுகளும் அணுகுண்டு தொடர்பான தொழில் நுட்பத்தைக் கொண்டிருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது. அணுவாயுதங்கள் ஒருநாட்டின் இராணுவ பலத்தை எடுத்துக் காட்டுவனவாக அமைந்துள்ளன. ஒரு காலத்தில் சோவியத் ரஷ்யா பலம் வாய்ந்ததாகக் காணப்பட்டது. அமெரிக்காவுக்கும் அந்த நாட்டுக்குமிடையே நீண்டகாலமாகப் பனிப் போரும் நிலவி வந்தது. அப்போதெல்லொம் அணுவாயுதப் பரிசோதனைகள் இந்த இரு நாடுகளிலும் அடிக்கடி இடம்பெற்று வந்தன. இவை அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்குமிடையே எச்சரிக்கை செய்கின்ற சமிக்ஞைகளாகவும் பயன்பட்டன.

### அணுகுண்டுத் தொழில்நுட்பத்தால் நாடுகள் ஒன்றையொன்று மிரட்டும் போக்கு

இதேவேளை-பரம வைரிகளான பாகிஸ்தானும்-இந்தியாவும் ஒன்றை மற்றொன்று பயமுறுத்தும் வகையில் அணுப் பரிசோதனைகளை அடுத்தடுத்து நிகழ்த்தின. தற்போது அணுவாயுதங்களும் இவற்றிடம் உள்ளன. பாகிஸ்தானைப் பொறுத்தவரையில் தீவிரவாத இயக்கங்கள் பல அந்த நாட்டில் வேரூன்றி உள்ளன. பாகிஸ்தானிடம் உள்ள அணுவாயுதங்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதமும் இல்லையெனக் கூறப்படுகின்றது. இந்த நிலையில் தீவிரவாதிகளின் கைகளில் இவை கிடைத்து விட்டால் அதன் விளைவுகள் மிகப் பயங்கரமானதாகவே இருக்கும்.

கடந்த 2005 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பாகிஸ்தானைச் சேர்ந்த பிரபல விஞ்ஞானியான அப்துல் கதீர்கான், ஈரான், லிபியா, வடகொரியா ஆகிய நாடுகளுக்கு தாம் அணுஆயுத தொழில்நுட்பத்தை விற்றதை ஒப்புக்கொண்டுள்ளார். இது மிகப்பெரிய அதிர்வலைகளை உலக நாடுகளிடையே ஏற்படுத்திவிட்டது. இதேவேளை-வடகொரியா அதே ஆண்டு ஒக் ரோபர் மாதம் தனது முதலாவது அணுகுண்டுப் பரிசோதனையை மேற்கொண்டது. இன்று வடகொரியா ஐக்கியநாடுகள் சபைக்குக்கூட மதிப்பளிக்காமல் தன்னிச்சையாகச் செயற்பட்டு வருகின்றது. இது உலக அமைதிக்குப் பெரும் சவாலாகவே அமைந்துள்ளது.

### அணுகுண்டு வீச்சுப் பாதிப்புக்கு உதாரணமாய் அமைந்த ஜப்பான்

அணுகுண்டு வீச்சுக்களால் உலகிலேயே மிகவும் பாதிக்கப்பட்ட ஒரேயொரு நாடு ஜப்பான் மட்டுமே. ஏனென்றால் இதுவரை இந்த நாட்டின் மீதுதான் அணுகுண்டு வீசப்பட்டுள்ளது. 1941 ஆம் ஆண்டு அமெரிக்காவின் பேர்ல் துறைமுகம் மீது ஏராளமான ஜப்பானிய விமானங்கள் குண்டுத்தாக்குதலை மேற்கொண்டன. இதில் ஆயிரக்கணக்கான அமெரிக்கப் போர்வீரர்கள் கொல்லப்பட்டதோடு, நூற்றுக்கணக்கான போர்க் கப்பல்களும் மூழ்கடிக்கப்பட்டன. இதனால் வெகுண்டெழுந்த அமெரிக்கா, உலகம் அதுவரை கண்டிராத பெரும் தாக்குதல் ஒன்றை ஜப்பான் மீது மேற்கொள்ளத் தீர்மானித்தது. இதன் காரணமாகவே முதன் முதலாக அமெரிக்காவில் அணுகுண்டுகள் தயாரிக்கப்பட்டன. முதலாவது அணுகுண்டுப் பரிசோதனை நியூமெக்ஸிக்கோ பாலைவனத்தில் நடத்தப்பட்டது. இது வெற்றிகரமாக அமைந்ததால் அணுகுண்டுகளை ஏந்திச் செல்லும் வகையில் விமானங்கள் வடிவமைக்கப்பட்டன. 1945ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 6ஆம் திகதி (ஓகஸ்ட் என்றால் ஜப்பானில் கோடைகாலம். வானத்தில், முகில்களைக் காணமுடியாது) அணுகுண்டை ஏந்திக் கொண்டு வந்த அமெரிக்காவின் விமானம் ஜப்பானின் வான் எல்லைக்குள் புகுந்தது. 10அடி நீளமும், ஐந்து தொன் எடையும் கொண்ட அந்த அணுகுண்டு 2,000 தொன் டி.என்.டி. வெடிப்புக்குச் சமனானது. ஹிரோசிமாவில் விமானத்திலிருந்து அணுகுண்டு வீசப்பட்டதும் அது கீழே வீழ்ந்து வெடித்தது. அந்தக் குண்டு வெடித்த மையப் பகுதியில் இருந்து சுமார் ஐந்து கிலோ மீற்றர் சுற்றளவில் இருந்த மனிதர்கள் உட்பட உயிரினங்கள் அனைத்தும் ஒரேநொடியில் எரிந்து சாம்பலானதாகக் கூறப்பட்டது. கட்டடங்கள் யாவும் சிதறிச் சின்னாபின்னமாகின. கடும் வெப்பம் காரணமாக உலோகங்களாலான பொருள்கள் யாவும் உருகி உலோகக் குழம்பு உருவானது. இந்த அணுகுண்டு வெடிப்பில் உடனடியாக உயிரிழந்தவர்கள் சுமார் ஒரு இலட்சம் பேர். அணுக் கதிர் வீச்சால் உடல் எரிந்து, உடல் திசுக்கள், உறுப்புக்கள் பாதிக்கப்பட்டு அடுத்த நாள்கள், வாரங்கள், மாதங்களில் உயிரிழந்தவர்கள் மேலும் ஒருலட்சம் பேர். அடுத்த 10 நாள்களில் நாகசாகியிலும் இன்னொரு அணுகுண்டு வீழ்ந்து வெடித்தது. இதனால் ஏற்பட்ட அழிவுகள் முன்னரைவிட அதிகமானது. ஜப்பான் அமெரிக்காவிடம் சரண் அடைவதற்கும் இதுவே காரணமாகிவிட்டது.



தற்போது அணு ஆயுதங்களைத் தயாரிக்கின்ற தொழில்நுட்பத்தை உலகின் பல நாடுகள் தெரிந்து வைத்திருப்பதாக அஞ்சப்படுகின்றது. இதைவிட அணு ஆயுதங்கள் ஐ.எஸ். போன்ற பயங்கரவாதிகளின் கைகளில் சிக்குமாயின் அதனால் ஏற்படக்கூடிய அழிவுகளை எண்ணிப் பார்க்கவே மனம் அஞ்சுகின்றது.

ஐ.நா.போன்ற உலகின் உயர் நிறுவனங்களின் கருத்துக்களைக் கூடச் சில நாடுகள் உதாசீனம் செய்து வருகின்றன. ஐ.நாவும் இதை வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கின்றது. இலங்கையில் இறுதிப் போரின்போது இடம்பெற்ற அவலங்களையும் ஐ.நா. கண்டு கொள்ளவில்லை. இந்த நிலையில் உலக நாடுகளை அதனால் எவ்வாறு கட்டுப்படுத்தி வைக்க முடியும்? எதிர்காலத்தில் நாடுகளுக்கிடையே போர் இடம்பெறுமாயின், அது அணு ஆயுதங்களைக் கொண்டதாகவே இருக்கப்போகின்றது. அவ்வாறு நடந்து விடுமாயின் இந்த உலகமே அழிந்து போகக்கூடிய பேராபத்து ஏற்பட்டுவிடும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இதைத் தடுப்பதற்கான செயற்றிட்டங்கள் இப்போதே வகுக்கப்படல் வேண்டும் இல்லையேல் உலகின் கதி அதோகதிதான்.

## இன்றைய காலத்தின் அவசியதேவை இது

முன்னைய காலத்தில் இரண்டு பேர் இரகசியமாக ஏதாவது பேச வேண்டியிருந்தால், அருகில் எவராவது தமது பேச்சை ஒட்டுக் கேட்கிறார்களா என்று அவதானித்த பின்னரே பேசிக் கொண்டனர். அதுபோல் ஏதாவதொரு அடாத படுபாதகச் செயலைத் தனித்தொருவர் மற்றவர்கள் அறியாது செய்ய முயன்றாலும், அதே எச்சரிக்கை உணர்வோடு நடந்து கொண்டனர். ஆனால் தப்பித்தவறி வேறொருவரால் இவைகள் கேட்கப்பட்டாலோ அல்லது பார்க்கப்பட்டாலோ அவற்றை எங்குதானும் நிரூபிப்பது மொத்தத்தில் மெத்தச் சிரமமே.

நவின தொழில்நுட்ப வளர்ச்சி சமுதாயத்தைச் சோம்பேறியாக்கியுள்ளதுடன் அநாவசிய சிக்கல்களுக்கும் வழி வகுப்பதாக பொதுவான கருத்து நிலவுகிறது.

ஆனால் அண்மைக்கால எமது வாழ்வியலில் இவை குற்றங்களைத் தடுக்கவோ நிரூபிக்கவோ உதவுகின்றன் என்பதையும் மறுப்பதற்கில்லை.

இளம் சிறுமியொருத்தியை அவளது சிறிய தாயார் கொடுமையான விதத்தில் தாக்கிச் சித்திரவதை செய்த காட்சியைத் தனது அலைபேசிக் கமராமூலம் பதிவு செய்து இளைஞரொருவர் இணையத்தில் உலவவிட்டதால் கொஞ்சம் கூட மனிதாபிமான மற்றதொரு பெண்மணியின் நடத்தைக் கோலம் எமது சமூகத்தின் பார்வைக்குக் கிட்டியது. அதேபோன்று மிக அண்மையில் பொலிஸார் இளைஞரொருவரை நடுவீதியில் வைத்து இரும்புச் சங்கிலியால் தாக்கிக் காயப்படுத்திய காட்சி, அலைபேசியில் பதிவுசெய்யப்பட்டதால் பொலிஸாரின் அடாவடித்தனமான காட்டுமிராண்டித் தனமான நடத்தைக்குச் சாட்சியமாகவும் ஆகியுள்ளது.

அந்த வகையில் நவீன தொழில்நுட்ப வசதிகளை பெறுமதியான வகையில் பயன்படுத்துவதால், சமூக நன்மைக்கு அவை வழிவகுக்கின்றன என்பதையும், அதேசமயம், அவற்றை தமது குறுகிய, குரூர விருப்பங்களை நிறைவேற்றப் பயன்படுத்த முனைவதால் அவை சமூகச் சீர்கேட்டுக்கு வழிவகுக்கின்றன என்பதும் கண்கூடு.

இது குறித்து இன்றைய எமது பெற்றோரும், எதிர்காலச் சிற்பிகளான இளையோரும் சிந்தித்து உரிய வழியில் செயற்பட வேண்டியது இன்றைய காலத்தின் அவசியதேவை.

பூ.ரவீந்திரன்.


## பொறுப்பானவர்கள் கவனம் செலுத்தி உதவுவார்களா?

மன்னார் மாவட்டத்தில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட கிராமங்களில் ஒன்றான பரப்பாங்கண்டல் கிராமத்தில் சிறுக்குளம் என்ற இடத்தில், 2012ஆம் ஆண்டு உள்ளக வீதிபுனரமைப்புச் செய்வதற்காக 'நியாப்' நிறுவனம் நிதி வழங்கியிருந்தது. அதனடிப்படையில் சுமார் ஒரு கிலோ மீற்றர் நீளமான பாதையைச் செப்பனிடும் பணிகளை, பரப்பாங்கண்டல் கிராம அலுவலரும், சிறுக்குளம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரும் முன்னின்று நடத்தி, பன்நெடுங்காலமாக வளர்த்திருந்த பனை மரங்களை ஒப்பந்தகாரரின் உதவியோடு தள்ளி விழுத்தி, அருகிலுள்ளவேலிகளை அகற்றி வேலையை ஆரம்பித்தனர். அன்றிலிருந்து இன்றுவரை எந்தவிதமான மேலதிக முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் சுமார் 15 குடும்பங்கள் பாவிக்க வேண்டிய பாதை பயனற்று மக்கள் பயணிக்க முடியாதநிலையில் உள்ளது. பாடசாலைச் சிறுவர்கள், நோயாளர்கள், வயோதிபர்கள் அருகிலுள்ள அயலவர்களின் வளவுகள் ஊடாக பெரும் சிரமப்பட்டு பயணிக்க வேண்டிய துர்ப்பார்க்கிய நிலை ஏற்பட்டுள்ளது. பொறுப்பெடுத்த நிறுவனமோ, அன்றேல் திட்டம் சமர்ப்பித்த கிராம அபிவிருத்திச் சங்கமோ, பரிந்துரை செய்த கிராம அலுவலரோ இதற்கு பொறுப்பெடுத்து உரிய தீர்வு வழங்குவார்களென எதிர்பார்க்கின்றோம்.

பரப்பாங்கண்டல் மாதர்கிராம
அபிவிருத்திச் சங்கம் சார்பில்- பரதன்.

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

**அன்றைய தலைவர்கள் எவ்வளவு பெருந்தன்மையோடும் தியாக உணர்வோடும் கருத்து வேறுபாடுகள் மத்தியிலும் மற்றவர்களை மதிக்கும் பண்போடு வாழ்ந்தார்கள் என்பது இன்றைய தலைவர்களுக்கு ஒரு நல்ல பாடமாகும்.**



# மகாத்மாவின் சுதந்திரப் பயணம்

எம்.சாந்தன் சத்தியகீர்த்தி

இந்தியதேசத்தின் தந்தை, அகிம்சா மூர்த்தி என்று போற்றப்பட்ட மோகன தாஸ் கரம்சந்த் காந்தி, கபாகாந்தி – புத்திலிபாய் தம்பதியினருக்கு 1869ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இரண்டாம் திகதி மகனாகப் பிறந்தார்.

காந்தி சிறுவயதில் பார்த்த அரிச்சந்திரன் நாடகம் அவருடைய மனதில் உண்மையின் உயர்வை ஆழமாகப் பதித்தது. வயது முதிர்ந்து பார்வையற்றிருந்த பெற்றோரைத் தன் தோளில் சுமந்து சென்ற சிரவண குமாரனின் கதை அவர் மனதில் பெற்றோர் மீதான பெருமதிப்பை விதைத்தது. இளமையில் அவருடைய உணர்வோடு கலந்த இந்தச் சம்பவங்கள் பின்னாளில் அவரின் போதனைகளுக்கும் சாதனைகளுக்கும் அத்திபாரமாக அமைந்தன.

காந்தியின் வாழ்வு புரட்சிகரமானது; உயர் இலட்சியங்களோடு கூடியது. அவருடைய வாழ்வுதான், அவர் இவ்வுலகுக்குச் சொன்ன செய்தியாகவும் அமைகின்றது.


பள்ளிப்படிப்பை முடித்த அவர் இங்கிலாந்து சென்று பரிஸ்டர் பட்டம் பெற்றார். பரிஸ்டர் பட்டம் பெற்றவர் வழக்கறிஞர் பணியாற்றி இன்பவாழ்க்கை வாழ வேண்டிய நிலையில் நாடு சுதந்திரம் பெறவும் மக்கள் நலம் பெறவும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்.

அதனால் உலகம் அவரை 'உலக உத்தமர்' என்றும் 'மகாத்மா' என்றும் போற்றுகின்றது.

தென்னாபிரிக்க இந்தியர்களை ஆங்கிலேயர் துன்புறுத்தியபோது அங்கு சென்ற காந்தியடிகளும் இன்னல்களுக்கு ஆளானார். சிறைத்தண்டனையும் பெற்றார். குஜராத்தில் ரௌலட் சட்டத்தை எதிர்த்தவர். வேலை நிறுத்தத்துக்குத் தலைமை தாங்கியமைக்காகக் கைது செய்யப்படல், உப்பு வரி எதிர்ப்பு, தண்டியாத் திரை கைது செய்யப்படல், தாழ்த்தப்பட்ட மக்களுக்காக உணவுதவிர்ப்பு, 1942 இல் வெள்ளையனே வெளியேறு இயக்கம் சுதந்திரப்போர் தலைமை இவ்வாறு சுமார் 30 ஆண்டுகாலம் சத்தியாக்கிரகம், உணவு தவிர்ப்பு, சிறைவாழ்க்கை மேற்கொண்டவர் காந்தியடிகள்.

அனைத்து மக்களையும் ஒன்றுபடுத்தி அன்பு, தியாகம், சகோதரத்துவம் தனிநபர்ஒழுக்கம் என்ற கொள்கைகளின்படி வாழ்ந்து மேலாதிக்க ஆங்கில ஏகாதிபத்தியத்தை கத்தியின்றிய இரத்தமின்றிய அகிம்சை வழியில் போரிட்டு நல்ல முன்மாதிரியை ஏற்படுத்தியவர் காந்தியடிகள். "வருங்காலத் தலைமுறைகள் இப்படியொரு மனிதர் இவ்வுலகில் வாழ்ந்தாரா? என்று வியப்போடு எண்ணுவர்" என்று அறிவியல் மேதை ஐன்ஸ்டீன் குறிப்பிட்டது உண்மையாகி வருகின்றது.

இந்திய தேசத்தின் கவிப்பேரரசாக விளங்கியவரும் இந்திய தேசிய கீதத்தை எழுதியவருமான ரவீந்திரநாத் தாகவர், காந்தியடிகளோடு பல்வேறு கருத்து வேறுபாடுகளைக் கொண்டிருந்தவர். இருந்தாலும் கூட 'மகாத்மா' என்ற பட்டத்தை அவருக்குக் கொடுத்து மகிழ்ந்தார். அன்றைய தலைவர்கள் எவ்வளவு பெருந்தன்மையோடும் தியாக உணர்வோடும் கருத்து வேறுபாடுகள் மத்தியிலும் மற்றவர்களை மதிக்கும் பண்போடு வாழ்ந்தார்கள் என்பது இன்றைய தலைவர்களுக்கு ஒரு நல்ல பாடமாகும். 1885 இல் தோற்றுவிக்கப்பட்ட இந்திய தேசிய காங்கிரஸ், 1919 இல் காந்தியடிகள் அதற்குத் தலைமை ஏற்கும் வரை அது ஒரு சில கற்றவர் களின் கரங்களில் அடங்கிய ஒரு மிதவாத இயக்கமாகவே இருந்தது. அந்த இயக்கத்தை ஒரு மாபெரும் மக்கள் இயக்கமாக விடுதலைப் போராட்ட இயக்கமாக மாற்றிய பெருமை காந்தியடிகளையே சேரும். காந்தியின் சமகாலத்தவரும் இந்திய விடுதலைப் போரில் தன் பேச்சாலும் எழுத்தாலும் நேரடியாகப் பங்கேற்றவருமான சுப்பிரமணிய பாரதியார் "என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்?" என்று "மடியும் எங்கள் அடிமையின் மோகம்?" என்றெமதன்னை கைவிலங்குகள் போகும்?. என்று உள்ளம் குமுறிப்பாடி மக்களிடையே நாட்டுப் பற்றை ஊட்டினார். மும்பையில் ஒன்று கூடிய காங்கிரஸ் மகா சபையில் 1942 ஒகஸ்ட் 8ஆம் திகதி 'வெள்ளையனே வெளியேறு' என்ற புகழ்மிக்க தீர்மானத்தை நிறைவேற்றினார் காந்தி. செய் அல்லது செத்துமடி என்று இந்தியர்களுக்கு அவர் அறைகூவல் விடுத்தார். தேசத்தந்தை காந்தியடிகளின் தலைமையை ஏற்று நாடு முழுவதும் நூற்றுக் கணக்கான தலைவர்கள் அந்நிய ஆட்சியை எதிர்த்து அறப் போரில் ஈடுபட்டனர். 1947 ஒகஸ்ட் 15 இல் இந்தியாவிற்கு சுதந்திரம் பெற்றுக் கொடுத்தார் அண்ணல் காந்திஜி. அவரது கொடி சத்தியம்; அவரது கேடயம் அகிம்சை. அண்ணல் வழி அறவழி; அதுவே எல்லோர்க்கும் பொதுவிதி.



# சூரியகாந்தி

உதயன்

எச்சரிக்கை



பக். 25



பகிரங்கமடல்
பக். 24



டெங்கு
பக். 30



குற்றம் குற்றமே!
பக். 23



# ஒரு காவோலை சிரிக்கின்றது!

"தினத்தில் மட்டுமல்ல தினமும் மனத்தில் நினையுங்கள்"

■ ந.ஜெயதாஸ்

நரைத்த தலைமுடி, தள்ளாடித் தள்ளாடி நடை கொள்ளும் தளர்ந்த மேனி, பாதத்ததைத் தாங்கிக் கொள்ளும் தேய்ந்த கறுப்புப் பாதணி, பார்வையைத் தெளிவாக்கும் கண்ணாடி, பழுப்பாகியுள்ள வெள்ளை நிற ஆடை. இவை பயன்பாட்டுக்கு ஏற்றவையாக இல்லாவிடினும், பக்குவமாகப் பராமரித்துக் கொள்ளும் மனிதர்களே முதுமையால் அரவணைக்கப்பட்டவர்கள். முதிய மனிதர்களைப் 'பழசுகள்' என்று புறமொதுக்கிக்கொள்ளும் சமூகம், அனுபவத்திலும் அறிவாற்றலிலும் எதிர்காலத்தினருக்கு அவர்கள் எடுத்துக்காட்டானவர்கள் என்பதைப் புரிந்துகொள்வதில்லை. அவ்வாறானவர்களில் ஒருவர்தான் ஆறுமுகம் ஐயா!

மனித வாழ்க்கைப் பருவங்கள் ஒவ்வொன்றும் அற்புதமானவை. குழந்தைப் பருவம், இளமைப் பருவம், முதுமைப்பருவம் என்றவாறு – மனித உயிர் பிறந்து – வளர்ந்து மடிகின்றது. இவற்றைக் கடந்துதான் அனைவரும் செல்ல வேண்டும். இதற்கு எவரும் விதிவிலக்கல்ல.

இந்தப் பருவங்களில் மற்றவர் களில் தங்கியிருப்பன பிறக்கும், இறக்கும் பருவங்களான குழந்தையும் முதுமையுமே. அதிலும் எமது சமூகத்தில் அன்பாக, ஆசையோடு அரவணைக்கப் படுவது குழந்தைப் பருவம் மாத்திரமே. அருவருப்புடனும் கவனத்தில் கொள்ளப்படாததுமான முதுமைப் பருவத்தினரின் நிலையைப் பறைசாற்றிக் கொண்டிருக்கும் முதியோர் இல்லங்களும் அவற்றை நிரப்புகின்ற முதியோர் தொகையும் காலம் செல்லச் செல்லப் பெருகிக் கொண்டேயிருக்கின்றன.

இலங்கையில் 272 முதியோர் இல்லங்கள் உருவாக்கி விடப்பட்டிருக்கின்றன. இது முதியவர்களின் தொகை அதிகரித்துள் ளது என்பதுடன், தத்தமது குடும் பங்களிலிருந்து முதியவர்களைப் புறமொதுக்கும் மனிதம் குறைந்த சமூகம் அதிகரித்து வருவதையும் தெட்டத் தெளிவாக்குகின்றது.

வடமாகாணத்தில் உருவாக்கப்பட்டிருக் கின்ற 15முதியோர் இல்லங்கள் உள்ளடங்கும் கைதடி சாந்தி நிலையம் இலங்கையில் உருவாக்கப்பட்ட முதலாவது அரச முதியோர் இல்லமாகவும் விளங்குவது எமக்குப் பெருமையல்ல. தற்போது ஆண்கள், பெண்கள் உள்ளடங்கலாக 220 முதியவர்களைப் பராமரித்து வரும் இந்த நிலையம், முதியோர் தினத்தை ஒட்டி களைகட்டியிருக்கும் நிகழ்வுகளின் மத்தியில் தனிமையால் காவு கொள்ளப்பட்ட முதியவர் ஒருவரு டன் உரையாடும் வாய்ப்புக் கிடைத்தது.

கடந்த ஏழு வருடங்களாக அங்கே தஞ்சமடைந்திருக்கும் அவருடன் உரையாடியதிலிருந்து தன்னிலையுணர்ந்து நன்கு பக்கு வப்பட்ட உள்ளத்தை அவர் கொண்டிருப்பதை என்னால் உணரமுடிந்தது. தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டவர். சிரித்துக் கொண்டே தனக்கு ஒரு ஆறுதல் கிடைத்தது போன்று "அமர்ந்து பேசுவோமா?" – என்றார்.

84வயதான அவருடைய பெயர் வைரவி ஆறுமுகம். இளவாலையில் பிறந்தவர். வழமை போன்று பிள்ளைகளால் கைவிடப் பட்டிருப்பார் என்றால் அவ்வாறு இல்லை. கைவிடப்பட்டவர்தான் பெற்றபிள்ளையாலல்ல பெறாமகள் ஒருவரால்.

"நானும் மனைவியும் இஞ்ச வந்து 7 வருசமாகுது. அவவின்ர பெயர் புவனேஸ்வரி. ஆனா...அவர் இப்ப இல்ல. அவா இறந்து மூண்டு வருசமாயிற்று. ரெண்டு பேரும் ஒண்டாய்த்தான் வந்து சேர்ந்தனாங்கள். வந்த ரெண்டு மூண்டு வருசத்தால அவாவை நோய் பிடிச்சுக் கொண்டுது. வருத்தத்தோட போராடி, முடியாம அவா இறந்திற்றா. எங்களுக்கு ஒரே ஒரு மகன் தான். நல்ல பண்பான பிள்ளை. சீதனம்வாங்காமல்நல்லகுணமுள்ள பிள்ளையாகத் தேடித் திருமணமும் முடிச்சு வச்சன். வெளிநாட்டில இருக்கிறார்" – என்றார்.

"அவர் உங்களைக் கவனித்துக் கொள்கிறாரா?" என்ற எனது கேள்விக்கு.

"ஓ...ஓ...அவர் மிகவும் நல்லவர். ஒரே ஒரு மகனாதலால் எங்கள் மீது மிகவும் பாசமானவர். அவர் வெளிநாடு சென்ற ஆரம்பத்தில, நானும் மனைவியும் தனித்திருந்தோம். எனக்குக் கடுமையான வருத்தம் (காய்ச்சல்) ஒன்று ஏற்பட்டது. நான் பிழைக்கமாட்டன் என்ற நிலை வந்தது. வருங்காலத்தில மனைவி தனித்துவிடுவார் என்றெண்ணி அப்போது மனைவியைக் கவனித்துக் கொள்ளும் நிலையிலிருந்த மனைவியின் சகோதரியின் மகளுக்கு எங்களது வீடுவளவையும் நகைகளையும் கொடுத்து வைத்தோம். பெறா மகளான அவர் நான் இல்லாதவேளை எனது மனைவியைப் பார்த்துக்கொள்வார் என்று நினைத்திருந்தோம். ஏதோ ஒரு வழியாக எனக்கு வருத்தம் சுகமாயிற்று. ஆனால் மனிசிக்கு வருத்தம் தொடங்கிற்று. எப்போதுமே எங்களைக் கவனித்து வருவார் எண்டு நாங்க நினைச்ச பெறாமகள், ஏலாத மனிசியால தன்ர பிள்ளைகளுக்கு வருத்தம் வரப் போகுது எண்டு புறுபுறுக்கத் தொடங்கீற்றா. பிறகென்ன அவவுக்கு குடுத்தது போச்சுது. அது பற்றி மகனுக்கும் தெரியாது. ரெண்டு பேருமா வெளிக்கிட்டு இஞ்ச வந்து சேர்ந்திட்டம். பிறகு மகனிதை அறிஞ்சதும் இஞ்ச வந்து எங்களைப் பார்த்தார். அவருக்கு ஒரு பெடியனும் ஒரு பெட்டையும் எல்லாருமா வந்தவ. மனிசி இறந்தாப்பிறகு என்னை வரச்சொல்லி ஒரே கேட்கிறார். எனக்கு அங்க போக விருப்பம் இல்ல. என்ர மனிசியும் இங்க தான் இருந்து செத்தது. அதுபோக, அங்கத்தய சுவாத்தியங்கள் எங்களுக்கு ஒத்துவராது. என்னதான் இருந்தாலும் எங்கட ஊர் மாதிரி வராதுதானே என்னவோ தெரியேல்ல எனக்கு அங்கபோக விருப்பமில்லை" என்று கூறிப் பெருமூச்சொன்றை இழுத்துக் கொள்கிறார்.

மறுபடியும் தொடர்ந்தவர் "அதெல்லாம் தருமக் கணக்கு. வரும்போது கொண்டு வருவதும் இல்லை, போகும் போது கொண்டு போவதும் இல்லை. எல்லாருக்கும் இதுதான் நிலை. இஞ்ச தியானம் செய்யத் மண்டபம் இருக்கு, எல்லா வசதிகளும் இருக்கு கடைசிக் காலத்தில ஒருத் தருக்கும் இடைஞ்சலில்லாம இருக்கிறது நல்லம் தானே" என்று சொல்லிக் கொள்கிறார்.

"இங்குள்ளமற்றையமுதியவர்களின் நிலைகள் எப்படி?" என்றேன்.

"இஞ்ச இருக்கிற பெண்கள் பிரிவுகளிலதான் ஏதாவது சின்னச் சின்னப் பிரச்சினைகள் வரும். அதைக் காணேல்ல, இதைக் காணேல்ல, நீ எடுத்துப் போட்ட, அவளெடுத்துப் போட்டாள்... என்ற மாதிரியானவை. அதுவும் அவர்கள் உருவாக்கிக் கொள்றதுதான். ஆண்களுக்குள்ள பிரச்சினைகள் வாறது குறைவு. சாப்பாட்டுக்குப் பிரச்சினை இல்லை. வைத்தியமும் இருக்குது. கோயில் குளம் போகலாம். கடைசி நேரத்தில வந்து அதை, இதைக் குடுத்துப் பார்ப்பம் எண்டு வீட்ட கூட்டிக் கொண்டு போறவையளும் இருக்கினம். அறிவிச்சாலும் வராமலிருந்து இறந்தாப்பிறகு வந்து கொண்டு போற பிள்ளைகளும் இருக்கினம். தாய்மாரைக் கொண்டுவந்து முதி யோர் இல்ல வாசலுக்கு இறக்கிவிட்டிட்டு ஓடுற சில ஆம்பிளப் பிள்ளைகளும் இருக்கினம். ஆனாலும் அந்தத் தாய்மார் மகன்மாரைக் குறைகூற, விட்டுக்கொடுக்கமாட்டார்கள். எல்லாம் மாறிப் போச்சுப் பாருங்கோ.

இப்ப இந்த யாழ்ப்பாணத்தில நடக்கிற அநியாயங்களைவிட இதுகள் ஒண்டும் பெரிய கொடுமையில்ல. மற்றது எங்கட காலம் மாதிரி இப்ப இல்ல. தாய்ப்பால் குடிச்சு வளருற பிள்ளைகள் குறைவு. பைக்கற்றுகளிலயும் பேணிகளிலயும் அடைச்சு வாற மிருகங்களின்ர பாலைக் குடிச்சு வளருற பிள்ளைகளிட்ட இனி மனிசத் தன்மைய எதிர்பார்க்க ஏலாது. இனி இனிக் காலத்தில தாய், தகப்பனைக் கைவிடுற பிள்ளைகள்தான் உருவாகும்.

நான் வந்த காலத்தில இருந்து வர வர இஞ்ச வாறாக்கள் கூடிக் கொண்டு தானிருக்கு. இப்ப கொண்டு வந்து விடுறவையும் இனி இனி இஞ்ச வரப் போறவை தான். அப்ப தான் அம்மா, அப்பாவுக்கு அவை செய்தத உணருவினம். என்ர கடைசிக் காலம் வரைக்கும் நான் இஞ்சதான் இருக்கப் போறன்" – என்கிறார்.

"இஞ்ச யாழ்ப்பாணத்தில கோயில் கோபுரங்கள் உயர்ந்திருக்கே தவிர மனித மனங்கள் உயரவில்லை. என்னைப்பொறுத்தவரை இது அநாதை இல்லமோ அல்லது முதியோர் இல்லமே இல்லை. சாந்தி இல்லம். மன அமைதி மட்டும் கிடைத்தால்போதும். கடைசி நேரத்தில அதைத் தவிர வேற ஒண்டும் மிச்சமில்லை" சிரித்தபடியே அந்த அனுபவ மனிதர் கூறியவை அனைத்தும் யதார்த்தமானவை என்றே எண்ணத் தோன்றுகின்றது.

"இஞ்ச இருக்கிற பெண்கள் பிரிவுகளில தான் ஏதாவது சின்னச் சின்னப் பிரச்சினைகள் வரும். அதைக் காணேல்ல, இதைக் காணேல்ல, நீ எடுத்துப் போட்ட, அவளெடுத்துப் போட்டால்... என்ற மாதிரியானவை. அதுவும் அவர்கள் உருவாக்கிக் கொள்றதுதான். ஆண்களுக் குள்ள பிரச்சினைகள் வாறது குறைவு.









# குற்றம் குற்றமே!

ஸூடோ ஸ்வாமி

விஜித் ரோஹன விஜேமுனி என்கிற நபரை உங்களில் பலருக்கு ஞாபகம் இருக்கலாம். இந்தியப் பிரதமர் ரஜீவ்காந்தி இலங்கைக்கு வந்த போது நடந்த மரியாதை அணிவகுப்பில் அவர் மீது தாக்குதல் நடத்தியவர். கடற்படைவீரரான இவருக்கு 6 ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுப் பின்னர் ஜனாதிபதி பிரேமதாசவினால் பொதுமன்னிப்பளிக்கப்பட்டு இரண்டரை ஆண்டு சிறைவாசம் அனுபவித்து வெளிவந்தவர். பின்னாளில் சிஹல உறுமய கட்சியினூடாக தேர்தலில் போட்டியிட்டவர். கடந்த ஆண்டு தேர்தலில் பொது பலசேனாவில் போட்டியிடுவதற்கு முயற்சித்தவர். ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவிக்கையில் ரஜீவ் காந்தியைக் கொல்லும் நோக்கிலேயே தாம தாக்கியதாகத் தெரிவித்தும் இருந்தார்.

சுனில் ரத்நாயக்க என்னும் சிப்பாய் மீது வழங்கப்பட்ட தீர்ப்பும் அதனை தொடர்ந்த முன்னெடுப்புகளும் கடந்த ஆண்டில் கவனத்தை ஈர்த்த விடயமாகும். 2000ஆம் ஆண்டு மிருசுவில் பகுதியில் 8 பொதுமக்களைக் கொன்று புதைத்த குற்றச்சாட்டில் தூக்குத்தண்டனை வழங்கப்பட்ட குறித்த படையினர்,விடுதலை செய்யப்பட வேண்டும் என்னும் கோசத்துடன் தெற்கில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அதற்குப் பலரின் ஆதரவும் கிடைத்திருந்தது. அண்மையில்கூட தேசிய சுதந்திர முன்னணியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான ஜயந்தசமரவீர, சுனில்ரத்நாயக்கவின் சேவையை கருத்தில் கொண்டு அவருக்குப் பொதுமன்னிப்பு வழங்கப்படவேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தார். குறித்த வழக்கில் ஏற்கெனவே 4 படையினர் போதிய ஆதாரங்கள் இன்மையினால் விடுதலை செய்யப்பட்டுமிருந்தனர். அந்தத் தொடரின் அடுத்த நிலவரமாகத் தற்போது கொலைக்குற்றவாளி ஒருவர் தெற்கில் கதாநாயகன் ஆக்கப்பட்டு வருகின்றார்.

தப்பியோடிய விடுதலைப்புலி சந்தேகநபரை முறை தவறிச் சுட்டுக் கொன்ற மேஜர் ஜெனரல் தரத்திலான ஒருவருக்கு அண்மையில் வழங்கப்பட்ட தீர்ப்பு அவரைக் கதாநாயகனாக்கியிருக்கிறது. விமல் விக்ரமஹேற என்னும் அந்த அதிகாரி 1998ஆம் ஆண்டு பருத்தித்துறை இராணுவ முகாமிலிருந்து தப்பியோட முனைந்த றொபேட் வெலிங்டன் என்பவரைச் சுட்டபோது அவர் இறந்தார். குறித்த விடயம் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதனையடுத்து அந்த வழக்குத் தொடர்பான தீர்ப்பு அண்மையில் வெளியாகி யிருந்தது. அந்தத் தீர்ப்பின்படி, குறித்த படை வீரருக்கு 10 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டாண்டு கடுழீயச் சிறைத் தண்டனை வழங்கியதுடன் இறந்தவரின் நெருங்கிய உறவினர்களுக்கு 2 மில்லியன் ரூபாவினை நஷ்டஈடாக செலுத்துமாறும் உத்தரவிடப்பட்டிருந்தது. கெமுனுவோர்ச் 5ஆவது பட்டாலியனைச் சேர்ந்த விமல் விக்ரமஹேற என்னும் குறித்த நபர் சம்பவம் இடம்பெற்ற காலப்பகுதியில் லெப்டினன்ட் தர நிலையிலிருந்தபோதிலும் 2014இல் அவர் இராணுவத்திலிருந்து ஓய்வு பெறும் பொழுது 7ஆவது கெமுனுவோர்ச் படைப்பிரிவின் அதிகாரி நிலையிலிருந்தே ஓய்வுபெற்றார். குறித்த விவகாரத்தைத் தமது பாடுபொருளாக எடுத்துக்கொண்ட கூட்டு எதிரணி உள்ளிட்ட தெற்கின் சிலதரப்புக்கள், நட்டஈடாக செலுத்தப்படவேண்டிய 2 மில்லியன் ரூபாவினை சேகரிக்கும் முயற்சியில் இறங்கின. கூடவே இது போன்ற நடவடிக்கைகளில் படையினர் குற்றவாளிகளாக்கப்படக் கூடாது என்னும் தொனியிலமைந்த பரப்புரையும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

2 மில்லியன் ரூபா நட்டஈடு சேகரிப்பு கடந்த வியாழக்கிழமையுடன் முடிவடைந்திருக்கிறது. கடந்த வியாழக்கிழமை தெஹிவளை - பெப்பிலியானவிலுள்ள சுனேத்திராதேவி பிரிவெனாவில் இடம்பெற்ற வைபவத்தில் குறித்த பணவைப்புக்கான வங்கிச் சீட்டினை பெல்லன்வில ரஜமகாவிகாரையின் பிரதமதேரர், ஓய்வுபெற்ற இராணுவ மேஜரான விமல் விக்ரமஹேறயிடம் கையளித்திருக்கிறார். எதிர்வரும் 18ஆம் திகதிக்கு முன்னர் பாதிக்கப்பட்ட தரப்பினருக்குப் பணம் கிடைக்கவேண்டும் என உத்தரவிடப்பட்டிருந்த நிலையில், 2.3 மில்லியன் ரூபா மொத்தமாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

மிகுதிப் பணத்தினை ஏனைய படையினரின் தேவைகளைப் பூர்த்தி செய்யப் பயன்படுத் தப் போவதாகவும் விமல் விக்கிரமஹேற குறிப்பிட்டிருக்கிறார். இராணுவ நீதிமன்றத்தினால் மேஜர் விமல் விக்ரமகே குற்றவாளியாகக் காணப்படாதபோதிலும் குறித்த நீதிமன் றத் தீர்ப்புத் தொடர்பில் இராணுவத்தினருக்குச் சார்பாக அரச தரப்போ இராணுவத் தரப்போ தலையிடாது என்று அரசு சார்பில் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவும் இராணுவம் சார்பில் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் றொஷான் செனவிரத்னவினாலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பான சர்வதேச எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் முன்னைய ஆட்சிக்காலத்தில் அரச புலனாய்வுத் துறையில் அங்கம் வகித்த பலர் தற்போது சட்டத்தின் பிடியில் சிக்கிக் கைதாகி இருக்கின்றனர். கடந்த வாரம் தோண்டப்பட்ட சண்டேலீடர் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் இறப்புக்குப் பின்னாலும் காணாமல் ஆக்கப்பட்டதாகக் கருதப்படும் பிரகீத் எக்னெலிகொடவின் நிலவரத்துக்கு பின்னாலும் கைதாகி இருப் பவர்கள் அரச புலனாய்வுத் தரப்பினரே. பிரகீத் எக்னெலி கொடவின் விவகாரத்தில் அரசபுலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த எண்மர் கைது செய்யப்பட்டிருந்தனர். இதனைவிட வேறு உயர்மட்டக் கொலைகளிலும் அரச புலனாய்வுத் தரப்பினரின் வகிபாகம் இருப்பது தொடர்பில் அரசல் புரசலாகப் பேசப் படுகிறது.

கடந்த 15ஆம் திகதி கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்னால் குழுமிய புலனாய்வுப் படைப் பிரிவிலிருந்து கைதாகி உள் ளோரின் உறவினர்கள், அவர்களுக்குப் பிணை வழங்குவதை துரிதப்படுத்துமாறு கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். சர்வதேசம் அழுத்தம் கொடுக்கும் பொறுப்புக்கூறல் பொறிமுறை களுக்குத் தெற்கு ஏன் பின்னடிக்கிறது என்ப தற்கான காரணத்தையும் போர்க்குற்றங்கள் மற்றும் வெளிநாட்டு நீதிபதிகள் தொடர்பான விவகாரங்களுக்கு ஏன் தயக்கம் காண் பிக்கப்படுகிறது என்பதற்குமான பின் னணியைத்தெளிவுபடுத்தும் வகையிலேயே மேற்படி கைதுகளும் நீதிமன்றத் தீர்ப்புக் களும் அமைந்திருக்கின்றன. அதனைவிட நாட்டைக் காத்த படையினரை எந்தக் காரணத்துக்காகவும் குற்றவாளியாக்கக்கூடாது என்கிற மனநிலையின் தொனிப்பும் மேலே கூறிய விவகாரங்களிலிருந்து தெரியவருகிறது. நீதிமன்றத் தீர்ப்புக்களை ஏற்க மறுக்கும் அல்லது விமர்சிக்கும் அல்லது அதற்கு முரண்பாடான மனநிலையைப் பொதுமக்கள் மத்தியில் தோற்றுவிக்கும் போக்கும் அதற்குப் பெருகிவரும் ஆதரவுகளும் படையினர் தொடர்பில் தென்பகுதியில் இருக்கும் நிலைப்பாட்டைக் காண்பிக் கிறது.

நீதி தேவதையின் முன்னால் குற்றவாளிகளாக தீர்ப்பளிக்கப்பட்டவர்களை கதாநாயகனாகச் சித்திரிக்கும் போக்கை மாற்றுவதையும் நல்லிணக்கத்திற்கான பொறிமுறை படிமுறையில் சேர்த்துக்கொள்வதும் காலத்தின் கட்டாயமாக இருக்கிறது. இல்லையேல் படையினரின் தவறுகளுக்காகத் தெற்கில் நிதி திரட்டிவடக்கில் வழங்குவது நல்லிணக்க நடவடிக்கையாகப் பறைசாற்றப்படலாம்.

> “நீதிமன்றத் தீர்ப்புக்களை ஏற்க மறுக்கும் அல்லது விமர்சிக்கும் அல்லது அதற்கு முரண்பாடான மன நிலையை பொதுமக்கள் மத்தியில் தோற்றுவிக்கும் போக்கும் அதற்குப் பெருகிவரும் ஆதரவுகளும் படையினர் தொடர்பில் தென்பகுதியில் இருக்கும் நிலைப்பாட்டைக் காண்பிக்கிறது.”

# தலைநிமிர வேண்டும்...

உலகமெலாம் அதிர்ந்திடவே உரத்து ஓங்கி
ஒலி எழுப்பி வானமது இருளாய்ப் போக
நலங்களெல்லாம் தரும் என்று மக்கள் எண்ண
நாற்றிசையும் மின்னலதால் ஒளி கிளம்ப
வளம் குறைந்து வாடியதாம் பயிர்களெல்லாம்
வரும் மழையால் நாமெல்லாம் உயர்வம் என்றே
பலம் பெருகக் காத்திருக்க பாவி அந்தப்
பாழ் மழையும் இடியோடு நின்று போச்சாம்!

மேகங்கள் தனித்தனியாய் சிதறி நின்றால்
மின்னலொடு இடியன்றி விளைவதென்னே?
பாகங்கள் பிரிப்பமெனும் பழைய காதை
பலர் முன்னே புதுமையென விரித்தே நின்றார்
தாகங்கள் தீர்த்திடவே தனியாய் நின்று
தத்தமது நலம் நோக்கி இளையோர் தம்மில்
வேகங்கள் விளைப்பதனால் பயனும் உண்டோ!
வேறும் ஒரு போர் தொடுத்து அழிதல் அன்றி

எங்களது வீட்டிற்கு எழுக என்றே
இறங்கி அவர் அன்போடு அழைத்தபோது
பங்கமறத் துறவியென பலவும்பேசி
பார் வியக்க வெற்றிதனை அவரால் பெற்றார்
திங்கள் சில முடிதற்கு முன்னே மாறி
திகழ் வீட்டிற்கினி நானே தலைவன் என்று
மங்களத்துப் பெரியர்தமை வெளியே தள்ளும்
மதியினையே எங்ஙனமாய் ரசிக்கலாகும்?

வடக்கிருந்து தமிழரெலாம் வாடிச் சாக
வளமான வாழ்வதனைப் பெற்று நின்று
மடக்கி விரல் சொல்வதற்கு மருந்திற்கேனும்
மாண்பான தியாகம் எதும் செய்திடாது
சடக்கெனவே பதவிதனைப் பெற்று வந்து
சரித்திரங்கள் பேசுகிறார் சரியும் அந்த
அடக்கமிலாப் பெரியாரை என்ன சொல்ல?
அவரோடு நம் இனமும் அழியலாமோ!

வஞ்சனைகள் செய்தாரை வணங்கி நின்று
வரமான தலைவர் இவர் என்றே சொல்லும்
நஞ்சனையார் கருத்தினையும் ஏற்கலாமோ?
நலம் கெட்டு நம்மினமும் தோற்கலாமோ?
மிஞ்சுகிற பேரினத்தை அடக்க நல்ல
மேன்மையுறு உலகு நமை அணையும்போது
விஞ்சு புகழ் கொள்தற்காய் ஒருமையுற்று
விளங்குதலே அறிவுடமை ஒன்றாய்ச் சேர்வோம்.

வார்த்தைகளால் இளையோர்க்கு உணர்ச்சி ஊட்டி
வந்த பயன் அதற்குள்ளே மறக்கலாமோ!
போர் அதனில் புழுவதுவாய்த் தமிழரெல்லாம்
பொசுங்கியது நேற்றேதான் மீண்டும் மீண்டும்
வேர் கருக்க முனைவதுவும் அறிவோ சொல்வீர்?
வேண்டாம் இவ்விளையாட்டு, வீணர் தம்மை
பார் ஒதுக்கச் செய்கின்ற காலம் தன்னில்
பற்பலவாம் பகை பெருக்கி அழிதல் வேண்டா!

போர் அதனால் தமிழினமும் பட்ட துன்பம்
போக்கவென உலகமெலாம் காத்து நிற்க!
ஆர் பெரியர் என்று இவர்கள் அடித்துக் கொள்ளும்
அசிங்கத்தை என் சொல்ல? அறிவில் பங்கம்!
வாருகிற கண்ணீரும் வற்றித்தானே
வருங்காலம் தெரியாது வாழ்வோர் தம்மை
நார் கிடக்க மலர் சிதைக்கும் குரங்காய் நின்று
நம்மவர்கள் சிதைப்பதுவும் நன்றோ! சொல்லீர்

புலி செத்துப் போச்சு இனி எம்மை விட்டால்
புகலிடமும் தமிழர்க்கு எவர்தான் என்று
தெளிவற்ற மதியோடு அறங்கள் மீறி
திமிரோடு சுமந்திரனார், சேர்ந்து நின்றோர்;
வழியற்று காலடிக்கு வருவர் என்றே
வஞ்சனைகள் செய்ததனால், கூடி நின்றோர்
நலிவுற்று மனம் வெம்பி பிறரை ஏற்று
நகன்றதனை உலகறிய நாமும் கண்டோம்.

கூட்டினையே பெயரதனில் மட்டும் வைத்து
குழப்படிகள் செய்ததனால் விளைந்த நாசம்
ஏட்டினிலே உறவிருக்க இதயந்தன்னில்
எழுந்த பெரும் பகையதனால் விளைந்த நாசம்
கூட்டமைப்பு எமதுரிமை என்றே சொல்லி
குறை மதியார் திரிந்ததனால் விளைந்த நாசம்
வீட்டினையே உடைக்கின்ற நிலையைத் தந்து
வேற்றார்கள் புகுதற்கு வழிகாட்டிற்றாம்.

சத்தியமாம் நல் வாழ்வு சேரவேண்டின்
சாற்றுகிற தமிழணங்கு வாழவேண்டின்
புத்தியதால் சம்பந்தம் பொருந்த வேண்டின்
போய் ஒழிந்து விக்கினங்கள் தீர வேண்டின்
நித்தியமாய் பகை ஒழிந்து நிமிர வேண்டின்
நெஞ்சமதில் அன்பதுவும் நிகழவேண்டின்
வித்தையெலாம் விடுத்தேதான் இரண்டு பக்க
வீரியர்கள் பேசட்டும் விளைவு தோன்றும்.

*- கம்பவாரிதி*
*இ.ஜெயராஜ்.*



# பகிரங்கமடல்

**ஸ்ரீலஸ்ரீ.சோமசுந்தர ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், 2ஆவது குரு மகா சன்னிதானம், நல்லை ஆதீனம், நல்லூர்.**

மதிப்பிற்குரிய சுவாமிஜீக்கு வணக்கம்!

யான் தங்களுக்கு இந்தத் திறந்த மடலை எழுதவேண்டியதன் அவசியத்தை தாங்கள் நன்கு புரிவீர்கள் என்றே நம்புகின்றேன். தாங்கள் 24.09.2016இல் நடைபெற்ற தமிழ் மக்கள் பேரவையினரின் எழுக தமிழ் பேரணியில் கலந்து கொண்டமையை எம்மால் நம்பமுடியாதுள்ளது. இந்த நாட்டில் போர் உக்கிரமடைந்த 1983ஆம் ஆண்டில் இருந்து இன்று வரை நாட்டில் முழு அமைதி ஏற்படத் தாங்கள் ஆற்றிவந்த பங்களிப்பு மக்கள் மனங்களில் ஆழப்பதிந்தவை.

1983ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தினர் தமிழ் இளைஞர்களைக் கண்மூடித்தனமாகக் கைது செய்தபோது அதனைத் தடுக்கும் நோக்குடன் தங்கள் தலைமையில் ஓர் இந்துமதக் குழு அமைக்கப் பெற்றது. அந்தக் குழுவில் யாழ்ப்பாணத்துச் சமயப் பிரமுகர்கள் பங்கு கொண்டனர். அந்தக் குழுவில் யானும் இணைந்து செயற்பட்டதை தாங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். தங்கள் தலைமையில் அந்தக் குழு அப்போதைய ஜனாதிபதி, பாதுகாப்பு அமைச்சர். ஆகியோரைச் சந்தித்து அப்பாவி இளைஞர்களைக் கைது செய்வதை நிறுத்துமாறு கோரி ஏற்ற நடவடிக்கைகள் மேற்கொண்டமை இன்றும் பசுமையாகவே உள்ளது.

அவைபோல இந்திய இராணுவ காலம், தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகக் காலம், இலங்கை இராணுவத்தினரின் நடவடிக்கைக் காலம் ஆகியவற்றில் எல்லாம் நாம் துணிந்து சமாதானம் ஏற்படச் செயற்பட்டமையையும், அதனை நிறைவேற்ற இந்துசமயப் பேரவையை அமைத்தமையையும் நாம் ஒருபோதும் மறந்து விடவில்லை.

இறுதிப் போரில் மக்கள் சொல்லொணாத் துன்பத்தில் துவண்ட போது. அனைவரும் வாய்மூடி மௌனிகளாய் இருந்தபோது, நல்லை ஆதீனத்தில் நடத்திய பிரார்த்தனையை எவ்வளவு துன்பத்தின் மத்தியில் நடத்தி அவர்களுக்குப் பொருளுதவி (உணவு, உடை) வழங்கினோம் என்பதை தாங்கள் ஒருகணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இந்த நேரங்களிலெல்லாம் சுகபோகங்களை அனுபவித்துக் கொண்டு வாய்மூடி மௌனிகளாக இருந்த சிலர் ஏற்படவுள்ள நல்ல சூழ்நிலையை குழப்ப ஆலாய்ப் பறக்கின்றனர். அரசியல் நோக்கோடு செயற்படுவோரை வெள்ளையுள்ளம் கொண்ட தங்களால் புரிந்து கொள்வது மிகக் கடினமே. தாங்கள் இப்ரேணியில் பங்குபற்றச் செல்லும் போது ஒருகணம் சிந்தித்து விட்டல்லவா சென்றிருக்க வேண்டும்.

தாங்கள் இப்பேரணியில் பங்கு கொண்டதை தெற்கிலுள்ள கலகொட ஞானசார தேரர் உடன் ஒப்பிடும் போது எமது மனம் வேதனை அடைகிறது. இறு திப் போரில் மக்கள் மடிகின்றபோது அதனைத் தட்டிக் கேட்க முடியாத பத்திரிகையாளர்களும், தலைவர்களும் தங்களை அழைப்பதன் அற்புதம்தான் அற்புதம்.

சரி அதுபோக இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பின் ஆயுதம் ஏந்தக் கூடாது என்ற புனித கொள்கையில் இறுதிவரை நின்று தன் உயிரைத் தியாகம் செய்த திலீபனின் தினத்தை இவர்கள் போற்றியிருந்தால். உலகமே ஈழத்து மக்கள் எத்தகைய துன்பம் வந்தாலும் அவர்கள் ஆன்மிக வாழ்வில் இருந்து விலகமாட்டார்கள் என்பதை ஒரு முறை உணர வைத்திருக்கலாம் அல்லவா? ஆனால் அத்தகைய புனிதமான நாள்களுக்குள் எழுக தமிழ்ப் பேரணியை நடத்தி சிங்கள மக்களுக்குக் கோபமூட்டி நாட்டைக் குழப்பப் பார்க்கிறார்கள். கெடுகுடி சொற்கேளாது என்பது போல் இந்தச் செயல்கள் அமைகின்றன.

இவை ஒருபுறமிருக்க, ஒன்றை மட்டும் நிறைவாகக் கூறுகின்றோம். இந்த மண்ணில் மீண்டும் ஓர் அவலம் உருவாகினால் இந்தப் பேரணி வீரர்கள் எல்லாம் எம்மையும், தங்களையும் விட்டு ஓடி மறைந்து விடுவார்கள் என்பதைத் தாங்கள் அறிந்திருந்தும் தங்கள் தீர்மானம் உறுதிபெறாதிருப்பது கவலை அளிக்கிறது. பௌத்த பீடங்களான அஸ்கிரிய, மல்வத்தை பீடங்கள் இப்படியான செயல்களில் ஈடுபடுவதில்லை (ஞான தேரர் புறநோக்கலாக) அவர்கள் சரியோ பிழையோ ஆலோசனையை மட்டுமே வழங்குவார் கள். அவர்களின் ஆலோசனைப்படி அரசியல் வாதிகள் செயற்படு வார்கள். இங்கோ அரசியல்வாதிகளின் ஆலோசனைப்படி ஆன்மிக வாதிகள் ஆடுகிறார்கள். இந்த நிலை மாறினால் மட்டுமே எமக்கு விடிவு ஏற்படும்.

*அன்புக்குரிய சி.சக்திகிரீவன்*



# எச்சரிக்கை



ந.ஜெயா


கேம்பிரிஜ் பல்கலைக்கழகக் கணிதப் பேராசிரியரான ஸ்ரீபன் ஹாக்கிங் வேற்றுக் கிரக வாசிகள், அண்டவெளியிலுள்ள ஏனைய ஜீவராசிகள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு வரும் திறமை மிக்க மாற்றுத்திறனாளி. இவருடைய முக்கியமான ஆய்வுத்துறைகள் அண்டவியல், வேற்றுக்கிரக வாசிகள் பற்றியதாகவே இருக்கின்றன. வேற்றுக்கிரக வாசிகளைப் பற்றியதான ஆய்வுகளில் அவரால் கண்டறியப்பட்டது அண்டவெளியில் வேற்றுக்கிரகவாசிகள் இருப்பது உண்மையானது, அவை பூமியிலுள்ள மனித இனத்தை அழிக்கும் வல்லமை பெற்றவை, சகல துறைகளிலும் மனிதனிலிருந்து பன் மடங்கு வளர்ச்சி பெற்ற அவற்றின் செயற்றிறன், தொழில்நுட்ப ஆற்றலைச் சிறிதளவும் மனிதனால் எட்ட இயலாது என்பவையாகும். ஆகையால் வேற்றுக்கிரக வாசிகள் தொடர்பில் மனித இனம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்ற கருத்துக்களை அடிக்கடி எழுப்பி வருகின்றார்.



இவ்வாறிருக்க வேற்றுக்கிரகவாசிகளின் நடமாட்டத்தைக் கண்டறியக்கூடிய மிகப் பெரிய தொலைநோக்கி ஒன்றைச் சீனா தயாரித்துள்ளது. இது சீனாவின் தென்மேற்குப் பகுதியில் குயிசு மாகணத்தில் 500மீற்றர் பரப்பளவில் 30தொன் எடை கொண்ட மிகப்பெரிய தொலைநோக்கியாக அமைக்கப்பட்டுள்ளது.

வோசிங்டனில் நடைபெற்ற 'உயிரிணங்கள் வாழத்தக்க சாத்தியமுள்ள வெளிக்கோள்கள் - ஜிலிஸ்832' கலந்துரையாடலிலும் ஸ்ரீபன் ஹக்கிங் 'வேற்றுக்கிரக வாசிகளின் அறிவார்ந்த வாழ்க்கை மனித வாழ்க்கையை அழித்து விடும்' என்று எச்சரித்தார். ஸ்ரீபன் ஹக்கிங்கின் கருத்துப்படி வேற்றுக்கிரக வாசிகள் ஒருபோதும் மனிதர்களுடன் நட்புப் பாராட்டும் வகையில் செயற்படக்கூடியவை அல்ல. அவற்றின் வேலைகூடக் கண்ணில் தென்பட்ட கிரகங்களைக் கைப்பற்றுவதே. கிரகங்களுக்குக் கிரகம் தாவித் திரியும் அவை பிற கிரகங்களிலுள்ள பொருள்களையும் வளங்களையும் பயன்படுத்திக்கொள்ளும் நோக்கம் கொண்டவை. அவற்றுக்கு எல்லை என்று எதுவுமே இல்லை. ஆகையால் பூமி அவை பற்றி எச்சரிக்கையாக இருக்க வேண்டும். வேற்றுக்கிரக வாசிகளை நாம் தொடர்பு கொள்ளக்கூடாது. அவைகளைப் பூமிக்கு அழைத்தால் மனிதர்களுக்கு எதிராகச் செயற்படும். இவ்வாறான காரணங்களால் சூரிய மண்டலத்திலுள்ள நமது இருப்பை வேற்றுக்கிரக வாசிகளுக்குத் தெரியப்படுத்தக்கூடாது என்றும் கூறியிருந்தார்.

ஆனால் தற்போது சீனாவால் அமைக்கப்பட்டிருக்கும் தொலைநோக்கியைப் பற்றி அறிவாற்றலில் மனிதனை மிஞ்சிய வையாகஸ்ரிபன் ஹக்கிங்கால் கூறப்படும் வேற்றுக் கிரகவாசிகள் அறியாமலிருப்பதற்கு வாய்ப்புக்களில்லை. வேற்றுக்கிரகவாசிகளைப் பற்றி ஆராயும் விடயம் அவற்றுக்குத் தெரிய வரும்போது இது வரை பூமி விடயத்தில் அலட்டிக்கொள்ளாமலிருந்த அவற்றின் கண்காணிப்பும் அதிகரிக்கும். ஆகையால் வேற்றுகிரக வாசிகளை அவதானிப்பது மட்டுமன்றி அவற்றால் ஏற்படப்போகும் சாதக, பாதகங்களை அனுபவிக்கவும் மனித இனம் தயாராகிக் கொள்ளவேண்டும்.



# இறவாமல் இன்னமும் நீ!

நீ -
இறந்து விட்டதாகக் கூறுகிறார்கள்.
இறக்கவில்லை யென்றும் கூறுகிறார்கள்.
அழிக்கப்பட்டதாகவும் சொல்கிறார்கள்.
அழியவில்லை யென்றும் சொல்கிறார்கள்.
ஆருக்குத் தெரியும் உண்மையின் இரகசியம்?
ஆயினும்...
நீ -
வாழுகின்றாய் இறவா வரமாய்!
அதை வெளிப்படுத்துகின்றன நிதர்சனங்கள்.
உனது நாமம் இப்பொழுதெல்லாம்
பேரம் பேசப்படுகிறது அரசியல் வியாபாரத்தில்.
முன்னால்
உட்கார்ந்திருப்பவர்களுக்கும்
ஏலம் விடப்படுகின்றது உசுப்பேற்றி.
தமிழ்மக்களின் சுதந்திரத்துக்கான பங்களிப்பில்
சுணை கெட்டுக்கிடந்த
'வெள்ளை வேட்டிகள்' எல்லாம்
தங்களின் தந்திரோபாய அரசியலுக்கு
'தலைவன்' எனும் நாமத்தைத் தாராளமாக்குகின்றன.
களத்தில் 'ஏ.கே.' பிடிக்காத கைகளெல்லாம்
முஷ்டி மடக்கியுயர்த்தி
உன் முகத்தில் குத்துகின்றன மூர்க்கமாக.
தெற்கில் இருப்பவர்க்கெல்லாம்
உனது நாமமே வியாபாரப் பண்டமாகிறது.
அசல் வியாபாரிகள் அவர்கள்.
பிழைக்கத் தெரிந்த பெரும்பான்மையினர்.
யாழ்ப்பாணத்துக்கு றம்புட்டானும்
கொழும்புக்கு கறுத்தக் கொழும்பானும்
வியாபாரத்திற்குப் பொருந்திப் போவதுபோல்
தேர்தல் காலங்களில் தமிழர்களிடம்
வாக்குகளை யாசிக்கும் 'பிச்சை'களுக்கு
வளம் சேர்க்கிறது உன் நாமம்.
இருந்தும்? இறவா வரமாய்...
இறந்தும்.... இருக்கும் நிலையாய்...
மக்களுக்குள்
இன்னமும் நீ வாழ்வதால் தான்
அரசியல் வியாபாரிகளின்
அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாகின்றன .
உதாரணத்துக்கு ஒன்றைக் கூறலாம்!
உன்னைப் போட்டுத்தள்ளியதாகக் கூறப்படும்
பங்கினில் கூட
எழுகின்றது ஓய்வு நிலைகளின் 'புடுங்குப்பாடு'!
நீ -
மறைந்தும் மறையவில்லை!
இறப்பு என்பது முடிவல்ல!
நீளும் காலத்துள் நின்று பேசப்படும் உன் நாமம்!
இது நிச்சயம்! இன்னுமின்னுமாய்...!

- அலெக்ஸ் பரந்தாமன்,
புதுக்குடியிருப்பு.

# 'ஏழு கலைஞர்கள்'

## ஆழ்மனக் கிளர்வின் உருவங்கள்

தமிழர்களின் கடந்த காலங்களை உயிர்ப்பாக்கும் கருத்துப்பரிமாற்ற ஊடாட்டங்களை வெளிப்படுத்தும் கலைவடிவங்கள் எம் சமூகத்திடையே உயிர்ப்பு பெற்றுள்ளன. கடந்த மாதம் 22ஆம் திகதி மக்கள் பார்வைக்காக திறந்து வைக்கப்பட்ட 'ஏழு கலைஞர்கள்' கண்காட்சி நிகழ்வு வலி சுமந்த ஆழ்மனங்களின் கருத்தோவியங்களை சமகாலத்தின் இளம் ஓவிய மாணவர்களின் தூரிகைகளிடை நிஜவடிவமாக தந்திருந்தது.குறிப்பாக மக்களின் சமகால ஓவிய வாசிப்புக்கு விருந்தளிப்பதாக அமைந்திருந்தது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்திரமும் வடிமைப்பும் துறையில் தமது கற்கைநெறியைப் பூர்த்தி செய்த ஓவிய மாணவர்களை உள்ளடக்கிய குழுவின் முயற்சியாக இந்த காட்சிப்படுத்தல்கள் இடம்பெற்றிருந்தன. அந்தத் துறையின் மூத்த விரிவுரையாளர் த. சனாதனனின் ஊக்கப்படுத்தலுடன் மாணவர்களின் ஆர்வம் ஓவியங்களிடை கருத்துருவம் பெற்றிருக்கின்றது. மிகப் பிரதானமாக ஓவியங்கள் தமிழ் மக்கள் கடந்து வந்த போரின் வலிகளை, அவை தந்துவிட்ட மீளாத ரணங்களை தத்ரூபமாக கதையாடியிருக்கின்றன. இவை இன்னும் வளர்க்கப்பட வேண்டியவை.





அவள் விழிகளில் அவன் கனவுகள் அடுக்கி நின்றன. தன் உணர்ச்சிக் கோளாறுகளால் எப்படியெல்லாம் அந்தக் குடும்பத்தைத் துன்புறுத்திவிட்டேன் என்று உள்ளுக்குள் புழுங்கினாள். கணவனிடம் திரும்பிச் செல்ல அவள் வெட்கினாள். எதிரொலியை போல – நாம் எதைப் பிறருக்குக் கொடுக்கிறோமோ, அதுதான் நமக்குத் திருப்பிக் கிடைக்கும் என்பதை அவள் உணர்ந்தாள்.

# வேண்டாமே மணமுறிவு

எஸ்.மல்லிகா

அடிப்படை அன்பு, மனித மனதில் இல்லாமையே அநேக பிரச்சினைகளுக்குக் காரணம். அந்தக் குடும்பத் தலைவியிடமும் அடிப்படை அன்பு இன்மையே இல்லற பூகம்பம் எழக் காரணமாக இருந்தது. அவளது கணவனான ஈழவேந்தன் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) எவ்வளவோ பொறுமை காத்தும், அவளுடைய மனப்பாங்கை மாற்ற முடியவில்லை.

ஈழவேந்தனின் குடும்பம் சத்தியத்திற்குப் பயந்தது. அவன்தான் அந்த அழகான குடும்பத்தின் தலைப்பிள்ளை. இரு தங்கைகள், இரு தம்பிகள் என அனைவரையும் படிக்கவைத்து நன்னிலையில் வாழ வைத்த அவனுக்கு மனையாள் வாய்க்கவில்லை. கூட்டுக்குடும்பமாக இருந்த அவனுடைய சகோதரர்கள் அனைவரும், அண்ணியின் அடாவடி தாங்க முடியாது தனிக்குடித்தனம் சென்றுவிட்டனர். தற்போது அந்தப் பெரு வீட்டில் ஈழவேந்தன் குடும்பமும் பெற்றோர்களுமே எஞ்சியுள்ளனர்.

தினமும் ஏதாவது ஒரு நொண்டிச் சாட்டை வைத்துக்கொண்டு அந்த வீட்டை ரணகளம் ஆக்குவாள் ஈழவேந்தனின் மனைவி. மாமியாரைத் திட்டுவது, மாமனாரை வம்புக் கிழுப்பது, கணவனிடம் வசை பாடுவது, பிள்ளைகளை அடிப்பது என அந்தச் சண்டை நாள் முழுவதும்கூடச் சிலவேளைகளில் தொடரும். அந்த வீட்டிற்கு உற்றார் உறவினர் எவருமே இப்போது செல்வதில்லை. அயலும் அவர்கள் விடயத்தில் மௌனித்து விட்டது. காரணம் ஈழவேந்தனின் மனைவி.

“உன் சாந்த குணத்துக்கு இப்படி ஒரு இராட்சசியா வாய்க்க வேண்டும்? உன் நிலையைப் பார்க்க எங்களால் முடியவில்லையடா” என்று ஈழவேந்தனிடம் தந்தை கூறிப் புலம்புவார். “நாங்கள் கண் மூடினதும், இவள் உன்னை இன்னும் என்ன பாடு படுத்தப்போகிறாளோ தெரியாது. ஏன்டா உனக்கு மட்டும் இப்படி நடக்குது?” என்று பதிலுக்குத் தாயார் அரற்றுவார். அவன் மீதான பெற்றோரின் பாசம் அது.

எதற்கெடுத்தாலும் உணர்ச்சிவசப்படுவதும், கூச்சலிட்டுச் சண்டை போடுவதும் என அந்த வீட்டு மருமகளின் லீலைகள் அரங்கேறின. ஈற்றில் அவளைக் குடும்பநல ஆலோசனைக்கு அழைத்துச் சென்றனர். அங்கே, “என் குடும்பத்திற்கு நடுவே மாமன், மாமி இருப்பது தடையாக உள்ளது. என் கணவனின் உழைப்பில் ஒரு ரூபாகூட அவர்களுக்குக் கொடுப்பது எனக்குப் பிடிக்கவில்லை. அதுதான் சண்டைக்குக் காரணம்” என்று கூறினாள் அவள். இதனைக் கேட்ட ஈழவேந்தன், “உனக்காக நான் பல வருடங்கள் பொறுமை காத்தது போதும். என் பெற்றோரை எப்போது நீ பாரமாக நினைத்தாயோ அப்போதே உனக்கும் எனக்குமான உறவு முறிந்துவிட்டது. இனி நாம் சேர்ந்து வாழ முடியாது. நான் விவாகரத்து எடுக்கப்போகின்றேன்” என்று கூறிவிட்டுச் சென்றான். தன் முடிவைப் பெற்றோரிடமும் அவன் கூறினான். உன் விருப்பமே எங்கள் விருப்பமும் என்று அவர்கள் பதில் கூறிவிட்டனர்.

அவளுடைய பிரச்சினை பெருத்து வலுத்து மன்று வரை சென்றது. இருவரும் ஒருமனதாகப் பிரிகின்றோம் என்று கூறி, அவர்கள் ஆளுக்கொரு திசையில் பிரிந்து சென்றனர். பிள்ளைகள் தந்தையிடம் சென்றுவிட்டனர். தாய் வீடு சென்ற அவள், காலம் செல்லச் செல்ல தனக்கு வாய்த்த வாழ்க்கையையும் தான் வாழ்ந்த தருணங்களையும் மீட்டிப் பார்த்தாள். அவள் விழிகளில் அவன் கனவுகள் அடுக்கி நின்றன. தன் உணர்ச்சிக் கோளாறுகளால் எப்படியெல்லாம் அந்தக் குடும்பத்தைத் துன்புறுத்திவிட்டேன் என்று உள்ளுக்குள் புழுங்கினாள். கணவனிடம் திரும்பிச் செல்ல அவள் வெட்கினாள். எதிரொலியைப் போல – நாம் எதைப் பிறருக்குக் கொடுக்கிறோமோ, அதுதான் நமக்குத் திருப்பிக் கிடைக்கும் என்பதை அவள் உணர்ந்தாள். தன்னை உணர்ந்தவள், தனக்குக் கொடுக்கும் தண்டனையாக அவன் நினைவோடு வாழத் தொடங்கினாள்.



# தா(ய)கம்

(கடந்த வாரத் தொடர்ச்சி...)
சேலைகளும் துணிகளும் நிறைந்த
படுக்கைக்குள்ளிருந்து எழுந்தவள்
தலைமாட்டுக்குள்ளிருந்த லாம்பைத் தூண்டி
குசினியை நோட்டமிடுகிறாள்.
வரியப்பட்டிருந்த மட்டை நீக்கலிடையே
மெல்ல நகர்கிறது கரிய பூனை ஒன்று.
படலையைச் சாத்திவிட்டுத் திண்ணையில்
லாம்பை வைத்தவள், கிழக்கே எழுவது
விடிவெள்ளி என்பதை உண்ர்ந்து
அடுப்படிக்குள் நுழைந்து சாம்பலுக்குள்
புதைந்திருந்த கரித்துண்டுகளை எடுத்துச்
சப்பியபடி வெளியே வந்து பல்லைத் தீட்டி
வாயைக் கொப்பளித்துக் கொள்கிறாள்.

பாத்திரங்களைத் தயார் செய்கின்றாள்.
பக்கத்து வீட்டிலும் வாங்கிக் கொள்கிறாள்.
இதுவரை வீடுவராத உறவினர் சிலர்
படை எடுக்க ஆரம்பிக்கின்றனர். அயலாரும்
வந்து விட, ஆரம்பிக்கின்றது சமையல் சமாச்சாரம்.

மகனுக்குப் பிடித்த அந்தக் கிராம வாசம்தரும்
உணவு 'கோழிப்புக்கை'
பச்சை அரிசியுடன் ஊர்க்கோழி இறைச்சியைச்
சேர்த்து வேகவைத்து, நிறைந்த
பச்சை மிளகாய் வெங்காயத்துடன்
உப்பு, புளி, தூள், பால் இட்டுப் பதமாக்கி
தேசிப்புளி விட்டு இறக்கினால் சூட்டோடு
உண்ணச் சுவையோடு பலம் தரும் உணவு.
தன்னினத்திற்காய்ப் போராடும் வீரப்புதல்வனுக்குத்
தாய் தரும் இன்னும் பல உணவுகள் பக்கபலமாய்.

நிறைந்த ஊரவர்களுடன் விடிந்தது பொழுது.
வழமையாக அவன் வரும் பாதை
இவ்வளவு நேரமாகியும் வெறிச்சோடிக்
காணப்படுகின்றது.
ஆனாலும் தெரிகின்றன தூரத்தில் வரிந்த
ஆடைகளின்
கம்பீரத் தோற்றங்கள். அவள் மனம் மகனைத்
தேடுகின்றது. அருகே வர... வர... உருவங்களின்
சாயல்களில் மகனின் தோற்றம் சிறிதும் இல்லை.
அருகே வந்தவர்கள் 'அம்மா...' என்று
அரவணைத்துக் கொள்கிறார்கள்.
காதருகே ஒருவன்
"கருவண்ணண் அண்ணா வீரச்சாவு" என்கிறான்.
மகனைக் காணும் பூரிப்பிலிருந்தவள்
இடி வீழ்ந்து சரிகின்றாள்.
வியாழமாச்சியின் விழிகள் அழுகின்றன.
மனம், தாகத்தோடு தனயன் உறங்குவதை
உணர்ந்து கொள்ள,
அவள் த்னிமரமாகின்றாள்.
தன்னினத்துக்காக உயிர்துறந்த வீரத் தமிழனின் தாய்
கோவில்களில் கச்சான் கடலை விற்று,
இன்று அன்னதானமட வாசல்களில்
அநாதையாகியுள்ளாள்.

– ந.தாஸ்



# கேலியும் கிண்டலும் வேண்டாமே!

பிரிட்டனைச் சேர்ந்த 26 வயதுடைய லாரா ஒயிட்பீல்ட் 4 அடி உயரமும், 37 வயதுடைய நாதன் பிலிப்ஸ் 3 அடி உயரமும் கொண்டவர்கள். இருவரும் 'ஸ்நோ ஒயிட்' திரைப்படத்தில் குள்ளர்களாக நடித்தபோது நண்பர்களாகினர். நட்பு, காதலானது. லாராவின் பெற்றோரிடம் திருமணம் செய்துகொள்ள அனுமதி கேட்டார் பிலிப்ஸ். அனுமதி கிடைத்தது. திருமணம் செய்துகொண்டனர். "நாங்கள் இருவருமே வெவ்வேறு வகையான வளர்ச்சிக் குறைபாடுகளால் பாதிக்கப்பட்டிருக்கிறோம். அதனால் குழந்தை பெற்றுக்கொள்ளக்கூடாது என்று நினைத்திருந் தோம். ஆனால் குழந்தை உண்டாகிவிட்டது. கருவைக் கலைத்துவிடும்படி மருத்துவர்கள் ஆலோசனை வழங்கினார் கள். ஆனால் எங்களுக்கு மனம் வரவில்லை. மன உறுதியுடன் குழந்தை பெற்றுக்கொள்ள முடிவெடுத்தோம்" என்கின்றனர் தமது கடந்த வாழ்க்கை பற்றி. "ஆனாலும் நாங்கள் எதிர் பார்த்தது போல எங்களைப் போலவே, ஒரு ஆண் குழந்தை பிறந்தது. சில வாரங்கள் மட்டுமே உயிருடன் இருக்கும் என்று மருத்துவர்கள் கூறிவிட்டனர். குழந்தை இருக்கும்வரை நன்றாகக் கவனித்துக்கொள்ளவேண்டும் என்று முடிவு செய்தோம். இப்போது எங்கள் மகனுக்கு இரண்டரை வயதாகிவிட்டது. மருத்துவர்களால் நம்பவே முடியவில்லை! நாங்கள் திருமணம் செய்ததை யாருக்கும் தெரியப்படுத்தவில்லை. இப்போது அனைவரும் அறிந்து கொள் ளத் திருமணம் செய்துகொள்ள முடிவெடுத்தோம். நெருங்கிய உறவினர் கள், நண்பர்களை அழைத்தோம். எங்கள் அருமை மகன் மோதிரம் எடுத் துக் கொடுத்தான். எங்கள் வாழ்க்கையில் அற்புதமான நாளாக அது அமைந் தது. எங்களைப்போலவளர்ச்சிக் குறைவால் பாதிக்கப்பட்டவர்களும்குழந்தையை ஆரோக்கியமாக வளர்க்க முடியும் என்பதற்கு நாங்களே சாட்சி. உயரம் மட் டும்தான் எங்களுக்குக் குறைவு. மற்றபடி சக மனிதர்களைப் போல எங்களுக்கும் மென்மையான மனம் உண்டு. அதில் அன்பு, காதல், வலி, கருணை எல்லாம் நிறைந்திருக்கிறது. நீங்கள் எங்களை அரவணைக்க வேண்டாம். கேலியாகப் பார்க்காமல் இருந்தால் போதும். நாங்கள் தன்னம் பிக்கையுடன் எங்கள் வாழ்க்கையை வாழ்ந்து கொள்வோம்" என்கிறார்கள் இன்று. எங்கள் சமூகத்தை நன்கு அறிந்த அந்தத் தம்பதியினர்.



# சிபிச்சக்கரவர்த்தி

நல்லூரின் வடக்கு வீதியில் அவன் எரிந்து கொண்டிருந்தான்.
மெழுகுவர்த்தி தன் தலைமேல் ஒரு சுடரேந்தி
தன்னையே எரித்து அழிவது போல,
அவனும் தன்னை அழித்து தீயிடை உருகிக் கொண்டிருந்தான்.

அழிவற்ற ஜோதியாக அவன் வல்லமை
தேசம் எங்கும் பரவிக் கொண்டிருந்தது.
அவன் ஆன்மா நாட்டையே ஆகர்ஷித்துக் கொண்டிருந்தது.
அடக்கு முறைக்கெதிரான முதல் தமிழ் புரட்சிக்காரன்.
வீரன் முருகன் சாட்சியாய் வீற்றிருக்க,
பார்த்தீபன் அகிம்சை எனும் நாணேற்றி
விடுதலைக்காய் விரதம் பூண்டு விட்டிருந்தான்.

உலகின் ஐந்தாவது வல்லரசு என்றும்
அகிம்சையின் நதி மூலம் என்றும்
மார்தட்டிக் கொள்ளும் இமயத்தின் முகடுகளை
தன் சாத்வீக போரால் ஒவ்வொன்றாக
உடைத்துக் கொண்டிருந்தான். பாரதத்தின் ஆட்சி நெறி தவறிய
செயலுக்கெதிராக திலீபன் போராடிக் கொண்டிருந்தான்.
"ஆகக் குறைந்தது வாழ்வதற்கு ஐந்து வீடாவது தாருங்கள்"
பாண்டவர்கள் கேட்டார்கள்; துரியோதனன் வழங்க மறுத்தான்;
குருசேத்திரப் போர் வெடித்தது. "தமிழர்கள் வாழ்வதற்காய்
ஐந்து அம்சக் கோரிக்கைகளையாவது
நிறைவேற்றித்தாருங்கள்" பார்த்தீபன் கேட்டான்;
மறுத்தது இந்திய அரசு. அறையப்பட்டான் திலீபன் சிலுவையில்
மரித்த மறுநாளே தமிழர் மனங்களில் எல்லாம்
நெருப்பென மீண்டும் உயிர்த்தெழுந்தான்.
யூதர்களின் ஆன்ம விடுதலைக்காக இயேசு சிலுவை சுமந்தார்
உலகின் கொடூரமான இறப்பு இயேசுவுடையது
அகிம்சைப் போராட்டத்தில் வீழ்ந்த முதல் உயிர் இழப்பு அது!
தன் இனத்தின் விமோசனத்திற்காக
அவர் முட்கிரீடம் சூடி கல்வாரிமலை மீதேறி உயிர் துறந்து போனார்
தமிழரின் வாழ்வுரிமைப் போர் மரபிலும்
பன்னிரண்டாம் நாள் திலீபன் மரித்துப் போனான்.
எவரும் உடைக்க முடியாத தமிழர் மன உறுதியின்
அடையாளமாக அவன் வடிவமெடுத்துக் கொண்டான்.
பூக்களையும் இலைகளையும் விட 'வேர்' நோக்கத்தால்
எப்போதும் உயர்ந்தது. ஆயுள் அதிகமானது.
பூக்களும் இலைகளும் நாள்களில் உதிர்ந்து தீரும்
அவற்றின் நோக்கமும் எல்லைக்குட்பட்டது.
ஆனால் இவன் வேராக வாழ்பவன்
என்றும் உற்றுழிந்து தீராத தமிழர் விடுதலைத் தாகத்துக்காய்
பலியான ஆன்ம சிரஞ்சீவி!

மேடையருகே இருந்த வேம்பிலிருந்து உதிர்ந்த பூவொன்று
திலீபன் பாதங்களில் வீழ்ந்தது; அழிவற்ற எம் ஆன்மிக வேர் மீது
வேம்பு பூச்சொரிந்து கண்ணீர்மல்க பிரார்த்தனை செய்தது.

– துரோணா

காலைப்பனியிறங்கி
படிகிறது முகத்தில். பூக்களில்
மகரந்தம் தேடும் வண்டுகளோடு பறக்கிறேன்.

முற்றத்து மல்லிகையோடு
புன்னகைக்கிறேன்.
இலைகளைத் தழுவும் கைகளில் ஈரம்...

வண்ணத்துப் பூச்சியின் வடிவில்
வட்டமடிக்கும் மனதை...
சுண்டியிழுக்கிறது சுடரும் சூரியன்.

காற்றினை இழுத்து,
நன்றாக முகர்ந்து
கிழக்கின் வெளிகளில் மிதக்கிறேன்.

அணிலோடு விளையாட
இந்த அதிகாலைப் பொழுதில்
தோழிகளோடு புறப்படுகிறேன்.

"சர்மி எழும்புங்கோ
ரியூசனுக்கு
போக வேணும்"
அம்மாவின் குரல்
என்காலைக் கனவை கலைக்கிறது.

விழிகளை விரிக்கிறேன்
என்னைச்சுற்றி
எண்சட்டமும், டீன்ஸ் குற்றிகளும்,
வினாவிடைத் தொகுப்புக்களும்,
நிறைந்து கிடக்கிறது.

எதிரே தெரியும் வைற் போட்டை
அழிக்கிறாள் அம்மா...
என் காலைக்கனவுபோல் அழிகிறது
நேற்றைய வீட்டுக்கணக்கு.

– வேலணையூர் தாஸ்



# பிஞ்சுக் கனவுகள்




# தொடரி

## ஆங்கிலப் பாணியில் தோல்வி

கட்டுப்பாட்டை இழந்து ஓடும் ரயிலில் நடக்கும் ஒரு காதல் பயணமே தொடரி. ஆங்கிலப் படங்களின் அம்சங்களைத் தமிழில் வெளிப்படுத்த முற்பட்டிருக்கிறார் இயக்குநர்.

டெல்லியில் இருந்து சென்னைக்குச் செல்லும் ரயிலிலுள்ள சிற்றுண்டிச் சாலையில் வேலை செய்யும் ஊழியர், பூச்சியப்பன் (தனுஷ்). அதே ரயிலில் பயணிக்கும் நடிகை ஷாவின் (பூஜா ஜாவேரி) ஒப்பனை உதவியாளர் சரோஜா (கீர்த்தி சுரேஷ்). முதல் பார்வையிலேயே கீர்த்தியின் மீது காதலைப் படர விடுகிறார் தனுஷ். ஆரம்பத்தில் பிடி கொடுக்காத கீர்த்தி ஒரு கட்டத்தில் மனம் மாறுகிறார். அதே ரயிலில் மத்திய அமைச்சர் ராதாரவி பயணிக்கிறார். ரயில் ஓட்டுநர் ஆர்.வி.உதயகுமாருக்கும், உதவியாளர் போஸ் வெங்கட்டுக்கும் மோதல் ஏற்படுகிறது. அதன் பிறகு ரயில் மிகப் பெரிய ஆபத்தை எதிர்கொள்கிறது. அந்த ஆபத்து என்ன? தனுஷ், கீர்த்தி காதல் என்ன ஆனது? பயணிகளின் நிலை என்ன?

பயணிகளுக்கு இணையாகப் பார்வையாளர்களுக்கும் அந்தப் பதற்றத்தைக் கடத்துவதில் இயக்குநர் பிரபு சாலமன் ஓரளவு வெற்றி பெற்றிருக்கிறார். ஆனால், இந்தப் புள்ளியை எட்டுவதற்கு முன்னருள்ள 45 நிமிடங்கள் கடுமையான அலுப்பை ஏற்படுத்திவிடுகின்றன.




காதல், ஒரேவிதமான நகைச்சுவை ஆகியவற்றுக்காகத் தேவைக்கும் மிக அதிகமான நேரம் செலவாகி இருக்கிறது. அமைச்சரின் பாதுகாப்பு அதிகாரிக்கும் தனுஷுக்கும் இடையே ஏற்படும் மோதல் முதலில் சுவாரஸ்யம் சேர்த்தாலும், போகப் போக அது வேடிக்கை ஆகிவிடுகிறது.

ரயில் தன் கட்டுப்பாட்டை இழந்து ஓடத் தொடங்கிய பிறகு, அந்த ரயிலுக்கு வெளியே இருப்பவர்களைக் குழப்பியடிக்கும் திருப்பங்கள் பொருத்தமாகவே அமைந்திருக்கின்றன. நெருக்கடியை அமைச்சர் அணுகும் விதம், ஊடகங்களை எதிர்கொள்ளும் விதம், பயணிகளின் பதற்றம், நிர்வாகத்தினரின் சொதப்பல் கலந்த முயற்சிகள் ஆகியவை சித்திரிக்கப்பட்டுள்ள விதம் படத்தின் இழுவையைக் கொஞ்சம் குறைக்கிறது.

உயிர் போகிற அபாயத்துக்கு நடுவே, ஆளுக்கு ஆள் நடத்தும் நகைச்சுவைக் கூத்துக்கள் பெரிதும் எரிச்சலையே ஏற்படுத்துகின்றன. பயணிகளைக் காப்பாற்றுவதில் நாயகன் முக்கிய பங்காற்றுவார் என்பது தெரிந்ததுதான் என்றாலும் ஹீரோத்தனத்தை மட்டுப்படுத்தியிருப்பது ஆறுதல்.

தீவிரவாதிகள் இல்லை என்று தெரிந்த பிறகு மீட்புப் பணியில் அரசின் நடவடிக்கையைச் சித்திரித்த விதம் தலையைச் சுற்றவைக்கிறது. ஹெலிகாப்டர் தனது வேலையைச் செய்துவிட்டு, செய்வதறியாமல் வானத்தில் சும்மா சுற்றிக் கொண்டிருக்கிறது.

போதாக்குறைக்கு தறிகெட்டு ஓடும் ரயிலை இயக்கும் எரிபொருள் நிரப்பப்பட்ட இயந்திரப் பெட்டிக்கு மேல் நின்றுகொண்டு தனுஷ் ஆடுகிறார், பாடுகிறார். இயக்குநருக்கு இவ்வளவு நகைச்சுவை உணர்வு கூடாது! அதுவும்போக, உதட்டசைவுகள் மூலம் அடிக்கடி - சத்தமின்றி உதிர்க்கப்படும் தகாத வார்த்தைகள் தேவைதானா?

ரயில் நிலைய அதிகாரிகளின் உரையாடல்கள், அமைச்சரின் பேச்சுக்கள் ஆகியவை யதார்த்தம். காட்சி ஊடகங்கள் குறித்த கேலிகள் மிகையானதாக இருந்தாலும், ஆங்காங்கே கைதட்டல் வாங்கவும் செய்கிறது.

அதிகமான சவால் எதுவும் இல்லாத வேடத்திலும் தனுஷ் பக்குவமான நடிப்பைத் தந்திருக்கிறார். தம்பி ராமய்யா, கருணாகரன் ஆகியோர் நகைச்சுவையில் ஈடுபாடு காட்டி இருக்கிறார்கள். வெள்ளந்திப் பெண்ணாக கீர்த்தி சுரேஷின் நடிப்பு கொஞ்சம் கச்சிதம்... கொஞ்சம் அளவுக்கு மிஞ்சியும் விடுகிறது. ராதாரவியின் அலட்டிக்கொள்ளாத நடிப்பு சிறப்பு.

பின்னணி இசையில் கவனம் ஈர்க்கிறார் இமான். கடைசிப் பாடல் மட்டும் மனதில் தங்குகிறது. வி.மகேந்திரனின் ஒளிப்பதிவு பதற்றத்தைக் கூட்ட துணைபுரிகிறது. அதையும் தாண்டி தெட்டத் தெளிவாகத் தெரிவது கிராபிக்ஸ் வேலை!

ரயில் கட்டுப்பாட்டை இழந்த பிறகு தான் இயக்குநருக்குப் படத்தின் மீது கட்டுப்பாடு வருகிறது. அதன் பிறகேனும் திரைக்கதை வண்டியைத் தடம் மாறாமல் செலுத்தியிருக்கலாம். நிறுத்த முடியாத வண்டியின் வேகத்தை ஆங்கிலப் பாணியில் காட்ட நினைத்தவர், ஆங்கிலத்துக்கான தர்க்க நியாயங்களிலும் கவனம் செலுத்தி இருக்க வேண்டாமா? தான் சொல்ல வந்த விடயத்தை வெளிப்படுத்துவதில் வெற்றி கண்டிருக்கிறாரா? இல்லையா? என்பதை விட, ஆங்கில சினிமாவை எட்டும் அளவுக்குத் தமிழ் சினிமா இன்னும் விருத்தி கொள்ளவில்லை என்பதை மட்டும் தெளிவாகக் கூறுகின்றது தொடரி.

## (அ)நாகரிக நர்த்தனங்கள்

நசிபடும் பயணங்களில்
(அ)நாகரிகச் செயல்கள்.
மார்போடொட்டித் தனங்களைத்
தடவிச் சிற்றின்பங் காணும்
கண்றாவிக் கூட்டம்.

முதியோரைக் கண்டதும்
இருக்கையை இறுகப்பற்றி,
தலைதிருப்பி வெட்ட வெளிகளை
விடுப்பாய்ப் பார்த்து

வெகுளிவித்தை காட்டிச்
சினப்போர் கூட்டம்.

பிடிக்கும் கம்பிகளுடன்...
நளின நங்கையின்
கைகளும் கைபேசியும்
பின்னிப்பிணைந்த காமக் கூட்டம்.

காதலர் கூட்டம்...
நண்பர்கள் கூட்டம்...
இடையிடையே வந்துபோகும்
உறவினர் கூட்டம்...
இன்னும் ஏராளம், கூடுவோர்
கூட்டங்கள் தொடர்கின்றன.
நெடுஞ்சாலைப் பயணங்களில்!





# நானும் அன்றைய பொழுதும்

உனக்காக பரமேஸ்வராச்
சந்தியின் பஸ் தரிப்பில்
காத்திருக்கின்றேன்
சனிக்கிழமைக்கான
என் ஊரை நிராகரித்து விட்டு.
முந்தைய பஸ் தரிப்பிலேயே
இறங்கிக் கொண்டதாய்
கைத்தொலைபேசியில்
அழைத்துச் சொல்கின்றாய்
பஸ் தரிப்பிட இருக்கையிலே
கண்கள் காத்திருக்க
அமர்ந்திருக்கிறேன்
நீ வந்த பஸ்
என் மனதின் மீது ஏறி
ஊர்ந்து ஊர்ந்து பயணிக்கிறது
யாதொன்றும் தோன்றாமல்
என் மீது படியும் இருளை
அனுமதித்து அமர்ந்திருக்கின்றேன்
கொஞ்சம் கொஞ்சமாய்
ஆக்கிரமிக்கும் இரவில்
பகலைப் போலவே
நான் தொலைந்து போய்விட்டேன்
ஆனாலும் நான் தொடர்ந்தும்
காத்திருக்கின்றேன்

ஆ.முல்லைதிவ்யன்

ஜெ.றியா

தமிழர்களின் ஒற்றுமை எத்தகையது என்பதைப் பறைசாற்றிச் சென்றுள்ளது முப்பது வருடகாலம் நீடித்த விடுதலைப் போராட்டத்தின் முடிவு. இந்த முடிவிலிருந்து கூடப் படிப்பினை பெறாத ஜென்மங்கள் சில, மக்களோடு மக்களாக இருப்பது அறியாமையே! துரோகியாகி எதிரியிடம் வயிறு வளர்ப்பவர்களும், மக்கள், மாநிலம் என்று கொடி தூக்கி அநியாயம் செய்தவர்களும், அதற்கு வால் பிடித்தவர்களும், தாம் செய்த அட்டூழியங்களின் பழி, பாவங்களால் பின்தள்ளப்பட்ட காலமதில், முன்னிலை பெற வெட்கமில்லாமல் பார்க்கும் வெளிப்படையான நடை பயணம்தனில், இருக்கும் வஞ்சகங்கள் எதையுமறியாமல் தங்களின் இழப்புகளைக் காட்டி உசுப்பேற்றப்பட்ட ஒருவகைத் தமிழினமும் இணைந்து கொள்வது கவலைதான். இருப்பினும், தெற்கிலும் வடக்கிலும் நடந்தேறும் நடைபயணாங்கள்... ஏட்டிக்குப் போட்டியாக இருந்தால் இன்னும் சுவை சேர்க்கும். ஆனா லும் இதன் போலித் தன்மையில் கொஞ்சம் விறுவிறுப்பு இருந்தாலன்றி, தெற்குடன் மோதும் வடக்கின் நடைபயணம் போட்டித் தகுதியை இழந்து விடும்.

## ஏட்டிக்குப் போட்டி





# ஆண்டவன் கட்டளை

## சமூகத்துக்கான கட்டளை

கடன் தொல்லை தாங்க முடியாமல் மதுரைக்கு அருகேயுள்ள கிராமம் ஒன்றிலிருந்து நண்பன் பாண்டியுடன் (யோகி பாபு) சென்னைக்கு வருகிறார் காந்தி (விஜய் சேதுபதி. சுற்றுலா நுழைவிசைவில் லண்டனுக்குப் போய், அங்கே வேறு அடையாளத்துடன் ஒளிந்து வாழ்ந்து, பொருளீட்டி ஊர் திரும்புவதுதான் இவர்கள் நோக்கம்.

கடவுச்சீட்டு எடுப்பதற்காகப் போலி முகவரின் பேச்சைக் கேட்டுப் பல தகிடுதத்தங்கள் செய்கிறார்கள். கடவுச்சீட்டுக் கிடைத்தும் நுழைவிசைவு கிடைக்காத காந்திக்கு, லண்டன் செல்ல வேறொரு வாய்ப்பு வருகிறது. ஆனால், கடவுச்சீட்டில் இருக்கும் ஒரு பொய்யான தகவலை நீக்கினால்தான் நுழைவிசைவு கிடைக்கும். அந்தப் பெயரை நீக்க மேலும் குறுக்கு வழிகள், பொய்கள் என்று தொடர்கிறது கதை. இது எங்கே கொண்டுசெல்கிறது என்பதுதான் ஆண்டவன் கட்டளை. எமது சமூகத்திடையே குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் நடந்தேறிய சட்டபூர்வ, சட்டவிரோத புலப்பெயர்வுகள், குடியேற்றங்கள், தொழில் வாய்ப்புத் தேடிய நகர்வுகளின்போது அவர்கள் எதிர்கொண்டிருந்த போலி முகவர்களின்செயல்கள்யதார்த்த



மாகச் சித்திரிக்கப்படுகின்றன. அருள்செழியனின் கதை. அவரும் இயக்குநர் மணிகண்டன், அணுசரண் ஆகியோரும் இணைந்து திரைக் கதை எழுதியிருக்கிறார்கள். சாதாரண மனிதர்கள் சந்திக்கும் தீவிரமான பிரச்சினை இயல்பான நகைச்சுவையுடன் கச்சிதமாகச் சித்திரிக்கப்படுகிறது. குறுக்கு வழிகளின் இயல்பே மோசடிகளின் மீளாச் சுழலில் சிக்கவைப்பதுதான் என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது திரைக்கதை. நமது நாட்டின் தமிழ் அகதிகளின் நிலை, இந்தியா - சென்னையில் வாடகைக்கு வீடு தேடுபவர்களின் அவலம், குடும்ப நல நீதிமன்றச் சூழலின் யதார்த்தங்கள் ஆகியவையும் கதைப் போக்கினுள் இயல்பாகக் கலந்துவிடுகின்றன. திருமணமாகாத ஒருவன் திருமணம் ஆனதாகப் பொய் சொல்வதற்காகக் கார்மேகக் குழலி என்னும் பெயரைப் பயன்படுத்துகிறான். அதே பெயரில் ஒரு பெண்ணை அவன் சந்திக்க நேர்கிறது. அவள் இவன் பிரச்சினைக்கு உதவுகிறாள். தற்செயல் நிகழ்வுகள் மூலமாகவே படத்தின் திருப்பங்களையும் சிக்கல்களையும் கையாளும் தமிழ் சினிமாவுக்கு இது புதிது அல்ல. ஆனால், மணிகண்டன் இதைக் கையாளும் விதத்தில் ஓரளவேனும் நம்பகத்தன்மையை உருவாக்குகிறார்.

இறுக்கமான காட்சிகள் இல்லாமலேயே படம், கதைமாந்தர்களின் வலியைச் சொல்லி விடுகிறது. ஒரு மிதிவண்டியில் நண்பனை ஏற்றிக் கொண்டு வரும் அறிமுகக் காட்சியே காந்தியின் சமூக, பொருளாதார அந்தஸ்தைக் காட்டப் போதுமானதாக இருக்கிறது. குடிப்பெயர்வு அதிகாரியின் விசாரணைக் காட்சி அதற்குரிய யதார்த்தத்துடன் படமாக்கப்பட்டிருக்கிறது.

போலி ஆவணங்களால் ஏற்படும் பிரச்சினைதான் படத்தின் மையம். கார்மேகக் குழலி என்னும் பெயரால் ஏற்படும் நெருக்கடிகளே இதைக் காட்டப் போதுமானவை. அப்படி இருக்க, முதல் பகுதியில் நுழைவிசைவு முயற்சிகளையும் விஜய், யோகி பாபுவின் பிரச்சினைகளையும் அத்தனை விரிவாகக் காட்டியிருக்க வேண்டிய அவசியம் இல்லை. யோகி பாபுவை நடுவில் அம்போ என்று விட்டிருக்க வேண்டியதும் இல்லை. இறுதிக் காட்சியை நெருங்கும்போது படம் தேவையின்றி நீள்கிறது. விஜய் சேதுபதி வழக்கம் போல மிக இயல்பாக அடக்கி வாசித்திருக்கிறார். நுழைவிசைவு மறுக்கும் அதிகாரியிடம் கெஞ்சும் காட்சி, குடிபெயர்வுத் துறை புலனாய்வு அதிகாரியிடம் பாண்டியைப் பற்றிப் பதைபதைப்புடன் விசாரிப்பது, ரித்திகாவி டம் காதலைச் சொல்வது எனப் பல இடங்களி லும் முத்திரை பதிக்கிறார்.

ரித்திகா சிங், துணிச்சலும் தன்னம்பிக்கையுமான பெண்ணாகப் பிரதிபலிக்கிறார். பத்திரிகையாளர் சந்திப்பில் எதிர்ப்பை எதிர்கொள்ளும் விதம், உதவி செய்யப்போய் மாட்டிக் கொள்ளும் போது படும் சங்கடம், கடைசிக் காட்சியில் வெட்கம் கலந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்துவது என்று பல இடங்களில் தேர்ந்த நடிகைக்குரிய அடையாளங்கள் தெரிகின்றன. கை அழுக்காக இருக்கிறதே என்று கொள்ளிக்கட் டையால் மூக்கைச் சொறிந்து கொள்ளக் கூடாது என்பதைப் பரப்புரைத் தொனி இல்லாமல் சொல்லியிருக்கிறது படம். காட்சிகளைப் பெருமளவில் யதார்த்தமாக நகர்த்திச் சென்று செய்தியை அனுபவமாக மாற்றுகிறார் இயக்குநர். கதைப் போக்கு, வசனங்கள், பாத்திர வார்ப்புகள், நடிகர்களின் தேர்வு, திறமையான நடிப்பு, இசை என்று பல்வேறு அம்சங்களால் ஆண்டவன் கட்டளை நமது மனதில் தங்கிவிடுகிறது.

**டெங்கு என்ற ஒருவகை வைரஸ் கிருமிதான் டெங்குக் காய்ச்சலுக்குக் காரணம். இந்தக் கிருமிகளைச் சுமந்து திரியும் 'ஏடிஸ் எஜிப்தி' இன நுளம்புகள் நம்மைக் கடிப்பதால் டெங்குக் காய்ச்சல் ஏற்படுகிறது. கடுமையான காய்ச்சல், தாங்க முடியாத தலைவலி, மூட்டு வலி, கண்ணுக்குப் பின்புறம் வலி ஆகியவை டெங்குக்கான அறிகுறிகள்.**



# டெங்கு

ஜெ.காயா

மழை காலம் ஆரம்பிக்கப் போகின்றது. யாழ்ப்பாண நகரைப் பெறுத்த வரையில் நுளம்புக்கடி என்பது வருடம் முழுதும் இலவசமாகக் கிடைத்துக் கொண்டிருக்கின்றது. காரணம் கழிவுநீர் தேங்கியுள்ள வடிகால்களும் நிறைந்த குப்பை கூழங்களுமே. அடர்த்தியான சனத்தொகைக்கேற்ப இவை அதிகரித்துக்கொண்டே போகின்றன. இதனால் நுளம்புக்கடியும் நோய்களும் நீடித்துக்கொண்டே போகின்றன. நகர்ப்புற மக்கள் தொடர்ந்து நுளம்புகளிலிருந்து பாதுகாப்புப் பெறும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இது அவர்களின் அன்றாடச் செயற்பாடுகளில் ஒன்றாகவும் மாறிவிட்டது. ஆனால் மழைகாலத்தில் மட்டும் நுளம்புகளை எதிர்கொள்ளும் யாழ்ப்பாணத்தின் ஏனைய பிரதேசங்களுக்கும் கிராமப் புறங்களுக்கும் நுளம்புக்கடி அபாயம் பருவத்துக்கு ஒருதடவை வந்து போகும் செயலாகும். பருவகால மழைக் காலத்திலும், மழை கிடைக்கும் சில காலங்களிலும் மாத்திரமே நுளம்புகளை அவர்கள் எதிர்கொள்கின்றனர். மழை காலத்தில் கூடிய அளவில் விருத்தியடையும் நுளம்புகளிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளக்கூடிய முன்னாயத்தங்களையும் தற்காப்புக்களையும் மேற்கொள்ளாமல் அசண்டையீனமாக இருக்கும் கிராமத்தவர்களே அதிகமாக நுளம்புக்கடிக்கு இலக்காகி வைத்தியசாலைகளை நிரப்பப் போகிறார்கள். அத்துடன் வழமையாகவே வருடம் தோறும் பெருகிக்கொண்டிருக்கும் நகர்ப்புறநுளம்புகளும் தமது பெருக்கத்துக்குச் சாதகமாகக் கிடைக்கும் மழைநீரோடு இன்னும் பெருகிக் கொள்ளப் போவதால் அனைத்து மக்களும் நுளம்புகளின் தாக்கத்திலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும் அதற்கு முன்னர் நுளம்புகள் பெருகக்கூடிய சாதகமான சூழலை அழித்துக் கொள்ளவும் வேண்டும்.

**நோயின் அறிகுறிகள்**

டெங்கு என்ற ஒருவகை வைரஸ் கிருமிதான் டெங்குக் காய்ச்சலுக்குக் காரணம். இந்தக் கிருமிகளைச் சுமந்து திரியும் 'ஏடிஸ் எஜிப்தி' இன நுளம்புகள் நம்மைக் கடிப்பதால் டெங்குக் காய்ச்சல்ஏற்படுகிறது. கடுமையானகாய்ச்சல், தாங்க முடியாத தலைவலி, மூட்டு வலி, கண்ணுக்குப் பின்புறம் வலி ஆகியவை டெங்குக்கான அறிகுறிகள். உடலில் கடி ஏற்பட்டுச் சிவப்புப் புள்ளிகள் தோன்றுவதும் முக்கிய அறிகுறி. எலும்புகளை முறித்துப் போட்டதுபோல் எல்லா மூட்டுகளிலும் வலி ஏற்படுவது இந்த நோயை இனங்காட்டும் முக்கிய அறிகுறி. வாந்தியும் வயிற்றுவலியும் ஆபத்தான அறிகுறிகள்.


பெரும்பாலானோருக்கு ஏழாவது நாளில் காய்ச்சல் சரியாகிவிடும். சிலருக்கு மட்டும் காய்ச்சல் குறைந்ததும் ஓர் அதிர்ச்சிநிலை உருவாகும். இவர்கள் ஆபத்து மிகுந்தவர்கள். இவர்களுக்குக் கை, கால் குளிர்ந்து சில்லிட்டுப்போகும். சுவாசிக்கச் சிரமப்படுவார்கள். குருதி அழுத்தமும் நாடித் துடிப்பும் குறைந்து, சுயநினைவை இழப்பார்கள். டெங்கு வைரஸ், குருதியில் உள்ள தட்டணுக்களை அழித்துவிடும். இவற்றின் எண்ணிக்கை குறையும்போது, பல், ஈறு, மூக்கு, நுரையீரல், வயிறு, சிறுநீர்ப் பாதை ஆகியவற்றில் குருதிக்கசிவை ஏற்படுத்தும். உடனடியாக இந்த நிலையில் சிகிச்சை அளிக்கப்படவில்லை என்றால் உயிரிழப்பு ஏற்படும்.

டெங்கு தொற்றியுள்ள ஒருவரிடமிருந்து தான் மற்றவர்களுக்கு நோய் பரவும். ஆனாலும் எச்.ஐ.வி. கிருமியைப் போல, உடலில் டெங்கு கிருமிகள் இருந்தும் வெளியில் தெரியாமல் பல ஆயிரம் பேர் உள்ளனர். அவர்களிடமிருந்தும் நோய் பரவலாம் என்கிறது புதிய ஆய்வு. எனவே, டெங்குக் காய்ச்சலை ஆரம்பத்திலேயே கண்டறிவது மிக முக்கியம். இதன் மூலம் பின்விளைவுகளையும் தவிர்க்க முடியும். சில நவீன பரிசோதனைகளின் மூலம் டெங்குத் தாக்கத்தை உடனே அறிந்துகொள்ள முடியும்.

டெங்குக் காய்ச்சலைக் கட்டுப்படுத்தவும் முற்றிலும் இல்லாமல் செய்வதற்குமுள்ள ஒரே வழி அவற்றைப் பரப்பும் நுளம்புகளை அழிப்பது தான்.

ஆகவே மழை ஆரம்பிப்பதற்கு முன்பு நுளம்புகள் பெருகுவதற்கேற்றவாறுள்ள சூழல்களைக் கண்டறிந்து அழிப்பதோடு நுளம்புக் கடியிலிருந்து தம்மைக்காத்துக் கொள்ளும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.





**உலக நாடுகளில் நுளம்பு அழிப்பு**

உலக நாடுகள் நுளம்புகளை அழிக்க பல்வேறு நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துகின்றன. அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான் போன்ற நாடுகளில் நுளம்பு பெருகும் நீர்நிலைகளில் 'கம்பூசியா அபினிஸ்' எனும் நுளம்புகளை உணவாக்கிக் கொள்ளும் மீன்களை வளர்க்கின்றனர்.

வடக்கு ஆஸ்திரேலியா, பிரேசிலில் நுளம்புகள் கருத்தரிக்காமலிருக் கும் தொழில்நுட்பத்தைக் கண்டுபிடித்துள்ளனர். இதனால் அவை இனப் பெருக்கம் செய்ய முடியாமல் குறைந்து வருகின்றன.

**எமது செயற்பாடு**

விருத்தியடைந்த உலகநாடுகளைப் போன்று அதிகசெலவுகள் செய்து டெங்குவை ஒழிப்பது என்பது எம்மால் முடியாதது. ஆயினும் எம்மால் இயன்ற வரையில் நுளம்பு பெருகுவதைக் கட்டுப்படுத்த வேண்டும். வீட்டைச் சுற்றித் தண்ணீர் தேங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

பூந்தொட்டிகள், சிறு பாத்திரங்கள், தகரப்பேணிகள், பயன்படாத ரயர்கள், பிளாஸ்ரிக்குகள், தேங்காய்ச் சிரட்டைகள் போன்ற தண்ணீர் தேங்கி நிற் கக் கூடிய பொருள்களை அப்புறப்படுத்தவேண்டும். பயன்படுத்தும் தண்ணீர்க் கொள்கலன்களை, தொட்டிகளைச் சரியாக மூடி வைக்க வேண்டும்.

வீதிகளைச் சுத்தமாக வைத்துக்கொள்வது, வடிகால்களைச் சுத்தப்படுத்துவது போன்ற வற்றை மாநகர சபை, பிரதேச சபையினரின் கவனத்துக்குக் கொண்டுவர வேண்டும். குடிதண்ணீரைச் சூடாக்கி ஆற வைத்துக் குடிக்க வேண்டும். கிணறுகளுக்குக் குளோரின் இடவேண்டும். இவ்வாறான நடவடிக்கைகள் மூலமே நுளம்புகளைக் கட்டுப்படுத்தவும் அதனால் உண்டாகும் நோய்களிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும் முடியும்.



# அமைதியை இழக்கும் அராலிக் கிராமம்

■ எஸ்.மல்லிகா

ஒலிகளின் நூற்றாண்டு எனுமளவிற்குத் தற்போது நம்மைச் சுற்றி ஒலிகளின் அத்துமீறல் மிகக் கடுமையாக நடந்து கொண்டிருக்கிறது. அதிலும், அயல்வீட்டு ஒலிபெருக்கிப் பெட்டியிலிருந்து மிகையொலியில் ஒலிக்கும் பாடல்கள் நமக்குள் ஊடுருவிப் பெரும் அசௌகரியங்களை ஏற்படுத்துகின்றன. இத்தகைய அசௌகரியத்திற்குத் தொடர்ந்து முகங்கொடுத்து வருகின்றது அராலி மத்தி- குமுக்கன் பிரதேசம் இங்கு வதியும் ஒருசில குடும்பத்தினர் அதிக சத்தத்துடன் ஒலிபெருக்கிகளை ஒலிக்க விடுவதால்- குழந்தைகள், பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள், முதியவர்கள், நோயாளர்கள் எனப் பலதரப்பினரும் தொடர்ந்து கடுமையாகப் பாதிக்கப்படுகின்றனர். இதுகுறித்துச் சமூக நலன் விரும்பிகள், சம்பந்தப்பட்டவர்களிடம் பவ்வியமாக எடுத்துக் கூறியும், அவர்கள் அதற்குச் செவிசாய்க்காது தொடர்ந்தும் மிகையொலியில் பாடல்களை ஒலிக்கின்றனர் என்று மக்கள் கூறுகின்றனர்.

### கற்கும் சூழல் பாதிப்பு

இசையின் ஒலியில் மயங்கிப் போகின்ற நமது மனம், அதே இசை பெரும் இரைச்சலோடு வெளிப்படும்போது முகம் சுழித்துக் கொள்கின்றது. முப்பொழுதும் இந்த இரைச்சலால் நிறைந்து வழியும் இப் பகுதி, அதிகாலையிலும் அமைதியற்றுத் தவிக்கின்றது.

அதிகாலைபிரம்மமுகூர்த்த வேளைகளில் எழுந்து படிக்கும் மாண வர்கள் மற்றும் தியான வழிபாடுகளை மேற்கொள்வோரின் செயற்பாடுகள் இந்த ஒலிபெருக்கி விசமிகளால் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. முன்னைய காலங்களுடன் ஒப்பிடுகையில், ஒலி அத்துமீறல் நிகழ்கின்ற வீடுகளின் எண்ணிக்கையும் சராசரியான ஒலி அளவும் தற்போது மிகவும் அதிகரித்துவிட்டது.

இதனால், அமைதியான சூழலில் இருந்து மாணவர்கள் கற்க முடியாத நிலை காணப்படுகின்றது. எந்த நேரமும் இந்தப் பகுதி இரைச்சலில் உழல்கின்றது.

### திருப்தியற்ற பொலிஸ் சேவை

இந்த அதிகபட்ச ஒலிச் சூழல் தொடர்பில் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியும் முறைப்பாட்டுப் பெட்டிகளில் தகவல் அளித்தும் அவர்கள் ஆக்கபூர்வ நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. இது, மீண்டும் மீண்டும் ஒலிபெருக்கியாளர்கள் பாடல்களை ஒலிக்கவிட ஏதுவாகின்றது. மிகையொலியில் பாடல்கள்ஒலிக்கும் போது பொலிஸாருக்குத் தகவல் அளிக்கையில், வருகின்றோம் என்று கூறுவர். ஆனால், அவர்களின் பிரசன்னம் அங்கு இருக்காது என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். கடும் முயற்சியின் பயனாய் சிலவேளைகளில் சம்பவ இடத்துக்கு விரையும் பொலிஸார், ஒலிபெருக்கியாளர்களை எச்சரிப்பதுடன் மட்டும் நின்று விடுகின்றனர். அவர்களுக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுப்பதில்லை. அத்துடன், பொலிஸார் எச்சரித்து மறைந்ததும் மீண்டும் பாடல்கள் ஒலிக் கின்றன. எங்கள் செவிப்பறைகள் அதிர்கின்றன. இப்படிப்பட்ட சூழலில்தான் நாங்கள் தொடர்ந்து வாழ்கின்றோம். இது விடயத்தில் பொலிஸார் கடும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

### தொற்றாநோய் பெருக்கம்

அதிகப்படியான சத்தம் மனிதர்களை எரிச்சலடையச் செய்வதுடன், குருதித் தமனிகளையும் சுருங்கச் செய்கின்றது. இது அதிகப்படியான அட்ரீனலின் ஓமோன் சுரக்கத் தூண்டுகிறது. இதனால் இதயம் அதிக அளவு வேலை செய்யத் தூண்டப்படுகிறது. தொடர்ந்து அதிக சத்தத்தினைக் கேட்டுக்கொண்டிருந்தால், குருதியில் கொலஸ்ரோலின் அளவு அதிகரித்து அதனால் நிரந்தரமாக குருதிக் குழாய்கள் சுருங்கி, மாரடைப்பு மற்றும் பக்கவாதம் போன்ற விளைவுகளை அது ஏற்படுத்துகின்றது. அத்துடன், குடற்புண் உள்ளிட்ட நோய்களுக்கும் வழிவகுக்கின்றது. மேலும், ஒலியளவு அதிகரித்துள்ள பகுதிகளில் வாழ்கின்ற நபர்களில் பெரும்பாலானோருக்கு நரம்புத்தளர்ச்சிப் பாதிப்புக்கள் உள்ளதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. 90 டெசிபல்களுக்கும் அதிகமான ஒலியைத் தொடர்ந்து மனிதர்கள் கேட்கும்பொழுது அது கேட்டல் திறனைப் பாதிப்பதுடன், நரம்புமண்டலத்தில் நிரந்தர பாதிப்பையும் ஏற்படுத்துகிறது. தொடரும் இரைச்சல் நிலை மனித இறப்புக்குக் கூட வித்திடக்கூடும் என்றும் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

### சுற்றுச் சூழல் பொதுச் சொத்து

சுற்றுச் சூழல் என்பது தனிமனிதச் சொத்து அல்ல, பொதுச் சொத்து. மனித வாழ்க்கையை ஆரோக்கியமாகப் பேணிக் காப்பதற்கு, அதனைத் தூய்மையாக வைத்திருப்பது அவசியம். சுற்றுச் சூழல் தூய்மையாக இருக்கும் பட்சத்தில்தான் மனிதனாலும் ஆரோக்கியமாக வாழ முடியும் அதிக ஒலி சூழலை மாசுபடுத்துகின்றது. ஒலி மாசு மனிதனை மட்டுமன்றி இயற்கையையும் அதனைச் சார்ந்து வாழும் உயிரினங்களையும் பாதிக்கின்றது. குறிப்பாக, பறவை இனங்களின் வாழ்க் கைத் திறனை ஒலி மாசு அதிகளவில் பாதிப்பதாக ஆய்வாளர்கள் கண்டறிந் துள்ளனர். ஆதலால், இந்த விடயத்தில் இனியும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மௌனம் காக்கக் கூடாது.

> இசையின் ஒலியில் மயங்கிப் போகின்ற நமது மனம், அதே இசை பெரும் இரைச்சலோடு வெளிப்படும்போது முகம் சுழித்துக் கொள்கின்றது. முப்பொழுதும் இந்த இரைச்சலால் நிறைந்து வழியும் இப் பகுதி, அதிகாலையிலும் அமைதியற்றுத் தவிக்கின்றது.



# வேட்டையாடும் 'ஈ'

■ ந.ஜெயதாஸ்

என்ன ஈக்களால் வேட்டையாட முடியுமா என்று எண்ணுகிறீர்களா? சாதாரண ஈக்களால் முடியாது. ஆனால் இவ்வாறான காட்டு ஈக்களால் முடியும். எனது வீட்டின் புறத்தேயுள்ள பனைகளின் நடுவே நின்ற வேப்பமரத்தின் காய்ந்திருந்த கொப்பு ஒன்று இலைகளை உதிர்த்து விட்டிருந்தது. அதில் நீண்ட மெல்லிய உடல், கண்ணாடி போன்ற இறகுகளுடன் ஒரு பூச்சி, பார்ப்பதற்கு தும்பியைப் போன்ற உடலமைப்பையும் இலையானின் தலையமைப்பையும் கொண்டிருந்தது. அது சிறு வண்டுகள், பூச்சிகளைப் பிடித்தபடி இருந்த காட்சிகள் எனது கவனத்தை ஈர்த்தன. பூச்சிகளைப் பிடிப்பதற்கு வசதியான நீண்ட ஊசி போன்ற அமைப்பு, அதன் வாய்ப் பகுதியில் இருந்தது. மெல்லிய முள்முடிகள் கொண்ட உறுதியான கால்களால் வேப்பம் தடியைப் பற்றியிருந்தது. உடலின் மேற்பகுதி கருமையான நிறத்தில் காணப்பட்டது. தலையில் மென்மயிர்களுடன் சிறு உணர் கொம்புகளும் இருந்தன. ஒளி ஊடுருவும் இறகுகளைக் கொண்ட இந்தப் பூச்சியை ஒளிப்படம் எடுத்து வைத்து அதற்கான பெயரை அறிய ஆரம்பித்தேன்.



நீண்ட காலங்களுக்குப் பிறகு இதன் பெயரை அறிய முடிந்தது. அதன் முக அமைப்பு காரணமாக இது 'கழுகு ஈ' அல்லது 'காட்டு ஈ' எனப்படுகிறது. அதாவது நமது வீடுகளில் காணப்படும் சாதாரண இலையான்களைப் விடப் பெரியது. 'மஞ்சள் ஊசித்தட்டானை' (ஊசித்தும்பி) 'காட்டு ஈ' இரையாகப் பிடித்திருந்த காட்சியைத்தான் மேலே உள்ள படத்தில் பார்க்கிறீர்கள். இது இணையத்திலிருந்து பெறப்பட்டது. எனது வீட்டருகே வேட்டையாடிக் கொண்டிருந்த 'காட்டு ஈ' கீழே உள்ள படத்தில் ஒரு பூச்சியைப் பிடித்தவாறு இருக்கின்றது.



செர்க்கமே என்றாலும்... அது நம் ஊரைப் போல வருமா?
அட எந் நாடு என்றாலும்... அது நம் நாட்டுக் கீடாகுமா?
பல தேசம் முழுதும் பேசும் மொழிகள் தமிழ்போல் இனித்திடுமா?

ஒரு நாளும் உனை மறவாத இனிதான வரம் வேண்டும்...
உறவாலும் உடல் உயிராலும் பிரியாத வரம் வேண்டும்...
விழியோடு இமை போலே விலகாத நிலை வேண்டும்...

# இனிதாய் ஓய்ந்த இசை ஞானம்

ஞானாம்பிகா

இசைத்தமிழைப் பரப்பி ஓய்ந்த தென்னிந்தியப் பாடகி சிஷ்டலா ஸ்ரீராம மூர்த்தி ஜானகி (எஸ். ஜானகி) தான் எட்டியிருக்கின்ற முதுமை நிலை காரணமாக திரைப்பட இசைத்துறையிலிருந்து ஓய்வுபெற்றுக் கொண்டாலும், இசையிலும் குரல் இனிமையிலும் அவரை எட்டிப்பிடிக்கக் கூடியவர்கள் உருவாவது சாத்தியமற்ற ஒன்றே.

1938ஏப்ரல் 23ஆம் திகதி பிறந்த ஜானகி தனது 19ஆவது வயதில் திரைப்படத் துறையில் பாட ஆரம்பித்தார். 1957இல் வெளிவந்த விதியின் விளையட்டுத் திரைப்படத்தின் 'பெண் என் ஆசை பாழானது ஏனோ' என்ற பாடலின் பின்னணிப் பாடகியாக அவரது இசைப்பயணம் ஆரம்பமானது. அவருடைய 59 வருட இசைப்பயணத்தில் தமிழில் மட்டுமன்றி தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஹிந்தி, சிங்களம், ஆங்கிலம் உள்ளிட்ட 17 மொழிகளில் 48 ஆயிரம் வரையான பாடல்களைப் பாடியுள்ளார். 1976இல் 'பதினாறு வயதினிலே' - செந்தூரப்பூவே செந்தூரப் பூவே...(தமிழ்), 1980இல் 'ஒப்போல்' - எட்டுமனூரம் பழத்தில்...(மலையாளம்), 1984இல் 'சித்தாரா' - வென்னெல்லோ கோடாரி அந்தம்...(தெலுங்கு), 1992இல் 'தேவர் மகன்' - இஞ்சி இடுப்பழகா... (தமிழ்) ஆகிய திரைப் பாடல்களுக்கு அவருக்கு நான்கு தேசிய விருதுகள் கிடைத்தன.

## ஞான கான சரஸ்வதி - ஜானகி

இத்துடன் கேரள மாநில அரசின் திரைப்பட விருதுகள்-11, நந்தி விருதுகள்-10, தமிழகத் திரைப்பட விருதுகள் -06, ஒரிசா மாநில திரைப்பட விருது -01 என 28 விருதுகள் வரை பெற்றவர் ஜானகி. ஆனாலும் இவை எல்லாவற்றையும் விட இந்திய அரசால் வழங்கப்படும் பாரதரத்னா, பத்மவிபூசன் ஆகிய உயர் விருதுகளுக்கு அடுத்தபடியாகவுள்ள பத்மபூசன் விருது கடந்த 2013ஆம் ஆண்டு வழங்கப்படவிருந்தது. அது தனது 55வருட கால அனுபவத்திற்குத் தாமதமாக வழங்கப்படுவதாகக் கூறி அதனை ஏற்க மறுத்தார். "பல்வேறு மொழிகளில் நான் பாடிய பாடல்களை ரசிக்கும் ரசிகர்களின் மனதில் நான் இருக்கிறேன் இதற்கு மேல் என்ன விருது வேண்டும்" என்கிறார் ஜானகி. 1992ஆம் ஆண்டு இலங்கை வந்த போது 'ஞான கான சரஸ்வதி' என்ற பட்டம் அவருக்கு வழங்கப்பட்டது. முதுமையிலும் தனது குரல் இனிமையை இளமையாக வெளிப்படுத்திய ஜானகி சிறந்த பாடகி மட்டுமன்றி திறமையான இசையமைப்பாளரும் கூட. 'மௌனப் போராட்டம்' திரைப்படம் இதற்குச் சிறந்த உதாரணம்.




அத்துடன் தமிழ், தெலுங்கு மொழிகளில் தானே எழுதி, இசையமைத்து, பாடியுள்ள பக்திப் பாடல்களும் இவரின் இசைத்திறனைக் காட்டி நிற்கின்றன. 78 அகவை வரை தனது குரலை இனிமை ததும்ப வெளிப்படுத்திய ஜானகி இறுதிவரை அதில் வெற்றி யடைந்தவர் என்பதற்கு தனுஸுடன் இணைந்து பாடிய 'வேலையில்லா பட்டதாரி' திரைப் படத் தின் அம்மா... அம்மா... , 'திருநாள்' திரைப்படத்தின் - தந்தையும் யாரோ தாயாரும் யாரோ..., பேபி ஆகிய திரைப்படப் பாடல்களைச் சான்றாகக் கூறலாம். இவ்வாறாகத் தமிழில் பாட ஆரம்பித்த ஜானகியின் இசைப்பயணம் "இத்தனை வருசமா எத்தனையோ நல்ல பாட்டு பாடிட்டன். நானே பாடிட்டு இருக்கணுமா?" என்று கூறி மலையாளத் திரையிசையில் தாலாட்டுப் பாடல் ஒன்றுடன் அவரது குரலின் இனிமை குறையாமல் நிறைவுக்கு வந்துள்ளது.



# உன் காதலன் ஆக்காயோ?

வேல்விழியால் என்னைத் தாக்கியென்
வேலையே உன்பின் அலைவதாக்கி
நூல் இடைதனிலே மயங்க வைத்து
உன்னையே நினைத்துருக வைத்தவளே!
மேல் ஒருவர் இல்லா மேன்மையளே!
பேரின்பத்தின் பிறப்பிடமே உன்னைக்
கால் பிடித்துக் கெஞ்சுகின்றேன்உன்
காதலனாக்காயோ என்னை?

கருவாய் உருவாய்க் கங்கைத் தலைவன்
படைப்பினிலே வந்து பிறந்த
குமுதமே! என்றும் குமரியாய் இருப்பவளே!
மருவியென் அருகே வாராயோ?
அமுதமாம் மொழிபேசி உறவாடாயோ?
அங்கம்மிக மெலிந்து உன்நினைவில்
இருப்பேனை விரும்பாயோ? விரும்பியுன்
கைபிடிக்கும் காதலனாக்காயோ?

கரும்பே! கற்கண்டே! விரும்பும் பாவலர்
நாமீது நடமிடும் கன்னியே!
அரும்பொன்னே! அமுதமே! என்னுயிரே!
அழகின் உருவே! அமுதே அடியே!
இரும்போ உன் இதயம்? சுழலாகச்
சுற்றிவந்து சுந்தரியே உன்னை
அரும்புமீசை ஆடவன் கேட்கிறேன்உன்
காதலனாக்காயோ என்னை?



- நா.நவராஜ்



# பெண் வடிவில் உலவும் பேய்

திருமதி. கிருஷ்ணவேணி சிங்கராஜன்

'அம்மா போட்டுவாறன்' என்றவாறு தாயின் பதிலுக்குக் காத்திராது வெளியே வந்தாள் இலக்கியா. முற்றத்தில் பூனைக்குட்டியுடன் விளையாடிக் கொண்டிருந்த இரண்டு வயது நிரம்பிய மகன் சேரன், 'அம்மா...' என்றபடி ஓடி வந்தான். அவனை அணைத்து அன்பு முத்தம் கொடுத்து, 'செல்லக்குட்டி குழப்படி செய்யாமல் அம்மம்மாவோடை இருங்கோ' என்று கூறியவர் அவசர அவசரமாகத் தனது உந்துருளிக்கு உயிர் கொடுத்தாள் இலக்கியா. இலக்கியா சேவைக்கால ஆலோசகராகப் பணியாற்றுகின்றாள். இன்று அவள், வறிய மாணவர்கள் கற்கின்ற பாடசாலை ஒன்றைத் தரிசிக்கவேண்டும். அவள் செல்லப்போகும் பாடசாலையின் காலைப்பிரார்த்தனையில் கலந்துகொள்வது வழக்கம். எனவேதான் அவசர அவசரமாக ஆயத்தமாகிவிட்டாள்.

இலக்கியா பெயருக்கேற்றாற்போல் இலக்கிய இரசனை மிகுந்தவள். கற்றல், கற்பித்தலில் ஏற்படுகின்ற இடர்பாடுகளைக் கண்டறிந்து மாணவர்கள், ஆசிரியர்களின் சுமைகளைப் போக்குபவள்.

தான் தரிசிக்க வேண்டிய பாடசாலையை நேக்கிப் பயணித்தவள், அந்தக் கிராமத்தின் அழகை இரசித்தபடி சென்று கொண்டிருந்தாள். யாழ். மாவட்டத்தின் உயிர்நாடியாய் விளங்கும் தோட்டங்கள் பச்சைப் பசேலென பிரதான வீதியின் இருமருங்கையும் அணி செய்தன. செம்மண் தரை படர்ந்த அந்தப் பிரதேசம் முழுவதும் புன்முறுவலோடு அவளை வரவேற்பதுபோலக் காட்சியளித்தது.

பாடசாலைக்கு அருகிலே வீற்றிருந்து அருளாட்சி செய்யும் விநாயகப் பெருமானை ஒரு கணம் மனதில் இருத்தியபடி நுழைவாயிலின் அருகில் சிறிது நேரம் நின்றிருந்தாள். இந்தப் பாடசாலை அமைந்திருந்த சூழல் அவளுக்கு மிகவும் பிடித்துப் போனது. ஓங்கியுயர்ந்த மரங்களும், பச்சைப் பசேலென்ற தோட்டங்களும், பார்ப்பவர் மனதைக் கவரக் கூடியன. இவைகளிடம் கதை கேட்டால் எங்கள் மண்ணின் வீரம் செறிந்த வரலாறுகளைப் பக்குவமாய் பறைசாற்றும். பாடசாலைக்கு வெண்புறாக்களாய் மாணவர்கள் வந்து கொண்டிருந்தார்கள். நுழைவாயிலருகில் நிற்கும் இலக்கியாவை இடமாற்றம் பெற்று வந்திருக்கும் ஆசிரியை என நினைத்து, 'குட் மோர்னிங் ரீச்சர்' என்றபடி சிட்டாய்ப் பறந்தார்கள். உந்துருளியை மெதுவாக உருட்டிச் சென்று உரிய இடத்தில் நிறுத்தி விட்டு அதிபர் அலுவலகம் நோக்கிச் சென்றாள். அங்கு தனது வருகையை உறுதிப்படுத்திக் கொண்டு காலைப் பிரார்த்தனை நடைபெறும் இடத்துக்குச் சென்றாள்.

அங்கே மாணவர்கள் கள்ளமில்லா நெஞ்சத்தவராய் கரங்களைக் கூப்பி இறைவணக்கத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். மாணவிகளின் இனிய குரலிலே திருமுறைப் பாடல்கள் உயிர்பெற்று நர்த்தனமாடின. நற்சிந்தனையும், உடற்பயிற்சியும் நிறைவு பெற்று எல்லோரும் வகுப்பறைகளுக்குச் சென்றனர். இலக்கியா தான் தரிசிக்க வேண்டிய தரம் 6 வகுப்பறைக்குச் சென்றாள். அது தமிழ்ப் பாடவேளை. ஆசிரியரும், மாணவரும் உற்சாகமாய் ஆசிரிய ஆலோசகரான இலக்கியாவை வரவேற்றனர். ஒரு கணம் அவர்களுடைய கள்ளங்கபடமற்ற வதனங்களில் தோன்றிய மலர்ச்சியும், உற்சாகமும் அவர்களின் அடிமையாகவும் அவளை ஆக்கி விட்டது. ஆசிரியர் தாயாய், தந்தையாய், நல்லாசானாய், நண்பனாய், சகோதரனாய், தலைவனாய், வழிகாட்டியாய்... பல நடிபங்குகளை ஏற்கவேண்டியதன் அவசியத்தை அவள் உணர்ந்து கொண்டாள்.

> பதினொரு வயதுச் சிறுவனின் கண்களில் இருபத்தொரு வயது இளைஞனின் குரூரம் தென்பட்டது. அவனுக்குள் ஏதோவொரு வேதனை குடிகொண்டிருப்பதை அவள் தெரிந்து கொண்டாள். தனது நிலையில் இருந்து இறங்கி, சகபாடியாய் மாறி அவனது கையைப்பற்றி உரையாடத் தொடங்கினாள்.

தமிழ்ப்பாட ஆசிரியர் அன்றைய நாளுக்கான அலகைக் கற்பிக்கத் தொடங்கினார். பெரும்பாலான மாணவர்கள் கற்றலில் ஆர்வமுடையவர்களாக விளங்கினார்கள். வறிய மாணவர்களாக இருந்தாலும், உற்சாகம் மிக்கவர்களாக அவர்களுடைய செயற்பாடுகள் இடம்பெறுவதைக் கண்டு இலக்கியா மகிழ்ச்சியடைந்தாள். ஆனாலும் அந்த மாணவக் கூட்டத்திலேயிருந்து ஒரு சிறுவன் ஒதுங்கி இருப்பதைக் கண்டாள். ஒதுங்கியிருந்தவனைத் தவிர, இலக்கியாவுடன் ஏனைய மாணவர்கள் அன்பாக உரையாடினார்கள், "இப்ப, உங்கட கொப்பியளை நான் பார்க்கப் போறன். என்ன? பார்க்கலாம் தானே" என்ற இலக்கியாவுக்கு, "பார்க்கலாம் ரீச்சர்..." என்று கூறியபடி முண்டியடித்துக் கொண்டு கொப்பிகளைக் காட்டும் ஆர்வத்துடன் எழுந்தோடி வந்தார்கள் மாணவர்கள். "நீங்கள் எல்லோரும் உங்கட இடத்தில போய் இருங்கோ. நான் வந்து கொப்பியளைப் பார்க்கிறன்" என்றவாறு அவர்களை அமரச் செய்தாள்.

ஆர்வத்தோடு தங்களுடைய அப்பியாசக் கொப்பிகளை நீட்டினார்கள். அவற்றைப் பார்த்த பின் அவள் தான் பார்த்தமைக்கான ஒப்பத்தை இட்டாள். வகுப்பறையின் ஓர் ஓரத்திலே ஒதுங்கியிருந்த மாணவனை நெருங்கினாள் இலக்கியா. அவனுடைய பெயர் எழிலன். பெயருக்கிசைவாக எழிலாகத்தான் இருந்தான். ஆனால்... அவன் கண்களிலே ஏதோவொரு கொடூரம் குடிகொண்டிருந்தது. அவன் இருந்த இடத்தை விட்டு அசைந்ததாகத் தெரியவில்லை. "நீ யாராக இருந்தால் எனக்கென்ன?" என்பதுபோல அவனது பார்வை இருந்தது.

"அச்சாப்பிள்ளை. கொப்பியைத் தாங்கோ" மீண்டும் மீண்டும் கேட்டதற்கிணங்க வேண்டா வெறுப்பாக எட்டி நின்று கொப்பியை நீட்டினான். அங்கே பல பக்கங்கள் வெறு வானவெளியாகக் காட்சியளித்தன. இடையிடையே தோன்றும் கருமுகிற் கூட்டங்களாய் எப்பொழுதாவது எழுதப்பட்டிருந்தது. "ஏன் எழுதாமல் விட்டிருக்கிறியள்" இலக்கியாவின் கேள்வி எழிலனுக்கு வெறுப்பூட்டியதென்பது அவனுடைய முகத்தில் தெரிந்தது. பதினொரு வயதுச் சிறுவனின் கண்களில் இருபத்தொரு வயது இளைஞனின் குரூரம் தென்பட்டது. அவனுக்குள் ஏதோவொரு வேதனை குடி கொண்டிருப்பதை அவள் தெரிந்து கொண்டாள். தனது நிலையில் இருந்து இறங்கி, சகபாடியாய் மாறி அவனது கையைப்பற்றியபடி உரையாடத் தொடங்கினாள்.

(43 ஆம் பக்கம் பார்க்க)

# குலோப் ஜாமுன்



### தேவையான பொருள்கள்

கோதுமை மா - அரைக் கிலோ
மில்க் மெய்ட் (ரின்பால்) - ஒரு ரின்
நெய் / பசு நெய் - 100 கிராம்
சீனி - ஒரு கிலோ
அப்பச் சோடா - அரைத் தேக்கரண்டி
எண்ணெய் - ஏற்ற அளவு
ஏலக்காய் - 6
உப்பு - கால் தேக்கரண்டி



**செய்முறை :**
கோதுமை மாவை அரித்துக் கொள்ளவும். அதனுடன் அப்பச்சோடா உப்பு மற்றும் உப்பு சேர்த்து, நெய்யை உருக்கி ஊற்றவும். ஒரு கரண்டியால் மாவுடன் நெய் சேரும்படி நன்கு கலக்க வும். பின் மில்க் மெய்ட் சேர்த்து பிசைந்து அரை மணி நேரம் வைக்க வும். ஒரு பாத்திரத்தில் சீனி, நசுக்கிய ஏலக்காய் போட்டு ஒரு லீற்றர் தண்ணீர் ஊற்றி பாகு காய்ச்சிக் கொள்ளவும். அரை மணி நேரம் கழித்து மாவை சிறு சிறு உருண்டைகளாக உருட்டிக் கொள்ளவும். சட்டியில் எண்ணெய் ஊற்றி மிதமான சூட்டில் உருண்டைகளைப் போட்டு பொன்னிறமாக பொரித்து எடுக்கவும். பொரித்த உருண்டைகளை சீனிப்பாகில் போட்டு இரண்டு மணி நேரம் ஊறவிட்டு எடுக்கவும். சுவையான குலோப் ஜாமுன் தயார்.



# மருத்துவம் நிறைந்த நாவலின் பழம், இலை, பட்டைகள்

காய்த்துக் குலுங்கி உதிர்ந்து கொண்டிருக்கும் நாவல் மார்ச் மற்றும் மே மாதங்களில் பூக்கத் தொடங்கி, ஜூலை, ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களில் பழங்களைத் தருகிறது.
நாவல்பழத்தில் கல்சியம், பொஸ்பரஸ், இரும்புச்சத்து, உயிர்ச் சத்து போன்றவை நிறைந்துள்ளன. அத்துடன் நாவல் மரத்தின் இலை, மரப்பட்டை மற்றும் விதை என அனைத்துமே மருத்துவ குணங்கள் வாய்ந்தவையாக உள்ளன.

**நீரிழிவு நோய்**
நாவல் பழத்தின் விதைகள் நீரிழிவு நோயைக் குணப்படுத்த சிறந்த மருந்து. இதன் விதைகளை வெயிலில் உலர்த்தி தூளாக்கிக் கொள்ளவேண்டும்.
காலை, மாலை என இரண்டு வேளைகளாக உட்கொண்டு வர, நீரிழிவு நோய் கட்டுப்பட்டுக் குணமடையும்.

**மாதவிடாய்**
மாதவிடாயின் போது ஏற்படும் அதிகப்படியான குருதிப்போக்கைக் கட்டுப்படுத்த, நாவல் மரப் பட்டைகளை நன்கு நசுக்கி, தண்ணீரில் கொதிக்க வைத்து. பின் பட்டையை வேறாக்கி அந்தத் தண்ணீரை சுண்டக் காய்ச்சி, ஆற வைத்துத் தினமும் இரண்டு வேளைகளாக 10 நாள்களுக்குத் தொடர்ந்து குடிக்க வேண்டும்.

**சிறுநீர் எரிச்சல்**
சிறுநீர் கழிக்கும்போது உண்டாகும் எரிச்சலைக் குணமாக்க நாவல் பழச்சாற்றைப் பிழிந்து 3 தேக்கரண்டியுடன், ஒரு தேக்கரண்டி அளவு சீனியைக் கலந்து குடிக்கவேண்டும். தினமும் காலை, மாலை 2 நாள்களுக்குத் தொடர்ந்து குடித்தால் சிறுநீர் எரிச்சல் குணமாகிவிடும்.


**வயிற்றுப்போக்கு**
நாவல் இலைக் கொழுந்தைப் பிழிந்து ஒரு தேக்கரண்டி அளவு குடிக்க வேண்டும். காலை, மாலை என்று 3 நாள்களுக்குத் தொடர்ந்து குடித்து வந்தால் வயிற்றுப்போக்கைக் கட்டுப்படுத்தலாம்.

**குடல்புண்**
நாவல் மரப் பட்டையை எடுத்துத் தண்ணீரில் கொதிக்க வைத்து, பட்டையை [illegible] நீரை சுண்டக்காய்ச்சிய பின் இதமான சூட்டில் வாய் கொப்பளித்து வர வேண்டும். தொடர்ந்து சில நாள்கள் வரை இவ்வாறு செய்தால் குடல்புண், தொண்டைப் புண் மற்றும் தொண்டை அழற்சி குணமாகும்.

**[illegible]த்தன்மை**
[illegible] மலட்டுத் தன்மை குணமாக, நாவல் மரத்தின் இலையின் சாற்றை கஷாயம் போல செய்து அதனுடன் [illegible] அல்லது வெண்ணெய் கலந்து அளவோடு சாப்பிட்டால் மலட்டுத் தன்மை அகலும்.

## சிறுநீரகம் சிறப்பாகச் செயற்பட...

- தினமும் உடற்பயிற்சி செய்யுங்கள்.
- சிகரெட் புகைக்காதீர்கள்.
- குருதி அழுத்தத்தைக் கட்டுக்குள் வைத்திருங்கள்.
- தினமும் போதுமான அளவு நீர் அருந்துங்கள்.
- ஆரோக்கியமான உணவை உட்கொள்ளுங்கள். உடல் எடையைக் கட்டுக்குள் வைத்திருங்கள்.
- இனிப்பைக் கட்டுக்குள் வைத்திருங்கள்.





## மஞ்சள் காமாலை வராமல் தடுக்கும்

இது, உடலுக்குக் குளிர்ச்சி தருவதோடு, கல்லீரலுக்குப் பலமும் தரக்கூடியது.
தோல் நீக்கிய பீர்க்கங்காய் 50 கிராம் அளவுக்கு எடுத்து, அரைக் கரண்டி சீரகம், ஒரு டம்ளர் தண்ணீர் விட்டுக் கொதிக்க வைக்க வேண்டும். இதை வடிகட்டிக் குடித்து வந்தால், கல்லீரல் பலப்படும். மஞ்சள்காமாலை நோய் வராமல் தடுக்கும். ஈரல் வீக்கத்தை சரிசெய்வதோடு, பித்தத்தையும் குறைக்கும்.
பீர்க்கங்காயைத் தோலுடன் பசையாக அரைத்து தலையில் பூசி, சுமார் 10 நிமிடங்கள் வரை ஊறவைத்து, பிறகு குளித்தால், இள்நரை சரியாகும். பீர்க்கங்காய்த் தோலை துவையலாகச் செய்து சாப்பிட்டு வந்தால் மலச் சிக்கல் பிரச்சினை சரியாகும்.

# பீர்க்கங்காய்





# குளிர்ச்சியும் கண்களைத் தழுவட்டுமே!

கோடைகாலத்தில் கண்களைப் பாதுகாப்பது மிகவும் அவசியம். கண்களை சூரிய வெப்பத்திலிருந்தும் ஒளியிலிருந்தும் காப்பதில் குளிர்கண்ணாடிகளுக்கு முககிய பங்குண்டு. கண்களுக்கு அணியும் கண்ணாடியை அழகானதாகத் தேர்ந்தெடுக்காமல் நமது முகத்தின் அமைப்புக்கு ஏற்ப கண்களை முழுதாக மறைப்பதாகத் தேர்வு செய்ய வேண்டும். வெயில் கண்களில் படும்போது வெப்பத்தினால் அழற்சி ஏற்பட்டு திரவக்கசிவு ஏற்படும். அதிக வெளிச்சத்தால் கண்களைச் சுற்றியுள்ள தசைகளில் அதிக சுருக்கம் ஏற்படுகிறது. அதிகளவிலான சூரிய வெளிச்சம் மற்றும் வெப்பம் கண்களில் புரை ஏற்படுவதையும் துரிதமாக்குகிறது. எனவேதான் வெயிலே வெளியில் செல்லும்போது கண்டிப்பாகக் குளிர் கண்ணாடி அணிவது அவசியம். குழந்தைகளுக்கு இது மிகவும் இன்றியமையாததாகும்.
குளிர் கண்ணாடி வாங்கும்போது அது சூரிய ஒளியின் அல்ட்ரா வயலட் கதிர்களை தடுக்கும் தன்மை கொண்டதா என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். அந்த வசதி இல்லாத குளிர் கண்ணாடிகளால் பயன் இல்லை. கண்களை நன்கு மூடும் கண்ணாடி சூரியக் கதிர்களை மட்டு மன்றி, மண், தூசி போன்றவற்றிலிருந்தும் கண்களை காக்கும். குளிர் கண்ணாடியின் நிறம் என்பது நமது விருப்பத்துக்கு ஏற் பவே தேர்ந்தெடுக்கலாம். அதிக அடர்த்தியான நிறங்கள் சூரிய ஒளியை அதிகம் தடுக்கும் என்று கூற முடியாது. நிறங்களில் எந்தப் பயனும் இல்லை.



## வரலாற்றில் இன்றைய தினம்

1780 - அமெரிக்கப் புரட்சிப் போரின்போது உளவு பார்த்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட பிரித்தானிய இராணுவ அதிகாரி, ஜோன் அன்றே அமெரிக்கப் படைகளால் தூக்கிலிடப்பட்டார்.

1917 - பீற்றர் கெனமன் பிறப்பு.

1937 - டொமினிக்கன் குடியரசின் அதிகாரம் படைத்தவரான ராவுல் றுஜிலியோவின் கட்டளைக்கு அமைய எல்லையோரத்தில் வசித்த ஹெயிட்டி மக்கள் 20, 000 பேர்வரை ஐந்து நாள்களில் படுகொலை செய்யப்பட்டனர்.

1944 - வோர்ஸோ எழுச்சியை ஜேர்மன் படைகள் முடிவுக்குக் கொண்டு வந்தன.

1958 - பிரான்சிடமிருந்து சுதந்திரத்தை கென்யா பிரகடனப்படுத்தியது.

1970 - விச்சிற்றா ஸ்ரேற் பல்லைக்கழக உதைபந்தாட்ட வீரர்களையும் ஆதரவாளர்களையும் நிர்வாகிகளையும் சுமந்து சென்ற விமானம் கொலறடோவில் விபத்துக்குள்ளாகி 31 பேர் உயிரிழப்பு.

1990 - சியமன் விமான சேவை விமானம் 8301 கடத்தப்பட்ட நிலையில் கன்சுவோவில் தரையிறங்கும் போது தரையில் நிறுத்தி வைக்கப்பட்ட இரண்டு விமானங்களுடன் மோதி 128 பேர் உயிரிழப்பு.

1992 - இலங்கை இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு ஏற்பட வேண்டும் என இந்தியப் பிரதமர் ராவ் தெரிவிப்பு.

- இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வே வழியாகும் என பீட்டர் கெனமன் தெரிவிப்பு.

- இராணுவத்துக்கு ஏற்பட்ட இழப்புக்களால் பேச்சு வார்த்தைக்கு அரசு இணங்குகிறதென வெரித்தாஸ் வானொலி தகவல்.

- இராணுவ நடவடிக்கை வடக்கில் தொடர்ந்து நடக்கும் என இந்தியாவில் பிரேமா அறிவிப்பு.

- இராணுவ நடவடிக்கையால் மன்னாரில் 16 ஆயிரம் பேர் இடம் பெயர்வு.

1996 - லிமா பெருவிலிருந்து புறப்பட்டு சில நிமிடங்களில் ஏயரோ பெரு விமானம் 603 பசுபிக் பெருங்கடலில் விபத் துக்கு உள்ளாகியதில் 70 பேர் உயிரிழப்பு.

2007 - கடத்தப்பட்டோரின் உறவுகளைச் சந்திக்க ஐ.நா. அமைப்பாளருக்கு முட்டுக்கட்டை.

## முயலின் தன்னம்பிக்கை

ஒரு முயல் தற்கொலை செய்து கொள்ள முடிவெடுத்தது. அதற்குக் காரணம் ஒருபக்கம் வேடன் விரட்டுகிறான். இன்னொரு பக்கம் நாய். மறுபக்கம் புலி. இப்படி எந்தப்பக்கம் திரும்பினாலும் முயலுக்கு எதிரிகள்.


இதனால், தான் வாழத் தகுதியற்ற விலங்கு என்று முடிவெடுத்தது முயல். எப்படியெல்லாம் தற்கொலை செய்யலாம் என்று சிந்தித் துப் பார்த்தது.

இறுதியாக குளத்தில் குதித்துத் தற்கொலை செய்து கொள்வோம் என்று சென் றது முயல்.

அப்போது முயலின் வருகைக்கு அஞ்சி அங்கு குளத்தின் கரையில் இருந்த தவளைகள் குளத்துக்குள் தாவின.

தவளைகளைப் பார்த்த முயல் சிந்தித்தது...

அட!! நம்மையும் பார்த்துப் பயப்பட இந்த உலகில் உயிரினங்கள் உள்ளனவா என்று தனக்குள் கேள்வி கேட்டது. தன் தற்கொலை முடிவை மாற்றிக்கொண்டு தன்னம்பிக்கையோடு வாழத் தொடங்கியது.



தற்கொலை செய்து கொள் வதற்கு வலிமையான மனம் வேண்டும். அவ்வளவு வலிமையான மனமிருந்தால் நீ ஏன் சர்கிறாய்? வாழ்ந்து தான் பாரேன் என்றது முயலின் தன்னம்பிக்கை.

வாழ நினைத்தால் வாழலாம்... வழியா இல்லை பூமியில்?



த.கிஷாந்தினி,
தரம் - 4,
திருக்குடும்ப கன்னியார்மடம்.



ச.புருசோத்தமன்,
தரம் - 2,
முத்துஜயன் கட்டு அ.த.க.பாட.

பெற்றோர்களே!
குழந்தையின் பாதையிலுள்ள தடைகளை நீங்களே எளிமைப்படுத்திக் கொடுக்காதீர்கள். தடைகளை அவர்களாகவே தவிர்க்க அவகாசம் கொடுங்கள். - யாரோ



## அறிவுரை

ஏட்டில் படித்ததோடு
இருந்துவிடாதே - நீ
ஏன் படித்தோம் என்பதையும்
மறந்துவிடாதே!

நாட்டின் நெறிதவறி
நடந்துவிடாதே - நம்
நல்லவர்கள் தூற்றும்படி
வளர்ந்துவிடாதே!

மூத்தோர்சொல் வார்த்தைகளை
மீறக்கூடாது - பண்பு
முறைகளிலும் மொழிதனிலும்
மாறக்கூடாது!

மாற்றார் கைப்பொருளை நம்பி
வாழக்கூடாது - தன்
மானமில்லாக் கோழையுடன்
சேரக்கூடாது!

துன்பத்தை வெல்லும் கல்வி
கற்றிட வேணும்!
சோம்பலைக் கொல்லும் திறன்
பெற்றிட வேணும்!

வம்பு செய்யும் குணமிருந்தால்
விட்டிட வேணும் - அறிவு
வளர்ச்சியிலே வான் முகட்டைத்
தொட்டிட வேண்டும்!

வெற்றிமேல் வெற்றிவர விருதுவரப்
பெருமைவர
மேதைகள் சொன்னதுபோல்
விளங்கிட வேண்டும்!

பெற்ற தாயின் புகழும், நீ பிறந்த
மண்ணின் புகழும்
வற்றாமல் உன்னோடு
வாழ்ந்திட வேண்டும்!

பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்




## ஆசிரியரை அசத்திய மாணவன்



வகுப்பறையில் ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். அப்போது அவர் மாணவர்களைப் பார்த்துப் பின்வரும் கேள்வியைக் கேட்டார்.

'உலகில் இருக்கும் அனைத்தையும் படைத்தது கடவுளா?' என்பதே அந்தக் கேள்வி.

ஒரு மாணவன், 'ஆமாம்' என்று பதில் அளிக்கிறான்.

ஆசிரியர்: 'அப்படியெனில், சாத்தானைப் படைத்ததும் கடவுள் தானா?' என்று கேட்டார்.

மாணவன் அமைதி காக்கிறான். சிறிது நேரம் கழித்து ஆசிரியரைப் பார்த்து, " நான் உங்களிடம் சில கேள்விகள் கேட்கலாமா?" என்கிறான்.

ஆசிரியர் அனுமதிக்கிறார்.

மாணவன்: 'குளிர்நிலை' என்று ஏதேனும் இருக்கிறதா?

ஆசிரியர்: "ஆமாம் இருக்கிறது. நீ குளிரை உணர்ந்தது இல்லையா?"

மாணவன்: "மன்னிக்கவும். தங்கள் பதில் தவறு. குளிர் என்ற ஒன்று இல்லை. அது வெப்பத்தின் பற்றாக்குறை. சராசரி வெப்பம் குறைந்ததைத் தான் குளிர் என்கிறோம்.

மாணவன்: "இருள் என்ற ஒன்று இருக்கிறதா?"

ஆசிரியர் : "ஆம், இருக்கிறது."

மாணவன் : "மன்னிக்கவும். மீண்டும் தவறு. இருள் என்ற ஒன்று இல்லை. ஒளி பற்றாக்குறையைத் தான் இருள் என்கிறோம்.

உண்மையில் ஒளி, வெப்பம் இவற்றைத் தான் நாம் அதிகம் படிக்கிறோம். குளிரையும் இருளையும் அல்ல. அதேபோல், சாத்தான் என்று இவ்வுலகில் எதுவுமில்லை. உண்மையில் அது கடவுள் மீதுள்ள அன்பின் , நம்பிக்கையின் பற்றாக்குறை.

அந்த மாணவன் வேறு யாருமில்லை. அணு விஞ்ஞானி ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்.

என்.கவிப்பிரியா,
க.பொ.த.(உயர்தர) மாணவி, வட்டு. இந்துக் கல்லூரி.





# அகிம்சையை

# “இவனிடமிருந்து கற்றுக்கொள்ளுங்கள்”

■ மு.ஈழத்தமிழ்மணி

தற்கொலை என்பது கோழைகளின் மொழி. தற்கொடை என்பது தியாகிகளின் மொழி! காந்திய தேசத்துக்கு மட்டுமல்ல, முழு உலகத் துக்கும் அகிம்சைப் போரின் மகத்துவத்தைப் போதித்தவன் தியாக தீபம் திலீபன்

தியாகி திலீபன் தமிழீழம் கேட்டு உண்ணா நேன்பு இருக்கவில்லை. “இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருந்த ஐந்தே ஐந்து கோரிக்கைகளை முன்வைக்கின்றேன். அதை நிறைவேற்ற வேண்டிய தார்மீகப் பொறுப்பு இந்தியாவுக்கு உள்ளது. அதனை நிறைவேற்றுங்கள்” என வேண்டியே அகிம்சை வழியிலே போரிடுவதற்குத் தயாரானான்.

விடுதலைப் புலிகளின் யாழ்ப்பாண அரசியல்துறை அலுவலகத்திலிருந்து வோக்கி டோக்கியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவருடன் சில நிமிடங்கள் உரையாடிவிட்டு, மண்ணிற வாகனத்தை நோக்கி நடந்தவன் அதிலேறி நல்லூரைச் சென்றடைகிறான். மக்களில் சிலரும் திலீபனைத் தொடர்ந்து பயணிக்க, நல்லூர் வீதியில் அமைக்கப்பட்ட மேடையில் மெல்லிய உருவமாக, உறுதிகொண்ட உள்ளமாக, அகிம்சை என்ற ஆயுதத்தைச் சுமந்தவனாக ஏறிக் கதிரையில் அமருகின்றான்.

காலை 9.45 மணிக்கு உண்ணாநோன்பு மேடையில் திலீபன் அமர்ந்துகொள்ள அவனது தியாகப் பயணம் ஆரம்பமாகியது. நடேசன், கவிஞர். காசி ஆனந்தன் போன்றோர் உண்ணாநோன்பு எதற்காக ஆரம்பிக்கப்படுகின்றது என்பதைக் கூடியிருந்த மக்களுக்கும், இந்திய அரசுக்கும் விளக்கமாகக் கூறிக்கொண்டிருந்தனர். “ ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து இந்திய அரசினது நீதியை எதிர்பார்த்து உண்ணாநோன்பைத் திலீபன் ஆரம்பித்துள்ளான்” என்று மேடையில் உரையாற்றிக் கொண்டார்கள்.

நல்லூரின் வீதியில் திலீபனின் போராட்டம் தொடர்ந்தது. எப்படியாவது தமிழ் மக்களுக்கு விடிவைப் பெற்றுத் தந்து விடவேண்டும் என்ற அசைக்க முடியாத கனவுடன் ஒவ்வொருநாளும் தியாகி திலீபன் அணு அணுவாகச் செத்துக் கொண்டிருந்தான். தன்னை உருக்கிப் பிறருக்கு ஒளிகொடுக்கும் மெழுகுவர்த்தி போல் ஒவ்வொரு நிமிடமும் உருகிக்கொண்டிருந்தான். நான்கு திசைகளிலுமிருந்து மக்கள் நல்லூரை நோக்கித் திரண்டபடியிருந்தனர். “தம்பி திலீபா எங்களை விட்டுப் போய்விடாதே. இந்தியதேசமே! எங்களுக்காக உயிர்க் கொடை செய்தபடியிருக்கும் எங்கள் பிள்ளையைக் காப்பாற்று” என்றகுரல் நல்லூர் வீதியில் உரக்க ஒலித்துக் கொண்டிருந்தது. அக்குரலுக்கு இந்தியதேசம் செவி மடுக்கவில்லை.

உண்ணாவிரதியாக இருந்து கொண்டு மக்களுக்கு உரையாற்ற வேண்டும் என்ற தனது விருப்பத்தைத் திலீபன் வெளிப்படுத்த, புலிகளின் முக்கிய போராளியான தேவர் என்பவர் “நீங்கள் உண்ணா நோன்பு மேற்கொண்டு இருக்கின்றீர்கள். களைத்துவிடுவீர்கள்” எனக் கூறி ஆசுவாசப்படுத்தினார். “இரண்டு நிமிடம் தான் பேசுவேன் ஒலிவாங்கியை வாங்கித்தாருங்கோ” என்று பவ்வியமாகத் திலீபன் கேட்க “இரண்டு நிமிடம் மட்டுமே பேசவேண்டும்” என்ற நிபந்தனையுடன் திலீபனுக்கு ஒலிவாங்கி வழங்கப்பட்டது.

திலீபன் பேசப்போகிறான். நல்லூர் முழுவதும் அவனது குரல் ஒலிக்கப்போகின்றது. திரண்டிருந்த மக்கள் என்ன பேசப் போகின்றார்? எதனைப் பேசப் போகின்றார்? என்ற கேள்வியோடு அவனது குரலுக்கு மதிப்பளித்துப் பேச்சைக் கேட்கத் தயாராயினர்.

“எனது அன்புக்கும் மதிப்புக்குமுரிய தமிழீழ மக்களே! அனைவருக்கும் வணக்கம்!

என்னால் நின்று கொண்டு பேச முடியாத நிலையில் இருப்பதனால் இருந்து பேசுகின்றேன். நாளை நான் சுய நினைவுடன் இருப்பேனோ தெரியாது. அதனால் இன்று உங்களுடன் பேச வேண்டும் என்று விரும்பினேன். நாம் எமது இலட்சியத்தில் உறுதியாக இருக்கிறோம். 650 போராளிகள் இன்றுவரையில் மரணித்துள்ளனர்.

மில்லர் இறுதியாகப் போகும் போது என்னிடம் ஒருவரி கூறினான். நான் அவனுடன் இறுதிவரை இருந்தேன். நான் எனது தாய்நாட்டுக்காக உயிர்துறப்பதை எண்ணும் போது மகிழ்ச்சியும், திருப்தியும், அடைகின்றேன். மக்கள் விடுதலை அடையும் காட்சியை என் கண்களால் காணமுடியாது என்பது ஒரே ஏக்கம் என்று கூறிவிட்டு வெடிமருந்து நிரப்பியலொறியை எடுத்துச் சென்றான். இறந்த 650 போராளிகளும் எனக்குத் தெரிந்து தான் மரணித்தார்கள். அதனை நான் மறக்கமாட்டேன். உண்ணாநோன்பு போராட்டத்தை ஆரம்பிப்பதற்கு தலைவரின் அனுமதியைக் கேட்டபோது அவர் கூறியவரிகள் என் நினைவில் உள்ளன.

திலீபா நீ முன்னால்போ... நான் பின்னால் வருகிறேன் என்று அவர் கூறினார். இத்தகைய தெளிவான தலைவனைத் தனது உயிரைச் சிறிதும் மதிக்காத தலைவனை நீங்கள் பெற்றிருக்கின்றீர்கள். அந்த மாபெரும் வீரனின் தலைமையில் ஒரு மக்கள் புரட்சி இங்கு வெடிக்கட்டும் அது நிச்சயமாக தமிழீழத்தில். தமிழர்களின் அடிப்படை உரிமைகளைப் பெற்றுத் தரும். இதனை வானத்திலிருந்து சாவடைந்த மற்றப் போராளிகளுடன் சேர்ந்து நானும் பார்த்து மகிழ்வேன். நான் மனரீதிரியாக, ஆத்மார்த்தமாக எமது மக்கள் விடுதலை அடைவார்கள் என உணர்கின்றேன். மகிழ்ச்சியுடனும். பூரணதிருப்தியுடனும் உங்களிடமிருந்து விடைபெறுகின்றேன்.

விடுதலைப்புலிகள் உயிரினும் மேலான சிறுவர்களை. சகோதரிகளை, தாய்மார்களை. தந்தையர்களை, நினைக்கிறார்கள். உண்மையான உறுதியான, இலட்சியம். அந்த இலட்சியத்தை எமது தலைவருடன் சேர்ந்து நீங்களும் அடையுங்கள் எனது விருப்பமும் இதுதான்”

மிகவும் ஆறுதலாகவும், சோர்வுடனும் ஆனால் திடமுடன் பேசிய திலீபனின் பேச்சைக் கேட்டு மக்கள் கண்ணீர் சிந்தினர்.

“

திலீபன் பேசப் போகிறான். நல்லூர் முழுவதும் அவனது குரல் ஒலிக்கப் போகின்றது. திரண்டிருந்த மக்கள் திலீபனின் பேச்சை செவி மடுக்க ஆவல் கொண்டனர். என்ன பேசப் போகின்றார்? எதனைப் பேசப் போகின்றார்? என்ற கேள்வி யோடு அவனது குரலுக்கு மதிப் பளித்துப் பேச்சைக் கேட்கத் தயாராயினர்.

11 நாள்களாகத் தொடர்கிறது திலீபனின் அகிம்சைப் போராட்டம். 26.09.1987அன்று மு.ப.10.48மணியளவில் தியாகச்சுடர் திலீபனைப் பரிசோதித்த மருத்துவர் எஸ்.சிவகுமாரன் திலீபன் உயிர் நீத்ததை உறுதிப்படுத்துகின்றார். திலீபன் உயிர் பிரிந்த செய்தியை அறிந்ததும் பல்லாயிரக்கணக்கான மக்கள் கதறி அழுகின்றனர். தங்கள் பிள்ளையை இழந்தது போல் கலங்கி நின்றனர். திலீபன் முன்வைத்த ஐந்து அம்சக் கோரிக்கைகள் தூக்கி வீசப்பட்டன. இந்தியா உண்ணா நோன்புப் போராட்டத்தை உதாசீனம் செய்தது, 12 நாள்கள் தொடர்ந்த திலீபனின் போராட்டத்தைஅசண்டை செய்தது. திலீபனை வேண்டுமென்றே சாகடித்தது. இந்தியா இப்படிச் செய்துவிட்டதே?... ஐந்து அம்சக் கோரிக்கைகளையும் பரிசீலனை செய்கின்றோம் போராட்டத்தைக் கைவிடுங்கள் என்ற இறுதிநேரத்திலாவது திலீபனிடம் கூறாதிருந்த இந்திய அரசு தமிழ்மக்களினது உணர்வுகளை மதிக்கத் தவறிவிட்டது. திலீபன் அணைப்பது சாவையா? இந்தச்சின்ன வயதில் அது தேவையா? என்று உணர்ச்சிக்கவிஞர் காசி ஆனந்தனின் கவிதை வரிகளில் வடித்த கேள்விக்கு தியாகம் தீபம் திலீபன் பதிலை அளித்து விட்டு தமிழ் மக்களிடமிருந்து விடைபெற்றான். இதன் மூலம் புலிகளை அழிப்பதில் இந்திய அரசினது திட்டம் உறுதியானது என்பது தெளிவானது. ஆயுதப் போராளி யான திலீபனை அகிம்சைப் போராளியாக்கி விட்டதும் இந்தியாவேதான். அவனை சாகடித்ததும் இந்தியாவே தான். இது தமிழ் மக் களால் உணரப்பட்டிருந்தது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஒரு குறியீடாகவும், தியாகி திலீபன் விளங்குகின்றான். இலங்கை அரசுகள் தங்களைப் பட்டினி போடு வதனாலேயோ, தம்மைப்படு கொலை செய்வதனாலேயோ, தமிழ் மக்கள் தம்முடைய போராட்ட உணர்வைக் கைவிடமாட்டார்கள். இது தமிழ் மக் களின் போராட்டமாகும். திலீபனின் அகிம்சைப் போராட்டம் இதனைத் தான் உணர்த்துகின்றது. நாங்கள் பசியோடு இருந்தாலும் சரி, உணவில் லாமல் போனாலும் சரி, மிகப்பெரியதுன்பங்கள் தொடர்ந்து வந்தாலும் சரி, போராடுவோம். போராட்டத்தைக் கைவிடோம் என்பது தான் அந்தக் குறியீடாகும்.

தியாகி திலீபனின் உண்ணா நோ்ன்புப் போராட்டம் இன்னுமொரு மிக முக்கியமான விடயத்தையும் சுட்டிக்காட்டியிருக்கின்றது. தமிழ் மக்கள் தமது விடுதலைப் போராட்டத்தை ஒரே ஒரு வடிவத்தின் ஊடாக மட்டுமே நடத்துவார்கள் என்பதில்லை. தமிழ் மக்கள் அந்தந்தக் காலங்களுக்கு ஏற்ப எந்தெந்த வகையில் போராட்டத்தை நடத்தி தங்களுடைய இலட்சி யத்தை அடையமுடியுமோ அந்தப் போராட்ட வடிவங்கள் அனைத்தையுமே கையாள்வார்கள் என்பதையும் திலீபனின் உண்ணாநோன்புப் போராட்டம் ஒரு குறியீடாகக் காட்டிநிற்கின்றது.

தமிழர்களின் போராட்டம் கரந்தடிப்போர் முறையாக மாறலாம். அல்லது மரபுப் போர் முறையாக இருக்கலாம். அல்லது இவையிரண்டும் கலந்த போர் முறையாகவும் இருக்கலாம். அல்லது அகிம்சைப் போராட்ட மாகவும் இருக்கலாம். தமது உரிமைகளைப் பெறுவதற்காகத் தமிழ் மக்கள் போராடுவார்கள். ஈடுசெய்ய முடியாத இழப்புகளைக் சந்தித்தாலும், இறுதி வரைக்கும் தாயக விடுதலைக்காகப் போராடுவார்கள்.

திலீபன் உறுதியான கொள்கையில் நின்றவன். அந்தக்கொள்கையே இன்றைய தமிழினத்தின் மூச்சாகவே இருக்கின்றது.

தியாகி திலீபன் முன்வைத்த ஐந்து அம்சக் கோரிக்கைகளை, உண்ணா நோன்பையும் அகிம்சைப் போராட்டத்தையும் உலகுக்கு அளித்ததாகப் புகழுரைத்த இந்தியநாடு கண்டு கொள்ளவேயில்லை. மகாத்மா காந்தியின் தத்துவங்களையும், புகழையும் தினமும் பாடும் இந்தியாவைக் காந்திதேசம் என்று கூறியவர்கள் திலீபனது அகிம்சைப் போராட்டத்தைக் குறை கூறினர், சாதாரணமாக எடைபோட்டனர். மகாத்மா காந்தி யார்? திலீபன் யார்?.. என்றவாறும் நையாண்டித்தனம் செய்தனர்.


“மகாத்மா காந்தி தண்ணீர் குடித்தாராம்... திலீபன் தண்ணீர் குடிக்கவில்லையாம்?... தண்ணீர் குடித்திருந்தால் இறந்திருக்கமாட்டார்” என்பதாக இந்தியத் தத்துவ வாதிகள் கிண்டலடித்தனர். இந்திய நாட்டின் ஆட்சியாளர்கள் காந்தி தேசம் என்று பெருமை பேசுபவர்கள் தியாகி திலீபனின் அகிம்சைப் போரைக் கண்டு கொள்ளாமல் அவர் சாவடையட்டும் என நாட்களை எண்ணிக் கொண்டிருந்தனர்.

தியாகி திலீபனுடைய இளவயதுப் போராட்டம் இருவகையானது. விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இணைந்து கொண்ட திலீபன் முதலில் ஆயுதப் போராளி. ஊரெழு மைந்தனான திலீபன் 11மாதக் குழந்தையாக இருக்கும்போது தாயை இழந்தவன். பார்த்திபன் என்ற இயற்பெயரைக் கொண்ட திலீபன் தமிழ் மக்களுக்காக சொந்த வாழ்க்கையைத் தூக்கி எறிந்துவிட்டு மக் களின் விடிவுக்கான போராட்டமே மேலென உறுதி பூண்டு தலைவ ரின் பின்னால் அணி வகுத்தவன்.

நல்லூரின் வீதியில் நடந்தது யாகம்...
நாலு நாள் ஆனதும் சுருண்டது தேகம்...
தியாகத்தின் எல்லையை
மீறிய பிள்ளை...
திலீபனைப் பாடிட
வார்த்தைகள் இல்லை...
பாடும் பறவைகளே பாடுங்கள் வீரன்
திலீபனைப் பாடுங்கள்...
தியாகத்தில் ஆகுதி ஆனவன் நாமத்தை
ஆயிரம்... ஆயிரம்... காலங்கள்
பாடுங்கள்...
வீரன் திலீபன் வாதாடினான்...
பசித்தீயில்குதித்துப் போராடினான்...!

என்ற வரிகளுக்கமைவாக உன்னத இலட்சியத்துக்காக தனது உயிரை ஈகம் செய்த திலீபனின் தியாகமும், பெயரும் தமிழினப் போராட்ட விடுதலைப் பயணத்தில் நீண்டதொரு சரித்திரமாகும்.





## வளரும் பயிரை வாழவைப்போம்

இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்
என்றிடும் வார்த்தையை மனங்கொண்டு
குன்றுபோல் உயர்ந்திடத் துடித்திடும் சிறார்களின்
துயரங்களைத் துடைத்திங்கு
வென்றிடத் துடித்திடும் அவர்களை நாம்தினம்
அன்பினால் அரவணைத் தணுகிடுவோம்

பேய்களும் பூதமும் உண்டென்று பிள்ளையின்
சின்ன மனதினைச் சிதைக்காமல்
பாய்ந்துமே வந்திடும் ஆவியைப் பாரெனத்
துணிவினைக் குழிதோண்டிப் புதைக்காமல்
பலமது பெற்றுமே நாளைய சந்ததி உருவாக
வீரத்தை ஊட்டிடுவோம்
நிலமதில் நிலையான பெயர் பெற
நல்லதைப் பாரினில் நாட்டிடுவோம்

போதைக்கும் புகைக்கும் அடிமையாய் மாறிடும்
சிறுவர்களை நாம் தடுத்திடுவோம்
பாதைகள் மாறியே செல்லாது இருக்கவே
நடவடிக்கை என்றும் எடுத்திடுவோம்

பிள்ளையின் நெஞ்சது பிஞ்சென முன்னவர்
சொல்லிய சொல்லினை நினைவில் வைப்போம்
கள்ளமில்லாதவர் உள்ளத்தில் நல்லதை
பசுமரத்தாணியாய் மனதில் தைப்போம்
கன்றினை ஒத்தவர் இன்று இந்தப் பூமியில்
பட்டிடும் அவலங்கள் தான் போக்கி
நின்றிட அவர்களை ஆளாக்கி
என்றென்றும் சிறார்களைப் பாதுகாப்போம்

ஸ்ரீ.சாரந்குமார்
யா/கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை


## வாழ்ந்து விடு நல்லவனாய்

மானிடனே! மமதைகொள்ளாதே! மதிகெட்டு நில்லாதே!
மானிலத்து வாழ்வு மிகக் கொஞ்சம் உணரட்டும் உன்நெஞ்சம்
சத்தமின்றி வந்துவிடும் சங்காரச் சாவுனக்கு
நித்தமும் அதை எதிர்பார்! சடுதியாய் வந்து விடும்
மரணமது வந்திட்டால் மறுத்து நிற்க முடியாது
தருணமது வந்து விட்டால் தப்பவும் முடியாது

கட்டிய மனைவியோ குஞ்சுகளோ குட்டிகளோ!
பெட்டியிற் பணமோ! பட்டினத்தார் உரைத்தபடி.
வாராது வாராது உன் வழிக்கு வாராது
கட்டிய கோவணமும் கழற்றி வீசிவிட்டு சவப்
பெட்டியிலிருந்துன்னை எடுத்திழுத்து எரித்திடுவர்
உணர்ந்துகொள் உண்மையிதை உணர்ந்து கொள்

பாவங்கள் வேண்டாம்! பாழ்வாழ்வும் இனி வேண்டாம்
சாபங்கள் வேண்டாம் சஞ்சலமும் இனி வேண்டாம்
போனதெல்லாம் போகட்டும் ஆனவை ஆகட்டும்
பண்ணிய புண்ணியம் உன் தலைகாக்கும் வினைபோக்கும்
நல்லதைச் செய்மகனே! நன்மைகள் கிடைத்துவிடும்
நல்லவனாய் வல்லவனாய் வாழ்ந்துவிடு வாழும்வரை

மிருசுவில் தமிழ்தாசன்
மீசாலை கிழக்கு



# தனியார் பஸ் சாரதியாகத் திகழும் ஒரு குடும்பப் பெண் அஞ்சலா

■ சிவப்பிரியன்



அவசர அவசரமாக வவுனியா-பாலமோட்டையிலுள்ள உறவினர் ஒருவரைச் சந்திப்பதற்கு ஆயத்தமாகி பஸ் நிலையம் நோக்கி விரைகின்றேன். தனியார் பஸ் ஒன்று புறப்படுவதற்கு இயங்கு நிலையில் நின்று கொண்டிருப்பதை அறிந்து அதிலேறி இருக்கை ஒன்றையும் பிடித்துக் கொண்டு விட்டேன். இப்போது பஸ் வண்டி மெல்ல மெல்ல நகர ஆரம்பிக்கின்றது. அலுக்கம் குலுக்கமில்லாமல் தனது வேகத்திலும் ஒரே சீரான தன்மை கொண்ட அதன் நகர்வு எனக்கு ஆச்சரியத்தைத் தந்தது. ஏனெனில் இதுவரை நான் பயணம் செய்த பஸ் வண்டிகள் மிஞ்சிய வேகத்துடன்; இருக்கையிலிருப்பவர்களையும் பயணிப்பவர்களையும் வளைத்து நெளித்து ஒருவகைப்படுத்தி விட்டிருந்தன. அதனுடன் அவை திடீரென வேகத்தைத் தணித்துக் கொள்ளும் போது முன்னே சென்று கரணம் அடித்தவர்களும் உண்டு. இத்தகைய அனுபவங்களை ஏற்படுத்தி விட்டிருந்த தற்காலத் தனியார் பஸ் பிரயா ணங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்ட விதத்தில் வீதி ஒழுங்குகளுக்கு ஏற்றவாறு நகர்ந்து சென்றுகொண்டிருக்கின்றது நான் பயணிக்கும் பஸ் வண்டி.

"ஐயாக்கள் தம்பியாக்கள் வாசலுக்கு நிற்காம மேல ஏறி வாங்கோ" என்ற கட்டளைக் குரல் ஒன்று திடமானதாக ஒலித்து மறைந்தது. என்ன ஆச்சரியம் அது ஒரு பெண்ணின் குரல். இப்பொது தான் எனக்குப் புரிகின்றது இந்த பஸ்ஸின் ஓட்டுநர் ஒரு பெண் என்று. ஆனாலும் நான் செல்லவேண்டிய நேர அட்டவணைக்குள் அந்தந்த ஊர்களையும் அடைந்திருந்தது அந்த பஸ். நிதானமாகப் பயணிகளைப் பக்குவமாகக் கொண்டு சேர்த்த அந்தப் பெண் சாரதியுடன் உரையாடியதிலிருந்து சம காலத்தில் சம உரிமைக்காகப் போராடும் பெண்களிலிருந்து முற்றிலும் மாறுபட்ட கொள்கை கொண்ட அவருடைய கருத்துக்கள் ஆச்சரியத்தையும். சமூகத்தில் வாழ்கின்ற ஏனைய பெண்களுக்கு நல்லதொரு படிப்பினையாக அமைந்தது.

"கோகிலகுமார் அஞ்சலா" என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டவர் "நான் வவுனியாவிலிருந்து பாலமோட்டைக்கான பஸ் சாரதியாகத் தொழில் செய்யிறன். ஒரு நாளுக்கு நான்கு தடவைகள் வரையில் பயணச் சேவையில ஈடுபடுறன். காலையில 6.20க்கு பாலமோட்டையில இருந்து வவுனியாவுக்குப் போவன். வவுனியாவில இருந்து மதியம் ஒருமணிக்கு பாலமோட்டைக்குப் போவன். மறுபடியும் 2.30 மணிக்கு வவுனியாவுக்குப் போய் 3.30மணிக்குப் பால மோட்டைக்குத் திரும்புவன்' என்கிறார். நாளொன்றுக்குக் கிட்டத்தட்ட 160 கிலோ மீற்றர்கள் சேவையிலீடுபடும் அவருடைய பஸ்வண்டியில் 50 வரையான இருக்கைகள் காணப்படுகின்றன.

**அஞ்சலாவின் ஆரம்பம்**

"வவுனியா-பாலமோட்டையில் வசித்து வந்த நாங்கள் போர் காரணமாக திருநாவற்குளம் பகுதிக்குள் இடம்பெயர்ந்தம். ஏ.எல். வரைக்கும் படிச்சிற்று 2002ஆம் ஆண்டில திருமணம் செய்தன். எனது கணவன் கோகிலகுமார் அவ்வேளை வவுனியா-கிடாச்சூரிக்கான பஸ் சேவையில ஈடுபட்டிருந்தார். சாரதியான அவரிடமிருந்து முறையான சாரதிப் பயிற்சி கிடைத்ததால் 26 வயதில் நான் சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொண்டேன். போர்ச்சூழலில் வருமானம் குறைந்ததால் வேலைவாய்ப்புத் தேடிக் கணவர் வெளிநாடு சென்றிருந்தார். இதனால் வாடகைச் சாரதியை வைத்து பஸ் சேவையைத் தொடர்ந்து வந்தேன். ஒருநாள் திடீரெனச் சாரதி வேலைக்கு வரவில்லை. அவசரத்துக்கு வேறு சாரதிகளைத் தேடியும் கிடைக்கவில்லை. கணவரிடம் கூறினேன். 'உம்மிடம் சாரதி அனுமதிப் பத்திரம் உள்ளது தானே நீங்களே சேவையை மேற்கொள்ளுங்கள்' என்றார். அத்துடன் அவர் வழங்கிய அறிவுரைகளையும் வழிகாட்டல்களையும் புரிந்துகொண்டு, வவுனியா-கிடாச்சூரிக்கான சேவையை 2007ஆம் ஆண்டுகளில் தொடங்கினேன். ஆரம்பத்தில் பயமாகவும் பதற்றமாகவும் இருந்தது. ஆனாலும் மனஉறுதியுடன் எனது சேவை தேவை என்றுணர்ந்து தொடர்ந்து மேற்கொண்டு வந்தேன். இப்போது எந்தச் சலனமுமின்றி நல்லதொரு சாரதியாக வவுனியா-பாலமோட்டைக்கான பஸ் சேவையை மேற்கொண்டு வருகின்றேன்"

**செய்யும் தொழிலில் திருப்தி**

"நான் ஆரம்பத்தில பஸ்சேவையில் ஈடுபட்டது போர்க் காலமாகையால் பாலமோட்டையிலிருந்த மக்கள் இடம்பெயர்ந்து வேறு இடங்களுக்குச் சென்றிருந்தனர். இதனால் எனது பஸ்ஸில பயணிப்போர் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவாயிருந்தனர். வருமானமும் குறைவு. எல்லா மக்களும் தங்களுடைய சொந்த இடங்களில் குடியேறிய பிறகு ஏற்ற அளவு தொகையினர் எனது பஸ்ஸில் பயணிக்கின்றனர். பாலமோட்டையிலுள்ளவர்கள் பெரும்பாலும் எனக்கு உறவினர்களாக இருப்பதாலும் நான் வாழ்ந்த ஊராகையாலும் எனக்குத் தயக்கமோ, பயமோ ஏற்படவில்லை. எனது ஊருக்கு எனது உறவினர்களை ஏற்றிச் செல்கின்றேன். இது எனக்குத் திருப்தியளிக்கின்றது. அத்துடன் என்னுடைய பஸ்சேவையில் எனது கணவரே நடத்துநராக இருக்கின்றார். பக்கபலமாக அவர் இருப்பதுவும் என்னால் திருப்தியான சேவையை மேற்கொள்ள முடிகின்றது"





**குடும்பம்-தொழில்**

"எனக்கு இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள். மூத்தது பெண்பிள்ளை, அவள் தரம் எட்டில் கல்விகற்கிறாள். அடுத்தது ஆண்பிள்ளை அவனுக்கு ஆறு வயது. பாடசாலைக்குச் செல்கிறான். இந்த பஸ்சேவையில் ஈடுபட்டுக்கொண்டு எனது குடும்பத்தையும் நல்ல முறையில் கவனிக்க என்னால் முடிகின்றது. இரண்டுக்கும் ஏற்றவாறு நேரத்தை ஒதுக்கிக் கொள்கிறேன். நாங்கள் இருவரும் இந்தத் தொழிலில் ஈடுபடுவதால் குடும்பச் செலவுக்கேற்ற வருமானமும் கிடைக்கின்றது. பிள்ளைகள் இது தொடர்பில் எந்தவித கருத்தும் தெரிவிப்பதில்லை. அவர்கள் சிறுவயதிலிருந்தே நான் பஸ் ஓட்டுவதைப் பார்த்து வளர்ந்தவர்கள். ஆகவே, அவர்களுக்கு இது சாதாரணமானது. எந்தப் பிள்ளையிடமும் ஆண், பெண் என்ற பாகுபாட்டைப் புகுத்தாமல் சமமான எண்ணங்களைப் புகுத்தி முன்னுதாரணமாகத் தாங்களும் செயற்பட்டு வந்தால் இன்றுபோல வருங்காலத்தில் பெண்கள்! பெண்கள்! என்று கூச்சலிடத் தேவையில்லை. எனது குடும்பத்தைக் கவனிப்பதிலும் தொழிலைச் செய்வதிலும் நான் சந்தோசமடைகின்றேன்"

**இடையூறுகள்**

"ஒரு பெண்ணாக இந்தத் தொழிலை மேற்கொண்டுவருவதால் ஏராளம் பிரச்சினைகளை நான் சமாளித்து வருகிறேன். பயணங்களில் மதுபோதையில் வருபவர்கள், மிதிபலகையில் நின்று பயணிப்பவர்கள் போன்ற சிரமங்களைச் சமாளிக்க வேண்டியுள்ளது. அத்துடன் சமூகத்தின் பார்வை. இத்தகைய தொழில்களில் பெண்கள் ஈடுபடுவதில்லை. சமவுரிமை கேட்டுப்போராடுபவர்களும் இவ்வாறான தொழில் செய்வதில் உரிமை கேட்பதில்லை. ஒரு பெண் இவ்வாறு முன்வந்து துணிந்து தொழில் செய்கிறாளே என்று பாராட்டவேண்டிய சமூகம் அதற்கு எதிராகப் போட்டியையும் பொறாமையையுமே வெளிப்படுத்துகின்றது.பலரின் இழி சொற்களுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளது. பெண்ணாக இருந்து நான் சாதிப்பதை இந்தச் சமூகம் ஏற்றுக்கொள்வதாகத் தெரியவில்லை. குறிப்பாக வீதியில் பயணிக்கும்போது ஏனைய சாரதிகளுக்கிடையே பொறாமைகள் இருப்பதை நான் அவதானித்துள்ளேன். அத்துடன் பெண் சாரதியை வெளியேற்ற வேண்டும் என்ற எண்ணமுடையோரும் இருக்கின்றனர்"

**பெண்கள் எதிலும் முன்வரவேண்டும்**

"எனது கணவரின் ஒத்துழைப்பில் எமது குடும்பம் ஒற்றுமையாகப் பயணிக்கின்றது. பிள்ளைகளுக்குத் தேவையானவற்றைச் செய்து கொடுக்கின்றோம். மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பது எமக்குத் தேவையற்றது. ஆரம்பத்தில் பலரின் வீண்சொற்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்தது. அதிலிருந்து ஒரு படிப்பினையைப் பெற்றுள்ளேன். நான் மட்டுமே இங்கு வவுனியாவில் பஸ்ஸைச் செலுத்தக் கூடாது. அஞ்சலா மட்டும்தான் பஸ் ஓடுகிறாள் என்ற கருத்தை மாற்ற வேண்டும். நிறையப் பெண்கள் முன்வரவேண்டும் சம உரிமை சம உரிமை என்று தம்மை இலகு துறைகளுக்குள் புகுத்திக்கொள்ளப் போராடுவதை நிறுத்தி அவரவருக்கு ஏற்ற நிலைகளில் முன்னின்று பெண்களால் எல்லாம் செய்யமுடியும் என்று நிரூபிக்கவேண்டும். அவ்வாறான நிலை உருவானால் சமூகமும் திருந்திக்கொள்ளும்" என்கிறார் வியர்வைசிந்தி உழைத்துக்கொள்ளும்சாரதியான கோகிலகுமார் அஞ்சலா.



# கல்யாண வீடு

ஞானாம்பிகா



நானும் சென்றேன், நண்பர் மானிப்பாய் சுதன் அவர்கள் சென்ற கல்யாண வீட்டுக்கு நான் 'கியூ'வில் நிற்கவில்லை. அறுகரிசி போடுவதற்கு! ஏனெனில் கியூ அநுமார் வால் போல் நீண்...டிருந்தது! நானோ இளசுகள் சொல்வதுபோல் நைன்ரி! என்னால் அதிகநேரம் நிற்கமுடியாது. எனது சிநேகிதியின் தம்பி மகளின் திருமணம். சிநேகிதியின் மகனின் மனைவி 'கியூ'வில் நின்றிருந்தார். அவரிடம் பணத்தைக் கொடுத் துக் கூறினேன் மணப்பெண்ணிடம் கொடுக்கும் படி. பின்னர் பக்கத்து வழியால் வெளியேறியபோது மணமகளின் தந்தையார் நின்றார். எனக்கு மிகவும் பழக்கமானவர். "சாப்பிட்டு விட்டீர்களா?" என்று கேட்டார். "சாப்பிடுவம்!" என்று கூறியபடியே அடுத்தவாசலால் வெளியேறினேன். இப்பவே இரண்டு மணி. நடையைக்கட்டினேன் வீட்டுக்கு. குளிரூட்டியில் இருந்த சோறு, கறியைச் சுடவைத்துச் சாப்பிட் டேன். இதுதான் மண்டபத்தில் நடக்கின்ற கோலாகலமான திருமணம்!!

முன்பு அவரது வீட்டிலும் ஒரு திருமணம் நடந்தது. ஓட்டோவில் போயிருந்தேன். அறு கரிசி போட்டு முடிய நேரம் பார்த்தேன். மதிய உணவு நேரத்தைத் தாண்டிவிட்டது. மெல்ல நழுவியபோது. "சாப்பிட்டாதா?" என்று கேட்கவும். ஆமென்று தலையாட்டி விட்டு நேரே ஓட்டோவுக்கு போய்ச்சேர்ந்தேன்! அப்பாடா! ஒன்று விட்ட தம்பி வீட்டுக் கல்யாணம். அதுவும் மண்டபத்தில். அறு கரிசி போட்டா யிற்று. சிலர் உட்பக்கம் சென்றனர். மண்டபத்தில் எல்லாரும் கீழேயிருந்து சாப்பிட்டனர். என்னால் கீழே யிருந்தால் எழுந்து கொள்ள முடியாது. அப்போது தம்பியார் கேட்டார் சைகையால் சாப்பிட்டதா? என்று ஆமெனத் தலை யாட்டினேன். சிறிது நேரத்தில் மெல்ல நழுவி ஓட்டோவுக்குப் போய் விட்டேன். அயலில் திருமணம் அதுவும் மண்டபத்தில் தான். தெல்லிப்பழை அம்மன் கோயிலில். அறுகரிசி போட்டாயிற்று. அம்மனைச் சுற்றி வணங்கி விட்டு வந்த போது "வாகனத்தில் ஏறுங்கோ" என்னும் குரலையடுத்துப் பலர் ஏறிக் கொண்டனர். நானும் ஏறியமர்ந்தேன். வாகனம் மணமகன் வீடு நோக்கிச் சென்றது. நான் நினைத்தேன் சாப்பாடு வீட்டில் போலும் என்று. திருமணவீட்டின் முன் வாகனம் நின்றது. இறங்கியவர்கள் தமது வீடுசென்றனர். யானும் நடையில் எனது வீடு சென்றேன். சனங்கள் மண்டபத்தில் சாப்பிட்டது எனக்குத் தெரியவே தெரியாது! யானும் நாகரிகமானவள் தான், சாப்பிடும் இடம் கேட்க வெட்...கம். இன்னொரு கல்யாணவீடு தம்பியாரின் அந்த மகளுக்கு! அறுகரிசி போட்டாயிற்று. அதில் தவறமாட்டேன்! பின்பக்கம் போனேன். உணவுப் பாத்திரங்கள் வைத்திருக்கும் இடத்துக்கு வடையாவது சாப்பிட்டுப் வரலாமென்று பரிமாறுபவர் ஒருவர் கேட்டார். "சாப்பிடுங்கோ!" என்று கீழேயிருக்கமுடியாது! என்ற போது உணவு போட்டுத்தந்துவிட்டு "வாருங்கோ வாங்கில் இருக்கு" என்று அழைத்தார். இரண் டங்குல உயரச் சிறுவாங்கு! அதில் இருந்து எழும்புவதில் பார்க்க நின்று கொண்டே சாப்பிடலாம் போல் தென் பட்டது! யோசனை யில் இருந்தபோது "இருந்து சாப்பிடுங்கோ" என்றார்! வாங்கு காட்டியவர் வேறுவழி யின்றி அதிலிருந்து சாப்பிட்டு எழுந்தேன்.

"கல்யாண சமையல் சாதம் ரொம்பப் பிரமாதம் அதுவே எனக்குப் போதும்" என்னும் பழையபாடல் மனதில் ரீங்காரமிட்டது. நல்லவேளை அடுத்தவரின் வாயிலிருந்த பயற்றங் காய் துண்டு எனது கோப்பையில் விழவில்லை.





**மேடம்:** நற்செயல்களில் ஈடுபட்டு புகழ் பெறுவீர்கள். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடந்தேறும். தொழில், வியாபாரத்தில், வருமானம் அதிகரிக்கும். நண்பர்களால் உதவி உண்டு. விருந்து, விழாவில் பங்கேற்பீர்கள்.

**இடபம்:** வீடு, வாகன வகையில், புதிய மாற்றம் செய்ய நேரிடலாம். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சி பெற அக்கறை காட்டுவீர்கள். இலாபம் சுமாராக இருக்கும். மனைவியின் ஆலோசனை நம்பிக்கையளிக்கும்.

**மிதுனம்:** முக்கிய செயலைப் பொறுப்புடன் நிறைவேற்றுவது நல்லது. தொழில், வியாபாரத்தில், போட்டி அதிகரிக்கும். இலாபம் மிதமாக இருக்கும். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**கடகம்:** பணிகளில் நேர்த்தியுடன் ஈடுபடுவீர்கள். மனதில் நிம்மதியும், பெருமிதமும் உண்டாகும். தொழில், வியாபாரத்தில், திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு பூர்த்தியாகும். பிள்ளைகளின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**சிங்கம்:** பிறரிடம் அதிக நெருக்கமுடன் பழக வேண்டாம். தொழிலில் உள்ள அனுகூலத்தைப் பாதுகாப்பது நல்லது. பெண்கள், செலவில் சிக்கனமாக இருப்பது அவசியம். ஆரோக்கியம் பெற மருத்துவ சிகிச்சை உதவும்.

**கன்னி:** மதிநுட்பத்துடன் செயலில் ஈடுபடுவீர்கள். சிறிய முயற்சியும் அதிக அளவில் நன்மையளிக்கும். தொழிலில் அபிவிருத்தி செய்ய, மூலதனத்தை அதிகப்படுத்துவீர்கள். எதிர்பார்த்த சுபச் செய்தி வந்து சேரும்.

**துலாம்:** சிலரது அவசியமற்ற பேச்சால், சங்கடம் உருவாகும். தொழில், வியாபாரத்தில், பொறுப்பு அதிகரிக்கும். உணவு விடயத்தில் எச்சரிக்கையாக இருக்கவும். வெளியூர் பிரயாணம் செல்ல நேரிடலாம்.


**விருச்சிகம்:** மனதில் சாந்தம் நிறைந்திருக்கும். நண்பரின் ஆலோசனையை மதித்து நடப்பீர்கள். தொழில், வியாபாரத்தில், வாக்குறுதியை நிறைவேற்றுவீர்கள். வருமானம் அதிகரிக்கும். மாணவர்கள் ஆர்வத்துடன் படிப்பர்.

**தனுசு:** பணிகளில் உற்சாகத்துடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில், திட்டமிட்ட வளர்ச்சி நிறைவேறும். அதிர்ஷ்டவசமாக வருமானம் அதிகரிக்கும். பெண்கள், வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**மகரம்:** பொறுமையுடன் செயற்படுவது நல்லது. தொழில் சார்ந்த குறையை, பிறரிடம் விவாதிக்க வேண்டாம். பணவரவை விட, நிர்வாகச் செலவு அதிகரிக்கும். அரசியல் வாதிகளுக்கு, அரசு அனுகூலம் கிடைக்கத் தாமதம் உண்டாகலாம்.

**கும்பம்:** பணிகளில் பொறுப்புடன் ஈடுபடுவது அவசியம். தொழில், வியாபார வளர்ச்சிக்கு, அனுபவசாலியின் ஆலோசனை கை கொடுக்கும். மனைவியின் அன்பைப் பெற்று மகிழ்வீர்கள். வாகனப் போக்குவரத்தில் கவனம் தேவை.

**மீனம்:** திறமையுடன் செயற்பட்டு வெற்றி பெறுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் பன்மடங்கு உயரும். போட்டியாளர்களால் ஏற்பட்ட தொல்லை மறையும். பிள்ளைகளின் செயற்பாடு பெருமையளிக்கும்.




பேய்க்குக் கால் இல்லை... என்று சொன்னாலும் நம்புறாங்க...! பேய் வந்தா கொலுசு சத்தம் கேட்கும் எண்டு சொன்னாலும் நம்புறாங்க...! முடியலடா ... உங்களோட...!



காலையில சாப்பிட்டுட்டு இருக்கும் போது கணநேரத்தில் உதித்த சந்தேகம்... ஒருவேளை இட்லி சீனச் சாப்பாடா இருக்குமோ? புரூஸ் லீ..., ஜெட்லீ..., இட்லீ...!!!



## தமிழில் நடிக்க விரும்பும்



## மிஸ் இந்தியா

ஆஸ்திரேலியாவில் வாழும் பெங்களூரைச் சேர்ந்த ஆஷிமா. சிறுவயதிலிருந்தே நடனத்தின் மீது ஆர்வம். அதனால் முறையாக நடனம் கற்றார். நன்றாக ஓவியமும் வரைவார். முறைப்படி அந்த கலையையும் கற்றுள்ளார். 2015ஆம் ஆண்டு சிட்டினியில் நடந்த மிஸ் ஆஸ்திரேலியா அழகு போட்டியில் முதலிடத்தை வென்ற ஆஷிமா, அதே ஆண்டில் மிஸ் இந்தியா குளோபல் போட்டியில் முதலிடத்தை வென்றார்.

அதன்பிறகு மாடலாக உலா வந்தார். சில விளம்பர படங்களில் நடித்தார். பியார்கே தாரா என்ற இந்தி இசை அல்பத்தில் ஆடினார். ஆஷிமாவுக்கு தற்போது சினிமாவில் நடிக்கும் ஆசை வந்திருக்கிறது. இதற்கு முன் வந்த நிறைய வாய்ப்புகளை மறுத்துவிட்டார். சமீபத்தில் சென்னையில் நடந்த ஒரு தனியார் விருது வழங்கும் விழாவில் கலந்து கொள்ள வந்திருந்த ஆஷிமா இயக்குநர் ஏ.ஆர். முருகதாஸ் உள்ளிட்ட முக்கிய இயக்குநர்களைச் சந்தித்து பேசியிருக்கிறார். விரைவில் ஒரு தமிழ் படத்தில் ஆஷிமா நடிக்கிறார். இதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடந்து வருகின்றன.



கணவன்
அன்பே... இம்மாதம் இங்கு செலவுகள் அதிகமாகி விட்டதால் என்னால் பணம் அனுப்ப முடியுவில்லை. 100 முத்தங்கள் அனுப்புகின்றேன். வெற்றுக் கொள்...

மனைவி
அன்பே.. நீங்கள் அனுப்பிய ஆசை முத்தங்களைப் வெற்றுக் கொண்டேன். அதில் 10 முத்தங்களை பால்காரனுக்கும் 30 முத்தங்களை வீட்டு உரிமையாளருக்கும் 60 முத்தங்களை மளிகைக் கடைக்காரனுக்கும் கொடுத்து விடுகிறேன்.



## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | 1 | |
| 4 | 8 | | 1 | 5 | | 7 | | |
| 6 | | | 4 | | | | | |
| | 1 | | | | | 6 | 2 | |
| | | | 2 | | | | | |
| | | 5 | | 7 | 3 | | | |
| 1 | | 9 | 5 | 8 | | | | |
| 3 | 4 | | | | | | 8 | |
| | | | 7 | | | | | 2 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 5 | 1 | 4 | 6 | 7 | 8 | 9 | 3 |
| 4 | 9 | 3 | 1 | 5 | 8 | 2 | 7 | 6 |
| 7 | 6 | 8 | 2 | 3 | 9 | 4 | 1 | 5 |
| 3 | 7 | 5 | 9 | 1 | 2 | 6 | 4 | 8 |
| 6 | 8 | 9 | 7 | 4 | 3 | 1 | 5 | 2 |
| 1 | 2 | 4 | 6 | 8 | 5 | 9 | 3 | 7 |
| 9 | 4 | 2 | 3 | 7 | 6 | 5 | 8 | 1 |
| 8 | 3 | 6 | 5 | 9 | 1 | 7 | 2 | 4 |
| 5 | 1 | 7 | 8 | 2 | 4 | 3 | 6 | 9 |

"தேர்வில் கேள்வி எல்லாமே ஈஸியாத்தான் இருந்துச்சுப்பா"
"அப்புறம் எப்படிடா மார்க் கம்மியாச்சு?"
"கேள்விதானே ஈஸியா இருந்துச்சுன்னு சொன்னேன்?"

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்கரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட் டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகர மாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.






குறைந்த வெளிச்சம் தரும் [டிம்] மெழுகு வர்த்தி ஸ்ராண்டுகள் அறிமுகமாகியுள்ளன. பகட்டான வடிவமைப்பில் மெழுகுதிரி தாங்கியாகவும், அவற்றில் அமைக்கப்பட்டுள்ள மூடியால் குறைந்த வெளிச்சத்தை கொடுக்கக் கூடிய விதத்திலும் வடிவமைக்கப்பட்டுள்ளது. நெருப்பின் நேரடி வெளிச்சமில்லாமல் மூடியின் நிறத்தில் வர்ண வெளிச்சம் தென்படும். இந்தத் தாங்கி 680 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகிறது.

## நாளை

புரட்டாதி-17
திங்கட்கிழமை -03.10.2016
திதி: துதியை கா. 08.58
நட்சத்திரம்: சுவாதி பி.இ.05.14
ராகுகாலம்: 07.32-09.02 வரை
சுபநேரம்: 12.02-01.32 வரை

## பல்வேறு மருத்துவக் குணங்களைக் கொண்ட கரட்

கரட்டில் பல்வேறு மருத்துவ குணங்கள் அடங்கியுள்ளன. கரட் சாறு குடித்துவர வயிற்றில் உள்ள புழுக்கள் வெளியேறும். வயிறு சுத்தமாகும். உணவு நன்கு செரிமானம் ஆகும். இது பூச்சிகளால் வரும் நோய்களைத் தடுக்கிறது.

- உலர்ந்த சருமம் இருப்பவர்கள் கரட் சாறுடன் தேன் அல்லது ஒலிவ் எண்ணெய் சேர்த்து முகத்தில் தடவி 15 நிமிடங்கள் கழித்து கழுவினால் சருமத்துக்குத் தேவையான சத்து கிடைக்கும்.
- கரட்டில் உள்ள விற்றமின் ஏ சத்து கண்களுக்குப் பலம் கொடுக்கக் கூடியது. விழித்திரைக்குப் பலம் சேர்க்கும். கண்பார்வை நன்றாக இருக்கும். தோலுக்கு ஆரோக்கியத்தைத் தருகிறது.
- கோடைக்காலத்தில் வெளியில் சென்று வரும்போது புறஊதாக் கதிர்கள் தோலைப் பாதிக்கிறது. தோல் கருப்பாவதைத் தடுக்கிறது. தோலில் சிறு கீறல் காயம், அரிப்பு இருந்தால் கரட்டை பசையாக்கித் தடவினால் சிவப்புத் தன்மை போகும். வேர்க்குரு மறையும்.
- தோலில் ஏற்படும் பிரச்சினைக்கு மேல்பூச்சு மருந்தாகிறது. புண்களை ஆற்றும் வல்லமை உடையது. கரட் கிருமிகளை அழித்து நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கிறது. வீக்கம், வலியை கரைக்கக் கூடியது. கரட்டைப் பயன்படுத்தி கோடைகாலத்துக்கான ஜூஸ் தயாரிக்கலாம்.
- ஒரு டம்ளர் கரட் சாறுடன் சிறிது ஏலக்காய்ப் பொடி, பனங்கற்கண்டு சேர்த்துக் காலையில் குடித்துவர உடல் சோர்வு நீங்கி புத்துணர்வு ஏற்படும். உடலுக்குக் குளிர்ச்சியைத் தருகிறது.
- கோடைகாலத்தில் உடலில் இருந்து வெளியேறும் நீர்ச்சத்தை சமப்படுத்தும், நாக்கு, தொண்டை, குடலில் புற்றுநோய் வராமல் தடுக்கிறது. கரட்டைப் பயன்படுத்தி அல்சருக்கான மருந்துத் தயாரிக்கலாம்.
- கரட் துருவலுடன் உப்பு, அரை ஸ்பூன் தனியா பொடி, மல்லி, புளிப்பில்லாத தயிர் சேர்த்து கலந்து சாப்பிட்டுவர வயிற்றுப்புண் சரியாகும். வயிற்று வலி குணமாகும். நாள் முழுவதும் புத்துணர்வு ஏற்படும்.
- எலும்புகள், பற்கள், தோல், கண் ஆகியவற்றுக்கு நன்மை தரும். கரட்டை மென்று சாப்பிட்டு வந்தால், வாயில் இருக்கும் கிருமிகள் போகும். பற்களுக்கு பலம் கிடைக்கிறது. ஈறுகள் கெடாமல் இருக்கும். வாய்ப்புண்கள் குணமாகும்.



## இறால் கட்லட்

**தேவையான பொருள்கள்**

இறால் - 500 கிராம்
தேங்காய் - 1 கப்
ரொட்டித்தூள்- 1 மேசைக்கரண்டி
பெரிய வெங்காயம் -1
மஞ்சள் தூள் - ½ தேக்கரண்டி
மிளகாய்த்தூள் - ½ தேக்கரண்டி
முட்டை - 1
எண்ணெய்- தேவையான அளவு
உப்பு - சிறிதளவு

### செய்முறை

இறாலை அரைக்க வேண்டும். பச்சையாக அரைப்பதைவிட கொஞ்சம் நீரில் போட்டு ஒரு கொதி கொதிக்க விட்டு எடுத்து அரைப்பது எளிதாக இருக்கும்.

தேங்காயைத் துருவவும். வெங்காயத்தை வெட்டி வைக்கவும். முட்டையை நன்கு அடித்துக் கொள்ளவும்.

இவை அனைத்தையும் சேர்த்து உப்பு, மிளகாய்த்தூள் சேர்த்து நன்கு பிசையவும். கட்லட்டாகத் தட்டிக் கொண்டு காய்ந்த எண்ணெயில் போட்டு லேசாகச் சிவக்கும் அளவுக்கு வேகவிட்டு எடுக்கவும். சுவையான இறால் கட்லட் தயார்.

## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | 50 | 80 | 60 | 40 | 40 | 30 | 50 |
| கத்தரி | 80 | 60 | 50 | 80 | 40 | 40 | 90 | 35 |
| கரட் | 80 | 100 | 100 | 100 | 100 | 100 | 110 | 100 |
| மரவள்ளி | 70 | 70 | 60 | 80 | 40 | 60 | 80 | 60 |
| பயிற்றை | 150 | 120 | 130 | 160 | 200 | 40 | 100 | 60 |
| பாகல் | 100 | 100 | 160 | 120 | 200 | 120 | 150 | 70 |
| கருணைக்கிழங்கு | 120 | 120 | 100 | 120 | 80 | 120 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 80 | 100 | 90 | 100 | 100 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 80 | 100 | 100 | 100 | 80 | 120 | 90 | 70 |
| பூசணி | 30 | 40 | 40 | 40 | 25 | 60 | 70 | 30 |
| தக்காளி | 100 | 80 | 70 | 80 | 80 | 80 | 120 | 40 |
| வாழைக்காய் | 70 | 60 | 60 | 60 | 80 | 80 | 70 | 40 |
| கீரை | 30 | 20 | 30 | 20 | 30 | 20 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 30 | 30 | 20 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 100 | 70 | 100 | 60 | 70 | 100 | 200 | 70 |
| புடோல் | 50 | 50 | 30 | 60 | 30 | 40 | 70 | 50 |
| கோவா | 80 | 80 | 80 | 80 | 80 | 100 | 90 | 50 |
| வெண்டி | 80 | 80 | 100 | 80 | 80 | 40 | 70 | 30 |
| போஞ்சி | 160 | 160 | 200 | 160 | 220 | 200 | 130 | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 | 120 | 120 | 100 | 90 | 100 |
| தேங்காய் | 50 | 30 | 40 | 35–40 | 30 | 20 | 15–25 | 30 |
| உருளைக்கிழங்கு | 110 | 110 | 110 | 110 | 110–120 | 100 | 85 | 120 |
| தேசிக்காய் | 300 | 300 | 400–600 | 360 | 300 | 200 | 120 | 200 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 10 | 10 | 10 |
| கறிமிளகாய் | 100 | 90 | 100 | 120 | 100 | 100 | 200 | 70 |
| இராசவள்ளி | 160 | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 100 | 70 | 100 | 60 | 80–100 | 200 | 80 | 100 |

## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | [illegible] | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 650 | 500 | 700 | 700 | 700 | 800 |
| நண்டு | 250 | 400 | 200 | 400 | 400 | 400 | 600 |
| கணவாய் | 600 | 650 | 400 | 600 | 600 | 800 | – |
| பாரை | 550 | 600 | 400 | 800 | 500 | 500 | 300 |
| சுறா | 500 | 600 | 500 | 800 | 600 | – | – |
| சீலா | 300 | 400 | 300 | 600 | 300 | 400 | – |
| விளை | 650 | 500 | 300 | 600 | 400 | 400 | 500 |
| முரல் | 300 | 400 | 300 | 500 | 300 | – | – |
| கும்பிளா | 400 | 400 | 400 | 400 | 300 | 300 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | 300 | 500 | 400 | 300 | – |
| ஓரா | 400 | 400 | 300 | – | 300 | – | 400 |
| திரளி | 300 | 300 | 100 | 150 | 200 | 100 | 400 |
| நகரை | 250 | 300 | 100 | 250 | 300 | – | – |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 100 | 100 | – |
| ஒட்டி | 300 | 200 | 200 | – | 200 | 300 | 200 |
| திருக்கை | 150 | 300 | 200 | 400 | 200 | 200 | 170 |
| மதனம் | 150 | 200 | – | 400 | 300 | 300 | 300 |
| கொய் | 100 | 150 | 50 | 70 | 100 | 50 | – |
| பாலை | 400 | 100 | 300 | 400 | 200 | – | – |
| வாழை | 100 | 150 | – | 400 | 300 | – | – |



# இராணுவ வீராங்கனை டெல்ருக்சியை வீழ்த்தி அனித்தா

# இலங்கையின் ஜாம்பவானானார்

நடப்பு வருட தேசியமட்ட தடகளத் தொடர் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்று வருகிறது. பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் 3.41 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து அனித்தா புதிய சாதனை படைத்தார். இலங்கை ரீதியில் அனித்தாவுக்கு கடும் போட்டியாளராக ஒருவர் உள்ளார் என்றால், அவர் இராணுவ வீராங்கனை டெல்ருக்சியாகத்தான் இருக்க முடியும்.



அனித்தா, டெல்ருக்சி இருவருக்கும் இடையில் உள்ள போட்டித் தன்மை மிகவும் சுவாரஸ்யமானது. கடந்த மாதம் மத்திய பகுதியில் தியகம மகிந்த ராஜபக்ச விளையாட்டரங்கில் நடைபெற்றஜோன்காபெற் போட்டியில் 3.35 மீற்றர் உயரத்தக்குப் பாய்ந்து அனித்தா சாதனை படைத்தார். ஆனால், இந்தச் சாதனையை டெல்ருக்சி நீடிக்க விடவில்லை. அடுத்த வாரமே நடைபெற்ற போட்டியொன்றில் 3.40 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து அனித்தாவின் பெயரில் இருந்த சாதனையை தனது பெயரில் மாற்றி எழுதினார். இந்த நிலையில் இந்த இரு வீராங்கனைகளும் நடப்பு வருட தேசியமட்ட தடகளத்தொடரில் நேற்று முன்தினம் ஒருவரை ஒருவர் எதிர்த்தனர். 3.41 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து மீண்டும் சாதனை படைத்தார் அனித்தா.

அவருக்கு கடும் போட்டியாளராகக் கருதப்பட்ட டெல்ருக்சியால் 3.10 மீற்றருக்கே பாயமுடிந்தது. அனித்தாவுக்கு தங்கப் பதக்கமும், டெல்ருக்சிக்கு வெள்ளிப் பதக்கமும் கிடைத்தன.

இந்த மாதத்தின் மத்திய பகுதியில், அனித்தா பாடசாலைகளின் தேசிய மட்டப் போட்டியில் களமிறங்கவுள்ளார். இலங்கைத் தடகள வட்டத்தின் பார்வை மீண்டும்மொரு தடவை அனித்தா மீது விழுகிறது. பார்க்கலாம் 3.41மீற்றர் இன்னும் எவ்வளவு உயரத்துக்குச் செல்கிறது என்பதை.





'எம்.எஸ்.டோனி தி அன்ரோல்ட் ஸ்ரோறி' திரைப்படம் திரைக்கு வந்ததையடுத்து. அந்தப் படத்தை பார்த்த தமிழ் திரையுலக நடிகர் சூர்யா. டோனியை எக்கச்சக்கமாக புகழ்ந்து தள்ளியுள்ளார். 2007ஆம் ஆண்டு ரி-20 உலகக் கிண்ணத்தை இந்திய அணி கைப்பற்றிய பின்னர் தான், எம்மில் பலருக்கு டோனி என்றால் யார் என்று தெரியவந்தது. ரயில் நிலையத்தில் சாதாரண ஓர் அதிகாரியாகப் பணியாற்றிய டோனி, இன்று இந்திய அணியின் தலைவராக உள்ளார். இந்த இடத்தை அடைய அவர் பட்ட கஷ்டங்களைச் வெளிப்படுத்தும் விதத்தில் டோனியின் வாழ்க்கையை மையமாக வைத்து, எம்.எஸ். 'டோனி தி அன்ரோல்ட் ஸ்ரோறி' என்ற திரைப்படம் எடுக்கப்பட்டது. ஏராளமான மொழிகளில் 60 நாடுகளில் 4 ஆயிரத்து 500 திரையரங்குகளில் குறித்த திரைப்படம் நேற்றுமுன்தினம் வெளியானது. ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. இந்த நிலையில் முதல் நாளிலேயே படத்தைப் பார்த்த சூர்யா டோனியை புகழ்ந்து தள்ளியுள்ளார்."டோனிக்கு எனது மரியாதையைச் செலுத்துகிறேன். அவரை நினைத்துப் பெருமைப்படுகிறேன். இப்படி ஓர் அற்புதமான படத்தை எடுக்க அனுமதி தந்த டோனிக்கு நன்றி. படத்தில் நடித்த நடிகர். நடிகைகளுக்கும் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக்கள்" என தனது ருவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டார்.

## டோனியை புகழ்ந்துதள்ளும் சூர்யா திரைப்படம் வெளியானதை அடுத்து

## மீள்பரிசீலனை முறையை ஏற்கத்துடிக்கும் கோக்லி

நடுவர் தீர்ப்புக்கு எதிரான மேன்முறையீட்டு முறையை ஏற்பது சிறப்பானது என இந்திய கிரிக்கெட் அணியின் டெஸ்ட் தலைவரான கோக்லி வலியுறுத்தினார். கிரிக்கெட் ஆட்டங்களைப் பொறுத்தவரை நடுவரது தீர்ப்புக்கள் துல்லியத்தன்மை உடையன என்று சொல்லிவிட முடியாது. நடுவர்களும் அவ்வப்பொழுது தவறுகள் செய்வதுண்டு. குறிப்பாக எல்.பி.டபிள்யு., இலக்குக் காப்பாளர் எடுக்கும் பிடியெடுப்புக்கள் ஆகியவற்றில் தவறான தீர்ப்புக்கள் வழங்கப்படுவதுண்டு. இதனால் சில ஆட்டங்களின் முடிவுகள் அப்படியே மாற்றம் பெற்றும் உள்ளன. இதனால் இந்த நிலையை மாற்ற எண்ணிய பன்னாட்டு கிரிக்கெட் சபை நடுவர்களின் முடிவுகளை மூன்றாம் நடுவர்களுக்கு எடுத்துச் சென்று, பரிசீலனை செய்து பார்க்க மீள்பரிசீலனை முறையை அறிமுகப்படுத்தியது. ஆனால், பன்னாட்டு கிரிக்கெட் சபையின் இந்த முடிவை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை ஏற்கவில்லை. நடுவரின் முடிவை எதிர்ப்பதென்பது கிரிக்கெட்டின் அடிப்படையைத் தொலைப்பதைப் போன்றது என்று அந்த கிரிக்கெட் சபை தெரிவித்தது. இந்திய கிரிக்கெட் சபையின் முடிவு என்னமோ அதையே சச்சின், டோனி ஆகியோரும் தமது முடிவாகக் கொண்டனர். ஆனால், இவர்களிலிருந்து கோக்லி வேறுபடுகிறார். இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை மீள்பரிசீலனை முறையே ஏற்றிருக்க வேண்டும். ஏகப்பட்ட எல்.பி.டபிள்யு. முறையிலான ஆட்டமிழப்புக்கள் இந்திய அணிக்கு பாதகத்தை ஏற்படுத்தியுள்ளன. மூன்றாம் நடுவரிடம் ஆட்டமிழப்புக் கோரிக்கையை வைப்பது மைதான நடுவர்களுக்கு கௌரவக் குறைச்சலாக நான் கருதவில்லை. ஏனெனில் ரண்அவுட் முறையிலான ஆட்டமிழப்புக்களை பெரும்பாலும் மூன்றாம் நடுவர்களே தீர்மானிக்கின்றனர் என கோக்லி தெரிவித்தார். கோக்லியின் இந்தக் கருத்து, அவர் மீள்பரிசீலனை முறையை ஆதரிப்பதை வெளிப்படையாகக் காட்டிநிற்கிறது.

(33ஆம் பக்கத் தொடர்ச்சி)

# பெண் வடிவில் உலவும் பேய்

மிகவும் அன்பாக உரையாடி, மீண்டும் பயிற்சிக் கொப்பியைப் பார்வையிட்டாள். இப்பொழுது எழிலன் முகத்தில் இருந்த இறுக்கம் சிறிது தளர்ந்திருந்தது. இலக்கியாவின் அருகில் வந்து நின்றான். அவனுடைய சீருடை பழுப்பேறி அழுக்காகக் காணப்பட்டது. "ஏன் உடுப்புத் தோய்க்கேல்லை" அப்பா சவுக்காரம் வாங்கித் தரேல்லையா? என்று மெதுவாகக் கேட்டவளுக்கு, அவன் அளித்த பதில். "அப்பா எங்களை விட்டுட்டு வேறை ஆரோடையோ போட்டார்" என்று அடித்தாற் போல் அமைந்தது. மேற்கொண்டு அவனைப்பற்றி, தாயைப்பற்றி விசாரிப்பதா? வேண்டாமா? என்று இலக்கியா சிந்தனையிலாழ்ந்தாள். ஆனாலும் அவனின் குடும்ப நிலையைப் பற்றி அறிய வேண்டுமென்ற ஆவலுடன் "குடும்பத்தில எத்தினைபேர்? இப்ப ஆரோடை இருக்கிறியள்? " என்றாள்.

"நானும் தங்கச்சியும் தான் ரீச்சர். நாங்கள் அம்மம்மாவோடை தான் இருகிறம்"

"தங்கச்சிக்கு எத்தனை வயசு? ஆரைப்போல இருப்பா"

"தங்கச்சிக்கு ரெண்டு வயது. நல்ல வடிவான தங்கச்சி.எனக்குத் தங்கச்சியிலை நல்ல விருப்பம்".

தங்கையைப் பற்றிக் கூறுகின்ற வேளையில் அவனது முகத்தில் தோன்றிய பிரகாசத்தினூடாக அவனுடைய சகோதர வாஞ்சை புலப்பட்டது.

"எங்கடை வீட்டை வாறியளே?" சற்றும் எதிர்பாராத வகையிலே எழிலன் கேட்டான். "வாறன். இன்டைக்கு நேரமில்லை. நான் அடுத்த முறை வரேக்கை வாறன். நீங்கள் நல்லாப் படிக்க வேணும்" என்று கூறினாள். அவனும் தலையசைத்தான்.

"நீங்கள் ஏன் எங்கடை அம்மாவைப் பற்றிக் கேக்கேல்லை" என்றான் எழிலன். பதில் கூற முடியாமல் தத்தளித்தாள் இலக்கியா. அவனே தொடர்ந்தான். "அம்மா வருத்தம் வந்து செத்திட்டா எண்டுதானே நினைக்கிறியள்" என்றான்.

"அப்பிடித்தான் நினைச்சனான்..." என்றவளை இடைமறித்து. "அம்மா ரெலிபோனிலே கதைச்சுக் கதைச்சு ஆரோடையோ ஓடிப்போட்டா. இப்ப வவுனியாவில இருக்கிறாவாம்" என்றான் பிஞ்சுக் கண்களில் குரூரம் கொப்பளிக்க.

இலக்கியா அதிர்ந்து போய் விட்டாள். உலகெங்கும் தாய்மையைப் போற்றி, மேன்மைப்படுத்துகின்ற இந்தவேளையில் பெற்றதாயே பிள்ளைகளை உதறியெறிந்து விட்டு வேறொரு ஆடவனுடன் சென்றுவிட்டாள் என்பதைக் கேட்ட இலக்கியாவின் உள்ளம் கண்ணீர் வடித்தது. இந்தச் செய்தியை அவளால் ஜீரணிக்க முடியவில்லை.

"நீங்கள் ஒரு அதிகாரி தானே" பெரிய மனிதத் தோரணையில் எழிலன் கேட்டான். ஆடிப்போய்விட்டாள். உயர் வகுப்புகளிலே கற்கின்றவர்கள் கூட ஆசிரிய ஆலோசகரை-அதிகாரிகளாக நினைப்பதில்லை. ஆனால் இவனோ! எங்கோ போய்விட்டான்.

"நான் அதிகாரிதான்"

"ரீச்சர் அப்பிடியெண்டால் எங்களைத் தவிக்க விட்டுட்டு ஓடிப்போன அந்தப் பிசாசைக் கட்டாயம் பொலிஸிலை பிடிச்சுக் குடுங்கோ. ரெலிபோன் நம்பர் தாறன்"

எழிலன் பேச்சு இலக்கியாவின் நெஞ்சைத் துளைத்தது.

"ரீச்சர் அவள் என்னை விட்டுட்டுப் போனாலும் பறவாயில்லை. பால் குடிக்கிற என்ர சின்னத் தங்கச்சியையும் விட்டுட்டுப் போட்டாள். அந்தப் பிசாசின்ரை நம்பரை எழுதுங்கோ"

கூறியவன் மளமளவென்று தாயின் தொலைபேசி இலக்கத்தைக் கூறத் தொடங்கினான். இலக்கியாவின் கை தன்னை அறியாமலே அந்த இலக்கங்களைப் பதிவு செய்தது.

எழிலன் அமைதியானான்.

இலக்கியாவின் உள்ளம் அலை பாய்ந்தது. அந்தப் பிஞ்சுச் சூரியன் சுமந்த வேதனையின் ஆழம் புரிந்தது. அடுத்த பாடத்துக்கான மணி அடித்து விட்டது. கவலையும், வேதனையும் பாறாங்கல்லாய் அழுத்த வகுப்பிலிருந்து வெளியேறினாள்.

சில நாள்களின் பின் இலக்கியா எழிலன் வீட்டுக்குச் சென்றாள். சிறுகுடிசையில் அம்மம்மாவுடன் வாழ்ந்துவரும் அவர்கள்ள நினைத்து மிகவும் வேதனைப்பட்டாள்.

எழிலன் தனது ஆசிரியர் மூலமாக இப்பொழுதெல்லாம் இலக்கியாவுடன் தொலைபேசியில் கதைப்பான். அவளும் அவனைப் பார்ப்பதற்கு அவனது வீட்டுக்கு அடிக்கடி செல்வதுண்டு. அவனில் இப்போது நடத்தையில் நல்ல பழக்க வழக்கம் ஏற்பட்டுள்ளதாக ஆசிரியர்கள் கூறுகின்றார்கள்.

இவ்வாறான நிலை எழிலனுக்கு மட்டுமல்ல பலர் இந்த நிலைக்கு ஆளாகியிருக்கின்றார்கள். இவ்வாறான மனவடுக்களைச் சுமந்து வாழும் சிறுவர்கள் எவ்வாறு நாளைய சமூகத்தில் நல்ல பிரஜைகளாக வாழ முடியும்?

எழிலனின் பெற்றோரைப் போன்று பிள்ளைகளுக்குத் துரோகமிழைக்கின்ற பெற்றோர்களைச் சட்டம் கடுமையாகத் தண்டிக்க வேண்டும். சமூகமும் அவர்களைத் தண்டிக்கத் தவறக் கூடாது. இது கற்பனைக் கதையல்ல. நல்மனம் படைத்த செம்மல்களே! பெரியோர்களே! அதிகாரிகளே! பெற்றோர்களே கற்பிக்கப் படவேண்டியவர்கள் யார்? எங்கள் மண்ணில் இவ்வாறானதொரு தலைமுறை உருவாகலாமா? இவர்கள் வாழ்வில் பொழுதொன்று புலர்ந்திடுமா?

## சொற்சிலம்பம் - போட்டி இல: 440

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | | ■ | 5 |
| 6 | | ■ | 7 | | ■ | 8 | |
| 9 | | 10 | | ■ | 11 | | |
| | ■ | | ■ | 12 | | ■ | |
| ■ | 13 | | 14 | | ■ | 15 | |
| 16 | | | | ■ | 17 | | |
| 18 | | | ■ | 19 | | | ■ |
| 20 | | ■ | 21 | | | | |

அனுப்புபவர் பெயர்:..............................................

பூரணமான தபால் விலாசம்: ..............................................

..............................................

கையொப்பம்:..............................................

### இடமிருந்து வலம்

1. அதிசயமான ஒன்று
6. ஓர் அளவீடு
7. வேகம்
8. தங்களது
9. வேகமாகச் செல்வது
11. சில நாடுகளை இப்படிக் கூறுவர்
12. ஒரு தமிழ் மாதம்
13. ஓர் இராசி
15. ரக
16. வலை
17. கண் தெரியாதவள்
18. மக்கள் கூட்டம்
19. பானை வாத்தியம்
21. ஒரு சத்தம்
22. புலிகளில் ஒரு ரகம்

### மேலிருந்து கீழ்

1. ஒரு நட்சத்திரம்
2. சிரசு மயிர்
3. தினசரி மாறுவது
4. மன்மதன் மனம் கவர்ந்தவள்
5. நிலத்தைச் சுத்தப்படுத்தும் சாதனம்
8. ஒரு குறியீடு
10. கண்டித்தல்
11. பன்னிரண்டு அங்குலம்
12. சம்மதச் சொல்
13. குழந்தைகளுக்கு இங்கே முத்தமிடுவர்
14. மண்ணுக்கு முந்தியது
15. ஆசைப்படு
16. பிழைத்துப் போதல்
17. பாத்திரம்
18. உயிரின் தொடக்கம்

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 438 இற்கான சரியான விடைகள் வருமாறு:-

### இடமிருந்து வலம்

(1) பச்சாதாபம் (6) மதில் (7) படு (8) குதம் (10)குசலம் (12) வளை (13) அழகி (14) குரல் (15) தம் (16)மாடம் (17) உள (18) பாதம் (19) இருபது (21)கும்பிடல் (22)திறை

### மேலிருந்து கீழ்

(1) பக்குவம் (2) சாமம் (3) தாதி (4) பல்குழல் (5) குடும்பம் (7) பல (9)தளை (11) சகி (13) அரம் (14) குடம்பி (15) தளபதி (16) மாதம் (17) உரு (18)பாகு (19) இல் (20)துறை

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

**1.வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.**

**2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்**

**3.உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.**

**4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.**

**5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.**

சொற்சிலம்பம் போட்டி
இல.440
பூர்த்தி செய்யப்பட்ட
கூப்பன்கள்
நியூ உதயன் பப்ளிக்கேஷன்
(பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார்
வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு
எதிர்வரும் புதன்கிழமைக்கு
அடுத்து வரும்
புதன்கிழமைக்கு முன்னர்,
(12.10.2016 ஆம் திகதிக்கு
முன்னர்) கிடைக்கத்
தக்கதாகத் தபாலட்டையில்
ஒட்டி அனுப்பி
வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 438 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் 'குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**
மா.சுரேஸ்கரன்,
பழைய பாடசாலை வீதி,
கல்வயல், சாவகச்சேரி.

**2 ஆம் பரிசு**
செல்வி வாசுதேவன் மாதங்கி,
கப்பம்புலம், சுன்னாகம் கிழக்கு,
சுன்னாம்.

**3 ஆம் பரிசு**
மனோகரராசா தனுசியா,
இல.23 அணைக்கட்டு வீதி,
திருநகர் வடக்கு, கிளிநொச்சி.

**4 ஆம் பரிசு**
ந.போலிங்கம்,
இல.82/4, ஸ்ரான்லி வீதி,
யாழ்பாணம்.

**5 ஆம் பரிசு**
சி.வதனகுமார்,
வீதி அபிவிருத்தி அதிகார சபை,
வவுனியா.

### பாராட்டுப் பெறுவோர்

திருமதி ச.லிங்கமூர்த்தி,
அ.மி.பாடசாலை ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

திருமதி ப.சிவன்நேசன்,
'நிம்மதி' தேவாலய வீதி,
சங்கானை.

இ.ஶ்ரீதரன்,
திருநகர் வடக்கு,
முதலாம் ஒழுங்கை, கிளிநொச்சி.

சொற்சிலம்பம் போட்டி இல.440இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 16.10.2016 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுவோருக்கான பரிசுக் காசோலைகள் வெற்றி பெற்றோரால் கொடுக்கப்படும் விலாசத்துக்கே அனுப்பி வைக்கப்படும். சரியான தபால் விலாசம் கொடுக்கப்படாமையால் சில சமயம் காசோலைகள் உரிய வெற்றியாளரைச் சென்றடையாமை அவதானிக்கப்பட்டுள்ளது. போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

சொற்சிலம்பம் போட்டி 438இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக் கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# இந்த வாரம்

## 02.10.2016 முதல் 08.10.2016 வரை

### உங்களுக்கு எப்படி?

## மேடம்

சூரியன், சந்திரன், கேது அனுகூலமாக உள்ளனர். தெய்வ நம்பிக்கை மனதில் மாற்றம் தரும். செயல்கள் சிறப்பாக அமையும். பயணங்களின் எண்ணிக்கை குறையும். தாயின் அன்பும், ஆசியும் கிடைக்கும். புத்திரர்களின் மனக்குறையை அறிந்து சரி செய்வீர்கள். விலகிய உறவினர்கள் சொந்தம் கொள்வர். குடும்ப செலவுக்கான பணத்தேவை அதிகரிக்கும். கணவன், மனைவியின் இடையே, சிறு சஞ்சலம் வரலாம். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி விற்பனை கூடும். பணியாளர்கள் நிர்வாகத்தை அனுசரித்து செல்வதே நல்லது. பெண்கள் தாய்வீட்டு உதவி பெறுவர். மாணவர்கள் மிகக் கவனமாக இருந்தால் தான் படிப்பில் முன்னேறலாம்.

## இடபம்

புதன், குரு, சந்திரனால் நன்மை உண்டு. வீண் பேச்சுப் பேசுபவர்களிடம் இருந்து விலகவும். தம்பி, தங்கைகள் அன்புடன் நடந்து கொள்வர். அறிமுகமில்லாதவருக்கு வாகனத்தில் இடம் தர வேண்டாம். புத்திரர்கள் தங்கள் எண்ணம் மற்றும் செயலில் புத்துணர்வு பெறுவர். உடல்நிலை சுமாராக இருக்கும். குடும்பத்தேவை ஓரளவு பூர்த்தியாகும். கணவன், மனைவி இடையே ஒற்றுமை அதிகரிக்கும். தொழில், வியாபாரம் அளவான லாபம் தரும். பணியாளர்கள் வழக்கமான வருமானம் தவிர, மற்றதை எதிர்பார்க்க வேண்டாம். பெண்கள் குடும்ப நலன் கருதி திட்டம் தீட்டுவர். மாணவர்களுக்கு நண்பரால் உதவி உண்டு.

## மிதுனம்

ராகு, சனி, சுக்கிரன் நன்மை வழங்குவர். நேர்த்தியுடன் பணிபுரிவீர்கள். அக்கம்பக்கத்தவர் நல்லன்பு பாராட்டுவர். பயணங்கள் அதிகரிக்கும். புத்திரர்கள் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். பூர்வ சொத்தில் வளர்ச்சியும், பணவரவும் அதிகரிக்கும். எதிர்ப்பாளரால் இருந்த தொந்தரவு விலகும். கணவன், மனைவி ஒற்றுமை ஓங்கும். தொழில், வியாபாரத்தில் அளவான லாபம் கிடைக்கும். பணியாளர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். பெண்கள் நகை, பணம் இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம். மாணவர்கள் படிப்பில் முன்னேறுவர். பசு வழிபாடு செல்வவளம் தரும்.

## கடகம்

சூரியன், செவ்வாய், சுக்கிரனால் நன்மை உண்டாகும். புதியவர்களின் அன்பு, பாசம் கிடைக்கும். மனதில் புத்துணர்வு பிறக்கும். பணிகளில் முன்னேற்றம் ஏற்படும். வெளியூர்ப் பயணம் மகிழ்ச்சி தரும். புத்திரர்கள் உங்கள் சொல் கேட்டு நடந்து பெருமை தேடித்தருவர். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். எதிரிகள் இடம் மாறிப் போகின்ற நன்னிலை உண்டு. மனைவி கருத்திணக்கம் கொள்வார். தொழில், வியாபாரம் செழிக்கும். பாக்கிப்பணம் வசூலாகும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். பெண்கள் இஷ்டதெய்வ வழிபாடு நடத்துவர். மாணவர்கள் நன்றாகப் படித்து பரிசு பெறுவர்.

## சிங்கம்

குரு, சுக்கிரன், சந்திரன் நற்பலன் தருவர். இனிமையாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். உறவினர் உதவி கிடைக்கும். பணவரவு குறைவாக இருக்கும். வாகனப் பராமரிப்புச் செலவு உயரும். புத்திரர்களின் சொல்லும் செயலும் பாராட்டுப் பெறும். உடல்நிலை சுமாராக இருக்கும். கணவன், மனைவி பாசம் குடும்பத்திற்கு முன்னேற்றம் தரும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை செழித்து தாராள லாபம் கிடைக்கும். பணியாளர்களுக்கு வேலைப் பளு மிகவும் குறையும். பெண்கள் விரும்பிய பொருள் வாங்குவர். மாணவர்களுக்கு படிப்பில் கூடுதல் கவனம் வேண்டும். சிவன் வழிபாடு சகல நன்மை தரும்.

## கன்னி

சுக்கிரன், சனி, கேது அளப்பரிய பலன் வழங்குவர். உங்கள் நலம் விரும்புபவர் உதவுவர். பணிகளை மனஉறுதியுடன் செய்யுங்கள். குடும்பத்தில் ஒற்றுமை நிறைந்திருக்கும். வீடு, வாகன வகையில் பாதுகாப்பை பலப்படுத்த வேண்டும். புத்திரர்கள் ஆடம்பர பொருள் கேட்டுநச்சரிக்கலாம். அவர்களுடன் பொறுமையாகப் பேசவும். நண்பர்களுடன் விழாவில் கலந்து கொள்வீர்கள். கணவன், மனைவி இடையே இணக்கமான போக்கு இருக்கும். தொழில், வியாபாரத்தில் அளவான லாபம் கிடைக்கும். பணியாளர்கள் ஓரளவு சலுகை பெறுவர். பெண்களுக்கு தாய்வீட்டு உதவி கிடைக்கும். மாணவர்கள் படிப்பில் அக்கறை கொள்வர்.

## துலாம்

புதன், ராகு, சுக்கிரன், செவ்வாய் அனுகூல அமர்வில் உள்ளனர். உங்கள் நடை, உடை பேச்சில் வசீகரம் உருவாகும். தம்பி, தங்கை பாசத்துடன் நடந்து கொள்வர். புதிய வாகனம் வாங்க அனுகூலம் உண்டு. புத்திரர்கள் படிப்பு, வேலையில் முன்னேற்றம் காண்பர். பூர்வ சொத்துப் பராமரிப்பில் கவனம் வேண்டும். குடும்ப விவகாரம் சுமுகத் தீர்வுக்கு வரும். உடல்நிலை நன்றாக இருக்கும். மனைவி குடும்பத்தில் ஒற்றுமை வளர உதவுவார். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்திப் பணிகளைச் செய்வீர்கள். பணியாளர்கள் சுறுசுறுப்புடன் பணிபுரிவர். பணவரவு சீராகும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். மாணவர்களுக்கு படிப்பில் நண்பர்கள் உதவுவர்.

## விருச்சிகம்

புதன், குரு, சூரியன், சுக்கிரனால் நன்மை ஏற்படும். பேச்சில் நிதானம் வேண்டும். சமூக நடப்பில் இனிய அனுபவம் பெறுவீர்கள். பயணங்கள் அதிகரிக்கும். புத்திரர்கள் படிப்பு, வேலையில் ஆர்வம் கொள்வர். உடல்நிலை சுமாராக இருக்கும். கணவன், மனைவி அன்புடன் நடந்து கொள்வர். விரும்பிய பொருள் வாங்கி மகிழ்வீர்கள். தொழில், வியாபாரம் அபிவிருத்தியாகும். சேமிப்பு கூடும். பணியாளர்களுக்கு சலுகை எளிதில் கிடைக்கும். பெண்கள் புத்தாடை, நகை வாங்குவர். மாணவர்கள் நன்றாகப் படித்து அதிக மதிப்பெண் பெறுவர்.

## தனுசு

சூரியன், சுக்கிரன், கேது அளப்பரிய நன்மை வழங்குவர். எதிரிகள் விலகுவர். லட்சிய மனதுடன் பணிபுரிவீர்கள். பயணங்களின் எண்ணிக்கை குறையும். புத்திரர்களின் செயல்பாடுகள் வெற்றி பெற, தேவையான உதவி செய்வீர்கள். குடும்பத்தில் சுப நிகழ்வு நடக்கும். செலவில் தாராளம் இருக்கும். உடல்நிலை நன்றாக இருக்கும். மனைவி வழி சார்ந்த உறவினர் மதிப்பு மரியாதை தருவர். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். பணியாளர்கள் உயர் பதவி பெற வாய்ப்புப் பெறுவர். பெண்கள் அடுத்தவர் பிரச்சினையில் தலையிடக் கூடாது. மாணவர்களுக்குப் படிப்பில் ஞாபகத்திறன் வளரும்.

## மகரம்

குரு, புதன், சனீஸ்வரர் வியத்தகு நன்மை தருவர். நற்பெயரை பாதுகாத்துக் கொள்வீர்கள். குடும்பத்தில் ஒற்றுமை, மகிழ்ச்சி நிறைந்திருக்கும். வாழ்வில் முன்னேற புதிய வாய்ப்பு வரும். உடன்பிறந்தவர்கள் உதவுவர். வசதி நிறைந்த வீட்டுக்கு சிலர் இடம் மாறுவர். புத்திரர்களின் குறையைச் சரி செய்வதில் இதமான அணுகுமுறை வேண்டும். கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். மனைவியின் மனக்குழப்பத்தினால் பணிகளில் தாமதம் இருக்கும். தொழில், வியாபாரத்தில் குறையை சரி செய்வீர்கள். பணியாளர்கள் நிர்வாகத்தை அனுசரித்து செல்வது நல்லது. பெண்கள் உறவினர் குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடத்த உதவுவர். மாணவர்கள் நன்றாகப் படிப்பர்.

## கும்பம்

சுக்கிரன், செவ்வாய் அனுகூல அமர்வில் உள்ளனர். அக்கம்பக்கத்தவரிடம் அதிகம் பேச வேண்டாம். பணிகள் நிறைவேற உற்சாகத்துடன் செயல்பட வேண்டும். செலவு அதிகரிக்கும். பயணங்கள் எளிதாகும். புத்திரர்கள் உங்கள் ஆலோசனையை ஏற்க மறுக்கலாம். உடல்நலம் சுமாராக இருக்கும். கணவன், மனைவி இணைந்து ஆலோசித்து திட்டங்களை வகுப்பர். தொழில், வியாபாரத்தில் இடையூறு விலகும். பணியாளர்கள் சிறப்பாக பணிபுரிந்து சலுகை பெறுவர். பெண்கள் மகிழ்ச்சிகர வாழ்வு நடத்துவர். மாணவர்கள் படிப்பு டன் கலைகளும் பயில்வர்.

## மீனம்

புதன், குரு, சுக்கிரனால் நற்பலன் கிடைக்கும். வாக்குறுதியை நிறைவேற்றுவீர்கள். உடன்பிறந்தவர்கள் பாசத்துடன் நடந்து கொள்வர். புதிய வீடு, வாகனம் வாங்க அனுகூலம் உண்டு. புத்திரர்கள் படிப்பு, வேலையில் முன்னேற்றம் காண்பர். தாய் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். மனைவி உங்களின் கருத்துக்களை ஏற்றுக்கொள்வார். வாழ்க்கை மகிழ்ச்சிகரமாகும். தொழில், வியாபாரம் புதியவர்களின் ஆதரவினால் செழித்து வளரும். பணியாளர்கள் பாராட்டு, பரிசு பெறுவர். பெண்கள் ஆடம்பரப் பொருள் வாங்குவர். மாணவர்கள் படிப்பில் சிறப்பிடம் பெறுவர்.



# பொங்கு தமிழும் எழுக தமிழும்

சந்திரசேகர ஆசாத்

கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற 'எழுக தமிழ்' நிகழ்வு அரசியல் களத்தில் சில அதிர்வலைகளை எழுப்பியது. இது தமிழ் அரசியல் பரப்பில் மட்டுமன்றி தென்னிலங்கையிலும் ஆதரவானதும் எதிரானதுமான பிரதிபலிப்புக்களை ஏற்படுத்தியது. குறிப்பாகத் தமிழ் முற்போக்குக் கூட்டணியினர் அரசில் அமைச்சுப் பதவிகளை வகித்துப் பங்காளிகளாக விளங்கியபோதும், தமது ஆதரவை வெளிப்படையாகத் தெரிவித்தனர். அதிலும் அதன் தலைவர் மனோ கணேசன் வெளியிட்ட கருத்து மிக முக்கியமானதாகும். 'எழுக தமிழ்' நிகழ்வு தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டியதன் அவசியத்தை உணர்த்துவதாகவும் அந்தப் பிரச்சினைகள் நியாயபூர்வமாகத் தீர்க்கப்பட்டு எல்லோரும் சம உரிமை பெற்று 'எழுக இலங்கை'யாக நிகழ்வு நடத்தப்பட வேண்டுமெனத் தெரிவித்திருந்தார். இவ்வாறே மலையக மக்கள் முன்னணியின் தலைவர் இராதாகிருஷ்ணனும் தனது ஆதரவை வெளியிட்டிருந்தார். அதேவேளையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் எதிர்க்கட்சிக் கூட்டணியின் சார்பில் கருத்து வெளியிட்ட தினேஷ் குணவர்த்தன 'எழுக தமிழ்' மூலம் தனிநாட்டுக் கோரிக்கைக்கு உயிரூட்டப்படுகிறது எனக்குற்றம் சாட்டினார்.

**தமிழ்த் தலைமைகளின் நெளிவு சுளிவு**

இன்னொருபுறம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எழுக தமிழ்ப் பேரணியில் தாங்கள் கலந்துகொள்ளப்போவதில்லை எனவும் ஆனால் தனது ஆதரவைத் தெரிவிப்பதாகவும் கூறியிருந்தார். மேலும் அந்தப் பேரணி நிறைவு பெற்ற பின்பு தமிழ் மக்கள் தங்கள் உரிமைகளைக் கோரி நிகழ்வுகளை நடத்துவதில் தவறில்லையெனவும் ஆனால் தாங்கள் மேற்கொள்ளும் தீர்வு முயற்சிகள் முன்னேற்றம் கண்டு வருவதாகவும் அவற்றைக் குழப்பும் வகையில் இப்படியான செயற்பாடுகள் அமைந்து விடக் கூடாதெனவும் கவலை தெரிவித்தார்.
தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் ஊடகப் பேச்சாளருமான எம். ஏ.சுமந்திரன் இப்படியான ஆர்ப்பாட்டங்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் தீர்வு முயற்சிகளுக்குப் பாதகமானவை எனவும் அவற்றைத் தடைசெய்யும் விதத்தில் அமைந்துள்ளன எனவும் தெரிவித்ததுடன் இது பொருத்தமற்ற நேரத்தில் செய்யப்பட்ட நடவடிக்கை என்று தெரிவித்தார். இப்படித் தமிழ் பேசும் மக்கள் தரப்பிலிருந்த அரை ஆதரவும் முழுமையற்ற வளைந்து நெளிந்த எதிர்ப்புகளும் வெளியிடப்பட்ட வேளையில் அரச தரப்பின் உயர் மட்டங்களிலிருந்து கடும் கண்டனங்களும் எச்சரிக்கைகளும் வெளியிடப்பட்டன.

**தெற்கின் கடும் எதிர்ப்பு**

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ருவான் விஜயரத்தின தமிழ் மக்கள் பேரவையின் ஆர்ப்பாட்டங்கள் கண்டு தாங்கள் அஞ்சி விடப்போவதில்லையெனவும் வடக்கிலிருந்து படையினரை விலக்கிக் கொள்ளப்போவதில்லை எனவும் சவால் விட்டார். மேலும் அவர் பேரவையின் தீவிரமான கோரிக்கைகளுக்குப் பதிலளிக்க வேண்டிய அவசியமில்லையெனவும் இப்படியான நடவடிக்கைகள் நல்லிணக்கத்துக்கு முரணானவையெனவும் வட பகுதி மக்களைக் குழப்பும் வகையிலானவை என்றும் சாடினார்.
ஐக்கிய சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் மீன்பிடி அமைச்சருமான மகிந்த அமரவீர, முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் இனப்பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படவில்லையெனவும், வடக்கில் மேற்கொள்ளப்படும் சிங்களக்குடியேற்றங்கள் தொடர்பாகவும் வெளியிட்ட கருத்துகள் நல்லிணக்கக் கருத்துக்குப் பாதகமானவையெனவும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முட்டுக்கட்டையானவை என்றும் தெரிவித்திருந்தார்.
இனப்பிரச்சினைத் தீர்வுக்குத் தமிழ் மக்கள் பேரவை தடையாக உள்ளதெனவும் அதனைத் தாண்டித் தீர்வு எட்டப்படும் எனவும் கூளுரைத்தார்.
ஜே.வி.பி. என அழைக்கப்படும் மக்கள் விடுதலை முன்னணியும் தற்சமயம் இனவாதத்தைத் தூண்டுவது வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனின் தேவையாக உள்ளது எனத் தெரிவித்தது.
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவோ மீண்டும் பயங்கரவாதம் தோன்ற அடித்தளம் இடப்படுகிறதெனவும் சிங்கள மக்கள் இது தொடர்பாக விழிப்புடன் இருக்க வேண்டுமெனவும் எச்சரிக்கை செய்தார்.
எப்படியிருப்பினும் அரச தரப்பிலிருந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்தும் ஏனைய எதிர்க்கட்சிகளிடமிருந்தும் வெவ்வேறு வடிவங்களான கருத்துகள் வெளிவந்தபோதும் அவை அடிப்படையில் ஒரே மூல வேரைக் கொண்டவை என்பதுதான் முக்கியமானது.
அதாவது தற்சமயம் நடத்தப்பட்ட இந்த ஊர்வலம் இனங்களுக்கிடையேயான நல்லிணக்கத்திற்கு மாறானதென்பதுடன் இனப்பிரச்சினைத் தீர்வு எட்டப்படுவதைக் குழப்பும் வகையிலானது என்பதே சகல தரப்பினரின் கருத்துக்களிலும் அடங்கியுள்ள ஒரே மூல அம்சமாகும்.

**ஊர்வலத்தின் தேவை**

ஆனால் முதலமைச்சர் மிகவும் தெளிவாக இந்தப் பேரணியானது சிங்கள மக்களுக்கோ, பௌத்த மக்களுக்கோ, அரசுக்கோ மாறானதல்ல எனவும் தமிழ் மக்கள் தமது நியாயபூர்வமான உரிமைகளைப் பெற்றுக் கொள்ளவும் இழைக்கப்பட்ட அநியாயங்களுக்கு எதிராக நியாயம் கோரிய முகமாகவும் அழுத்தம் கொடுப்பதாகவும், நடத்தப்பட்டது மக்களின் ஜனநாயக அடிப்படையிலான நிகழ்ச்சி எனவும் விளக்கியிருந்தார். தமிழ் மக்கள் பேரவையால் 'எழுக தமிழ்' பேரணியில் வெளியிடப்பட்ட அறிவிப்பு அப்படியொன்றும் புதியதல்ல, அவையாவும் கடந்த மாகாண சபைத் தேர்தலின்போதும், நாடாளுமன்றத் தேர்தலின் போதும் பொதுமக்கள் முன் வைக்கப்பட்டு ஆணை பெறப்பட்டவை. தேர்தல் முடிந்த பின்பும்கூட தமிழ்ச் சந்திப்புகளில் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்டவை.
இன்று ஒரு புதிய அரசமைப்புத் தயாரிக்கப்படவுள்ளவேளையில் அதில் தமிழ் மக்கள் வழங்கிய ஆணைக்கும் சாதகமான அம்சங்கள் சேர்க்கப்பட வேண்டுமென அழுத்தம் கோரப்படுவது தவிர்க்க முடியாத தேவையாகும். அது எப்படி இனவாதமாகவோ இனப்பிரச்சினைத் தீர்வைக் குழப்புவதாகவோ காலத்துக்குப் பொருத்தமற்றதாகவோ அமையமுடியும்? அதனால்தான் அன்று ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் யாழ்ப்பாண நகரில் ஊர்வலம் சென்றனர்.
நல்லூர் ஆலயமுன்றிலிருந்தும், பல்கலைக்கழக வளாகத்தின் அருகிலிருந்தும் இரு ஊர்வலங்கள் யாழ்ப்பாணம் முற்றவெளி நோக்கிப் பேரெழுச்சியுடன் புறப்பட்டன. உணர்வுபூர்வமாக பல கோசங்களுடன் நகர்ந்த இந்த ஊர்வலத்தில் முப்பதினாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அறிவித்தது. அது மட்டுமன்றி முற்றவெளியில் வெளியிடப்பட்ட ஊர்வல அறிவிப்பு உரைகளின் போது அங்கு கூடியிருந்தவர்கள் கரகோசம் செய்தும் ஆரவாரித்தும் தமது உணர்வுபூர்வமான ஆதரவை வெளிப்படுத்தினர்.
நீண்ட காலத்தின் பின்பு இப்படியொரு ஊர்வலம் இடம் பெற்றமையும் அது உயர்ந்தபட்ச உணர்வுபூர்வமாக அமைந்திருந்தமையும் தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் படுமோசமான முறையில் தோற்கடிக்கப்பட்ட போதிலும்கூட தமிழ் மக்களின் நியாயபூர்வமான உரிமைகளைப் பெறுவதற்கான வேட்கையை எவராலும் எந்தக் காலத்திலும் அழிக்க முடியாது என்பதை வெகு தெளிவாகவே உணர்த்தியது. அது மட்டுமன்றி வண்டியிழுக்கும் குதிரைக்கு முன்பு புல்லுக் கத்தை கட்டி விடுவது போன்ற ஏமாற்றுகளாலும் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தைத் திசைதிருப்பி விட முடியாது என்பதும் வெளிப்படுத்தப்பட்டது. முற்றவெளி மைதானம் உணர்வு பொங்கிய ஆயிரக்கணக்கான தமிழ் மக்களால் நிறைந்து வழிந்தமை, நாம் ஒரு காலத்தில் எவ்வாறு ஆயுதப் போராட்டத்தில் உலகம் வியக்கும் உன்னத நிலையை எட்டியிருந்தோமோ அவ்வாறே ஜனநாயகப் போராட்டத்திலும் எழுச்சி பெற்று எமது உரிமைகளை வென்றெடுக்க முடியும் என்பதற்கான சாட்சியமாகவிளங்கியது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இராஜதந்திர அரசியல் மூலம் இனப்பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வை எட்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ள இந்த வேளையில் இந்த ஊர்வலம் அதற்கு நிச்சயமாக ஓர் உந்து சக்தியாக விளங்கும். அதாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் குரலை வலுப்படுத்தக்கூடிய ஒரு மக்கள் சக்தியை அது வழங்கும் என்பதில் சந்தேகமில்லை. இன்னும் சொல்லப்போனால் புதிய அரசமைப்புத் தயாரிப்பு முயற்சிகள் இடம்பெறும் இந்தக் காலப் பகுதியில் இப்படியான அரசியல் நகர்வுகள் பொருத்தமானது மட்டுமல்ல அவசியமானதும்கூட.

**பொங்கு தமிழ் அல்ல இது**

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டப் பாதையில் மீண்டும் மக்கள் மத்தியிலான விழிப்புணர்வை 'எழுக தமிழ்' ஏற்படுத்தியுள்ள ஒரு நிலையில் நாம் பொங்கு தமிழை நினைவு கூராமல் விடமுடியாது. விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையே பேச்சு இடம்பெற்ற நிலையில் ஒரு போர் நிறுத்தம் நடைமுறையில் இருந்த காலம் அது. இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளில்தான் 'பொங்கு தமிழ்' கிளர்ந்து எழுந்தது. முதலில் யாழ்ப்பாணம், பின்பு வவுனியா, மன்னார், மட்டக்களப்பு என தாயக மண்ணின் பல பகுதிகளிலும் இராணுவத்தினரின் நீட்டிய துப்பாக்கிகளின் நடுவே எழுச்சிகரமாகவும், உணர்வுபூர்வமாகவும் அவை நடந்தேறின.
இந்த நிகழ்வுகள் எந்த ஓர் அரசியல் அமைப்பின் உந்துதலுமின்றி விடுதலை உணர்வை மட்டும் அடிப்படையாகக் கொண்டே ஒப்பேறின. மக்கள் தாமாகவே எழுச்சியுடன் கலந்து கொண்டனர். தமது உணர்வுகளை வெளிப்படுத்தினர்.
இதன் மையப்புள்ளியாக அரங்க நிறுவனம் ஒன்று திகழ்ந்தது. பல்கலைக்கழக மாணவர்கள், பயிற்சிக் கல்லூரி ஆசிரியர்கள், இளைஞர்கள் எனப் பலரும் கிராமம் கிராமமாகச் சென்றனர். மக்கள் மத்தியில் இயல்பான அரங்குகளை நடத்தினர் அங்கு மக்கள் தங்கள் பிரச்சினைகளைச் சொன்னார்கள். உணர்வுகளை வெளிப்படுத்தினார்கள். அவை ஒரு மையத்தில் ஒன்று திரண்டபோது மக்கள் சக்தியின் வெளிப்பாடாக 'பொங்கு தமிழ்' வெடித்தது. எனவே தான் பொங்கு தமிழ் விடுதலைப் போராட்டத்தில் ஒரு மகத்தான சக்தியாக நிலைபெற்றது. "இராணுவமே உனது இடத்துக்குப் போ நாங்கள் எங்கள் இடத்துக்குப் போகவேண்டும்" என்ற கோசம் ஓங்காரநாதமாய் மேலெழுந்தது.
'எழுக தமிழ்' நிகழ்வுக்கு இப்படியான பலமான அடித்தளம் இல்லையென்பது ஏற்றுக்கொள்ளப்படவேண்டிய அரசியல். இது ஏற்கனவே நாடாளுமன்ற அரசியல் தலைமைகளின் கனவான்கள் அரசியல் பாணியிலான ஓர் அரசியல் நகர்வோ என்ற கேள்வியும் எழுகிறது.
அப்படித்தான் என்றால் 'எழுக தமிழ்' ஒரு கவனயீர்ப்புப் போராட்டம் என்ற அளவுக்குள் சுருங்கி விடும் அபாயம் உண்டு. எனவே எவர் என்ன சொன்னாலும் இந்த அரசியல் நகர்வை அடிப்படையாகக் கொண்டு எமது உரிமைப் போராட்டம் மக்கள் மத்தியில் ஆழ வேரோடுவதே இதன் நல்ல விளைபயனாக இருக்கமுடியும். இது ஒரு சாதனையல்ல, ஓர் ஆரம்பம் என்பதைப் புரிந்துகொண்டு அடுத்த நடவடிக்கைகளில் இறங்கினால் வெற்றி கிட்டும்.



# யாழ். மறை மாவட்டத்தின் மக்கள் இறைவனின் கருவிகளாக மாற புதுப்பிப்பது பாராட்டுதற்குரியது

## யாழ். மறைமாவட்ட மேய்ப்புப்பணி மாநாட்டில் திருகோணமலை மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி கிறிஸ்ரியன் நோயல் இம்மனுவல் ஆண்டகை

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
ஊடக வருகை விரிவுரையாளர் – யாழ் பல்கலைக்கழகம்

யாழ். ஆயர் மேதகு கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை யாழ். மறைமாவட்டத்தின் புதிய ஆயராகப் பொறுப்பேற்றவுடன் புதிதாய் வாழ்வோம் என்னும் தலைப்பில், செயலற்ற விசுவாசம் உயிரற்றது என்னும் கருப்பொருளில் யாழ். மறைமாவட்டத்தில் மேய்ப்புப்பணி மாநாடு ஒன்றை நடத்துவதற் விடுத்த அழைப்பானது கடந்த மாதம் 29 - 30 மற்றும் நேற்றைய தினம் 1ஆம் திகதி ஆகிய மூன்று தினங்களில் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் நடந்தேறியுள்ளமை பற்றி இந்தக் கட்டுரை விளக்குகிறது.




**யாழ். மறைமாவட்ட குருமுதல்வர்; மாநாட்டுச்சிற்பி**

யாழ். மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் இந்த மாநாட்டு எண்ணக் கருவுக்கு உருக்கொடுத்தவர் யாழ். மறை மாவட்டக் குருமுதல்வர் கலாநிதி யோசப்தாஸ் ஜெபரட்ணம் அடிகளார். புதிதாய் வாழ்வோம் என்னும் தலைப்பில் செயலற்ற விசுவாசம் உயிரற்றது என்னும் கருப் பொருளில் நடைபெறும் மேற்படி மாநாடு நாங்கள் ஓர் இறைமக்கள் குழுமம், நாங்கள் ஒரு வழிபடும் குழுமம், நாங்கள் ஒரு சான்று பகரும் குழுமம் என்னும் 3 பிரிவுகளில் நடைபெற்றது.

**எல்லோரையும் தேடிச்சென்று காப்பாற்றுங்கள் - யாழ். ஆயரின் செய்தி**

யாழ். மறைமாவட்டத்தின் புதிய ஆயராகப் பொறுப்பேற்றவுடன் புதிதாய் வாழ்வோம் என்னும் தலைப்பில் யாழ் மறைமாவட்டத்தில் மேய்ப்புப்பணி மாநாடு ஒன்றை நடத்துவதற்கான அழைப்பை விடுத்தோம். அது இப்போது செயல் வடிவம் பெற்று முழுமை பெறுவது மகிழ்வான விடயமாகும். எமது வேண்டுகோளில், யாழ். மறை மாவட்டக் குரு முதல்வரின் செயல்வடிவில், அனைத்துக் குருக்களின் கடின உழைப்பில், சம்பந்தப்பட்ட துறவியரின் ஒத்துழைப்பில், பொது நிலையினரின் கூட்டுழைப்பில், ஒட்டுமொத்தமாக அனைவரின் அயராத முயற்சியில் முழுமை பெறுகின்ற இந்த சிறப்பு நிகழ்வுக்கு எமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் ஆசீர்களையும் தெரிவிப்பதில் உண்மையில் மகிழ்ச்சி அடைகிறோம். யாழ் மறைமாவட்டத்தின் வளர்ச்சிப் பாதையில் இது ஒரு பெரிய மைல்கல்லாகும். இதனைச் செயற்படுத்தக் கருக்கொடுத்து வழிகாட்டி நெறிப்படுத்திய இறைவனை முதலில் நன்றியோடு நினைந்து கொள்வோம். இம்மாநாட்டின் சிற்பியாக விளங்கிய யாழ். மறை மாவட்டக் குருமுதல்வர் கலாநிதி யோசப்தாஸ் ஜெபரட்ணம் அடிகளாரை வாழ்த்துவோம்.

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தில் பங்கேற்ற அப்போதைய யாழ். ஆயர் மேதகு கலாநிதி. எமிலியானுஸ் பிள்ளை அ.ம.தி ஆண்டகை ஆரம்பித்து வைத்த புதுப்பித்தல் முயற்சி பின்னர் ஆயர் மேதகு கலாநிதி தியோகுப் பிள்ளை ஆண்டகை காலத்திலும் அண்மையில் பணி ஓய்வு பெற்ற ஆயர் மேதகு கலாநிதி தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை காலத்திலும் தொடரப்பட்டது. அதன் தொடர்ச்சியாகவே நாம் யாழ். மறை மாவட்டத்தில் இப்போது புதிதாய் வாழ்வோம் என்னும் கருப்பொருளில் இந்த மேய்ப்புப்பணி மாநாட்டை நடத்த விரும்பினோம்.




யாழ். மறை மாவட்டத்தைக் கடந்த காலத்தில் வழிநடத்திய பணிஓய்வு பெற்ற ஆயர் மேதகு கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகைக்கும் இறை ஆசீர் வேண்டுவோம். நாங்கள் ஒரு இறைமக்கள் குழுமம், நாங்கள் ஒரு வழிபடும் குழுமம் , நாங்கள் ஒரு சான்று பகரும் குழுமம் என்னும் பிரிவுகளில் நடைபெறுகின்ற இம் மகாநாட்டிற்கு திருகோணமலை மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி கிறிஸ்ரியன் நோயல் இம்மனுவல் ஆண்டகை, மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி பொன்னையா யோசவ் ஆண்டகை, மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் ஆயர் மேதகு கலாநிதி கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை ஆகியோர் கலந்து கொள்வது மகிழ்ச்சி தருகிறது. அவர்களை அன்புடனும் மகிழ்வுடனும் வாழ்த்தி வரவேற்பதோடு எமது இம்மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அன்பார்ந்த நன்றிகளையும் தெரிவிக்க விரும்புகிறோம். யாழ்.மறைமாவட்டத்தில் பணியாற்றும் குருக்களுக்கு நாம் எழுதியுள்ள சுற்று மடலில் எல்லோரையும் தேடிச்சென்று காப்பாற்றுங்கள் - இதுவே இந்த நேரத்தின் சவாலாகும். இக்கடமையைச் செய்ய முன்வாருங்கள் என அழைப்பு விடுத்தோம். திருச்சபையின் அங்கத்தவர்கள் தமது இருக்கைகளில் இருந்து வெளியே வந்து திருச்சபையின் விளிம்புகளில் இருப்போரைச் சந்தித்து திரும்பவும் அவர்களைக் கடவுளின் குடும்பத்திற்கு அழைத்துவரச் செயலாற்றக் கூடிய அர்ப்பணம்மிக்க மறைபணி நமக்குத் தேவை எனத் தெரிவித்தோம். புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் அருட்சகோதரர்கள் மூலம் யாழ்.மறைமாவட்டத்தின் 54 பங்குகளிலும் உள்ள குடும்பங்களைச் சந்தித்தித்து இப்பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளமை வரவேற்கத் தக்கது. இது வருங்காலங்களில் குருக் களால் பகுதி பகுதியாகத் தொடரப்பட வேண்டும் என்றே ஆசிக்கிறோம்.

புதுப்பித்தல் என்பது ஒரு குறிப்பட்ட காலத்துக்கு மட்டும் உரிய ஒரு பணியல்ல, அல்லது ஒரு குறிப்பட்ட காலத்தோடு மட்டும் முடிகின்ற ஒரு பணியுமல்ல. அது ஒரு தொடர்பணி. முடிவற்ற பணி. எப்போதும் தொடர்ந்து நடந்து கொண்டிருக்க வேண்டிய பணி. எப்போதும் நாம் நம்மைப் புதுப்பித்துக் கொண்டே இருக்க வேண்டும். அப்போதுதான் புதுமையும் புனிதமும் எப்போதும் நம்மிடையே மிளிரும். ஏற்கனவே தயாரிக்கப்பட்ட நிலைப்பாட்டு ஏடுகளின் அடிப்படையில் யாழ். மறைமாவட்டத்தின் இன்றைய நிலை என்ன - அது எந்தப் பாதையில் எதிர்வரும் 5 ஆண்டுகளில் பயணிக்க வேண்டும் - யாழ். மறை மாவட்டத்தில் முன்னெடுக்க வேண்டிய முதன்மைப் பணிகள் என்ன என்பதைத் தீர்மானித்து அதன்படி பயணிப்போம். இதுவே இந்த மாநாட்டின் முக்கியமான பணியாகும். அடுத்த 5 ஆண்டுகளுக்கான திட்டங்ளையும் தீர்மானங்களையும் இனங் கண்டு வகுத்து யாழ். மறைமாவட்டத்தைச் சிறப்புடன் வழிநடத்த உங்கள் அனைவரின் ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கிறோம். யாழ். மறைமாவட்டத்தை இறை திட்டப்படி சிறப்புற வழி நடத்த இறை ஆசிரும் இறைவரங்களும் நிறைவாகக் கிடைக்க எமக்காகவும் செபியுங்கள் என அன்பு வேண்டுகோள் விடுக்கிறோம். தூய ஆவியின் வழி நடத்தலில் இறைவார்த்தையின் ஒளியில் நற்கருணை ஆண்டவரின் அருளில் யாழ். மறை மாவட்டத்தைப் புதுப்பிப்போம். புதிதாய் வாழ்வோம்.

> இரக்கம் நிறைந்த இறை வன் புதுமைகளையும் மாற்றங்களையும் கொணர்ந்து யாழ். மறை மாவட்டத்துக்கு ஒரு புதிய முகம் கொடுப்பாராக.

**யாழ். மறைமாவட்ட குரு முதல்வரின் செய்தி**

யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் தமது செய்தியில் ஆயரின் அழைப்புக்கிணங்க கடந்த ஆறுமாத காலங்களுக்கு மேலாக யாழ். மறைமாவட்டம் முழுவதுமாக புதுப்பித்தலுக்கான சிந்தனைகள் முடுக்கிவிடப்பட்டன. தங்கள் தாராள ஒத்துழைப்பை வழங்கிய மறைக்கோட்ட குரு முதல்வர்கள், பங்குத் தந்தையர்கள், குருக்கள், துறவியர், அருட்சகோதரிகள், பொதுநிலை வளவாளர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம் எனத் தெரிவித்துள்ளார்.

**முதல்நாள் நிகழ்வில் திருகோணமலை மறைமாவட்ட ஆயர்**

முதல்நாள் நிகழ்வுக்குத் திருகோணமலை மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி கிறிஸ்ரியன் நோயல் இம்மனுவல் ஆண்டகை சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டார். அவர் அங்கு உரையாற்றும் போது திருத்தூதர்கள் பெற்ற பெந்தகோஸ்தே அனுபவத்தை, புதுப்பிப்பிப்பு அனுபவத்தைப் பெற முயல்பவர்கள் பெறவேண்டும். தூய அன்னை தெரேசா போன்று காலத்திற்குக் காலம் தேவையில் இருப்போரைக் கண்டுபிடித்து அவர்கள் இருக்கும் இடம் தேடிச் செல்ல வேண்டும். இதுவே புதுப்பித்தலின் அடிப்படை என்றார். கீழ் மட்டத் திற்கு வந்து பணியாற்றுவது முக்கியமானது. ஒருவரது பணி, எனது தனிப்பட்ட குடும்பம், பங்கு, மறைமாவட்டம், உலகத்திருச்சபை என்று பரந்து செல்லவேண்டும். ஆதிக் கிறிஸ்தவர்கள் நம்பிக்கை வாழ்வின் அனுபவத்தைப் பகிர்ந்தார்கள். வாழ்ந்தார்கள். சாட்சிகளாக இறந்தார்கள். இதுவே திருச்சபையைப் புதுப்பித்தது.

யாழ். மறை மாவட்டத்தின் இறை மக்கள் இறைவனது கருவிகளாக மாற புதுப்பிப்பது பாரட்டுதற்குரியது எனத் தெரிவித்தார். முதல் நாள் நாங்கள் ஓர் இறைமக்கள் குழுமம் என்ற முதற் கருப்பொருளில் கலந்தாய்வு செய்யப்பட்டது.

இரண்டாம் நாள் நிகழ்வுக்குத் மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி பொன்னையா யோசவ் ஆண்டகை சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டார். அன்று நாங்கள் ஒரு வழிபடும் குழுமம் என்ற இரண்டாம் கருப்பொருள் அலசப்பட்டது. அன்றைய தினம் மாலை நாங்கள் ஒரு சான்று பகரும் குழுமம் என்னும் மூன்றாம் கருப்பொருளும் விவாதிக்கப்பட்டது. ஒக்ரோபர் 1ஆம் திகதி சனிக் கிழமை மூன்றாம் நாள் நிகழ்வுக்கு மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் ஆயர் மேதகு கலாநிதி கிங்சிலி சுவாம் பிள்ளை ஆண்டகை சிறப்பு அதிதியாகக் கலந்து கொண் டார். முதல் இரண்டு நாள்களிலும் மாநாட்டு ஆயத்த காலங்களில் நடத்தப்பட்ட கலந்துரையாடல்கள், கருத்துப்பகிர்வுகள் மற்றும் கேள்விக் கொத்துக்கள் மூலம் பெறப்பட்ட விடயங்கள் அடங்கி தயாரிக்கப்பட்ட நிலைப்பாட்டு ஏடுகள் மன்றில் படிக்கப்பட்டு விடயங்கள் அலசப்பட்டன. மூன்றாம் நாள் நிகழ்வில் நிலைப்பாட்டு ஏடுகளின் அடிப்படையில் எதிர்வரும் 5 ஆண்டுகளில் யாழ். மறைமாவட்டத்தில் முன்னெடுக்க வேண்டிய முதன்மைப்பணிகள் என்ன என்பதும் தீர்மானிக்கப்பட்டது.

**மாநாட்டுக்காக இதுவரை நடைபெற்ற விடயங்கள்**

முதலில் யாழ். மறைமாவட்டக் குருக்கள் பின்னர் துறவிகள் அடுத்து யாழ். மறைமாவட்ட பொதுநிலையினருக்கான கூட்டங்கள் நடத்தப்பட்டன.

இதில் யாழ்மறைமாவட்டத்தின் மறைக்கோட்டங்களான யாழ், பருத்தித்துறை, இளவாலை, கிளி–முல்லை, தீவகம் ஆகிய 5 மறைக்கோட்டங்களில் இருந்தும் 200க்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர். வசதி கருதி தீவக மறைக் கோட்டத்தினர் யாழ். மறைக் கோட்டத்துடன் இணைந்து இந்தக்கூட்டத்தில் பங்குபற்றினர். குருக்கள், துறவியர்களும் இணைந்து கொண்ட இந்தக் கருத்தமர்விலேதான் இம் மாநாட்டுக்கான ஆய்வுப் பொருளான மூன்று எண்ணக்கருக்களும் தெரிவு செய்யப்பட்டன. மேலும் இந்தக் கூட்டத்தில் இம்மாநாட்டை நெறிப்படுத்தத் தேவையான வளவாளர்கள் 6 அங்கத்தவர் கொண்ட குழுக்களாக 5 மறைக்கோட்டங்களில் இருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். யாழ் மற்றும் தீவக மறைக் கோட்டங்களில் இருந்து 3 குழுக்களும் பருத்தித்துறை மறைக்கோட்டத்தில் இருந்து 2 குழுக்களும் – இளவாலை மறைக் கோட்டத்தில் இருந்து 2 குழுக்களும் – கிளி முல்லை மறைக் கோட்டத்தில் இருந்து 3 குழுக்களு மாகத் தலா 6 அங்கத்தவர்கள் கொண்ட 10 குழுக்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

யாழ். ஆயர் மேதகு கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை யாழ். மறைமாவட்டத்தை இறை திட்டப்படி சிறப்புற வழிநடத்த இறை ஆசிரும் இறை வரங்களும் கிடைக்க செபிப்போம். இரக்கம் நிறைந்த இறைவன் புதுமைகளையும் மாற்றங்களையும் கொணர்ந்து யாழ். மறைமாவட்டத்துக்கு ஒரு புதிய முகம் கொடுப்பாராக.

## மாதவிடாய் ஒழுங்கின்மைக்கு என்ன செய்ய?

**மருத்துவர் எம்.அரவிந்தன்**

கேள்வி: எனது வயது 22 ஆகும். எனது உடற்பருமனானது சிறிது சிறிதாக அதிகரித்துச் செல்கின்றது. எனக்கு இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு ஒருமுறையே மாதவிடாய் ஏற்படுகின்றது. இது தொடர்பாக ஆலோசனை வழங்கவும்.

பதில்: உங்களைப் போன்ற இளம் பெண்களுக்கு உடற்பருமன் அதிகரித்தலானது இன்றைய காலகட்டத்தில் ஒரு பெரிய பிரச்சினையாக உருவெடுத்து வருகிறது. பிழையான உணவுப் பழக்க வழக்கங்களும் தேக அப்பியாசமற்ற வாழ்க்கை முறையுமே இதற்குக் காரணங்களாகும். உடற்பருமனானது அதிகரித்து மாதவிடாய் ஒழுங்கற்ற நிலை ஏற்படுவதற்குப் பிரதானமான காரணமாக அமைவது சூலகத்தில் சிறுகட்டிகள் ஏற்படுகின்ற நிலை (Poly cystic ovarian syndrome) என அழைக்கப்படுகின்றது. இந்நோய் உள்ள பெண்களுக்கு முகம் மற்றும் உடல் பகுதிகளில் ஆண்களைப் போன்று அதிக உரோம வளர்ச்சியும் ஏற்படலாம். இதேபோல நீரிழிவு ஏற்படுகின்ற சாத்தியக் கூறு மற்றும் அதிகளவு கொலஸ்திரோல் உடலில் சேருதல் என்பனவும் ஏற்பட வாய்ப்புண்டு. இதேபோன்று மணம் முடித்த பெண்களில் கர்ப்பம் தரித்தலும் தாமதமடைய நேரிடலாம்.

உடற்பருமன் அதிகரிக்கும்போது மேலே குறிப்பிட்ட பலவிதமான தொற்றா நோய்களின் தாக்கம் அதிகரிக்க நேரிடுகிறது. உங்களுக்கு பலவிதமான இரத்த, தைரொயிட் போன்ற ஹோர்மோன் பரிசோதனைகள், வயிற்று ஸ்கான் போன்ற பரிசோதனைகள் மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

எனவே, இன்று முதல் ஆரோக்கியமான உணவுகளை உள்ளெடுத்து மாச்சத்து, சீனி மற்றும் கொழுப்பு நிறைந்த உணவுகளைக் குறைத்து போதியளவு தேக அப்பியாசத்தை மேற்கொண்டு உங்கள் உடற்பருமனைக் குறைத்தல் அவசியமாகும். நீங்கள் காலம் தாழ்த்தாது வைத்திய ஆலோசனையைப் பெற்றுக் கொள்வது இன்றியமையாததாகும். உங்களின் பரிசோதனை முடிவுகளின்படி வைத்தியரானவர் தேவைப்பட்ட சிகிச்சை முறைகளை ஆரம்பிப்பார். இது பற்றிய மேலதிக விவரங்களை யாழ்.போதனா வைத்தியசாலை அகஞ்சுரக்கும் தொகுதி நிலையத்திலிருந்து பெற்றுக் கொள்ள முடியும்.

நீரிழிவு, அகம்சுரக்கும் தொகுதி
சிறப்பு வைத்திய நிபுணர்
(ஹோர்மோன்)
யாழ்.போதனா வைத்தியசாலை.



# பெண்களில் ஏற்படும் ஆரோக்கியம் சார்ந்த பிரச்சினைகள்

■ மருத்துவர் நிருஷிகா சோதிநாதன்.

ஆரோக்கியம் சார்ந்த பிரச்சினைகளை நோக்கும்போது பெண்களுக்கும் ஆண்களுக்கும் ஒரேமாதிரியான பிரச்சினைகளே ஏற்படுகின்ற போதிலும் அவை பெண்களை வித்தியாசமான முறையில் பாதிக்கின்றன. சில நோய்நிலமைகள் உதாரணமாக மூட்டுவாதம், அதிகரித்த உடற்பருமன் மற்றும் மனஅழுத்தம் போன்றன பெண்களை அதிகளவில் பாதிக்கின்ற போதிலும் சில நோய்நிலமைகள் பெண்களுக்கே தனித்துவமானவை.

பெண்கள் எப்பொழுதும் தங்களைச் சார்ந்தவர்களுடைய நலனில் செலுத்தும் கவனத்தை சிறிதளவேனும் தமக்காகவும் செலுத்த வேண்டும். பெண்களுடைய நலன்பற்றிக் கருதும்போது அவர்களுடைய உடல் நலம் பற்றி மட்டும் சிந்திக்காது உள, மனநல ஆரோக்கியம் பற்றியும் சிந்தித்தல் அவசியமானதாகும்.

பெண்களைப் பொறுத்தவரை அவர்களின் ஒவ்வொரு வாழ்க்கைப் படிநிலைகளிலும் அவர்கள் எதிர்நோக்கும் சுகாதரம் மற்றும் ஆரோக்கியம் சார்ந்த பிரச்சினைகள் வேறுபடுகின்றன. உதாரணமாகக் குழந்தைப் பருவத்தை எடுத்துக் கொண்டால் போசாக்குக் குறைபாடு மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் என்பவற்றைக் குறிப்பிடலாம். அடுத்துப் பதின்ம வயதுப் பருவத்தினை எடுத்துக் கொண்டால் மாத விடாய்ப் பிரச்சினைகள், அதிகரித்த உடற்பருமன், போசாக்குக் குறைபாடு, குருதிச்சோகை, இளவயதுக் கர்ப்பம் மற்றும் மன ரீதியாக ஏற்படும் மாற்றங் கள் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

அடுத்து 20-44 வயதுப் பிரிவை எடுத்துக் கொண்டால் கர்ப்ப காலம் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் பிள்ளைப் பேறின்மை ஆகியன முக்கிய இடம் வகிக்கின்றன. கர்ப்ப காலத்தில் ஏற்படும் பிரச்சினைகளில் முன்னணி வகிப்பவை நீரிழிவு நோய், உயர்குருதியமுத்தம் மற்றும் குருதிச்சோகை என்பனவாகும். எனினும் தகுந்த மருத்துவ வசதிகளை வழங்குவதன் மூலம் இந்த நோய் நிலமைகள் வெற்றி கொள்ளப்படு கின்றன. தற்காலத்தில் பிள்ளைப் பேறின்மை (Subf ertility) ஆனது பெண்களை வாட்டி வரும் நிலமையாக உள்ளது. இதற்கு ஆண், பெண் என இருபாலாரும் காரண மெனினும் பெண்களில் ஏற்படும் சில நோய்களான தைரோயிட் சுரப்பி தொடர் பான நோய்கள், சூலகத்தில் ஏற்படும் கட்டிகள் (Polycystic ovarian syndrome) மற்றும் சில நீண்ட கால நோய் நிலைகள் முக்கிய பங்கு வகிக்கின் றன.



நாற்பத்தைந்து வயதிலும் கூடிய பெண்களை கருத்தில் கொள்ளும்போது எல்லாப் பெண்களிலும் நிகழும் உடற்தொழிலியல் சார்ந்த நிகழ்வாக மாதவிடாய் நிறுத்தம் (Menopause)ஐ குறிப்பிடலாம். இதன் ஆரம்ப கட்ட அறிகுறிகளாக இரவு நேரங்களில் அதிகளவில் வியர்த்தல், அடிக்கடி மன நிலமை மாற்றமடைதல் போன்றவற்றைக் குறிப்பிட லாம். மேலும் இந்த வயதுப் பிரிவினரிடையே பெண் நோயியல் சம்பந்தமான புற்றுநோய், உதாரணமாக சூலகப் புற்றுநோய், மார்பகப் புற்றுநோய், கருப்பை புற்றுநோய் மற்றும் கருப்பைக் கழுத்துப் புற்றுநோய் என்பன அதிகளவில் ஏற்பட வாய்ப்புண்டு. அத்துடன் இருதய நோய்கள், உயர்குருதியமுத்தம், நீரிழிவு, என்பு தேய்வு மற்றும் மூட்டுவாதம்போன்ற நோய்கள் ஏற்படுகின்றன.

பெண்கள் வாழ்நாள் முழுவதிலும் எதிர் கொள்கின்ற பிரச்சினைகள் ஆண்பெண் சமத்துவமின்மை, சமூகவியல் சார்ந்த பிரச்சினைகள் மற்றும் மன அழுத்தம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

எனவே பெண்கள் மேற்குறிப்பிட்ட நோய்நிலமைகளைத் தீர்ப்பதற்கு மருத்துவ ஆலோசனை மற்றும் உதவிகளை நாடுவது அவசியம். எனினும் பெண்களின் தன்னம்பிக்கைக் குறைவு, குறைந்த வருமானம், போதிய அறிவு, கல்வியின்மை மற்றும் குடும்பப் பொறுப்புக்கள் ஆகியன தடைக்கற்களாக அமைகின்றன.

தற்கால சமுதாயத்தில் பெண்கள் எதிர்நோக்கும் சவால்களாகத் தேவையற்ற கர்ப்பம், குழந்தைப் பேறின்மை, புற்றுநோய், பெண்களுக்கெதிரான வன்முறை ஆகியவற்றை குறிப்பிடலாம்.

எனவே வயது வேறுபாடின்றி அனைத்துப் பெண்களும்




தமக்கு ஏற்படும் சவால்களை முறியடிப்பதற்குத் தகுந்த வழியில் செயற்படுவது அவசியமாகும். இந்த வகையில் ஆரோக்கியமான வாழ்க்கை முறையைக் கடைப்பிடித்தல் முக்கிய இடம் பெறுகின்றது. ஆரோக்கியமான உணவுப் பழக்கவழக்கங்களைப் பேணுதல், கிரமமாக உடற்பயிற்சி செய்தல், சீரான நித்திரை, மன உளைச்சலை சரியான முறையில் கையாளுதல் போன்ற ஆரோக்கிய வாழ்க்கைக்கு வழிகோலுகின்றன. வயது வந்த அனைத்துப் பெண்களும் தமது ஊரிலுள்ள சுகவனிதையர் சிகிச்சை நிலையத்திற்கு சென்று சில நோய் நிலமைகளான நீரிழிவு, உயர்குருதியமுத்தம், கொலஸ்ரோல் நோய் போன்றவற்றைக் கண்டுபிடிப்பதற்கான ஆரம்பக்கட்ட பரிசோதனைகளைச் செய்தல் அவசியமானதாகும்.

எனவே அனைத்துப் பெண்களும் தமக்கு ஏற்படும் சுகாதாரம் சார்ந்த பிரச்சினைகளை சரியான வகையில் கண்டறிந்து அவற்றினைத் தீர்ப்பதற்கான வழிவகைகளை மேற்கொள்வதன் மூலம் அவர்களின் ஆரோக்கியமான எதிர்கால வாழ்வு நிர்ணயிக்கப்படும்.

**நீரிழிவு சிகிச்சை நிலையம்,**
**யாழ்.போதனா வைத்தியசாலை**

# பதிவுகள்





நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியில் இருந்து பருத்தித்துறை கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட மக்கள் கழகங்களுக்கு உதவு தொகைகள், உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ற-109)



வவுனியாவைச் சேர்ந்த வடமாகாண சபை உறுப்பினர்களால் பொருளாதார ரீதியில் நலிந்த குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு சைக்கிள்கள் அண்மையில் வழங்கப்பட்டன. வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் முன் வளாகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் முத்து இராதாகிருஷ்ணன், முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினரும், வவுனியா நகரக் கோட்டக் கல்விப் பணிப் பாளருமாகிய எம்.பி.நடராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர். (ற-402)



வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலய தரம் நான்கு பாடசாலை மாணவர்களின் பெற்றோர் தின நிகழ்வுகள் அக்குவைனஸ் கேட்போர் கூடத்தில் பாடசாலை அதிபர் அருட்சகோதரி ஜெயநாயகி செபமாலை தலைமையில் அண்மையில் நடைபெற்றது. (ற-ரி)



அம்பலவன் பொக்கணை மகா வித்தியாலயத்தின் புதிய கட்டடத் திறப்பு விழாவும், பரிசளிப்பு விழாவும் அண்மையில் நடைபெற்றன. வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் கட்டடத்தைத் திறந்து வைத்தார். பரிசளிப்பு விழாவில் முதன்மை விருந்தினராக முல்லை. வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி உ.முனீஸ்வரன் கலந்து கொண்டார். (ற–ரி)



திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியின் தேவதைகளின் இரவு கலை நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. கல்லூரி அதிபர் திருமதி ஜெயபாலன் சுலக்சனா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் அதிதிகளாகக் கலந்துகொண்ட கல்வி அதிகாரிகள் வரவேற்கப்பட்டனர். திருகோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் ஆதீன கர்த்தா சோ.இரவிச்சந்திரக் குருக்கள் மங்கள விளக்கேற்றினார். கல்லூரி அதிபர் தலைமையுரை ஆற்றினார். மாணவிகளின் வரவேற்பு நடனம் நடைபெற்றது. (ற–40)



சர்வானந்தமயபீடம் நடத்திய புத்தகத் திருவிழா அண்மையில் நடைபெற்றது. அதில் நூல் வெளியீடு, நூல் அறிமுகம் என்பனவும்– புத்தகக் கண்காட்சி, இறுவட்டுக்கள், சமஸ்கிருத, தமிழ் நூல்கள் என்பவற்றின் மலிவு விற்பனையும் நடைபெற்றன. (ற–ரி)





உரும்பிராய் கிழக்கு காந்திஜீ முன்பள்ளி மாணவர்களின் 2016 ஆம் அண்டுக்கான விளையாட்டு விழா அண்மையில் இடம் பெற்றது. நிகழ்வில் யாழ். மாகாண சபை உறுப்பினர் அ. பரஞ்சோதி தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டு மங்கல விளக்கு ஏற்றி, நிகழ்வை ஆரம்பித்தார். (ற)





பிரம்ம குமாரிகள் உலக ஆன்மிகப் பல்கலைக் கழகத்தின் தமிழகத்தின் தலைமையகமான சென்னையிலுள்ள பிரம்ம குமாரிகள் இராஜயோக தியான நிலையத்தின் மூத்த தியான ஆசிரியர் பிரம்ம குமாரி ஜான்சிராணி யாழ்ப்பாணம் வந்தார். நெல்லியடி கிளை மற்றும் கிளிநொச்சியில் அமைந்துள்ள சுகதாமம் மண்டபத்திலும், சாவகச்சேரி கிளை நிலையங்களில் நடைபெற்ற நிகழ்வுகளிலும் பங்கு கொண்டார். (ற–ரி)

# சிறந்த சமூகப் பணியாளர் விருது இரு தமிழர்களுக்கு



யாழ்ப்பாணம், ஒக். 2
ஆஸ்திரேலியாவைத் தலைமையாகக் கொண்டு இயங்கும் பன்னாட்டு அமைப்பினால் நடத்தப்பட்ட சிறந்த சமூகப் பணியாளர்களுக்கான விருது, சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் இயக்குநர் கணேஸ்வரன் வேலாயுதம் மற்றும் சிறுவர் பராமரிப்புக்காக வண பிதா குமார் ராசை ஆகிய இருவருக்கும் வழங்கப்பட்டுள்ளது.

பன்னாட்டுச் சமூக சேவை அமைப்பும் பேராதனைப் பல்கலைக் கழக சமூகவியல் கற்கை நெறிப் பிரிவும் இணைந்து நடத்திய சமூக சேவைகள், சமூக அபிவிருத்திகள் மற்றும் அதனை நிலை நிறுத்தும் அபிவிருத்திக்கான நோக்கமும் என்ற தலைப்பில் இரு நாள் பன்னாட்டு மாநாட்டுக்கான வைபவம் கண்டி ஓகெரெ விடுதியில் நடைபெற்றது.

இதன்போதே மேற்படி விருது வழங்கப் பட்டுள்ளது. (த-5)

# கசிப்பு கடத்தியவருக்கு 150,000 ரூபா அபராதம்

கிளிநொச்சி, ஒக். 2
கிளிநொச்சி இராமநாதபுரம் பகுதியில் 10 ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்பை விற்பனைக்காகக் கடத்திச் சென்ற நபருக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா தண்டம், கிளிநொச்சி நீதிவான்மன்றத்தினால் விதிக்கப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் சின்னச் சந்தை வீதியில் மோட்டார் சைக்கிளில் 10 ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்பை வியாபாரத்துக்காகக் கடத்திச் சென்றவேளை மது ஒழிப்பு தொடர்பான நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் சந்தேக நபரைக் கைது செய்து கிளிநொச்சி மாவட்ட நீதிவான் மன்றில் முற்படுத்தினர்.

சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று வட்டக்கச்சிப் பகுதியில் 750 மில்லிலீற்றர் கசிப்பினை உடைமையில் வைத்திருந்த நபருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (த-5-ரி3)

TASTER'S

Northern Farm (Pvt) Ltd. விநியோகத்தராக இணைவதற்கான சிறந்த வாய்ப்பு

இலங்கையில் முதற்தடவையாக சிறந்த உயர்தொழில்நுட்பத்துடனும் தரத்துடனும் உள்ளூர் விவசாய உற்பத்திகளிலிருந்து தாயாரிக்கப்பட்டு "TASTER'S" வர்த்தக நாமத்துடன் சந்தைப்படுத்தப்படும் வறுத்த சிவப்பு அரிசிமா, வெள்ளை அரிசிமா, நல்லெண்ணெய் போன்ற உணவு உற்பத்திகளையும் மற்றும் அவித்த கோதுமை மாவையும் விநியோகிப்பதற்கு தகுந்த விநியோகஸ்த்தர்களை வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலிருந்தும் ஏனைய மாவட்டங்களிலிருந்தும் எமது நிறுவனம் எதிர்பார்க்கின்றது.

விநியோகத்தருக்கான நன்மைகள்

- கவர்ச்சிகரமான விற்பனை தரகு வழங்கப்படும்.( மாதாந்தம் ரூபா 2- 3 லட்சம் வரை)
- வாகன கொடுப்பனவு ( நாளொன்றிற்கு 1,500.00 ரூபா வரை வழங்கப்படும்)
- வியாபார மேம்படுத்தலுக்கான செயற்பாடுகள் ஒழுங்கு செய்யப்படும் (Promotion Activities)
- கம்பனியில் இருந்து விநியோகஸ்தரின் களஞ்சியத்திற்கு விற்பனைக்குரிய எமது பொருள்களைக் கொண்டு செல்வதற்கான இலவச போக்குவரத்து வசதி வழங்கப்படும்.
- சந்தை வலுவூட்டல் செயற்பாடுகள் ஒழுங்கமைத்து தரப்படும்.

விநியோகத்தர்கள் கீழ்வரும் தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

- 10 இலட்சம் வங்கி பிணை (கொள்வனவு திறனுக்கேற்ப இது மாறுபடும்)
- சிறந்த முறையில் பராமரிக்கப்படும் போதுமான இடவசதியுடைய களஞ்சியம்
- குறைந்தது இரண்டு வருட பல்பொருள்(பலசரக்கு) வியாபார அனுபவம்
- விநியோகத்திற்கான வாகன வசதி
  விற்பனை இலக்கினை எய்தும் திறனுடைய ஆளணி வசதி

பூரணமாக தகவல்களுடன் தயாரிக்கப்பட்ட தங்கள் விண்ணப்பங்களை 8-10-2016ஆம் திகதிக்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். மேலதிக தகவல்களுக்கு கீழ்காணப்படும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

விண்ணப்பிக்கவேண்டிய முகவரி:
Northern Farm (Pvt) Ltd
Marakkarampalai, Vavuniya.
(+94)0242052141
Northernfarmpvtltd@yahoo.com

யாழ் மண்ணில் புதியதோர் ஆரம்பம்

EXAM POINT
Every Little Success
OFFICIAL CIMA PARTNERS
APPROVED CIMA EXAM CENTRE JAFFNA

CIMA OPEN DAY
Learning Partner 2016
CIMA
Chartered Institute of Management Accountants

- இன்று மாணவர்கள், CIMA விரிவுரையாளர்கள், CIMA பிரதிநிதிகள்(கொழும்பு) சந்திப்பு.
- இந் நிகழ்ச்சிக்கு அனைத்து மாணவர்களையும், பெற்றோர்களையும் அன்புடன் அழைக்கிறோம்.

நேரம் காலை 9.30 தொடக்கம் மாலை 5.00 மணி வரை

இன்று பதிவுகளை மேற்கொள்ளும் அனைத்து மாணவர்களுக்கும்
25%Off

FREE
- English Course for CIMA Students by trained British Council English Teacher
- Computer Typing Course for CIMA Students



மேலதிக விபரங்களுக்கு
0776 28 48 45



Classes commencing on 11th of October 2016
விஜயதசமி

CONTACT
021 221 6400
info@exampoint.lk www.exampoint.lk
www.facebook.com/exampoint.jaffna
Exam point Private Limited
120/6 Palaly road, Kantharmadam, Jaffna.

# குடிதண்ணீர் பற்றாக்குறைக்கு சகலரையும் உள்ளடக்கித் தீர்வு

## *ஜனாதிபதி மைத்திரிபால வலியுறுத்தல்*

கொழும்பு, ஒக். 2

நாடு பூராவும் நிலவும் வறட்சி காரணமாக எழுந்துள்ள குடிதண்ணீர் பற்றாக் குறைக்கு அவசரத் தீர்வைக் காணும் போது பாதிக்கப்பட்டுள்ள அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கியதாக நட வடிக்கை எடுக்க வேண்டும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இவ் வாறு பணித்துள்ளார்.

வறட்சியுடன் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் மற்றும் வழங்க வேண்டிய தீர்வுகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கான அவசர கலந்துரையாடலொன்று ஜனாதி பதியினால் நேற்றுமுன்தினம் காலை நடத்தப்பட்டது. இதன் போதே ஜனாதிபதி மேற்படி பணிப்புரையை விடுத்தார்.

வறட்சி நிலையுடன் எழுந்துள்ள குடிதண் ணீர் பற்றாக்குறைக்குத் தீர்வு காணுதல் நோய்ப் பரவலைத் தவிர்த்தல் மற்றும் நீருக்காக கிராமங்களுக்குள் நுழையும் மிருகங்களால் ஏற்படும் பாதிப்புக்களைக் குறைப்பதற்குத் தொடர்புடைய அனைத்து நிறுவனங்களும் இயங்கு திறனாகச் செயற்படவேண்டுமெனவும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

பாதிக்கப்பட்ட் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதுடன் எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய இதுபோன்ற இயற்கை இடர்களின் பாதிப்புக்களைக் குறைப்பதற்காகப் பரந்த நீர்வழங்கல் கருத்திட்டங்களை. நடை முறைப்படுத்தி அச்சுறுத்தலைத் தவிர்க்க வேண்டும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட் டார்.

குடிதண்ணீர் வழங்கல் போன்ற மக் களுக்கு அத்தியாவசியமான கருத்திட்டங் களைத் திட்டமிட்டுச் செயற்படுத்தும்போது அவற்றுக்கான காணிகளை விடுவித்து வழங்குதல் மற்றும் நீர்ப்பாசன நீரை விடு வித்தல் போன்ற சேவைகள், குறித்த விடயத்திற்குப் பொறுப்பான நிறுவனங் களால் துரிதமாக நிறைவேற்றப்பட வேண் டும்.

வறட்சி மற்றும் நீர்ப்பற்றாக்குறை காரண மாகப் பரவக்கூடிய நோய்களைத் தவிர்ப் பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் எதிர்பாராத நோய் நிலைமையின் போது பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் தொடர்பாக மக்களைத் தெளிவுபடுத்து வதற்காக மருத்துவ நடமாடும் சேவை களை நடத்துவது தொடர்பிலும் இதன் போது கலந்துரையாடப்பட்டது.



வறட்சி காலங்களில் நீர் மற்றும் உணவுக் காக கிராமங்களுக்குள் வரும் விலங்கு களால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைப் பதற்காக மக்களுக்கும், வன விலங்கு களுக்கும் மிகவும் சாதகமான முறை யைப் பின்பற்ற வேண்டுமெனவும் சுட்டிக் காட்டிய ஜனாதிபதி, மின்சார வேலி நிர் மாணித்தல் போன்ற செயற்பாடுகளின் போது வன வலங்குகளின் பாதுகாப்பை யும், கிராம மக்களின் தேவைகள் தொடர் பிலும் ஆழமாக ஆய்வு செய்வதன் முக்கியத்துவத்தையும் அலுவலர்களுக் குத் தெளிவுபடுத்தினார். (த-5)

---

### சீமா கற்கை ஆரம்ப நிகழ்வு இன்று

சீமா கற்கை நெறிக்கான ஆரம்ப நிகழ்வு இன்று காலை 9 மணியில் இருந்து மாலை 5 மணிவரை முழு நேர நிகழ்வாக நடை பெற வுள்ளது. இல. 120 /6 பலாலி வீதி, கந்தர்மடத்தில் அமைந் துள்ள எக்சாம் பெயின்ற் நிறு வனத்தில் இது நடைபெறவுள் ளது. இந்த ஆரம்ப நிகழ்வில் சீமா கற்கை யைத் தொடர வுள்ள மாணவர் கள், விரிவுரையா ளர்களுடன் கலந்துரையாட முடியும் என்று அறிவிக்கப்பட் டுள்ளது. (த-ரி4)

**காணி தேவை**
சாவகச்சேரிக்கும் கொடிகாமத்திற்குமிடையில் வீட்டுடன் கூடிய காணி அல்லது காணி தேவை.
தொடர்பு: 077 739 7592

**காணி விற்பனைக்கு**
கொடிகாமம், அல்லாரையில் 13 பரப்பு தென்னங்காணி விற்பனைக்குண்டு
077 414 4809

**காணி விற்பனைக்கு**
பன்னாலை வீதியில் அளவெட்டி வடக்கு தவளக்கிரி அம்மன் கோயிலிற்கு அருகில் 2 1/2 பரப்புக் காணி பயன்தரு மரங்களுடன் மலிவு விலையில் உடனடியாக விறபனைக்கு உண்டு.
தொடர்பு: 077 8073546

**வேலையாள் தேவை**
பொருள்களை கொண்டு சென்று விநியோகிக்கும் வாகனத்திற்கு விற்பனை உதவியாளர் தேவை. திருநெல்வேலி பகுதிக்கு அருகில் உள்ளவர்கள் விரும்பத்தககது.
தொடர்பு: 077 9009541

**வேலையாள்கள் தேவை**
எமது நிறுவனத்திற்கு பொருள் காட்சிப்படுத்துனர்களும் (Van sales) நிர்வாக உதவியாளர்களும் தேவை.
வயதெல்லை - 18 - 30
நேரில் சமுகம் தரவும்
தேனு களஞ்சியம் (நெஸ்லே)
மில்லேன், உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.
021 4921258, 075 6420131, 077 2131448

**விற்பனைக்கு**
அரைக்கும் ஆலைக்குரிய மிசின்களும், மோட்டர்களும் (25HP, 20HP, 15HP, 10HP, 7.5HP, 5.5HP, 3HP, 1 HP) விற்பனைக்கு உண்டு. (ஸ்ராட்டர், மெயின் சுவிச் என்பனவும் உண்டு)
ஸ்ரேசன் வீதி (சோதி ஸ்ரோர்ஸ் முன்பாக)
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்,
077 615 4941

**மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு**
BCQ-XXXX இலக்கமுடைய Road Master CD - 200 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.
078 308 8220

**அறை வாடகைக்கு**
யாழ் மருத்துவபீடத்திற்கு மிக அண்மையில் 05 மாணவர்களிற்கான அறைகள் வாடகைக்கு உண்டு. மருத்துவபீட மாணவர்களிற்கு மாத்திரம்
077 218 9874

**வாகனம் விற்பனைக்கு உண்டு**
LI xxxx - TATA டிப்பர் (1 3/4 கியூப்) PR-xxxx மகேந்திரா வாகனம் விற்பனைக்கு உண்டு.
077 9909235

**MATHS PERSONAL CLASS**
தரம் 6 -11 வரையான கணித வகுப்புக்கள் ஆங்கில மற்றும் தமிழ் மொழிமூலம் பிரபல அனுபவமிக்க ஆசிரியரினால் வீடு வந்து கற்பிக்கப்படும். யாழ்ப்பாணம் மற்றும் தெல்லிப் பழைக்குட்பட்டவர்கள்.
தொடர்பு - 077 2369133

**மணமகன் தேவை**
யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1983 கார்த்திகை நட்சத்திரம். முதலாம் சுற்று 35. 3ஆம் சுற்று 62 கிரகபாவம் உடைய செவ்வாய்க் குற்றமற்ற மணமகளுக்கு மணமகன் தேவை.
076 977 2484

**அறைகள் வாடகைக்குண்டு**
ஆலடி வீதி. கோண்டாவில் கிழக்கு. கோண்டாவிலில் அறைகள் வாடகைக்குண்டு.
071 205 6594

**பணியாளர்கள் தேவை**
யாழ் நகரில் புதிதாக ஆரம்பிக்க இருக்கும் புடைவை காட்சியறைக்கு புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ள ஆண்/ பெண் பணியாளர்களும் பழக விரும்புபவர்களும் உடன் தேவை.
077 704 8999

**மணமகள் தேவை**
காரைநகர் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1978 ஆம் ஆண்டு பிறந்த 22 பாவக்கிரக முடைய லக்கினத்தில் செவ்வாயும் அனுச நட்சத்திரமும் உடைய சொந்த தொழிலிலுள்ள மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
தொடர்பு: 077 822 2446

**JAPAN கார்கள் விற்பனைக்குண்டு**
Toyota Passo, Toyota Aqua, Suzuki Alto (Japan)
* Leasing வசதிகள் செய்துதரப்படும்.
தொடர்பு - 071 8561252
Bastian Hotel அருகில்
Kandy Road, Jaffna.

**அறைகள் வாடகைக்கு**
வேலைபார்க்கும், படிக்கும் பெண்களுக்கு தளபாடங்களுடன் அறைகள் வாடகைக்கு உண்டு.
இல.43, சிறாம்பையடி, யாழ் வீதி, யாழ்ப்பாணம்.
077 5218995, 077 6946274

**ஸ்ரீ முருகன் விஷன்**
கேபிள் TV உபகரணங்கள் எம்மிடம் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
G.P.S றோட், கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.
T.P: 077 6003084, 076 5258488

**வேலைவாய்ப்பு**
சாப்பாடு இலவசம் போடிங் இலவசம் நாள் சம்பளம் 1600/- (With OT) வரும் நாளிலே வேலை வாய்ப்பு
076 6235152, 076 6567150
076 5587807, 076 5715255

ஐஸ்கிறீம், பிஸ்கட், ஜேம் ஆகிய தொழிற்சாலைக்கு அனைத்து பிரிவுகளுக்கும் நாள் சம்பளம் 1600/- (With OT) தீபாவளிக்கான முற்பணம் பெற்றுக் கொள்ளலாம்.
072 2467943, 072 2467945
077 6363156, 076 9305146

"Airport vecancy" loundary (லொன்ட்றி) கேட்டறிங் கார்க்கோ போன்ற வேலைகளுக்கு 35,000/- - 75,000/- வரை சம்பளம் பெறலாம். உணவு, தங்குமிடம் இலவசம்.
15 வெற்றிடங்கள் மாத்திரமே.
072 2231518, 071 9215892

**உடனடியாக வேலையாள்கள் தேவை**
புதிய நிர்வாகத்துடன் 330, பருத்தித் துறை வீதியில் (ஆனைப்பந்தி சந்தி) இயங்கி வரும் S.S.R.Printers அச்சுக்கூடத்துக்கு அனுபவமுள்ள வேலையாள்கள் தேவை.
*கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.*
076 768 7664

**வேலையாள்கள் தேவை**
கணினி மற்றும் கணக்கு வேலை தெரிந்த பெண் ஒருவர் தேவை.
கொழும்பு பெயின்ட் சென்ரா
பருத்தித்துறை றோட், நீர்வேலி,
வில்லுமதவடி, கோப்பாய்.
077 789 0398

## கண்ணீர் அஞ்சலி

மலர்வு
17 . 11 . 1945



உதிர்வு
30 . 09 . 2016

எமது இரசாயனவியல் ஆசிரியர்

### தாமோதரம்பிள்ளை நாகரத்தினம்

*(பிரபல இரசாயனவியல் ஆசிரியர்)*

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்ப்பாணம்

பழைய மாணவர்கள்
(வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள்)

# புலிகளுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற ரணில் – மைத்திரி முயற்சி

## கூட்டு எதிரணி குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 2

நாட்டை இரண்டாகப் பிளவுபடுத்துவதாகப் புலம்பெயர்ந்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றவே ரணில் – மைத்திரி தலைமையிலான அரசு புதிய அரசமைப்பைக் கொண்டுவர முயற்சிக்கின்றது.

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையிலான ஒன்றிணைந்த எதிர்க்கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

அரசின் இந்த நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்ட எழுக தமிழ் பேரணிக்கு பதிலளிக்கும் வகையிலும் தெற்கில் பேரணிகள் மற்றும் மக்கள் கூட்டங்களை நடத்தத் தாம் தீர்மானித்துள்ளதாகவும் ஒன்றிணைந்த எதிர்க்கட்சி அறிவித்துள்ளது.

'போராட்டத்திற்கு உயிரூட்டும் புதிய மக்கள் சக்தி' என்ற தொனிப்பொருளில் இரத்தினபுரி நகரில் அடுத்த மாதம் நடத்தவுள்ள பொதுக் கூட்டம் தொடர்பாக தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பொன்று ஒருங்கிணைந்த எதிர்க்கட்சியினரால் நேற்றுமுன்தினம் இரவு கொழும்பு நாவல பிரதேசத்தில் நடத்தப்பட்டது.

இதன்போது அங்கு கருத்துத் தெரிவித்த ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பவித்ரா வன்னியாராச்சி, எதிர்வரும் 8ஆம் திகதி நடத்தப்படவுள்ள கூட்டத்துக்கு இப்போதிருந்தே மக்களைத் திரட்டும் பணிகள் உள்ளூராட்சி உறுப்பினர்கள் ஊடாக ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

புலம்பெயர் விடுதலைப் புலிகளுக்கும், இனவாதிகளுக்கும் இந்த நாட்டைப் பிரித்துக் கொடுப்பதாக வாக்குறுதிகளை வழங்கியே இந்த அரசு ஆட்சிக்கு வந்தது. இன்று எதிர்க்கட்சி மீது அடக்குமுறையைக் கையாண்டு அதனூடாகப் புலம்பெயர் விடுதலைப் புலிகளுக்கும், மேற்குலகத்துக்கும் நாட்டைப் பிளவுபடுத்துவதாக வழங்கப்பட்ட வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு அரசு எத்தனிக்கின்றது. இவ்வாறான செயற்பாடுகளுக்கு நாங்கள் எதிர்ப்பை வெளியிடுகின்றோம். வடக்கில் முன்னெடுக்கப்பட்ட பேரணிக்கு பதிலளிக்கும் வகையிலும், இனவாதத்துக்குப் பதிலளிக்கும் வகையிலும் மக்கள் கூட்டமொன்றை நடத்துவதற்கு எதிர்க்கட்சி தீர்மானித்துள்ளது. போராட்டத்திற்கு உயிரூட்டும் புதிய மக்கள் சக்தியின் தேசிய கூட்டம் என நாங்கள் இதற்கு பெயர் சூட்டியுள்ளோம்– என்றார். (த-21)

---

## மரண அறிவித்தல்கள்

### கஸ்பார் நீக்கிலாஸ்



நாரந்தனை தெற்கு ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், கொழும்புத்துறை 4ஆம் குறுக்குத்தெரு உதயபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கஸ்பார் நீக்கிலாஸ் நேற்று (01.10.2016) சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்தியரையடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சந்தியா குவலத்தி- சந்தனம் தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - பாக்கியம் தம்பதியரின் அன்புமருமகனும் புஸ்பத்தின் பாசமிகு கணவரும் இராசதுரை, சின்ராசு காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் சறோ, ராசினி, தமோ, செல்வராசா ஆகியோரின் சகோதரரும் வெஞ்சோ, பியூலா காலஞ்சென்ற பிறிஸ்சில்லா ஆகியோரின் தந்தையும் றமா, டொறின் ஆகியோரின் மாமனும் ஜெனா, ஜெசூரன், ஜெனி, டொறிசன், பிறின்சன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (02.10.2016) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று வசந்தபுரம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**உதயபுரம்,**
**4ஆம் குறுக்குத்தெரு,**
**கொழும்புத்துறை.**

**தகவல் :**
**குடும்பத்தினர்**

### திருமதி மீரா அம்பிகாபதி

பிறப்பு 08 . 09 . 1948



இறப்பு 30 . 09 . 2016

நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகவும், கே.கே.எஸ். றோட், செங்கமலவாசா கொக்குவில் கிழக்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மீரா அம்பிகாபதி 30.09.2016 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - கமலம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகேந்திரர் - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், அம்பிகாபதியின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற கோபாலகிருஷ்ணன் மற்றும் செல்வி, மனோகரா, கருணா, மதுரா, மயூரா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சீதாலட்சுமி, மாலினி, ஏழைகிருஸ்ணன், ரகுநாதன் ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை மற்றும் மனோன்மணி, அருமைநாயகம், காலஞ்சென்ற தியாகராசா மற்றும் நாகநாதபிள்ளை, காலஞ்சென்ற தாட்சாயினி மற்றும் தவராசா (லண்டன்), பாக்கியம், காலஞ்சென்றவர்களான தவமணி, பசுபதிப்பிள்ளை மற்றும் தவமணிதேவி, காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை, ஞானாம்பிகை, மனோரஞ்சிதம், பரமசுந்தரம் மற்றும் இராஜேஸ்வரி (குஞ்சு - லண்டன்), குகானந்தன் ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற அருட்சோதி மற்றும் செந்தில்குமார் (அருண்), காயத்திரி, மேகலா, சுஜிவா (மீனா), அம்பிகை (ரேவதி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பஞ்சலிங்கம், தினேஷ்குமார் ஆகியோரின் அன்பு மாமியாரும், லதுஷன், தாட்சாயினி, சஞ்ஜித் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.10.2016) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கே.கே.எஸ்.றோட்,
செங்கமலவாசா,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்: **குடும்பத்தினர்**
கணவர்- **அம்பிகாபதி,**
மகன் - **செந்தில்குமார்**
**(அருண்)**

**077 977 2232**

---

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

தமிழ் மக்கள் பல்வேறு நெருக்கடிகளைத் தொடர்ந்து எதிர்நோக்கி வருகின்றனர். இதனை அனுமதிக்க முடியாது. உரிமைகளைப் பெறுவதற்காக தமது உணர்வுகளை வெளிப்படுத்த அவர்களுக்கு உரித்துண்டு. எனினும், நாட்டில் ஆட்சி மாற்றத்தின் பின்னர் ஏற்பட்டுள்ள பெரியளவிலான மாற்றங்களைத் தமிழ் மக்கள் உணர்ந்து கொள்வது அவசியம்.

நிரந்தர அரசியல் தீர்வைப் பெறுவதற்கான முயற்சியில் நாம் தற்போது ஈடுபட்டுள்ளோம். அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இனப்பிரச்சினை தீர்க்கப்படவேண்டும். நிரந்தர அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் நாம் குறியாக உள்ளோம். தமிழ் மக்களை பிழையாக எவரும் வழிநடத்தக் கூடாது.

நாட்டில் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுவதற்கு அடிப்படைக் காரணம் அரசியல் தீர்வு காணப்படாமையே ஆகும். அரசியல் தீர்வைப் பெறும் நடவடிக்கையை எவரும் குழப்பக் கூடாது. தனிப்பட்ட நலனுக்காக எவரும் செயற்பட நாம் அனுமதிக்கமாட்டோம்.

சிங்களவர்களைப் பொறுத்தமட்டில் அவர்களில் இரு பகுதியினர் உள்ளனர். அவர்களில் ஒரு பகுதியினர் குழப்பவாதிகள் - இனவாதிகள். அரசியல் தீர்வைப் பெறும் நடவடிக்கைக்கு எதிரானவர்கள். தமிழர்களின் சில இனவாத நடவடிக்கைகள் அவர்களுக்குச் சாதகமாகிவிடும். அதை வைத்து அவர்கள் கூக்குரல் இடுவார்கள். இன்னொரு பகுதியினர் நல்லிணக்கத்தை விரும்புவர்கள். நல்லிணக்கத்தைப் பாதிக்கும் வகையில் தமிழர்கள் செயற்பட்டால் அதற்கு எதிராகக் குரல் கொடுப்பவர்கள்.

தமிழர்களாகிய நாங்கள் அரசியல் தீர்வை - உரிமைகளைப் பெறும் நடவடிக்கைகளில் மிகவும் அவதானத்துடன் செயற்படவேண்டும். நாட்டின் நல்லிணக்கத்தைப் பாதிக்காத வகையில் செயற்பட வேண்டும். சிங்கள இனவாதிகளுக்குத் தீனி போடும் வகையில் நாம் செயற்பட முடியாது. தமிழர்களாகிய நாம் எல்லோரும் இதனைப் புரிந்து கொள்ளவேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் 16 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். இவர்கள் அனைவரும் தமிழர்களின் உரிமைக்காக நாடாளுமன்றில் குரல் கொடுத்து வருவதுடன் அரசியல் தீர்வைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றார்கள்.

இந்நிலையில், தங்களுக்குத்தான் எல்லாம் தெரியும் என்ற நினைப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராகச் சிலர் செயற்படுகின்றார்கள். இவர்கள் தூரநோக்கு இல்லாதவர்கள். எமது மக்களைப் பிழையாக வழிநடத்த இவர்கள் முயற்சிக்கின்றார்கள். எமது மக்கள் இதனைப் புரிந்து செயற்படவேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலப்படுத்தவேண்டும்.

தற்போதைய காலத்தில் நாம் எல்லோரும் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும். வேறுபட்ட கருத்துக்களை வெளியிட்டு ஒருவரை ஒருவர் விமர்சிப்பதை நிறுத்த வேண்டும் - என்றார். (த-5)

---

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமக

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 25 . 10 . 1932



மறைவு 03 . 09 . 2016

### அமரர் இராமலிங்கம் வடிவேலு (ஆச்சாரியார்)

கடந்த 03.09.2016 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவனின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை (03.10.2016) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறுவதுடன் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.**

**காளி கோயிலடி,**
**சங்கானை.**

**குடும்பத்தினர்.**

---

## 19 ஆவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கம் வகிக்கும் இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், நேபாளம், பங்களாதேஷ், பூட்டான், ஆப்கானிஸ்தான், மாலைதீவு என தெற்காசிய வலயத்தின் 8 நாட்டு தலைவர்கள் பங்கேற்கத் திட்டமிட்டிருந்தனர்.

இந்த நிலையில், காஷ்மீர் மாநிலம் உரி இராணுவ முகாம் மீது பாகிஸ்தான் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதால் சார்க் மாநாட்டை இந்தியா புறக்கணித்தது. இதற்கு ஆதரவாக பங்களாதேஷ், பூட்டான், ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட நாடுகளும் மாநாட்டைப் புறக்கணித்தன. இதையடுத்து இலங்கையும் சார்க் மாநாட்டை பிற்போடுமாறு அறிவித்தது.

இந்தியா உட்பட 5 நாடுகள் புறக்கணித்திருப்பதால் சார்க் மாநாட்டை ஒத்திவைப்பதாகப் பாகிஸ்தான் அரசு நேற்று அறிவித்தது.

இது தொடர்பில் பாகிஸ்தான் வெளிவிவகார பேச்சாளர் நபீஸ் ஜகாரியா தெரிவித்துள்ளதாவது:

சார்க் மாநாடு நடைபெறவிடாமல் இந்தியா தடுத்துள்ளது. வறுமைக்கு எதிராக சார்க் நாடுகள் போரிட வேண்டும் என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு விடுத்தார். ஆனால், அவரின் நடவடிக்கை முரண்பாடாக உள்ளது. சார்க் அமைப்புக்கு தலைமை வகிக்கும் நேபாளத்துடன் கலந்தாலோசித்து சார்க் மாநாடு நடைபெறும் புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்–என்றார். (த)

## வடக்கு...

மோட்டார் சைக்கிளில் இருந்து தூக்கி வீசப்பட்ட நிலையில் சாவடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை முள்ளியவளைப் பகுதியில் இடம்பெற்றது.

முல்லைத்தீவு நகரப் பகுதியில் உள்ள அவரது வீட்டிலிருந்து காலபோக நெற்செய்கைக்குப் பசளை பெற்றுக்கொள்வதற்கான பதிவை மேற்கொள்வதற்குத் தனது வயல் ஆவணங்களுடன் முள்ளியவளை கமநல சேவை நிலையம் நோக்கி மோட்டார் சைக்கிளில் அவர் பயணித்துக்கொண்டிருந்தபோதே இந்தச் சம்பவம் நடந்தது.

முள்ளியவளை வன வளத் திணைக்களத்துக்கு முன்பாகப் பயணித்துக் கொண்டிருந்த அவர் மோட்டார் சைக்கிளில் இருந்து தூக்கி வீசப்பட்டார். இதை அவதானித்த அங்கிருந்த பொதுமக்கள் பிரதி அவைத் தலைவரை உடனடியாக ஓட்டோ ஒன்றில் ஏற்றி மாஞ்சோலை மருத்துவமனையில் சேர்த்தனர்.

அங்கு அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட அவர் உயிரிழந்துவிட்டார் எனத் தெரிவித்த மருத்துவர்கள், அவரது உடலத்தை உடற்கூற்றுப் பரி சோதனைக்கு உட்படுத்தினர். நீண்ட நேரம் மேற்கொள்ளப்பட்ட உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் அவர் மாரடைப்பால் சாவடைந்ததாக மருத்துவர்கள் உறுதிப்படுத்தினர். உடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. அவரது இறுதிக் கிரியைகள் குறித்து இன்னும் அறிவிக்கப்படவில்லை.

மரியாம்பிள்ளை மேரி திரேசா தம்பதிகளின் மூத்தமகனாக 1948ஆம் ஆண்டு ஜூன் மாதம் 11ஆம் திகதி பிறந்த அன்ரனி ஜெகநாதன் தனது ஆரம்பக் கல்வியை முல்லைத்தீவு திருக் குடும்பப் பாடசாலையில் பயின்று உயர் கல்வியை முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் நிறைவு செய்தார். பின்னர் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஆசிரியர் பயிற்சியை நிறைவு செய்து வற்றாப்பளையில் உள்ள பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றினார்.

அங்கிருந்து இடம்மாற்றம் பெற்ற அவர் முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகவும், பின்னர் அதிபராகவும் கடமையாற்றினார். அவருடைய அனுபவத்தின் அடிப்படையில் கரைதுறைப்பற்று கோட்டக் கல்வி அதிகாரியாகப் பதவிஉயர்வு பெற்றுக் கடமையாற்றி ஓய்வு பெற்றிருந்தார்.

பின்னர் கடந்த 2013ஆம் ஆண்டு இடம்பெற்ற மாகாண சபைத் தேர்தலில் முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட அவர் பெருமளவு வாக்குகளைப் பெற்று மாகாணசபை உறுப்பினராகி பிரதி அவைத் தலைவர் பதவியை வகித்தார்.

மாகாண சபை ஆரம்பிக்கப்பட்டு மூன்று வருடங்கள் கடந்த நிலையில் நேற்று தனது 68ஆவது வயதில் அவர் சாவடைந்துள்ளார்.

கடந்த காலப் போரின்போது மக்களுடன் நின்று மக்களுக்காக பணியாற்றிய இவர் ஆழிப்பேரலை இடரின்போதும் அதில் சிக்குண்டு உயிர் தப்பியிருந்தார். இவரது மனைவி நோய்வாய்ப்பட்டு ஏற்கனவே உயிரிழந்த நிலையில் தனது மூன்று மகன்களையும் வளர்த்து அதில் ஒருவரை விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இணைத்திருந்தார். இவர் இறுதியாகக் கடந்த வியாழக்கிழமை ஒட்டுசுட்டானில் அமைந்துள்ள விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற வடக்கு மாகாண நிதி ஒதுக்கீட்டின் கீழ் விவசாயிகளுக்கான உள்ளீடுகள் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(த-21-ரி7-101-102)

## சில காட்சிகள்

தொடர்ந்து மூன்று நள்களாக நடைபெற்று வருகின்றது.

இதில் தமிழ், சிங்கள மொழித் திரைப்படங்களும் குறுந் திரைப்படங்களும் காட்சிப்படுத்தப்பட்டன.

தமிழீழ திரைப்பட உருவாக்கப் பிரிவு, நிதர்சனத்தின் தயாரிப்பில் ஈழத்துத் திரைப்பட இயக்குநர் ந.கேசவராஜன் இயக்கத்தில் உருவான 'அம்மா நலமா' என்னும் திரைப்படம் அங்கு நேற்றுப் பிற்பகல் 2 மணிக்குத் திரையிடப்பட்டது. ஆனால், மூலப்படத்தில் இருந்த சில காட்சிகள் கத்தரிப்புச் செய்யப்பட்டே நேற்று அந்தத் திரைப்படம் ஒளிபரப்பப்பட்டமையை அவதானிக்க முடிந்தது.

'அம்மா நலமா' திரைப்படமானது ஈழத்தாய் ஒருவர், தன் இரு ஆண் பிள்ளைகளை விடுதலைப்போராட்டத்தில் இணைத்த விடுதலை உணர்வுகளையும், போராளிகள் தாய்நாட்டின் மீதும் தாயின் மீதும் வைத்த பாச உணர்வுகளையும் சித்திரிக்கும் வகையில் படமாக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(த-ரி7)

## ஆதரவாளர்களால்...

கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் ஆதரவாளர்களால் நேற்றுக் குழப்பம் விளைவிக்கப்பட்டது.

புவிசார் அரசியலின் கைதிகளாக உள்ள ஈழத் தமிழர்கள் பற்றிய ஒரு திறந்த உரையாடலும், இலங்கை அரசியல் யாப்பு நூல் வெளியீடும் நேற்று நடைபெற்றது. அனைத்து தமிழ்க் கட்சிப் பிரதிநிதிகளையும் உள்ளடக்கி இடம்பெற்ற இந்த நிகழ்விலேயே குழப்பம் விளைவிக்கப்பட்டது.

வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவரும், ஈ.பி.டி.பி. மையக் குழு உறுப்பினருமான சி.தவராசா உரையாற்றும்போது முதலில் குழப்பம் விளைவிக்கப்பட்டது. இராணுவத்தினருடன் சேர்ந்து இயங்கியவர்கள், ஒட்டுக் குழுக்கள், நீங்கள் பலரைக் கொலை செய்தீர்கள் என ஒரு சிலர் சத்தம் எழுப்பினர். இதன்போது தவராசா, ஜனநாயக ரீதியில் முதலில் எனது கருத்தைத் தெரிவிக்க விடுங்கள் என்று குறிப்பிட்டார். ஏற்பாட்டாளர்கள் குழப்பம் விளைவித்தவர்களைக் கட்டுப்படுத்த முனைந்தபோதும் அது நடக்கவில்லை.

இதன் பின்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் உரையாற்றினார். இதன்போதும் குழப்பம் விளைவிக்கப்பட்டது. நிகழ்வுக்குத் தலைமை தாங்கிய பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனிடம் பேச்சை முடித்துக் கொள்ளுமாறு கேட்டார். பேச்சை முடித்துக் கொள்வதானால் நான் கூட்டத்தை விட்டு வெளியேறுகின்றேன் என்று சுமந்திரன் மேடையில் பகிரங்கமாகத் தெரிவித்தார். தலைமை தாங்கும் நீங்கள் சொல்வது போன்று நான் உரையாற்ற முடியாது என்றும் குறிப்பிட்டார்.

இறுதியில், தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி உரையாற்றும்போதும் குழப்பம் உருவாக்கப்பட்டது. இதனால் அவர் தனது பேச்சைத் தொடர முடியாமல் முடித்துக் கொண்டார். "இவ்வாறானவர்கள் இருக்கும் வரை எமது இனத்துக்கு விடிவு கிடையாது" என்று கூறி ஆனந்தசங்கரி தனது உரையை முடித்தார்.

சுமார் 200 பேர் வரை இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர். அவர்களில் 7 பேர் வரையிலானோரே தொடர்ந்து கூட்டத்தில் குழப்பம் விளைவித்துக்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## விடுதலைப்...

முதலமைச்சர் கலந்து கொள்வதாக இருந்தபோதிலும் அவர் பங்குபற்றவில்லை. அவரால் எழுதி அனுப்பப்பட்ட உரையை, நிகழ்வுக்குத் தலைமை தாங்கிய பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் வாசித்தார். முதலமைச்சரின் உரையில் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது:

இலங்கையில் வாழும் தமிழர்களும் ஓரணியின் கீழ் ஐக்கியப்பட்டு தமது உரிமைக்காக வடக்கு, கிழக்கு, மலையகம், கொழும்பு என்ற பேதங்கள் இன்றி மொழியால் ஒன்றுபட்டு உரிமைக்காகக் குரல் கொடுக்க வேண்டிய காலம் கனிந்து வந்துள்ளது.

சில வேளைகளில் தமிழ் மக்களின் உரிமைகள் பற்றியும் அவர்களின் சுய நிர்ணய உரிமை பற்றியும் சிங்களத் தலைவர்களும் இடதுசாரிக் கொள்கைகளைக் கொண்ட தலைவர்களும் அவ்வப்போது சார்பான கருத்துக்களையும், ஒத்தியைவுகளையும் வெளிப்படுத்தி வந்தபோதும் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் அவர்கள் தமது கொள்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டு தமிழின அழிப்பை ஏற்றுக்கொள்கின்ற அரசியல் தலைவர்களாக மாற்றம் பெற்றது நாம் தெரிந்ததே.

ஆகவே சிங்களத் தலைவர்கள் எந்தளவு மனிதாபிமானம் உடையவர்களாக இருந்தாலும் இன வேற்றுமையின் பொறிகளுக்குள் சிக்கிவிட்டால் அவர்கள் மனிதாபிமான நடுவிலிருந்து வழுகி விடுகின்றார்கள். அதற்குப் பதிலாகத் தமிழர்கள் இனவாதம் பேசுவதால்தான் தாமும் பேசுவதாகக் கூறுகின்றார்கள்.

தமிழர்கள் தமது உரிமைகளுக்காக, விரும்பி மேற்கொள்ளும் நியாயபூர்வமான போராட்டங்கள், கோரிக்கைகள் ஆகியன சிங்களத் தலைமைகளுக்கு இனவாதத்தைத் தூண்டுகின்ற ஒரு செயலாகத் தென்படுகின்றன. அதனால் உரிமைக்காகக் குரல் கொடுக்கும் தமிழ் அரசியல் தலைவர்களைச் சிறையில் அடைக்கவேண்டும், ஒட்டுமொத்த தமிழர்களையும் இந்தியாவுக்கு அனுப்பவேண்டும் எனச் சிலர் சிங்களப் பேரினவாதிகளாக மாறிக் கொக்கரிக்கின்றார்கள்.

எமது உரிமைக்காக நாம் குரல் கொடுக்கின்றபோது இனவாதம் பேசுகின்றோம், சிங்கள மக்களைச் சினமடையச் செய்கின்றோம், இந்த நாட்டில் மீண்டும் ஒரு முறை இனக் கலவரங்களை உண்டாக்குவதற்கு முயற்சிக்கின்றோம் என்று கூறுகின்றார்கள். தமிழ் மக்களை அடக்கியாள முயற்சித்து அவர்கள் அது சார்பாக நடவடிக்கைகள் எடுப்பதை நாம் கண்டும் காணாதது மாதிரி இருக்கவேண்டும் என்று இவர்கள் கருதுகின்றார்களா?

சட்ட வலுவற்ற தன்மையில் வட மாகாணத்தில் புத்த விகாரைகள் கட்டப்பட்டு வருகின்றன என்று தான் நாம் அண்மையில் கூறினோம். அதனைத் திரித்து வட மாகாணத்தில் புத்தவிகாரைகள் கட்டக்கூடாது; சிங்கள மக்கள் குடியிருக்கக் கூடாது; சிங்கள மக்கள் வடமாகாணத்தில் இருந்து வெளியேற வேண்டும் என்றெல்லாந் திரித்துக் கூறி என் மீதான பலத்த ஒரு வெறுப்பியக்கத்தை ஆரம்பித்துள்ளார்கள்.

நாம் எமது பிரச்சினைகளைக் கூறக் கூடாது. அவர்கள் தருவதை ஏற்க வேண்டும் என்ற ஒரு எண்ணப்பாடே இன்று பெரும்பான்மை மக்கள் பலரிடம் இருந்து வருகின்றது. இதற்குள் அரசியலும் சேர்ந்து எனது உயிருக்கும் உலை வைக்க நடவடிக்கைகள் எடுத்திருப்பதாகச் செய்திகள் வந்த வண்ணம் இருக்கின்றன. அது மட்டுமல்ல. அவற்றைச் செய்தவர்கள் விடுதலைப் புலிகளே என்று கதையைக் கட்டுவதற்கும் தெற்கில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இலங்கைத்தீவு சிங்கள மக்களுக்கு மட்டும் சொந்தமானதொரு தீவாக மாற்றப்பட வேண்டும் என்பதையே அனைத்து அரசுகளும் தொடர்ந்து முன்னெடுத்து வருவதாகத் தெரிகின்றது. அவர்கள் தரும் உரிமைகளை மட்டுமே நாங்கள் பெறலாம். சட்டப்படி எமக்கிருக்கும் உரித்துக்களைக் கேட்டால் தாம் அவற்றைத் தரமாட்டோம் என்று கூறுவதாகவே இதுவரையான சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

ஹிட்லரின் படுகொலைகள் யூதர்களுக்கு எவ்வாறு விடுதலை உணர்வை போதித்ததோ அதே போன்று முள்ளிவாய்க்கால் துயரங்கள் தமிழ் மக்களுக்கு தமது நிலையை உணர வழி வகுக்கவேண்டும்.

நாம் தொடர்ந்தும் எம்மிடையே பகைமை உணர்வுகளையும் அரசியல் போட்டி பொறாமைகளையும், காட்டிக் கொடுக்கும் காக்கை வன்னியர்களாகக் காலத்தை ஓட்டுவதையும் நிறுத்த வேண்டும். கற்றுக் கொண்ட பாடங்கள் மூலமாகத் தூய்மையான வரலாறு ஒன்றைத் தமிழ் மக்கள் இனியாவது படைக்க முன்வர வேண்டும். அதுவரை எத்தனை இடையூறுகள் வரினும் அவற்றை எதிர்கொள்ள நாம் தயாராகிக் கொள்ளவேண்டும் – என்றார்.

(த-5)

## வடக்கு இராணுவ...

மக்கள் தொடர்ந்தும் துன்பப்படுகிறார்கள். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா தெரிவித்தார்.

விவசாயிகளுக்கான சலுகைக் கட்டணம் வழங்கும் தேசிய ஆரம்ப விழா நீர்வேலியில் நேற்று முற்பகல் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மாவை இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கடந்த ஆட்சி மாற்றத்துடன் நாம் சில இராஜதந்திர நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றோம்.

எமக்குரிய அரசியல் தீர்வை இந்த அரசும் தராதுவிட்டால் நாம் என்ன செய்வோம் என்பதை ஐ.நா. செயலர் பான் கீ – மூன் இலங்கை வந்தவேளை அவருக்குத் தெளிவாகத் தெரிவித்துள்ளோம்.

ஆகவே இந்த நல்லாட்சி அரசு எமக்குரிய தீர்வுத் திட்டத்தை முன்வைக்கும் என்பதில் முழுமையான நம்பிக்கையுண்டு.

எமது மக்களின் பெருமளவான விவசாய நிலங்கள் இன்றுவரை இராணுவம் வசமே உள்ளன. அதனால் விவசாயத்தையே வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்ந்து வரும் மக்கள் தமது நிலங்களை இழந்து துன்பப்பட்டு வருகின்றனர். எனவே இன்று இங்கு வருகை தந்திருக்கும் மின்சக்தி அமைச்சர், மின்சக்தி பிரதி அமைச்சர் மற்றும் அதிகாரிகள் ஆகியோர் எமது மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளை உணர்ந்து இராணுவம் வசமுள்ள எமது மக்களின் காணிகள் அனைத்தையும் விடுவிக்க உதவ வேண்டும்.

எமது பிள்ளைகள் இந்த நல்லாட்சி அரசுக்குக் கைலாகு கொடுத்துமாலைகள் அணிவித்து வரவேற்கிறார்கள் என்றால் அது உங்களை மகிழ்விப்பதற்காக மட்டுமல்ல. எங்களை விடுதலையுடனும், மகிழ்வுடனும் இந்த நாட்டில் வாழவிடுங்கள் என்பதற்காகவே. அதுவே பிள்ளைகளின் எதிர்பார்ப்பு.

எமது மக்களின் விடுதலைக்காகப் பல உயிர்கள் தியாகம் செய்யப்பட்டுள்ளன. எமது மக்களும் கடந்த காலப் போர் காரணமாக பல இழப்புக்களைச் சந்தித்துள்ளனர். நாம் எமது வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டியுள்ளது. அதற்கு முக்கிய பங்கு வகிப்பது விவசாயம்.

ஆனாலும் எமக்கான சந்தைப்படுத்தல் வசதியின்மையால் இன்றுவரை எமது மக்கள் உரிய வருவாயைப் பெறமுடியாதுள்ளது. தென்னிலங்கையில் உள்ள பெரிய வியாபாரிகள். எமது விவசாயிகளிடம் கொள்வனவு செய்யும் மரக்கறிகளைப் பொலித்தீனில் சுற்றி பூட் சிட்றி, கடைகள் வாயிலாக விற்பனை செய்கின்றனர். எமது விவசாயிகள் நவீன இரசாயன உரங்களைப் பயன்படுத்துகின்றனர். இதனால் விவசாய நிலம் வளமிழக்கிறது – என்றார்.

(த-4-ரி)

## ரயிலில்...

கிளிநொச்சி 155 ஆம் கட்டைப் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

முதலாம் குறுக்குத் தெரு, பாரதிபுரத்தைச் சேர்ந்த ஆறு பிள்ளைகளின் தந்தையான் சுப்பிரமணியம் மகேந்திரன் (வயது- 54) என்பவரே இவ்வாறு சாவடைந்துள்ளார்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பணம் நோக்கி வந்துகொண்டிருந்த ரயில் நசியுண்டே குறித்த குடும்பஸ்தர் சாவடைந்துள்ளார்.

இவர் ரயில் பாதைகளில் அடிக்கடி படுத்துறங்கும் வழக்கத்தை கொண்டுள்ளார். நேற்று முந்தினம் இரவு 11 மணியளவில் வீட்டைவிட்டுச் சென்ற குடும்பஸ்தர் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டார்.

இதற்கு முன்னரும் ஒரு தடவை இவர் ரயில் விபத்தில் இருந்து மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார் என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்ததாகக் கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்தனர்.

உடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காகக் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த-21-ரி3-34-35)

## நாமல்...

நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச, விளையாட்டு நிகழ்வு ஒன்றில் ஏற்பட்ட விபத்தில் சிக்கிக் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தங்காலையில் நேற்று நடந்த சிறுவர் தின நிகழ்வின் ஒரு பகுதியாக நடந்த விளையாட்டு நிகழ்விலேயே அவருக்குக் காயம் ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது.

காயமடைந்த நிலையில், நாமல் ராஜபக்ச கொண்டு செல்லப்படும் காட்சியைக் கொண்ட ஒளிப்படங்கள் ஊடகங்களில் நேற்று வெளியாகின.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் அறுவைச் சிகிச்சையொன்றுக்கு முகம் கொடுத்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவித்தன.

(த)

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## குயின்டனிடம் ஆஸி. சரண்

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் முதலாவது ஆட்டத்தில் 6 இலக்குகளால் வெற்றிபெற்றது தென்னாபிரிக்கா.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்கா முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலியா 50 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 294 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக பெய்லி 74 ஓட்டங்களையும், ஹஸ்டிங்ஸ் 51 ஓட்டங்களையும், வோர்ணர் 40 ஓட்டங்களையும் குவித்தனர். பந்துவீச்சில் தென்னாபிரிக்காவின் சார்பாக பியுக்வெயோ 4 இலக்குகளை வீழ்த்தினார்.

பதிலுக்குக் களமிறங்கிய தென்னாபிரிக்கா குயின்டன் டி ஹொக்கின் அதிரடியில் 82 பந்துகள் மீதமிருக்க 4 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றி பெற்றது. அதிகபட்சமாக குயின்டன் டி ஹொக் 78 ஓட்டங்களைக் குவித்தார். அவரே ஆட்டநாயகனாகவும் தெரிவானார். (ம)





## தேசியமட்ட கூடைப்பந்தாட்டம் வடக்குக்கு வெள்ளிப்பதக்கம்

யாழ்ப்பாணம், ஒக். 2

தேசியமட்ட கூடைப்பந்தாட்ட தொடரில் பெண்கள் பிரிவில் வடமாகாண அணி வெள்ளிப் பதக்கத்தைக் கைப்பற்றியது.

யாழ். மத்திய கல்லூரியில் நேற்று மாலை இடம்பெற்ற தங்கப்பதக்கத்துக்கான ஆட்டத்தில், வடக்கு மாகாண அணியை எதிர்த்து மேல்மாகாண அணி மோதியது. நான்கு கால்பாதிகளைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. மேல் மாகாணத்துக்கு நிகராக வடக்கு மாகாணத்தால் ஈடுகொடுக்க இயலவில்லை. முதல் கால் பாதியை 17:2 என்ற புள்ளிகளின் அடிப்படையிலும், இரண்டாவது கால் பாதியை 19:7 என்ற புள்ளிகளின் அடிப்படையிலும் கைப்பற்றிய மேல்மாகாண அணி முதல் பாதியின் முடிவில் 36:9 முன்னிலையில் இருந்தது.

மூன்றாவது கால்பாதி 12:4 என்ற புள்ளிகளின் அடிப்படையிலும், நான்காவது கால்பாதி 19:8 என்ற புள்ளிகளின் அடிப்படையிலும் மேல் மாகாணத்தின் வசமாக முடிவில் அந்த அணி 67:21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றியது. வடக்கு மாகாணத்துக்கு வெள்ளிப் பதக்கம் கிடைத்தது. (ம-23)

## 100 மீற்றரில் சம்பியனானால் ரி.வி.எஸ். மோட்டார் சைக்கிள்

யாழ்ப்பாணம், ஒக். 2

தேசியமட்ட தடகளத் தொடரில் 100 மீற்றர் ஓட்டத்தில் தங்கம் வெல்லும் வீர, வீராங்கனைகளுக்கு ரி.வி.எஸ். நிறுவனத்தின் மோட்டார் சைக்கிள்கள் பரிசாக வழங்கப்படவுள்ளன. இந்த அறிவிப்பு நேற்று வெளியானது.

தேசியமட்ட தடகளத் தொடர் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகிறது. இறுதி நாளாள இன்றும் சில விளையாட்டுக்கள் நடைபெறவுள்ளன. இருபாலாருக்குமான 100 மீற்றர் ஓட்டம் பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில் 100 மீற்றர் ஓட்டத்தில் தங்கம் வெல்லும் வீரர் (இலங்கையின் வேகமான வீரர்), வீராங்கனை (இலங்கையின் வேகமான வீராங்கனை) ஆகியோருக்கு ரி.வி.எஸ். நிறுவனத்தின் மோட்டார் சைக்கிள் பரிசாக வழங்கப்படவுள்ளது. தேசியத் தடகளத் தொடரில் சாதனை படைக்கும் ஒவ்வொரு வீர, வீராங்கனைகளுக்கும் விளையாட்டு அபிவிருத்தி நிதியத்திலிருந்து தலா ஒரு லட்சம் ரூபா வழங்கப்படவுள்ளது. (ம)



## தேசியமட்ட கூடைப்பந்தாட்டத் தொடர்; வடக்கிடமிருந்து தவறியது வெண்கலம்

யாழ்ப்பாணம், ஒக். 2

தேசியமட்ட கூடைப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றும் வாய்ப்பு இருந்தபோதிலும் அதைத் தவறவிட்டது வடக்கு மாகாண அணி.

யாழ். மத்திய கல்லூரியில் நேற்றுக் காலை இடம்பெற்ற வெண்கலப் பதக்கத்துக்கான இந்த ஆட்டத்தில் வடக்கு மாகாண அணியை எதிர்த்து மத்திய மாகாண அணி மோதியது. மிகவும் போராட்டகரமாக இருந்த இந்த ஆட்டத்தின் முடிவில் மத்திய மாகாண அணி 56:47 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று வெண்கலப் பதக்கத்தைத் தனதாக்கிக் கொண்டது. (ம-23)


## கோலூன்றிப் பாய்தலில் கணதீபனுக்கு வெண்கலம் மேல்மாகாண வீரர் தேசியச்சாதனை நிலைநாட்டினார்

யாழ்ப்பாணம், ஒக். 2

தேசியமட்ட தடகளத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்கள் பிரிவு கோலூன்றிப் பாய்தலில் வடக்கு மாகாணத்துக்கு வெண்கலப்பதக்கம் கிடைத்தது.

துரையப்பா மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியில் வடக்கின் கே.கணதீபன் 4.40 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றினார். வடமாகாணத்தின் ஏனைய வீரர்களான நெப்தலி ஜொய்சன் 4.30 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து ஐந்தாம் இடத்தையும், எஸ்.டிலக்சன் 4.20 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து எட்டாம் இடத்தையும் பெற்றனர்.

மேல் மாகாணத்தைச் சேர்ந்த சந்திரரூப 5 மீற்றர் என இருந்த தனது தேசியச் சாதனையை இந்த வருடம் 5.10 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து புதிய சாதனையை நிலைநாட்டி தங்கம் வென்றார். வடமேல் மாகாணத்தைச் சேர்ந்த பாலசூரிய வெள்ளிப் பதக்கத்தைக் கைப்பற்றினார். (ம-422)



## அராலி சரஸ்வதி ம.வி. காலிறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஒக். 2

பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட மேசைப்பந்தாட்டத் தொடரில் 15 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் காலிறுதிக்குத் தகுதி பெற்றது.

பதுளை சென். தோமஸ் கல்லூரியின் உள்ளரங்கில் நேற்று நடைபெற்ற காலிறுதிக்குத் தகுதி பெறும் ஆட்டத்தில், அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணியை எதிர்த்து பதுளை சென். தோமஸ் அணி மோதியது. இதில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி 3:2 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ம-422)

# பெண்களுக்கான நீளம் பாய்தல்: வடமாகாணத்துக்கு ஆறாமிடம்

யாழ்ப்பாணம், ஒக். 2
தேசியமட்ட தடகளத் தொடரில் நேற்று நடைபெற்ற பெண்கள் பிரிவு, நீளம் பாய்தலில் வடக்கு மாகாணத்துக்கு ஆறாவது இடம் கிடைத்தது.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்றுக் காலை இந்தப் போட்டிகள் நடைபெற்றன. வடமாகாணத்தின் சார்பாக எஸ்.ஆரணி கலந்து கொண்டார். அவர் 5.53 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து ஆறாம் இடத்தைப் பெற்றார். மேல் மாகாணத்தைச் சேர்ந்த சாரங்கி சில்வா 5.99 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து தங்கப் பதக்கத்தையும், தென்மாகாணத்தைச் சேர்ந்த டனஞ்சரி 5.85 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும், மேல் மாகாணத்தைச் சேர்ந்த குமாரி புவன்சா 5.76 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422)



வடமாகாண வீராங்கனை எஸ்.ஆரணி



# தங்கத்துக்காகச் செல்கிறது வடமாகாண பெண்கள் அணி

யாழ்ப்பாணம், ஒக். 2
தேசியமட்ட கயிறிழுத்தல் போட்டியில் வடமாகாண பெண்கள் அணி தங்கப் பதக்கத்துக்காக இன்று போட்டி போடவுள்ளது.
யாழ். மத்திய கல்லூரியின் மைதானத்தில் நேற்று நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் வடக்கு மாகாண கயிறிழுத்தல் அணியை எதிர்த்து மத்திய மாகாண அணி பலப்பரீட்சை நடத்தியது. மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் நடைபெற்றது. முதலிரு சுற்றுக்களையும் கைப்பற்றியதையடுத்து மூன்றாவது சுற்றுக்கு வேலை வைக்காமல் 2:0 என்ற அடிப்படையில் வடமாகாண பெண்கள் அணி வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-23)

# தகுதியை இழந்தனர் வடக்கின் வீரர்கள்

யாழ்ப்பாணம், ஒக். 2
தேசியமட்டத் தடகளத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான குண்டு போடுதலில் வடக்கு வீரர்கள் எவரும் சிறந்த எட்டு வீரர்களுக்கான தெரிவில் இடம் பெறவில்லை.
துரையப்பா விளையாட்டரங்கில் இந்தப் போட்டிகள் நடைபெற்றன.
சிறந்த எட்டு போட்டியாளர்களுக்கான தெரிவில் வடமாகாண வீரர்கள் எவரும் இடம்பெறவில்லை. வடமேல் மாகாணத்தைச் சேர்ந்த ஜெயவர்த்தன 14.69 மீற்றர் தூரத்துக்கு எறிந்து தங்கப்பதக்கத்தையும், கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஆசிக் வெள்ளி பதக்கத்தையும், மேல் மாகாணத்தைச் சேர்ந்த பெ்ர்டிநாட் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422)

# வடக்கு அணி வெளியேற்றம்

யாழ்ப்பாணம், ஒக். 2
தேசியமட்டக் கயிறிழுத்தல் போட்டியில் வடமாகாண ஆண்கள் அணி அரையிறுதியுடன் வெளியேற்றப்பட்டது.
யாழ். மத்திய கல்லூரியின் மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்த அரையிறுதிப் போட்டியில் வடக்கு மாகாண அணியை எதிர்த்து கிழக்கு மாகாண அணி மோதியது. இதில் கிழக்கு மாகாண முதலிரு சுற்றுக்களையும் கைப்பற்றி 2:0 என்ற அடிப்படையில் இறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-23)

# தட்டெறிதலில் ஆறாமிடம் வடக்குக்குக் கிடைத்தது

யாழ்ப்பாணம், ஒக். 2
தேசியமட்ட தடகளத் தொடரில் நேற்று நடைபெற்ற பெண்கள் பிரிவு தட்டெறிதலில் வடக்கு மாகாணத் துக்கு ஆறாவது இடம் கிடைத்தது.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்றுக் காலை இந்தப் போட்டிகள் நடைபெற்றன. வடமாகாணத்தை பிரதிநிதித்துவம் செய்த எஸ்.தர்சிகா 30.44 மீற்றர் தூரத்துக்கு எறிந்து ஆறாவது இடத்தைப் பெற்றார். ஊவா மாகாணத்தைச் சேர்ந்த மடுவந்தி 38.20 மீற்றர் தூரத் துக்கு எறிந்து தங்கப் பதக்கத்தையும் மேல் மாகாணத்தைச் சேர்ந்த மடுராங்கி பெரேரா 38.03 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெள்ளிப் பதக்கத்தையும், வடமத்திய மாகாணத்தைச் சேர்ந்த லாகநாஜி 35.74 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422)




# தேசியத் தடகளத்தில் இன்றைய போட்டிகள்

யாழ்ப்பாணம், ஒக். 2
தேசியமட்ட தடகளத் தொடர் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் கடந்த 29 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. தொடரின் நான்காவதும் இறுதியானதுமான இன்றைய நாளிலும் சில போட்டிகள் நடைபெறவுள்ளன.
இதன்படி பெண்களுக்கான 10000 மீற்றர், ஆண்களுக்கான 5000 மீற்றர் பெண்களுக்கான உயரம் பாய்தல், பெண்களுக்கான சம்மட்டி எறிதல், இருபாலாருக்குமான 100 மீற்றர், இருபாலாருக்குமான 400 மீற்றர், ஆண்களுக்கான முப்பாய்தல், ஆண்களுக்கான ஈட்டி எறிதல், ஆண்களுக்கான 110 மீற்றர் சட்டவேலி, பெண்களுக்கான 100 மீற்றர் சட்டவேலி, இருபாலாருக்குமான 1500 மீற்றர், இருபாலாருக்குமான 100 மீற்றர், இருபாலாருக்குமான கயிறு இழுத்தல், இருபாலாருக்குமான 4 நபர்கள் பங்கு பற்றும் 400 மீற்றர் அஞ்சல் ஓட்டம் ஆகிய போட்டிகள் இன்று நடைபெறவுள்ளன.
தொடர்ந்து நடைபெறும் பரிசளிப்பு நிகழ்வுக்கு தலைமை விருந்தினராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்து கொள்ளவுள்ளார். (ம-422)

# அரையிறுதி வாய்ப்பை இழந்தது வடக்கு அணி

யாழ்ப்பாணம், ஒக். 2
தேசியமட்ட கடற்கரை கபடியில் பெண்கள் பிரிவில் வடமாகாண அணி அரையிறுதி வாய்ப்பை இழந்தது. வல்வெட்டித்துறை ரேவடி கடற்கரை மைதானத்தில் நேற்று நடைபெற்ற காலிறுதியாட்டத்தில், வடமாகாண அணியை எதிர்த்து சப்ரகமுவா மாகாண அணி மோதியது.
இதில் வடமாகாண அணி 40:52 என்ற புள்ளிகள் அடிப்படையில் தோல்வியடைந்து அரையிறுதி வாய்ப்பை இழந்தது. (ம-422)

# ஆண்களுக்கான 800 மீற்றரில் வடக்குக்கு ஐந்தாவது இடம்

யாழ்ப்பாணம், ஒக். 2
தேசியமட்ட தடகளத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்கள் பிரிவு 800 மீற்றர் ஓட்டத்தில் வடமாகாணத்துக்கு ஐந்தாவது இடம் கிடைத்தது.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று இந்தப் போட்டி நடைபெற்றது. வடக்கு மாகாணத்தின் சார்பாகக் கலந்துகொண்ட பெர்னாண்டோ ஒரு நிமிடம் 55 செக்கன்கள் 03 மில்லி செக்கன்களில் ஓடி முடித்து ஐந்தாம் இடத்தைப் பெற்றார். ஊவா மாகாணத்தைச் சேர்ந்த கேரத் ஒரு நிமிடம் 51 செக்கன்கள் 09 மில்லிசெக்கன்களில் ஓடி முடித்து தங்கப் பதக்கத்தையும், மேல்மாகாணத்தைச் சேர்ந்த குமார ஒரு நிமிடம் 52 செக்கன்கள் 03 மில்லி செக்கன்களில் ஓடி முடித்து வெள்ளிப் பதக்கத்தையும், ஊவா மாகாணத்தைச் சேர்ந்த குசாத் ஒரு நிமிடம் 52 செக்கன்கள் 09 மில்லி செக்கன்களில் ஓடி முடித்து வெண்கலப் பதக் கத்தையும் கைப்பற்றினர். (ம-422)



# றொனால்டோவின் விமானம் விபத்து

போர்த்துக்கல் அணியின் நட்சத்திர வீரரும், ரியல் மட்ரிட் அணியின் தலைவருமான றொனால்டோவின் பிரத்தியேக பயன்பாட்டுக்கு என ரியல் மட்ரிட் கழகத்தால் ஒதுக்கப்பட்ட விமானம் விபத்துக்குள்ளானது.

லா லிகா தொடர், ஐரோப்பிய கால் பந்துத் தொடர், போர்த்துக்கல் தேசிய அணியின் ஆட்டங்கள் என றொனால்டோ தொடர்ந்து விளையாடிவருவதால் அவரின் போக்குவரத்துக்காக ரியல் மட்ரிட் கழகம் சிறிய ரக விமானமொன்றை அவருக்கு வழங்கியிருந்தது. இந்த விமானம் பார்சிலோனாவில் நேற்று முன்தினம் தரையிறங்கும்போது விபத்துக்குள்ளானது. விமானியைத் தவிர எவரும் பயணிக்கவில்லை என்பதால் உயிர்ச் சேதங்கள் ஏற்படவில்லை. விமானிக்கு இலேசான காயங்கள் ஏற்பட்டன. (ம)



**வெற்றுப் போத்தல்கள் விற்பனைக்கு**

19 L தண்ணீர் வெற்றுப் போத்தல்கள் விற்பனைக்கு உள்ளன.
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு: எமர்சன்றோட், கரடிப்போக்கு சந்தி, கிளிநொச்சி
021 228 0221 / 076 605 7308

**தேவை**

யாழ் நகரில் மையப்பகுதியில் இயங்கி வரும் எமது ஸ்தாபனத்துக்கு வேலையாள்கள் (பெண்கள்) தேவை.
நேரில் வரவும்.
அன்னை புத்தகசாலை,யாழ்ப்பாணம்
021 222 9881

**உயர்கல்விக்கான புலமைப்பரிசில்**

CIMA-UK, CompEngineering(Networking/Web/Software)-USA, BIT_university of Colombo ஆகிய கற்கை நெறிகளிற்கு புலமைப்பரிசிலிற்கான விண்ணப்பங்கள் மாணவர்களிடமிருந்து கோரப்படுகின்றது. புலமைப்பரிசிலானது மாணவர்களிற்கு பதிவுக்கட்டணம், கற்கை நெறிக்கட்டணம், பரீட்சைக்கட்டணம் மற்றும் வருடாந்த கட்டணங்களில் வழங்கப்படவுள்ளது. மேலும் இம்மாணவர்களிற்கு மேலதிகமாக Msoffice, English, Accounting Package ஆகிய டிப்ளோமா கற்கை நெறிகளை முற்றிலும் இலவசமாக வழங்கவுள்ளது. கற்கை நெறிகளின் முதலாம் கட்டம் இவ்வருட இறுதிக்குள் பூர்த்தி செய்யபட்டு சான்றிதழ்கள் உரிய நிறுவனங்களினால் வழங்கப்படும். திறமையினை வெளிப்படுத்தும் மாணவர்களிற்கு தொடர்ந்தும் புலமைப்பரிசில் வழங்கப்படும். இடவசதியினை கருதி தாமதமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம். விண்ணப்பிக்க விரும்புவோர் தாம் விரும்பும் கற்கை நெறி, தமது முழுப்பெயர், பிறந்த திகதி முகவரி என்பவற்றை772395895 என்ற எண்ணிற்கு குறுந்தகவலாக அனுப்பி வைக்கவும். மேலதிக விபரங்களை யாழ்.பல்கலைக்கழகத்திற்கு அருகில் அமைந்துள்ள MCS தகவல் தொழில் நுட்ப வளாகத்தில் நேரில் பெற்றுக் கொள்ளலாம்.

**NEW SCIENCE WORLD**
NEW SCIENCE WORLD VICTORY MUST
Navalar Road-Brown Road Junction, Jaffna
Web : www.physicsocean.com E-mail : info@physicsocean.com
G.C.E (A/L) 2017 To Inquire : 077 336 4055
**Day Classes**
திங்கள் - வெள்ளி
உயிரியல் – காலை 7.00 - 9.00 – திரு. S. பொன்திவாகரன், திரு. V. உமாசங்கர்
இணை.கணிதம் – காலை 7.00 – திரு. S.S. செந்தில்நாஜ்
பௌதிகவியல் – Batch I - காலை 9.30 - 11.30, Batch II - மு.ப. 11.30 - 1.30 – திரு. R. குகன், திரு. R. குமரன்
இரசாயனவியல் – மு.ப. 9.30-11.30 – திரு. டயஸ்; மு.ப. 11.30-1.30 – திரு. K.T சிவகுமார்
★ Physics : திரு. R.குகன்
Shortnote class
திங்கள், செவ்வாய், வியாழன் (பி.ப. 1.30 - 2.30)
★ Chemistry : திரு. டயஸ்
Theory Class : வெப்ப இரசாயனவியல்
புதன், வெள்ளி (பி.ப. 1.30 - 2.30)
வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

# இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் ஆட்டம் நியூசிலாந்து அணி மீண்டும் தடுமாற்றம்



இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய இரண்டாம் நாள் முடிவின் அடிப்படையில் நியூசிலாந்து அணி மீண்டும் தடுமாற்றத்தை வெளிப்படுத்தியது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இந்தியா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து முதல் நாள் முடிவில் 239-7 என்ற நிலையில் இருந்தது. சஹா 14 ஓட்டங்களுடனும், ஜடேயா ஓட்டமெதனையும் பெறாத நிலையிலும் இரண்டாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். 14 ஓட்டங்களுடன் ஜடேயா ஆட்டமிழந்தார். சஹா அடித்தாடி அரைச்சதம் கடந்தார். ஓர் முனையில் அவர் நிலைத்து நின்றாலும் மறுமுனையில் புவனேஸ்குமார், சமி இருவரும் ஆட்டமிழக்க இந்திய அணியின் இன்னிங்ஸ் 316 ஓட்டங்களுடன் முடிவு கண்டது. சஹா 54 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் நியூசிலாந்தின் சார்பாக ஹென்றி 3 இலக்குகளையும், போல்ட், வாக்நெர், பட்டேல் மூவரும் தலா இரு இலக்குகளையும், சான்நெர் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்துக்கு ஆரம்பம் படுமோசமாக அமைந்தது. குப்தில் 13 ஓட்டங்களுடனும், நிக்கொல்ஸ் ஓர் ஓட்டத்துடனும் புவனேஸ்குமாரின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தனர். லாதம் ஓர் ஓட்டத்துடன் சமியின் பந்துவீச்சில் வீழ்ந்தார். 23 ஓட்டங்களில் மூன்று இல்க்குகளை இழந்தது நியூசிலாந்து. ரெய்லர், ரோஞ்சி இணைந்து நியூசிலாந்தை தலை தூக்க வைத்தனர். தமக்கிடையே 62 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்தனர். ரோஞ்சியை 35 ஓட்டங்களுடன் வீழ்த்தி இணைப்பாட்டத்தைப் பிரித்தார் ஜடேயா. ரெய்லர், சான்நெர், ஹென்றி மூவரையும் வெளியேற்றினார் புவனேஸ்குமார். நாள் முடிவில் நியூசிலாந்து 128-7 என்ற நிலையில் உள்ளது. வற்லிங் 12 ஓட்டங்களுடனும், பட்டேல் 5 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

பந்துவீச்சில் இந்திய அணியின் சார்பாக புவனேஸ்குமார் 5 இலக்குகளையும், சமி, ஜடேயா இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். (ம)

**அழகியல் டிப்ளோமா** BCBL @KU
பிரிட்டிஜ் கொலேஜிடமிருந்து
அழையுங்கள் : 021-3208342

**Diploma in Beauty Culture**
மணப்பெண் அலங்காரம்,பல்வகையான விசேட முக அலங்காரம்,சாறி அலங்காரம்,நகம் மற்றும் தோல் பராமரிப்பு, மெகந்தி,விசேட சிகை அலங்கார முறைகள் என சுமார் 25 வகையான அலங்காரங்களையும் அவற்றில் பல உட்பிரிவுகளையும் உள்ளடக்கிய டிப்ளோமா பயிற்சி நெறி
**British College of Business and Languages**
No 788/4,செம்மணி வீதி,நல்லூர் (கிட்டுப்பூங்கா எதிரில்)

**சிறுவர் தினத்தை முன்னிட்டு**
**BIG SALE! 25%***
இச்சலுகை இரண்டு வாரங்களுக்கு மட்டுமே

ANDRA BOOKS
**சிறுவர் புத்தகங்கள்**
சிறுவர் சிந்தனை சிறக்க சிறந்த புத்தகங்கள்!!!
இங்கே மலிவு விலையில் பாடசாலை உபகரணங்கள் கிடைக்கும்!
வடக்கின் புகழ்பெற்ற ஆசிரியர்களின் வழிகாட்டலுடன் எமது நிறுவனத்தால் பதிப்பிக்கப்பட்ட சிறுவர் புத்தகங்களோடு அனைத்து விதமான புத்தகங்களையும் இங்கே பெற்றுக்கொள்ளலாம்.

ANDRA PUBLICATIONS (PVT) LTD
356A, KASTHURIYAR ROAD, JAFFNA, SRI LANKA.
TEL: 021 492 7636 | 077 675 7622

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.10.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.